# கல்விக் கலம்பகம்



பெருவிழா காணும் பெருந்தகை

## திரு. சிங்காரவேலு தண்டாயுதபாணி

## சிறப்பு பாராட்டு மலர்

ஓய்வுபெற்ற பிரதிச்செயலாளர்

கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்.

தற்போதைய பதவி - சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகர்

GIZ / ESC திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கலம்பகம்

## பெருவிழாக் காணும் பெருந்தகை
## திரு.சிங்காரவேலு தண்டாயுதபாணி
## சிறப்புப் பாராட்டு மலர்

**பதிப்பாசிரியர்குழு.**

திரு. ச.பாரதிநாதன்.
திரு. இ.சுப்ரமணியம்.
திரு. து.குலவீரசிங்கம்.
திரு. ச.சிறிதரகுமார்.

**திரு. சி. தண்டாயுதபாணி சேவை நலன் பாராட்டு விழாக்குழு – 2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூல் : கல்விக் கலம்பகம்
பெருவிழாக் காணும் பெருந்தகை திரு.சிங்காரவேலு தண்டாயுதபாணி சிறப்புப் பாராட்டு மலர்

வெளியீடு : திரு. சி. தண்டாயுதபாணி அவர்களின் சேவைநலன் பாராட்டு விழா குழு

ஆண்டு : 2011

பக்கங்கள் : 174 + படங்கள் 20

தாளின் அளவு : பி 5

தாளின் வகை : 70 கிராம்

பிரதிகள் : 500

அச்சிட்டோர் : அஸ்ரா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடட், 0777 426175

Title : Kalvik Kalampakam
Souvenir - Mr. Singaravelu Thandayuthapani

Published by : Felicitation - Ceremony Committee

Year : 2011

Book Size : B5

Paper : 70gsm Paper

Pages : 174 + 20 Photo Pages

Printed by : Astra Printers (Pvt) Ltd., Trincomalee., 0777 426175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்ணில் கலந்த நீர்போல்
எம்மண்ணில் என்றும் உங்களுறவு.

# புலமைப்புனல்

வாய்மை தவறா வழிநின்று நல்வாழ்வு கண்டு
வான்வரை கல்விதனை வளம் பெறவைத்து
சேய்மை தேசம்சென்று செல்வம் கோடி தேடாது
சேர்ந்து வாழ்ந்து எம்மக்கள் சேமம் காத்து
தூய்மை கொண்ட நெஞ்சினாய் துணிவுடனே நின்று
தொடரும் தன் சேவையில் இமயம் தொட்டு
பொய்மை இல்லாப்பற்றினை பூமிதனில் விதைத்து
புகழோடுவாழும் புலமைப்புனலே! வாழ்க பல்லாண்டு.

பதிப்பாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாக்குழு –2011.

| | |
|---|---|
| திரு.மா.இராஜரெட்ணம் | தலைவர் |
| திரு.இ.புவனேந்திரன் | விழாக்குழு இணைப்பாளர். |
| திரு.வி.கௌரிதரன் | நிதிக்குழு இணைப்பாளர் |
| திரு.ச.பாரதிநாதன் | பதிப்பாசிரியர். |
| திரு.ஆர்.சுப்ரமணியம் | மலர்க்குழு உறுப்பினர் |
| திரு.ரி.குலவீரசிங்கம் | மலர்க்குழு உறுப்பினர் |
| திரு.கி.முருகுப்பிள்ளை. | விழாக்குழு உறுப்பினர். |
| டாக்டர்.கு.ஹேமசந்திரா. | விழாக்குழு உறுப்பினர். |
| திரு.செ.பத்மசீலன். | விழாக்குழு உறுப்பினர். |
| திருமதி.எஸ்.ஜெயபாலன். | விழாக்குழு உறுப்பினர். |
| திரு.ந.இராஜநாதன். | விழாக்குழு உறுப்பினர். |
| திரு.ஆ.செல்வநாயகம். | விழாக்குழு உறுப்பினர். |
| திரு.ந.இரத்தினவடிவேல். | விழாக்குழு உறுப்பினர். |
| திரு.அ.அருளானந்தம். | விழாக்குழு உறுப்பினர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பதிப்புரை. 8

## பகுதி-1
### திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் பற்றிய பார்வையும் பதிவுகளும்.

1. திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் பற்றிய விபரக் குறிப்பு. 13
2. மா.இராசரெத்தினம் - கல்வி பணிக்கு அணிசேர்த்த கல்விக்கலை மணி 16

## பகுதி-2
### ஆசிச்செய்திகள்.

3. சுவாமி சர்வரூபானந்தா ஜி, இராம கிருஷ்ண மிசன் கொழும்பு. 27
4. பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, திருமலை மட்டு ஆயர். 28
5. சுவாமி ஞானமயாணந்தா, இராம கிருஷ்ண மிசன், மட்டக்களப்பு. 29
6. திரு.பொ.கந்தையா. (காந்தி ஆசிரியர்), திருக்கோணமலை. 30
7. வேதகமாமணி சோ.இரவிச்சந்திரக்குருக்கள், பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம். 31
8. அல்ஹாஹ் மௌலவி எ.எச்.செய்னுதுன். 32

## பகுதி-3
### வாழ்த்துச்செய்திகளும் வாழ்த்துப்பாக்களும்.

9. கௌரவ சிவனேசத்துரை சந்திரகாந்தன், முதலமைச்சர், கிழக்குமாகாணம். 35
10. கௌரவ ஆர். சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர், திருக்கோணமலை. 36
11. கௌரவ விமலவீரதிசநாயக்க, கல்வி அமைச்சர், கிழக்குமாகாணம். 37
12. திரு.வே.பொ.பாலசிங்கம், பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம். 38
13. திரு.என்.ஏ.ஏ.புஸ்பகுமார, செயலாளர், கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம். 39
14. திரு.இ.இளங்கோவன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வட மாகாணம் 40
15. திரு.ஏ.எம்.இ.போல், மாகாணக் கல்விப்பணிப்பாளர், கிழக்குமாகாணம். 41
16. திரு. இரங்கநாதன் உமாகாந்தன்,
பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல், வடமாகாணம் 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. திரு.சுந்தரம் டிவகலாலா,
முன்னாள் செயலாளர், கல்வி அமைச்சு, கிழக்குமாகாணம். 44
18. திரு.எஸ்.அமிர்தலிங்கம், முன்னாள் செயலாளர்,
ஆளுநர் அலுவலகம், கிழக்குமாகாணம். 45
19. திரு.கே.முருகுப்பிள்ளை, வலயக்கல்விப்பணிப்பாளர், திருக்கோணமலை. 47
20. திரு.அ.விஜயானந்தமூர்த்தி, வலயக் கல்விப்பணிப்பாளர், மூதூர். 48
21. ஜனாப் எம்.கே.எம்.மன்சூர், வலயக்கல்விப்பணிப்பாளர், சம்மாந்துறை. 49
22. ஜனாப் எம்.ரி.ஏ.தௌபீக், வலயக்கல்விப்பணிப்பாளர், கல்முனை. 51
23. திரு.த.மேகநாதன், வலயக்கல்விப்பணிப்பாளர், துணுக்காய். 52
24. திரு.இ.ரகுபதி, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர், வவுனியா வடக்கு. 53
25. திரு.இ.பாலேந்திரநாதன், கலாசார செயலாளர் பழைய மாணவர் சங்கம், லண்டன். 55
26. திரு.தெ.ரவீந்திரமூர்த்தி, அதிபர், சிவானந்தாக் கல்லூரி, மட்டக்களப்பு. 56
27. திரு.பொ.ஆனந்தராஜா, முன்னாள் அதிபர், சிவானந்தா கல்லூரி, மட்டக்களப்பு. 57
28. திருமதி.சுலோசனா ஜெயபாலன், ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருமலை. 59
29. சென்மேரிஸ் கல்லூரி வாழ்த்துப்பா. 60
30. ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி வாழ்த்துப்பா. 62
31. திரு.ச.பாரதிநாதன், ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க வாழ்த்துப்பா. 64

# பகுதி-4

## *நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே.*

32. திரு.கே.கே.தயாநிதி, தலைவர், பழைய மாணவர் சங்கம், கனடா. 67
33. த. மகாசிவம், பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். 70
34. திரு.ஆ.செல்வநாயகம், அதிபர், உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி. 72
35. திரு.ம.ச.பத்மநாதன், வவுனியா தமிழ் மகா. வித்தியாலயம், வவுனியா. 75
36. திரு.சு.ஜெயச்சந்திரன், முகாமையாளர், ஆசிரியர் நிலையம், வவுனியா வடக்கு. 75
37. திரு.து.குலவீரசிங்கம், சிரேட்ட பழைய மாணவர். 79
38. ஆர்.சுப்ரமணியம், சிரேட்ட உறுப்பினர், பழைய மாணவர் சங்கம். 81
39. திரு.வ.கந்தசாமி, ஓய்வு பெற்ற அதிபர்,
விஸ்ணு மகாவித்தியாலயம், வந்தாறு மூலை. 83
40. திரு.இ.புவனேந்திரன், அதிபர், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருமலை. 84
41. திரு.ந.அனந்தராஜா, நகர பிதா, வல்வெட்டித்துறை நகரசபை. 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி-5.

## சிறப்புக்கட்டுரைகளும் திறனாய்வுக்கட்டுரைகளும்.


42. பேராசிரியர்.சபா.ஜெயராசா.
கல்வி நிலையில் மகிழ் பொழுது மற்றும் மகிழ் செயல். 91

43. திரு. தை.தனராஜ் முதுநிலை விரிவுரையாளர்.
உத்தேச புதிய கல்விச்சட்டமும் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தியும். 94

44. பேராசிரியர்.சோ.சந்திரசேகரம்.
இலங்கையின் கல்வி முறையில் சமூக இணக்கத்துக்கான ஏற்பாடுகள். 101

45. பேராசிரியர்.மா.செல்வராசா.
ஜப்பானின் ஆரம்பக்கல்வியும் இரண்டாம் நிலைக்கல்வியும். 100

46. பேராசிரியர். அ.சண்முகதாஸ்.
மொழி - இலக்கியம் - பண்பாடு. 111

47. பேராசிரியர். எஸ்.ஜே.யோகராசா.
பெற்றோர் ஆசிரியர்களின் கவனத்திற்கு. 120

48. பேராசிரியர். மா.கருணாநிதி.
கட்டுருவாக்க அணுகுமுறையும் ஆசிரியர் கல்வி முறையும். 122

49. திரு. லெனின் மதிவானம்.
மலையக நாட்டார் பாடல்கள் மரபும் மாற்றமும். 127

50. திரு. இ.திருக்குமரநாதன்.
பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள்
பற்றிய ஒரு கண்ணோட்டம். 137

51. திரு. ந.குமணன்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கத்தின் வரலாறும் வளர்ச்சியும் 149

52. வல்வை திரு.ந.அனந்தராஜா.
முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் பெற்றாரின் பங்கு. 154

53. திரு. ந.கணபதிப்பிள்ளை. சிரேட்ட பழைய மாணவர்.
திருக்கரைசையம்பதி அகத்தியர் ஸ்தாபணமும்
திருமங்கலாயும் இன்றைய நிலை. 158

54. திரு. அ.அருள்சுப்ரமணியம். செயலாளர். சிரேட்ட பழைய மாணவர்.
திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையும்
அதனைத் தெரிந்து கொள்ள வேண்டிய இன்றைய நிலையும். 161

55. திரு. செ.பத்மசீலன்
திருக்கோணமலையின் கல்வி நிலை பார்வையும், பதிவுகளும். 168




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களின் ஆதிகாலச் சின்னமாக திருக்கோணேஸ்வரர் ஆலயம் விளங்கிக் கொண்டிருப்பது நாமெல்லாம் பெற்ற பெரும் பேறாகும். வீணைநாதப் பித்தனாகிய கோணைநாதப் பெருமானின் திருவருளினைப் பெற்று வாழும் எம்மக்கள் என்றும் பெருமைக்குரியவர்களே.

இப் பெருமைமிகு பூமிதனில் உதித்த திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்விக்கும், தமிழர்களின் வாழ்வியல் வளத்திற்கும் ஆற்றிக்கொண்டிருக்கும் சேவையினைக் கௌரவிக்கும் நோக்குடன் தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் திருக்கோணமலை சமூகத்தின் ஆதரவுடன் எடுத்திருக்கும் இம்முயற்சியானது பலரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது என்பது மனமகிழ்வினைத்தரும் ஒரு விடயமாகும். அன்னார் தனது 41 வருடகால கல்விச் சேவையில், 22 வருடகாலம் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தார் என்பது எம் சமூகத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இக்காலகட்டத்தில், கல்லூரியின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் திரு.சி. தண்டாயுதபாணி அவர்களின் வகிபங்கு அளப்பெரியது. பழையமாணவர் சங்கத்தினைப் பலப்படுத்தியதன் மூலம் கல்லூரியின் பௌதீகவளத்திலும், கல்வித்தரத்திலும் வளர்ச்சியினை ஏற்படுத்தியிருந்தார். தனது 22 வருடகால சேவையில், 14 வருடங்கள் அதிபராக கடமைபுரிந்து கல்லூரியில் பயனுறுதிவாய்ந்த ஓர் தரமான கல்வித் தளத்தினை உருவாக்கியிருந்தார். பலதுறைகளிலும் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கில் செழுமையினை ஏற்படுத்திய சிறப்பு இச்செம்மலையே சேரும். இவரிடம் இயல்பாகவே காணப்பட்ட உயரிய பண்புகளும், பேச்சாளுமை வீச்சும், கல்விசார்ந்த அகலமானதும், ஆழமானதுமான அறிவும் இக்கல்லூரியின் வளர்ச்சிப் போக்கில் பெரிதும் ஆதிக்கம் செலுத்திய முக்கிய காரணிகளாக காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களின் முற்பகுதியில் ஒரு வினைத்திறன் மிக்க கல்வி வழங்குனராக இவர் செயல்பட்டிருந்தார். பொருளியல் பாடத்தினை மாணவர்களுக்குப் புகட்டுவதில் புகழ்மிக்க ஆசானாய் திகழ்ந்தார் என்பது நாம் அனுபவித்த உண்மையே. அறிவியல் அறவியல் என்ற இரண்டு அம்சங்களும் இரு வேறு சமாந்தரக் கோடுகள் அல்ல அவைகள் ஒவ்வொன்றும் ஒரு மனிதனில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படவேண்டிய விடயங்கள், என்பதில் அவர் மிகத்தெளிவாக நின்று செயலாற்றிருந்தார்.

விரிந்து சென்ற அவரின் கல்விப் பயணத்தில் ஒவ்வொரு பதவியிலும் அன்னார் தனது சுத்தமான சுவடுகளைப் பதித்து சென்றிருந்தார். பதவிப் படிமுறைகளில் சீராக நின்று தனது பங்கினை செவ்வனே நிறைவேற்றிய ஒரு பணிவீரர். அவர் சேவையாற்றிய பகுதிகளில் ஒரு கல்வியதிகாரியாக மட்டும் தன்னை வெளிக்காட்டாது உணர்வுகளுக்கு மதிப்பளித்து சேவையாற்றும் ஓர் உன்னத மனிதராகவும் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் மிளிந்தார். அன்னாரின் சேவை அளிக்கையில் காணப்பட்ட பெறுமதியினை அறிந்த நிருவாகம் அவரின் சேவை தொடர்ந்தும் தேவை என வேண்டிய போதும் கூட ஏனையோருக்கும் இடமளிக்க வேண்டும் என்ற எண்ணமிகுதியால் ஓய்வுக்குப் பிந்திய சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போதும் கல்வி சார்ந்த நிறுவகம் ஒன்றில் பணிபுரிவது எமது கல்விச் சமூகத்திற்கு கிடைத்த பெரும் பாக்கியமே.

இம் மலருக்கு பலவழிகளிலும் உதவிய விழாக் குழுத் தலைவருக்கும், இணைப்பாளருக்கும். பதிப்பாசிரியர் குழுவின் உறுப்பி னர்களான திரு.ஆர் சுப்ரமணியம், திரு.ரி.குலவீரசிங்கம், திரு.ச.சிறிதரகுமார் ஆகியோருக்கும் மேலும் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் பதிப்பாசிரியர் சார்பில் எனது நன்றிகளையும், பாராட்டுதல்களையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

திரு.ச.பாரதிநாதன்
பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சிங்காரவேலு தண்டாயுதபாணி அவர்கள்

B.A (Hons), PGDE, Med.

SLEAS - I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 1

## திரு.சி.தண்டாயுதபாணி
## அவர்கள் பற்றிய
## பார்வையும் பதிவுகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.தண்டாயுதபாணி – ஒரு விபரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிங்காரவேலு தண்டாயுதபாணி |
| பிறந்த இடமும் திகதியும் | : | திருகோணமலை, 07.08.1950 |
| முகவரி | : | 23, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை |
| கல்வி | : | 1955 – 1957 தி / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயம்,<br>1958 – 1965 தி / இ.கி.ச இந்துக் கல்லூரி, திருகோணமலை<br>1967 – 1969 தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்<br>1971 – 1972 ஆசிரியர் பயிற்சிக் கல்லாரி, பலாலி<br>1975 – 1979 களனிப் பல்கலைக்கழகம், களனி, B.A (Hon)<br>1984 யாழ்ப்பாண பல்கலைக்கழகம், (PGDE)<br>2003 தேசிய கல்வி நிறுவகம் (M.Ed) |
| தற்போதைய பதவி | : | சிரேட்ட நிபுணத்துவ ஆலோசகர்,<br>ஜேர்மன் சர்வதேச கூட்டு ஒத்துழைப்பகம் /<br>சமூக இசைவுக்கான கல்வித் திட்டம் (GIZ/ESC)<br>திருகோணமலை. |
| வகித்த பதவிகள் | : | |
| 1970 – 1989 ஆசிரியர் | : | தி/மூதூர் மகா வித்தியாலயம், மூதூர்<br>தி/அலிகார் மகா வித்தியாலயம், ஏறாவூர்<br>கொ/ஹமீத் அல் – ஹூசைனி ம.வி. கொழும்பு<br>தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை |
| 1989 – 1990<br>பிரதி அதிபர் | : | தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை |
| 1990 – 2004 அதிபர் | : | தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை |
| 1990 – 1993<br>கொத்தணி அதிபர் | : | திருகோணமலை மத்திய கொத்தணிப் பாடசாலைகள் |
| 2004 – 2006 | : | வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு |
| 2006 – 2007 | : | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம் |
| 2007 – 2010 | : | மாகாணக் கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம் |
| 2010 – 2011 | : | பிரதிச் செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சு, கிழக்கு மாகாணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில்களும் வெளிநாட்டுப் பயணங்களும்

1. தாய்லாந்து : 'ஆசிரியர் அந்தஸ்து' கருத்தரங்கு – 1989 IFFTU/UNESCO
2. இந்தியா : 'சிரேஸ்ட பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவம்' பயிற்சி நெறி - 1997 ADB/NIEPA
3. ஐக்கிய இராச்சியம் : 'அதிபர்களுக்கான தொழில்சார் விருத்தி' பயிற்சி நெறி - 2003 பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம்.
4. தாய்வான் : சர்வதேச கல்வியகம் - ஆசிய பசுபிக் நான்காவது பிராந்திய மாநாடு – 2003
5. மலேசியா : சர்வதேச கல்வியகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய முகாமைக் குழுக்கூட்டம் - 2004
6. ஐக்கிய அமெரிக்கா : " கல்வி புனரமைப்புக்கான தந்திரோபாயத் தெரிவுகள்" - 2008 உலக வங்கி
7. கனடா : "கனடா பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்" – 2011

வகித்த பதவிகள் (கல்வி, சமூக அபிவிருத்தி நிறுவனங்களில்)

1. தலைவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
2. சார்க் நாடுகளுக்கான உறுப்பினர், சர்வதேச கல்வியக ஆசிய பசுபிக் பிராந்திய முகாமைக்குழு.
3. தலைவர், திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் கழகம்.
4. காப்பாளர், இலங்கை சாரணர் சங்கம், திருகோணமலை மாவட்டம்.
5. தலைவர், தமிழ் தகவல் தொழில்நுட்ப அமையம் (TITA), திருகோணமலைக்கிளை.
6. கௌரவ செயலாளர், பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கங்களின் ஒன்றியம் - 1979
7. தொழிற்பயிற்சி சபை அங்கத்தவர் - தொழில், தொழிற்பயிற்சி அமைச்சு.
8. வருகை நிலை விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்
9. வருகை நிலை விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி, திருகோணமலை.
10. வருகை நிலை விரிவுரையாளர், இலங்கை உயர் தொழில் நுணுக்க கல்வி நிறுவகம், திருகோணமலை – (SLIATE)
11. பயிற்றுனர், அதிபர் வாண்மைத்துவப் பயிற்சி நெறி, பொதுக்கல்விச் செயற்றிட்டம் (GEP)
12. வெளிநிலை விரிவுரையாளர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பிராந்திய கல்வி நிலையம், திருகோணமலை.

தற்போதைய பதவிகள் :

1. வெளிநிலை விரிவுரையாளர் : பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி, தேசிய கல்வி நிறுவகம், பிராந்திய கற்கை நிலையம், திருகோணமலை.
2. தலைவர் : சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், திருகோணமலை மாவட்டம்.
3. சிறப்பு ஆலோசகர் : 'ஆசிரியம்' சஞ்சிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காப்பாளர் : பழைய மாணவர் சங்கம், தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை
5. தேர்வுக்குழு உறுப்பினர் : ஆளுநர் விருது / முதலமைச்சர் விருது தமிழ் இலக்கிய விழா, கிழக்கு மாகாணம்.
6. காப்பாளர் : திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் சங்கம்

விருதுகளும் பாராட்டுக்களும்

1. சிறந்த அதிபர் விருது : இலங்கை கல்வி முன்னேற்றச் சங்கம் - 1996 (SLAAED)
2. சேவை நலன் பாராட்டு : திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் - 2010
3. பதவியுயர்வு பாராட்டு : கிண்ணியா வலய அதிபர்கள் சங்கம் - 2010
4. தமிழ் செம்மொழி விழா : மாகாணக் கல்வித் திணைக்களம் - 2010 நினைவுப் படிகம்
5. நூற்றாண்டு விழா வாழ்த்துமடல் : மட் / வந்தாறுமூலை விஷ்ணு ம.வி - 2010
6. பிரியாவிடை வாழ்த்துமடல் : ஆசிரியர் கழகம், தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி - 2004
7. பாராட்டு மடல் : உயர்தர மாணவர் ஒன்றியம், தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி - 2004
8. பாராட்டு மடல் : இலங்கை சாரணர் சங்கம், திருகோணமலை மாவட்டம் - 2009
9. அரும்பணி மதிப்பு : திருகோணமலை நலன்பரிச் சங்கம், கனடா - 2011
10. சமூக, கல்விப்பணி பாராட்டு : தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா- 2011
11. கல்விப் பங்களிப்பு : தி/சென் யோசப் கல்லூரி, பழைய மாணவர் சங்கம், கனடா- 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பணிக்கு அணி சேர்த்த கல்விக் கலைமணி திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள்

மா.இராசரெத்தினம்
ஓய்வு பெற்ற அதிபர்.
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

திருக்கோணமலை மண்ணில் பிறந்து தான் கற்ற கல்வியையும் தன் திறமையையும் அர்ப்பணிப்புடன் சமூகத்திற்கு வழங்கி வழிகாட்டி நிற்பவர் எம் அனைவரதும் மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள். கல்வி கற்ற காலத்திலும், ஆசிரிய சேவை முதல் கிழக்கு மாகாணத்தின் பிரதிச் செயலாளர் பதவி வரையான ஒவ்வொரு படிநிலையில் காணக்கூடிய அனைத்துச் சேவைகளிலும் அவர் தன்னிகரற்ற சேவையை வழங்கி தனக்கென ஓர் சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளார். தனியாக கல்விச் சேவையில் மட்டுமன்றி தமிழ் சமூகத்தின் சமயம், மொழி, கலாசாரம், பண்பாடு வரலாறு ஆகியவற்றை பேணிக் காக்க வேண்டும் என்பதிலும் மிக்க அவாக் கொண்டவர். இயற்கை அனர்த்தங்களினாலும் அசாதாரண நிலைமைகளினாலும் மாணவர்களின் கல்வியும், சமூக நிலைமைகளும் பாதிக்கப்பட்ட போதெல்லாம் அதற்கான உடன் நிவாரணம் அளிக்கும் செயற்பாடுகளுக்கு வழிகாட்டி யாகவும், பங்காளியாகவும் செயற்பட்டு மனித நேய செயற்பாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

இவ்வாறு கல்விப்பணியிலும் சமூகப்பணியிலும் அவரது வகிபாகத்தை அந்த அந்த நிலைமைகளில் அவருடன் இருந்து அனுபவித்தவர்கள், கலந்து கொண்டவர்கள் கட்டுரை வாயிலாகவும் வாழ்த்துரைகள் வாயிலாகவும் இச் சிறப்பிதழில் வெளிப்படுத்தியுள்ளனர்.

அகவை அறுபத்தொன்றை கடந்து நிற்கும் திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் பத்து வருடங்கள் கல்வி கற்பதிலும் 23 வருடங்கள் கல்விப் பணியிலும் இந்துக்கல்லூரியுடன் இருந்ததன் மூலம் 33 வருடங்கள் இக்கல்லூரியுடன் வாழ்ந்திருக்கின்றார். தனது 41 வருட கல்விச் சேவையிலும், 23 வருட கல்விச் சேவை தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியிலேயே அர்ப்பணிப்புடன் ஆற்றியுள்ளதுடன், தொடர்ந்தும் பல்வேறு பதவிகளில் இருந்த போதும் இக்கல்லூரியுடன் ஒன்றித்து ஆலோசனைகளையும் வழிகாட் டல்களையும் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் அவரது வாழ்வியல் தடங்களை சரியாக பதிவு செய்யக்கூடிய உரிமையும், கடமையும் அவரது நீண்ட கால சகபாடியாக உள்ள எமக்கு உண்டு என்ற உந்தல் உணர்வோடு அவரது வாழ்க்கைப் பதிவுகளை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நித்திலம் கொழிக்கும் குரைகடல் சூழ்ந்த திருக்கோணமலை நகரில் 07.08.1950ம் திகதி திரு.திருமதி.சிங்காரவேலு அவர்களின் சிரேஷ்ட மகனாக பிறந்தவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள். அவர் 02 சகோதரர்களையும் 02 சகோதரிகளையும் உடன் பிறப்புக்களாக கொண்டிருந்தார். தனது ஆரம்பக்கல்வியை திருக்கோணமலை தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பித்து தரம் நான்கு தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரை தி/இ.கி.ச இந்துக்கல்லூரியில் கல்வி கற்றார். அக்காலத்தில் திருக்கோண மலையில் உயர்தரம் கற்பதற்கான வாய்ப்புக் களும் அதன்பால் நாட்டம் செலுத்தலும் மிகக்குறைந்த அளவிலேயே காணப்பட்டது. பல்வேறு உத்தியோகங்களுக்கும் க.பொ.த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தரமே போதிய தகுதியாகக் கொள்ளப்பட்ட காலம் அது. எனவே க.பொ.த சாதாரணதரத்தில் 1965ம் ஆண்டு சித்தியடைந் ததைத் தொடர்ந்து 1967ல் யாழ்ப்பாண தொழில் நுட்பக்கல்லூரியில் இணைந்து இரண்டு வருடக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார். இக் காலத்திலிருந்தே இவரிடம் காணப்பட்ட கல்வி, சமூக, பொருளாதார கருத்தரங்கு களிலும், பொது மேடைகளிலும் புள்ளிவிபரங் களுடன் அனைவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியவாறு விடயங்களை எடுத்துக் கூறும் பேச்சுத்திறன் அனேகரின் பாராட்டைப் பெற்றிருந்ததை நாம் அறிவோம். அக்காலத்திலிருந்தே இவர் அடக்கமான பண்புள்ள தலைமைத்துவத்திற்குத் தேவையான பல சிறந்த இயல்புகளை உடைய வராக சமூகத்தினால் இனங்காணப்பட்டார். அவ் அங்கீகாராம் எதிர்காலத்தில் அவர் வகித்த பல்வேறு தலைமைத்துவ பதவிகளுக்கும், செயற்பாடுகளுக்கும் தளமாகவும் உந்து சக்தியாகவும் அமைந்தது என்றே கூறலாம்.

1970 பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரிக்கான தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்த இவர் அவ் ஆண்டிலே பயிற்றப்படாத ஆசிரியராக மூதூர் மகாவித்தியாலயத்தில் ஆசிரிய சேவையை ஆரம்பித்தார். அன்று முதல் கல்விக்கலை ஞராக நாம் காணும் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் கல்வியிலான வகிபாகம் முழுநேரக் கற்றல் வகிபாகத்திலிருந்து கற்பித்தலே பிரதான வகிபாகம் என்ற நிலைக்கு மாறியது. இவ் ஆசிரிய சேவையின் ஆரம்பம் அவருக்கு கிடைத்த பதவி என்பதை விட அவரிடம் காணப்பட்ட திறன்களும் நல்ல பண்புகளும் சமூகத்திற்குச் செறிவாகக் கைமாறுவதற்கு கிடைத்த நல்வாய்ப்பு என்று கொள்வதே பொருத்தமானதாகும். அவரது மாணவர்களிடம் காணப்பட்ட பண்புகளும் செயற்பாட்டுத் திறன்களும் பொறுப்புக்களை ஏற்று நடாத்தும் பாங்கும் இதனை துல்லியமாக வெளிக்காட்டி நிற்கின்றன.

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் ஆசிரிய பயிற்சியினை 1971 – 1972 காலத்தில் பெற்றபோது பல்துறையிலும் விரிவுரையாற்று பவராக பணியாற்றிய பண்டிதர் க.சச்சிதா னந்தன் அவர்களின் அணுகுமுறை இவரைக் கவர்ந்ததாகக் கூறுவார். ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியதும் மட்/ஏறாவூர் அலிகார் மகாவித்தியாலயத்தில் கடமையேற்று ஆசிரிய சேவையை மேற்கொண்ட காலத்தில் (1973 – 1975) அனேக இஸ்லாமிய மாணவர்களாலும் ஆசிரிய குழாத்தினாராலும் இன்றும் குறிப்பிட்டுச் சிலாகித்துக் கூறும் அளவுக்கு அவர் கல்விச் சேவையில் தடம் பதித்திருந்ததை நாம் அறிவோம். அன்று அவரிடம் கற்றவர்கள் அரசியலிலும், வேறு துறைகளிலும் இன்று மிளிர்ந்து கொண்டு இருக்கின்றனர். அவர்கள் இன்றும் தங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் திரு.சி. தண்டாயுதபாணி அவர்களுடைய சிறப்பான அர்ப்பணிப்பான கற்பித்தல் பற்றி எடுத்துக்கூறு வதைக் கேட்கும் போது ஆரம்ப காலம் முதலே கற்பித்தல் வகிபாகத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுவிட்டதை உறுதி செய்யக்கூடியதாக உள்ளது. மதிப்பிற்குரிய சி.தண்டாயுதபானி அவர்கள் எவரது சிபார்சையும் எச்சந்தர்ப் பத்திலும் பெற்றுக் கொள்ளாது சுய திறமை யிலும் தகைமையிலும் எப்போதும் நம்பிக்கை கொண்டவராக் காணப்பட்டார். இந் நிலைப்பாடு அவரது கல்விச் சேவையின் ஆரம்பகாலத் திலேயே செறிவாகப் பதிந்திருந்தது. இதனால் தனது அர்ப்பணிப்பான கல்விச் சேவையின் மத்தியிலும் சமூகத்திற்கு முன்மாதிரியான சேவை ஆற்றும் அவாவுடன் தனது கல்வித் தகைமைகளையும் தொழிற்தகைமைகளையும் தொடர்ந்து வளர்த்துச் செல்வதில் ஏனையோருக்கு ஒரு எடுத்துக்காட்டானவராக காணப்பட்டார்.

ஆசிரியப் பணியில் இருந்து கொண்டே உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து 1975ல் களனிப்பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார். 1976 – 1981 காலப்பகுதியில் இவர் கொ/ ஹமீத் அல் ஹுசைனி மகாவித்தியாலயத்தில் சிறப்பான ஆசிரியப் பணியாற்றிக் கொண்டிருக்கையிலேயே 1979ம் ஆண்டு கலைமாணி சிறப்புப்பட்டத்தை (BA Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதுடன் 1980ல் களனிப்பல்கலைக் கழகத்தில் வருகை நிலை விரிவுரையாளரா கவும் பணியாற்றினார். பொருளியல் பாடத்துறையில் சிறப்பபுப்பட்டத்தை உயர் தரத்துடன் பெற்றுக்கொண்ட அதேவேளை களனிப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் தலைவராக கடமையாற்றி தமிழ் மொழி மூல மாணவர்களின் கலை, இலக்கிய, சமூகச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். 1978/79 காலப்பகுதியில் அனைத்துப்பல்கலைக்கழக தமிழ்ச் சங்க ஒன்றியத்தை உருவாக்கும் பணியில் முன்னின்று பணியாற்றி அதன் செயலாளராகவும் தெரிவாகி செயற்பட்டார். இது அவருடைய பன்முக வகிபாகங்களை சமகாலத்தில் திறம்பட செயற்படுத்தும் திறனை வெளிகாட்டி நிற்பதைக்காணலாம். பல்கலைக் கழக காலத்தில் இவர் அனைவரை யும் கவரக்கூடிய பண்பும் திறனும் கொண்ட வராக இருந்தமையை அங்குள்ள பதவிக ளுக்கு தெரிவானதிலிருந்து எம்மால் உணர முடிகின்றது.

கொ/ஹமீத் அல் ஹுசைனி மகா வித்தியால யத்தில் ஆசிரிய பணியை மேற்கொண்ட காலத்தில் அங்குள்ள ஆசிரிய கழகத்திலும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதுடன் அக்கழ கத்திற்கான புதிய திட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்தி அனைவரது பாராட்டுக்குரிய வராகவும் திகழ்ந்தார்.

பல செயற்பாடுகளை சமகாலத்தில் முன்னெடுத்து அவை ஒன்றையொன்று பாதிக்காத வகையில் செயற்படுத்தும் ஆர்வமும், திறனும், தன்னம்பிக்கையும், முயற்சித்தால் முடியும் என்ற நேர்சிந்தனையும் கொண்டவராக காணப்பட்ட இவர் தனது சேவைக்காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதனைச் செயற்படுத்தியும் காட்டியுள்ளார்.

1981ம் ஆண்டு இடமாற்றம் பெற்று பட்டதாரி ஆசிரியராக சொந்த மண்ணில் தான் கற்ற அதே தி/இ.கி.ச இந்துக்கல்லூரியில் கடமையேற்றதிலிருந்து இவருடைய தரமான ஆசிரிய சேவையினை நுகரும் வாய்ப்பு திருக்கோணமலைச் சமூகத்திற்குக் கிடைத்தது. அதேவேளை அவரது திறனையும் அவருடைய கல்விப்பணியின் சிறப்பையும் வெளிக்கொணர தி/இ.கி.ச இந்துக்கல்லூரி சிறந்த அரங்காகவும் அமைந்தது. இது தொடர்பாக அவர் கூறுகையில் கல்வி நிர்வாகத்தில் தான் பல மேல் நிலைப் பதவிகளை வகித்தபோது திட்டங்களை செயற்படுத்துவதற்கும், உரிய தீர்மானங்களை எடுப்பதற்கும் இந்துக்கல்லூரி யில் தான் பெற்ற அனுபவங்கள் நிறையவே பங்களிப்புச் செய்ததெனக் குறிப்பிடுகின்றார்.

1981 முதல் 1989 வரை ஆசிரியராகவும் கலைவர்த்தக வகுப்புக்களின் பகுதித்தலைவரா கவும் பதவி வகித்த காலத்தில் பொருளியில், அளவையியல் பாடங்களை கற்பிப்பதில் தனித்துவமான ஆசிரியராகத் திகழ்ந்தார். இந்துக்கல்லூரி மாணவர்களும் ஏனைய பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் அவரது நேரடிக் கற்பித்தலில் பயன் பெறக்கிடைத்த உன்னதமான காலப்பகுதியாக இதைக்கொள்ளலாம். இச் செயற்பாடுகளுக்கும் மத்தியில் தனது தொழில் தகைமையை அதிகரிக்கும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சியை 1984ம் யாழ் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார்.

தனது பல்கலைக்கழக காலத்தில் கல்வி கற்று தமிழ் சிறப்பு பட்டதாரி ஆசிரியயையான இ. புவனேஸ்வரி அவர்களை 1984ல் திருமண பந்தத்தில் இணைத்துக்கொண்டார். இதன் மூலம் கல்வி பணிக்கும், சமூகப்பணிக்கும் துணைவியாரும் சிறந்த துணையாக விளங்கினார். மாணவர் கல்விக்காக ஆசிரியர் கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்பதை அழுத்தி உரைக்கும் அதேவேளை ஆசிரியர்களின் உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்பதிலும் அதற்காகக் குரல் கொடுப்பதிலும் முன்னணியில் திகழ்ந்தார். இதன் காரணமாக 1982ம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழாசிரியரர் சங்கத்தின் முக்கிய செயற்படு உறுப்பினராக பல்வேறு பதவிகளில் இருந்து ஆசிரியர்களின் உரிமைக்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தார். 1982 இல் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரச்சார செயலாளராகவும் 1996 இல் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இவரது தொழிற் சங்கப் பிரவேசம் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரந்த அளவில் ஆசிரியர், அதிபர், அதிகாரிகள் என பலதரப்பட்டவர்களின் தொடர்பையும் நட்பையும் தேடிக்கொடுத்தது. இதன்வாயிலாக அவர் நிதானமாகவும் அக்கறையுடனும் பொறுமையுடனும் செயற்பட்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பாங்கு வெளிக்கொணரப்பட்டிருந்தது. இதன் வெளிப்பாடாக 1989ல் தாய்லாந்தில் நடைபெற்ற "ஆசிரியர் அந்தஸ்து" தொடர்பான கருத்தரங்கில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டார்.

1989ம் ஆண்டு இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து திரு.அ.சிவலோகநாதன் அவர்கள் ஓய்வு பெற்று திரு.ச.குணரெட்னம் அவர்கள் அதிபரான போது பிரதி அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1990ம் ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவாகி அதற்கான கடமையை ஏற்றபோதும் கல்வி அலுவலகங்களை நாடாது கல்லூரி அதிபராக இருந்து சமூகத்திற்கு அதிகம் சேவையாற்றலாம் என்ற உயர்ந்த சிந்தனையுடன் 15.09.1990 ல் இந்துக்கல்லூரியின் அதிபராக கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இதேவேளையில் ஏற்கனவே தோற்றியிருந்த அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிபர் தரம் I நியமனமும் இவருக்கு வந்து சேர்ந்தது.

அன்று நிலவிய நிர்வாக முறையின் கீழ் இந்துக்கல்லூரியை மூலாதாரப் பாடசாலையாகக் கொண்டு ஐந்து பாடசாலைகள் கொத்தணிப்பாடசாலைகள் அமைப்பின் கீழ் இணைக்கப்பட்டிருந்தமையால் சமகாலத்தில் கல்லூரி அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் திறமையாக செயற்பட்டு அனைவரது பாராட்டையும் பெற்றார். கொத்தணிப் பாடசாலைகளை இணைத்த வகையில் இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றினை முன் மாதிரியாக நடாத்தியதுடன் கொத்தணிப் பாடசாலைகளுக்கான முறையான மேற்பார்வைத் திட்டம் ஒன்றையும் வகுத்து செயற்படுத்தி வெற்றி கண்டார்.

கல்லூரி அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதிலிருந்து சில முக்கிய கொள்கைகளை மனதில் கொண்டு அதன் அடிப்படையில் நிர்வாக செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்தி வெற்றி பெற்ற பாடசாலையாக கல்லூரியை உயர்த்தியதுடன் தேசிய மட்டத்தில் சிறந்த அதிபர்களில் ஒருவராகவும் தெரிவானார். அக் கொள்கைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு இனங்காணலாம்.

01. கல்லூரியை சமூகத்திற்கு திறந்து விட வேண்டும்
02. கல்லூரிக்கும் சமூகத்திற்கும் இருவழித் தொடர்பு நெருக்கமாக இருத்தல் வேண்டும்.
03. சட்டங்கள் அதிகாரங்கள் என்பவற்றுக்கு மேலாக வினைத்திறன் உள்ள பாடசாலையில் முறைமைகளே பாடசாலையை ஆளவேண்டும்.
04. அனுபவங்களை அனுபவங்கள் வாயிலாக அடைந்து கொள்ளும் கல்விக்கு ஏற்றதாகவும் ஒவ்வொரு மாணவனும் தனக்குரிய திறனை வெளிப்படுத்தக்கூடியதாகவும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் விரிவான முறையில் அமைந்து காணப்பட வேண்டும்.
05. எந்த ஒரு செயற்பாட்டிலும் செயற்பாட்டுக்கூறிலும் நேர்த்தியான தன்மையைப் பேணும் எண்ணும் ஆசிரியர்கள் மாணவர் உள்ளங்களில் வளர்க்கப்படவேண்டும்.
06. கல்விப்புலத்தில் மாணவர்களே முதலிடம் பெறவேண்டும். அவர்களுக்காகவே ஆசிரியர்களும் ஏனைய அனைத்து கல்வி நிர்வாகக் கட்டமைப்புக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்களும் மாற்றங் களும் உடனுக்குடன் வகுப்பறை மட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.
08. ஒவ்வொரு பாடசாலையும் தனக்குத் தேவையான அளவில் பௌதிகவளம், ஆசிரியவளம், நிதிவளம் ஆகியவற் றைப் பேணுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் தூர நோக்குடன் செயற்பட வேண்டும்.
09. அதிகாரங்கள் அதிபரிடம் மையப் படுத்தப்பட்டிராமல் உரியவர்களுக்கு கடமைகளும் அதற்கான அதிகாரங் களும் பகிரப்பட்டிருத்தல் வேண்டும்.
10. நல்ல விடயங்கள் பாடசாலை களிலிருந்து சமூகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சமூகத்தை வழிநடத்த வேண்டும்.

1990 – 2004 காலப்பகுதியில் அதிபராக கொண்ட வகிபாகத்தில் கல்லூரியின் முகாமை யாளராக, தலைவராக, சமூகசேவையளானாக, வழிகாட்டியாக சமய, கலாசார பணிகளில் அக்கறையுள்ள ஆர்வலராக, தொழிற்சங்கவாதி யாக, நூல் வெளியீடுகளில் சிறந்த ஒரு விமர்சராக, சமூக நிகழ்வுகளின் தலைவராக, மதிப்பீட்டாளராக, விரிவுரையாளராக, அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்ததங்குகளில் பயிற்றுனராக என பலவேடங்களில் சம காலத்தில் பிரகாசித்த ஒரு கல்வி கலைஞராக மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்களை நாங்கள் பார்க்க முடிந்தது.

இக்காலத்தில் இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அபிவிருத்தியில் பிரதி அதிபர்கள், முகாமைத்துவக்குழு உறுப்பினர் கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், பெற்றோர், மாணவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அயராது செய்த அர்ப் பணிப்பான பணியின் விளைவுகளில் சிலவற்றை யாயினும் இங்கு பட்டியலிடல் அவசியமா கின்றது.

- பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைத்து சமூக உறவை வலுப்படுத்தியமை.
- வித்தகர் விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவியமை.
- பரீட்சை பெறுபேறுகளிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் கல்லூரியை முதன்மை நிலைக்கு இட்டுச் சென்றமை.
- சித்தி விநாயகர் ஆலயத்தை கல்லூரி யில் அமைத்தமை.
- ஒன்று கூடல் மண்டபம் நூலகங்கள், வகுப்பறை கட்டிடங்கள், கணினிக் கூடம், கட்புல செவிப்புல சாதன அறை என கற்றலுக்குப் பொருத்தமான பௌதிக வளங்கள் பெறப்பட்டமை.
- பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் கல்லூரிக்கான மைதானத்தை எல்லையிட்டு அபிவிருத்தி செய்தமை.
- வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறந்த சமூகப்பாடசாலையாக கல்லூரி தெரிவு செய்யப்பட்டமை.
- செயலற்ற நிலையில் இருந்த பாடசாலைக் கூட்டுறவுச்சங்கத்தைப் புனரமைப்புச் செய்தமை.
- சாரணர் இயக்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணி ஆகியவற்றின் செயற்பாடுகளை நெறிப்படுத்தி மாணவர்கள் இதற்கான சர்வதேச ஒன்று கூடல்களில் கலந்துகொள்ள வாய்ப்பளித்தமை.
- கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் முழு ஒத்துழைப்பைப் பெற்று கணினிக் கூடம் உருவாக்கப்பட்டமை.
- தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும்,தி/இ.கி.ச இந்துக் கல்லூரியும் இணைக்கப்பட்டு மாவட்டத்தின் முதலா வது தேசிய பாடசாலையாக தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அமைக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தமிழ் இன்னிய அணி, அமைக்கப்பட்டமை.
❖ வருடாந்த நிகழ்வுகளாக மாபெரும் கிரிக்கட் ஆட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டி, வீதியோட்டப் போட்டி என்பன ஒழுங்கமைக்கப்பட்டமை.

இச்சாதனைகளின் மத்தியில் 1996ம் ஆண்டில் இலங்கை கல்வி முன்னேற்றச் சங்கத்தினால் தேசிய ரீதியில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டார். இதையொட்டி கல்லூரிச் சமூகம் பெருமையடைந்து அதிபரை கௌரவிப்பதற்காக பாராட்டு விழா ஒன்றை நடத்தியது. 1997 இல் இந்தியாவில் நடைபெற்ற "சிரேஸ்ட அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவம்" பயிற்சி நெறியில் கலந்து கொண்டார்.

இதே போன்று 2003ம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் பேர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "அதிபர்களுக்கான தொழில்சார் விருத்தி" பயிற்சி நெறியில் பங்கு கொண்டார். அவ்வாறான பயிற்சிகளை முடித்து நாடு திரும்பியதும் தனது பாடசாலை முகாமைத்துவக் குழுவினருக்கும், ஆசிரியர் களுக்கும் அப்பயிற்சியின் குறிப்பிடத்தக்க அம்சங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் ஒழுங்கு முறை அவரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளில் ஒன்றாக நாம் கண்டோம். ஐக்கிய இராச்சியத்தில் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட காலத்தில் அங்குள்ள பழைய மாணவர்களை ஒன்றிணைத்து பழைய மாணவர்சங்க ஐக்கிய இராச்சியக் கிளையை புனரமைப்புச் செய்து கல்லூரிக்கான பழைய மாணவர் உறவைப் பலப்படுத்தினார். இந்த ஒன்றுகூடலில் திரட்டப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி நாடு திரும்பியதும் நவீன கற்றல் கற்பித்தல் வசதி கொண்ட கட்புல செவிப்புல சாதனப்பிரிவை (Audio Visual unit) அமைத்து நவீன தொழில் நுட்ப மாற்றங்களை கல்லூரி உடனுடக்குடன் உள்வாங்கச் செய்தமை கல்லூரிச் சமூகத்தின் சிறப்பான பாராட்டைப் பெற்றது.

தொழிற்சங்க செயற்பாட்டிலும் தளர்வில்லாது செயற்பட்டு வந்த இவர் 2003ம் ஆண்டில் தாய்வான் நாட்டில் நடைபெற்ற சர்வேதசக் கல்வியகத்தின் "ஆசிய பசுபிக் நான்காவது பிராந்திய மகா நாட்டில்" கலந்து கொண்ட துடன் அங்கு நடைபெற்ற தெரிவில் அதன் முகாமைத்துவக்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். இத் தெரிவுக்கு அமைவாக மலேசியாவில் 2004ம் ஆண்டு நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலும் கலந்து உரிய விடயங் களைச் சமர்ப்பித்து பெருமை சேர்த்திருந்தார்.

2003ம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முதுமானிப்பட்டதைப் பெற்று தனது தகைமையை மேலும் உயர்த்திக் கொண்ட இவர் திறந்த பல்கலைகழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான வெளிநிலை விரிவுரையாளராகத் சில வருடங்கள் கடமையற்றினார். தற்போது தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் வெளிநிலை விரிவுரையாளாரக பணியாற்றுகின்றார்.

கல்லூரி அதிபராக இருந்த நீண்ட காலப்பகுதியில் நாட்டில் அவ்வப்போது எழுந்த அசாதாரண போர் நிலைமைகளினால் மக்கள் அகதிகளான வேலைகளில் மக்களுக்கும், மாணவர்களுக்குமான மனிதாபிமான உடன் நிவாரணப் பணிகளில் தன்னையும் பங்காளியாக்கிக் கொண்டு ஏனையோருக்கும் வழிகாட்டியாக செயற்பட்ட பாங்கு அனைவ ராலும் ஈர்க்கப்பட்டிருந்ததை இங்கு குறிப்பிடல் அவசியமாகின்றது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்போருடன் நாளாந்தம் கழிந்த அதிபர் பணிநிலை நீங்கி வவுனியா வடக்கு வலயத்தின் கல்விப்பணிப்பாளர் என்ற புதிய பணிநிலை 2004ம் யூன் 1ம் திகதி ஆரம்பமாகியது.

போரினால் பாதிக்கப்பட்டு இரு ஆள்புல நிர்வாக முறைகளைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டுக்கு உட்பட்டு அலுவலகம் ஓரிடமும் பயனாளிகள் வேறோர் இடமுமாக மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் மிக அருகி இருந்தவேளையில் வலயத்தின் பொறுப்பையேற்ற திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் தான் அங்கிருந்து சேவையாற்றிய இரண்டு வருடகாலத்திலும் அவ்வலயத்தை கல்வி நிலையில் மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை இன்றும் அப்பிரதேசம் பெருமையுடன் நினைவு கூர்கின்றது.

பிரச்சினைகளைக் கண்டு சோர்வடையாது அவற்றை விரைவாக தீர்த்துக்கொள்வதற்காக அங்கு இவரால் நடாத்தப்பட்ட இரண்டு நாள் கல்வி மாநாடு அனைவரின் கவனைத்தையும் ஈர்த்திருந்தது. இவரது இம் மகாநாட்டில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, தீர்வுகள் முன்வைக்கப்பட்டு, தீர்வுக்குத் தேவையான வளங்களை வழங்கக்கூடியவர்கள் இனங்காணப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டனர். துரித செயற்திட்டங்கள் மூலம் இவர் பாடசாலைக்கட்டிடங்கள், ஏனைய பௌதிக வளங்கள் வலயக்கல்வி அலுவலகம், ஆசிரியவளப் பகிர்வு எனப்பலப்பிரச்சனை களுக்கு மிகக்குறுகிய காலத்தில் சாதகமான தீர்வுகளைக்கண்டு ஏகோபித்த பாராட்டைப் பெற்றார். வவுனியா நகரத்தில் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்த வலயக்கல்வி அலுவலகத்தை வலயப்பிரதேசத்திற்கு மாற்றுவதற்கு முனைப்புடன் செயற்பாட்டார். அதன் விளைவாக இன்று புளியங்குளத்தில் புதிய வலயக்கல்வி அலுவலகம் இயங்கிக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

2006ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணத்தின் மேலதிக மாகாணக்கல்வி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார். இது கல்வி நிர்வாகத்துறையில் வேறொரு பரிநாமத்தை அவருக்கு வழங்கிற்று. பரந்த பரப்பைக் கொண்ட வேலைப்பழு நிறைந்த பதவியாக இருந்த போதும் சிற்றூழியர் முதல் மேலதிகாரிகள் வரை அனைவருடனும் பண்பாகவும், அன்பாகவும் பேசி பிரச்சனைகளை செவிமடுத்து நியாயமான தீர்வுகளை விரைவாகப்பெற்றுக் கொடுப்பதின் மூலம் அனைவராலும் விரும்பப்பட்டார். ஏனைய அதிகாரிகளுக்கும் தாமும் இவரது செயற்பாடுகளை பின்பற்ற முனைய வேண்டும் என எண்ணும் வகையில் பொதுசேவை அதிகாரிக்குரிய சிறந்த பண்புகளை இப்பதவி மூலம் வெளிப்படுத்தினார்.

2007ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மாகாணக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று மாகாணத்தின் கல்வி அடைவை உயர்த்தும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டங் களை நடைமுறைப்படுத்தினார். மாகாண மட்டத்தில் தமிழ் மொழித்தினப் போட்டி, விளையாட்டுப்போட்டி, சிறுவர் நாடக போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி, விவசாய அறிவுப்போட்டி போன்றவற்றை திட்டமிட்டு நேர்த்தியாக உரிய காலத்தில் நடத்துவதிலும் மாணவர்கள், ஆசிரியர்களின் பிரச்சனை களுக்கு உடன் தீர்வைப் பெற்றுக் கொடுப்ப திலும் முன்மாதிரியான நிர்வாகியாக செயற் பட்டார். மாகாணக் கல்விப் பணிப்பாளராக இவரால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகளையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

1. கிழக்கு மாகாணப்பாடசாலைகளில் காணக்கூடிய மனிதவள பௌதிக வளத் தகவல் நிரற்படுத்தலைத் துரிதப்படுத்தியதுடன் அதனை முகாமை செய்வதற்கான அறிவையும் திறனையும் கல்வி அதிகாரிகளும் அலுவலர் களும் விரைவில் பெற்றுக் கொள்ளச் செய்தமை.

2. இணையத்தளம் மூலமான கற்றல் (e-learning) கலாசாரத்தை ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் விரைவில் ஏற்படுத்து வதற்குத் தேவையான வளங்களையும், பயிற்சியையும் உரிய திட்டத்தின் மூலம் சிறப்பாக செயற்படுத்தியமை.

3. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கல்விப்பாதிப்பை உடன் நிவர்த்திக்கும் நோக்கில் மூடப்பட்ட பாடசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளத்திறத்தல், பாடசாலைகளை திருத்துதல், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் உடன் கிடைக்கச்செய்தல், பாடசாலைக்குச் செல்ல முடியாத காலத்தில் இழந்த கல்வியை மீளப்பெற்றுக்கொள்ளச் செய்தல் போன்ற விசேட திட்டங்களை துரிதமாக செயற்படுத் தியமை.

4. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர் களினதும், மக்களினதும் நிவாரணப் பணிகளுக்கும், நலன்புரி நிலையங்களில் காணப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாடு களுக்கும் முன்னுரிமையும் முக்கியத்துவம் கொடுத்து இணைப்புச் செயற்பாடுகளில் துரிதமாக செயற்பட்டமை.

மிகச்சிறந்த முறையில் அனைவரது பாராட்டுக் கும் உரிய வகையில் மாகாண கல்விப்பணிப் பாளரின் பணிகள் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் 2010ம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். ஏற்கனவே இப்பதவிக்கான நாட்டத்தையோ, விருப்பையோ கொண்டிராத வராக இருந்த போதும் இப்பதவியிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்பெறக் கூடிய வகையில் இவரது சமூக நோக்குடனான பணி தொடர்ந்தது. நீண்ட காலம் தாமத மடைந்திருந்த சம்பள மாற்றம், பதவியுயர்வு பதவி நிரந்தரப்படுத்தல் இடமாற்றப் பிரச்சனைகள் என பல்வேறு பிரச்சினைகளை விரைவாகவும் நியாயமாகவும் தீர்த்துக்கொள்ள இவரது இந்த வகிபாகம் சிறப்பாகப் பயன்பட்டதை கூறலாம். மேலும் இக்காலத்தில் தமிழ் மக்களின் கலாச்சாரத்தை பேணக்கூடிய வகையில் தமிழ் இலக்கிய விழாவை திட்டமிட்டு நடாத்தியதுடன் இலக்கிய கர்த்தாக்களுக்கான முதலமைச்சர் விருதுக்கான தெரிவு, ஏனைய கலாசார விழாக்கள் என அனைத்தையும் சிறந்த முறையில் நெறிப்படுத்தி நடாத்திப் பாராட்டை பெற்றார்.

2011 யூன் மாத முடிவுரை மிக்க கண்ணியமான சேவையை வழங்கி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து ஜேர்மன் சர்வதேசக்கூட்டு ஒத்துழைப்பகத்தின் சமூக இசைவிற்கான கல்வித்திட்டத்தில் சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகராக பதவியேற்றுள் ளமை கல்விக்கும் சமூக விருத்திக்கும் அவரது சேவையைப் பெற்றுக் கொள்ள கிடைத்த நல்ல வாய்ப்பாக நாம் நம்பலாம்.

ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 2011 யூலை 9ம் திகதி கனடாவில் நடைபெற்ற தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். திருக்கோணமலையைச் சேர்ந்த அங்குள்ள பல்வேறு அமைப்புக்களும் இவரது சேவையை கௌரவித்து தனித்தனி யான பாராட்டு நிகழ்வுகளையும் நடாத்தியமை அவரது சேவைக்கான அங்கீகாரமாக கொள்ளலாம்.

இப்பணிச்சிறப்புகளுக்கு மத்தியில் திரு.திருமதி. தண்டாயுதபாணி தம்பதிகளின் மகன் த.பாலமுரளி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியலாளராக பட்டம் பெற்று வெளியேறி மேற்படிப்புக்காக வெளிநாட்டில் உள்ளார் என்பதும், மகள் த. மேகலா இந்தியாவில் உயிரியல் தொழில்நுட்ப பாடத் துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார் என்பதும் அவரது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

ஆசிரியராக முதற்படியில் கல்விச்சேவையை ஆரம்பித்த மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுத பாணி அவர்கள் மாகாணப் பிரதிச் செயலாளர் வரையான அனைத்து பதவி நிலைகளிலும் அனைத்து செயற்பாடுகளிலும் சிறப்பாக பணி யாற்றி கல்விக்கும் சமூகத்திற்கும் தொண் டாற்றிய ஒரு கல்விக் கலைஞராக கல்விக் கலைமணியாக காண்பதில் நாம் பெருமை யடைகின்றோம். தொடர்ந்தும் அவரது ஆற்ற லும் அனுபவமும் கல்விக்கும், சமூகத்திற்கும் குறைவின்றி கிடைக்கவேண்டும் என்ற வேண்டுதலுடன் அவரும் அவரது குடும்பத் தினரும் என்றும் நலம்பெற நல்வாழ்த் துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1992ம் ஆண்டு சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலை திறப்பு விழாவின் போது
இராமகிருஸ்ண மிஷன் சுவாமிகள் ஆத்மகனானந்தா, ஜீவானந்தா ஆகியோருடன்....



குடும்ப அங்கத்தவர்களுடன்
மனைவி : திருமதி. புவனேஸ்வரி தண்டாயுதபானி (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்)
மகன் : திரு. தண்டாயுதபாணி பாலமுரளி (பொறியியலாளர் – சிங்கப்பூர்)
மகள் : செல்வி. தண்டாயுதபாணி மேகலா (பல்கலைக்கழக மாணவி, சென்னை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1983ம் ஆண்டில் மூதூரில் இருந்து திருகோணமலைக்கு இடம் பெயர்ந்திருந்த மாணவர்களுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை கருத்தரங்குகளை நடாத்துவதற்கான நிதியை, இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் அமரர் டி.எஸ்.கே. வணசிங்கா அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார்.



தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற "ஆசிரியர் அந்தஸ்து" தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டபோது ஏனைய நாடுகளின் பங்குபற்றுனர்களுடன்...(1989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கல்வி முன்னேற்றச் சங்கத்தினால் (SLAAED) சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டதை முன்னிட்டு கல்லூரிச் சமூகத்தினால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவின் போது...... (1996)



சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டமைக்கான பாராட்டு விழாவின் போது பழைய மாணவர் சங்கத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார். (1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுடெல்லியிலுள்ள கல்வித் திட்டமிடலுக்கும் நிருவாகத்துக்குமான தேசிய நிறுவனத்தில் (NIEPA) நடைபெற்ற 'கல்வி முகாமைத்துவம்' தொடர்பான பயிற்சி நெறியில் கலந்து கொள்கின்றார். (1997)



புதுடெல்லி, நீப்பா நிறுவனத்தில் நடைபெற்ற கல்வி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறியில் விரிவுரையாளர், பயிற்சி இணைப்பாளர், சக அதிபர்களுடன் (1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலமைப்பரிசில் பெற்று புதுடெல்லி சென்றிருந்தபோது கேரள மாநிலத்தின் கல்வி அமைச்சரைச் சந்தித்து உரையாடுகின்றார். (1997)



புதுடெல்லி பயணத்தின்போது மகாத்மா காந்தியின் நினைவுச் சின்னத்திற்கு முன்பாக சக அதிபர்களுடன் அஞ்சலி செலுத்துகின்றார். (1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளில் கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகளுக்காக முன்னாள் கல்விச் செயலாளர் அமரர் திரு. க.தியாகராஜா அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்.



திருகோணமலை லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வருடாந்த ஒன்று கூடலில் "நகரத்தின் சிறந்த பிரஜை" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரியின் புதிய சம்மந்தர் மண்டபம் இராமகிருஸ்ண மிஷனின் இலங்கைக் கிளையின் உப தலைவராக இருந்த சுவாமி ஆத்மகனானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வேளையில்............(2000)




தாய்வான் நாட்டில் நடைபெற்ற சர்வதேச கல்வியகத்தின் (EI) ஆசிய பசுபிக் பிராந்திய நான்காவது மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதி நிதிகளுடனும், மாநாட்டு தலைவருடனும்.......(2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு 'தரிசனம்' விழிப்புலனற்றோர் நிறுவனத்தின் வருடாந்த கொடி தினத்தில் முதலாவது கொடியை வாங்கி ஆரம்பித்து வைக்கின்றார்.



இலண்டனில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்ட சில பழைய மாணவர்களுடன்........... ( 2003 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டனில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிறுவாக உறுப்பினர்களுடன் ........ (2003)




இலண்டனில் பழைய மாணவர் சங்கத்தினரால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றார். (2003 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய இராச்சியத்திற்கான புலமைப் பரிசிலின் ஒரு கட்டமாக. பேர்மிங் ஹாமிலுள்ள ஹம்ஸ்ரீட் ஹோல் பாடசாலையை தரிசித்த வேளையில், நூலகருடன் உரையாடு கின்றார். (2003)



ஐக்கிய இராச்சியத்திற்கான புலமைப் பரிசிலின் ஒரு கட்டமாக, இலண்டன் உள்ளூராட்சி கல்வி அதிகார சபையின் அங்கத்தவர்களைச் சந்தித்து உரையாடிய போது.........(2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய இராச்சியத்திற்கான புலமைப் பரிசிலின் ஒரு கட்டமாக ஒக்ஸ்போர்ட் பல் கலைக்கழகத்தை பார்வையிடச் சென்ற போது. விரிவுரையாளர் ஒருவருடன்...(2003)



தி / இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின விழாவின்போது யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக பீடாதிபதி திரு. ஆர். நந்தகுமார் அவர்களால் கௌரவிக்கப்படுகின்றார். (2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேவை நலன் பாராட்டு விழாவின்போது பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுடன்....
(2004)



தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்றுச் சென்றபோது ஆசிரிய குழாத்துடன் - (2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்வி மாநாட்டுக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகின்றார். (2005)



திருக்கோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் உலக ஆசிரியர் தின விழாவில் முதன்மை விருந்தினராக வரவேற்கப்படுகின்றார். (2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பிற்கான பதவி உயர்வுக் கடிதத்தினை முன்னாள் கல்வி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம் ஜயந்த அவர்களிடமிருந்து பெறுகின்றார். (2008)




இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு பதவி உயர்வு பெற்ற கிழக்கு மாகாணத்தின் ஏனைய சிரேஸ்ட கல்வி அலுவலர்களுடன்... (2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்குடா கல்வி வலய வாழைச்சேனைக் கோட்டத்தின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக உரையாற்றுகின்றார். (2008)



கல்முனையில் 2008ம் ஆண்டு நடைபெற்ற முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியின் போது கௌரவிக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விக் கண்காட்சியை திறந்து வைப்பதற்காக வருகை தந்தபோது அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில்.... (2009)



தி / ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி சந்திரா பாலசுப்பிரமணியம் அவர்களின் மணி விழாவில், மாவட்ட நீதிபதி, மாகாண கல்விச் செயலாளர் ஆகியோருடன் கலந்து கொள்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருக்கோணமலை கல்வி வலயத்தின் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றபோது பிரதம செயலாளர் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார். (2010)




திருக்கோணமலை கல்வி வலயத்தின் சமாதான கலாச்சார நிகழ்ச்சியில் கௌரவிக்கப் பட்டவர்களுடனும், கல்வி வலய அலுவலர்களுடனும் காணப்படுகின்றார். (2010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஒன்ற கூடலுக்கு முதன்மை விருந்தினராகச் சென்ற வேளையில் வரவேற்கப்படுகின்றார். (2011)



கனடா பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் பழைய மாணவர் சங்க நிருவாக உறுப்பினர்களுடன்..........(2011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடா பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சார்பான நினைவுச் சின்னத்தை, கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு K.K தயாநிதி அவர்களுக்கு கையளிக்கின்றார். (2011)




கனடா பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் முதன்மை விருந்தினராக உரை நிகழ்த்துகின்றார். (2011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 2

# ஆசிச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
Phone - 2588253 & 5013805
Fax -2361438
rkmceyu@gmail.com

# ஆசிச் செய்தி

திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்விச் சேவையில் ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மாகாணக்கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக எனப் பல்வேறு வகையில் கல்வித்துறையில் 41 வருடங்கள் சேவையாற்றியதை கௌரவிக்கும் வகையில், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமானது ஒரு பாராட்டு விழாவையும், சிறப்பு மலர் வெளியீடு ஒன்றினையும் ஏற்பாடு செய்துள்ளதை அறிந்து மகிழ்வுறுகிறேன். இரு விழாக்களும் சீரும் சிறப்புடன் நடைபெற்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு செடியையோ அல்லது மரத்தையோ எடைபோடுவது அதன் பரிணாம வளர்ச்சியைப் பொருத்து அல்ல. அதிலிருந்து நமக்கு கிடைக்கும் மலர்களை அல்லது பழங்களைப் பொறுத்ததே ஆகும். அதுபோல், திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் தமது கல்வித்துறையில் சேவை ஆற்றிய காலத்தில், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கல்லூரிகளுக்கும் ஒரு மரத்திற்கு நீராகவும், ஒளியாகவும், காற்றாகவும் இருப்பது போன்று இருந்து நல்ல சமுதாயம் வளர உதவியுள்ளார்.

திரு.சி.தண்டாயுதபாணியின் பணியின் பயன்கள் என்றும் சமுதாயத்தில் நிலைத்து நிற்கும். அவர் வாழ்க்கையில் என்றும் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கொழும்பு.
10-07-2011

என்றும் இறைபணியில்,

சுவாமி சர்வரூபானந்த

(சுவாமி சர்வருபானந்த) தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

மக்களுக்காக உழைப்பவர்கள் மனதில் நிறைகிறார்கள். வாழும்போதே அவர்களை மதித்துப் பாராட்டுவதுஅவர்களுக்கு மட்டுமன்று நமக்கும் அது பெருமை தருவதாகும்.

திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்வித்துறையில் நாற்பத்தியொரு ஆண்டுகளாகப் பல்வேறு தரங்களில் பணியாற்றியவர். ஆசிரியராகப் பணி வாழ்வை ஆரம்பித்து, திருமலை, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபரகாப் பணிபுரிந்து இறுதியில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக உயர்ந்த்து ஓய்வு பெற்றவர். நான்கு தசாப்தங்களைக் கடந்த அவரது கல்விப் பணி மிகவும் உயர்வானதும் நன்றியோடு போற்றத்தக்கதாகும்.

கடந்த நாற்பது ஆண்டு காலம் என்பது நமது நாட்டைப் பொறுத்த அளவில் அதிலும் வடக்கு,கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் மிகவும் முக்கியமான, அசாதாரண சூழ்நிலைகள் நிலவிய காலமாகும். இக்காலப்பகுதியில் பொறுப்பான பதவிகளில் அமர்ந்து பணிபுரிவதிலுள்ள சிரமங்கள், நோவுகள், தடைகள் சொல்லுந்தரமன்று. இவைகளையெல்லாம் எதிர் கொண்டு அவர் ஆற்றியுள்ள பணிகள் போற்றத்தக்கன.

கல்விப் பணி என்பது வெறும் உத்தியோகமன்று. அது ஒரு தனிமனிதனை, சமூகத்தை, எதிர்காலத்தை உருவாக்கும் பணி, அழியாச் செல்வமான கல்வி, அறிவை, ஆற்றலை, ஆளுமையை, சிந்தனை முறைமையை வளர்த்து முழுமைப்படுத்துகிறது. அதனால்தான் நமது முன்னோர் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கூறிப்போந்தனர். ஆகவே இத்தகைய அருமையான உயர்வான கல்விப்பணியை நீண்ட காலமாற்றி, அத்துடன் பல்வேறு சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி நமது மக்களுக்காக உழைத்துவரும் மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறோம். அன்னார் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்ந்து மேலும் பல அரும் பணிகள் ஆற்றிட இறையாசீர் வேண்டுகிறோம்.

பாராட்டு விழாவும் மலர் வெளியீடும் சிறப்புற அமையவும் எல்லாம் வல்ல இறைவன் தம் ஆசீரைப் பொழிந்து அனைவரையும் வழி நடத்துவாராக!

பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை
ஆயர், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கல்விச் சேவையில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ள திரு.சி. தண்டாயுதபாணி அவர்களின் 41 வருடகால மேலான கல்விச் சேவையைப் பாராட்டும் பொருட்டு திருகோணமலை இராமகிருஸ்ணமிஸன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஒழுங்கு செய்துள்ள விழா பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ண குருதேவரின் திருவருளால் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல பகவான் துணைபுரிவாராக.

"மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்" என்று சுவாமி விவேகானந்தர் கல்விக்கு சிறந்த வியாக்கியானம் கொடுக்கின்றார்.

சிறந்த வாழ்க்கையை உருவாக்கக்கூடிய , மனிதனை மனிதனாக்கக்கூடிய, நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்களைக் கிரகித்து அவற்றை நாம் நம்முடைய கற்பித்தலினுள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

உடலும். மனமும் உள்ளிருக்கும் ஆன்மாவோடு இயைந்தபடி சீராக வளர்வதற்குக் கல்வி உதவ வேண்டும் சுருக்கமாக சொல்வதனால் ஆளுமை ஒருங்கிணைப்பையும் சிறந்த குணநலன்களையும் அளிக்க கூடிய விதத்தில் கல்வி அமைய வேண்டும்

நமது கல்வி முறையானது , நமது சமயம் , மற்றும் கலாச்சாரததில் அடங்கியுள்ள நீதி, நல்லொழுக்கம் , ஆன்மீகக் கருத்துக்களின் அடிப்படையில் உறுதியாக அமையுமாயின் நாம் இன்னும் மேலான பெறுபேறுகளைப் பெற முடியும். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளார் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

திருகோணமலை இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற இவர், ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக 22 வருடகாலங்கள் சிறப்பான சேவையாற்றி உள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

பின்னர் வலயக் கல்விப்பணிப்பாளராகவும், மாகாணக்கல்விப் பணிப்பாளராகவும் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகவும் கடமையாற்றி கல்விச் சேவையில் மொத்தமாக 41 வருடங்கள் சிறப்பாகப் பூர்த்தி செய்து கல்விச் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள , அன்னாருக்கு திருகோணமலைச் சமூகத்தால், பாராட்டு விழாவும், அதனையொட்டிச் சிறப்பு மலர் வெளியீடும் வெளிக் கொணர்வது சிறப்பான அம்சமாகும்.

இறைபணியில்
சுவாமி ஞானமயானந்தா
இராமகிருஸ்ண மிஷன், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் காவலன்
# உயர்திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள்

பல வருடங்களாக இராமகிருஸ்ண சங்க கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய ஐயாவை அறியாதார் இல்லை மாகாணக் கல்வி அதிகாரியாக உயர் பதவி பெற்று நூற்றுக் கணக்கான பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியார். முழு நேரமும் கல்விக்காகவே செலவிட்டார் என்பதை எல்லோரும் அறிவர். ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்து பூரணப்படுத்திய பெருஞ் சேவையாளன்.

பிரபல ஆத்மீகப் பத்திரிகையான ஸ்ரீராமகிருஸ்ணவிஜயம் 2011 ஆவணி இதழில் வெளிவந்த குறிப்பு வருமாறு :- ஆசிரியர்களால் தான் நம் சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வரமுடியும். மதிப்பெண்கள் பெற்றுத் தருவது மட்டும் ஓர் ஆசிரியரின் கடமை அன்று அதற்கும் மேல் முக்கியத்துவம் தரப்பட வேண்டியது வாழ்வின் மதிப்பீடுகளுக்கே.

ஒழுக்கக்கல்வியை வாயால் சொல்லிப் படிப்பதிலும் பார்க்க வாழ்ந்து காட்டிப் படிப்பிப்பது மேலானது என்று பெரியோர்கள் கூறுவார்கள். தற்போதைய கல்விமுறை பட்டங்கள் பெறவும் பணம் சம்பாதிக்கவும் தான் உதவுகிறது. மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலேயாகும் என்று தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த ஆறுமுக நாவலர் பெருமான் கூறியுள்ளார். சமயக் கல்வியில் அரசாங்கமும் ஆசிரியர்களும் கவனம் செலுத்துவதில்லை. சமயம் இல்லாத கல்வி வேர் இல்லாத மரத்துக்குச் சரி என்று உலகுக்கு வழிகாட்டிய மகாத்மாகாந்தி அடிகள் கூறியுள்ளார். வேர் இல்லாத மரம் அழிந்து போகும். அது போல சமயம் இல்லாத கல்வியும் மக்களை அழிவுப்பாதையில் கொண்டு போய் விடும் இப்போது நாட்டில் நடக்கும் அழிவுக்கெல்லாம் அறியாமையே காரணம்.

ஐயா ஒரு முறை பத்திரிகையில் எழுதினார் பாடசாலையை நூல்நிலைய அலுமாரிகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் உறங்கிக் கிடக்கின்றன. அதிகமாக ஆசிரியர்களும் வாசிப்பதில்லை, மாணவர்களும் வாசிப்பதில்லை என்று உண்மை தான். வாசிக்கும் பழக்கம் குறைந்து விட்டது. சர்வகலாசாலைகளில் சமயம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும். சமய அறிவோடு வெளிவரும் பட்டதாரிகள் சமூகத்துக்கு முன்மாதிரியாக நடந்து சமூகத்தையும் நல்வழிப்படுத்துவார்கள். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றார் திருவள்ளுவநாயனார். உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்ட வாழ்க்கை நூல் திருக்குறள். அதனை எல்லோரும் படித்து வாழ வேண்டும்.

சமய சமூகப் பெரியார்களின் வாழ்க்கையையும் உபதேசங்களையும் மாணவர்கள் கற்க வேண்டும். ஒரு மாணவன் தனது பாடசாலை வாழ்க்கையில் கற்கும் பெரியோர்களிடமிருந்து பல நல்ல கருத்துக்களைத் தமது வாழ்க்கையில் கைக்கொள்ளப் பழகவேண்டும்.

ஐயாவின் நீண்ட காலம் சேவையைப் பாராட்டி ஐயாவுக்கு விழா எடுப்பதும் நன்றி தெரிவிப்பதும் எங்கள் கடமையாகும். ஐயா பல்லாண்டு பல்லாண்டு சுகத்துடனும் சந்தோசத்துடனும் வாழ்ந்து சமய சமூக கல்விப் பணிகளை ஆற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க ! ஆனந்தம்

முத்துக்குமார சுவாமி கோயிலடி
திருக்கோணமலை
05.09.2011

பொ.கந்தையா
காந்தி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருமூலரால் சிவ பூமி என சிறப்பிக்கப்படும் ஈழத்திருநாட்டின் திருக்கோணமலையின் திருக்கோணேஸ்வரப் பெருமான், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள், விநாயகரது அருட்பாலிக்கும் அருகே ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி உள்ளது. இதில் கல்வி கற்று கல்வித்துறையில் பல பதவிகளை வகித்த திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவரது சேவைக்காக சேவை நலன் பராட்டு விழா என்பது தேவையானதும், பொருத்தமானதும் ஆகும்.

நேர்மைத்திறனும், நெஞ்சுறுதியும், கல்விப்புலமையும் கொண்ட ஓர் நிர்வாகி ஆவார். இவர் தனது மட்டுமன்றி மாகாண ரீதியில் மாகாண கல்விப் பணிப்பாளர், பிரதிச் செயலாளர் பதவிகளையும் அகில இலங்கை ரீதியாக தமிழர் ஆசிரியர் சங்க தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் தமிழ் சமூகத்துடன் மட்டுமன்றி ஏனைய சமூகத்துடனும் தொடர்புகளை பேணிய ஓர் பெருந்தகையாளன். இவரது சேவையின் உயர் நிலைப்பண்புகளை கருதி தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினாலும், திருக்கோணமலை சமூகத்தினாலும் எடுக்கப்படும் விழாவை வாழ்த்துவதுடன் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை வேண்டி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

வேதாகமமாமணி
பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திர குருக்கள்
ஆலய ஆதின கர்த்தா
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹாஜ் மௌலவி A.H செய்னுதீன் (நத்வி)

# ஆசிச் செய்தி

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மா னிர்றஹீம்

கிழக்கு மாகாணத்தின் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய நகரமாம் திருக்கோணமலை மண்ணின் சிறப்பை இவர் பிறப்பு பறைசாற்றும் என்பதற்கிணங்க பல அறிவாளிகளையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்கிய பெருமைக்குரியவர் இந்த மதிப்பிற்குரிய சி. தண்டாயுதபாணி அவர்கள்.

இவர் தி/ இ.கி.ச இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் அவருடன் ஒன்றாகக் கல்வி கற்ற மாணவர்களில் நானும் ஒருவன். பழமைகளை நினைவு கூறுவதில் பெருமை நிறையவுள்ளது. அவ்வாறான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது சேவையைப் பாராட்டும் இத்தருணத்தில் இவரை வாழ்த்துவதிலும் பெருமையடைகின்றேன். கௌரவ. சி. தண்டாயுதபாணி அவர்கள் கல்விச் சேவையில் கிழக்கு மாகாணத்தில் பல உயர்ந்த பதவிகளை வகித்து பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். மேலும் பல்லின சமூகம் வாழும் இந்தப் பிரதேசத்தில் இனத்துவ சிந்தனைக்கு அப்பாற்பட்டு செயலாற்றிய ஒருவர் என்பது இவரின் செயற்பாடுகள் காட்டித் தந்ததை இங்கு குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

கடந்த 30.06.2011 ல் தனது சேவையை பூர்த்தி செய்தவர் என்பது மட்டுமல்லாமல் தனது சாதனையை பூரணமாக நிறைவு செய்தவர் என்பதே பொருத்தமானது. ஏனெனில் பல வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், சட்டத்தரணிகளையும், வணிகவியலாளர்களையும், பல அந்தஸ்துள்ளவர்களையும் உருவாக்கினார் என்பதை விட மனித பண்புமிக்க நல்ல மனிதர்களையும் சமூகத்திற்கு தந்தவர் என்பதே இவரின் சிறப்பு.

இம் மகத்தான பணிகளை ஆற்றிய இவரின் சேவையை மதித்து பாராட்டி இவருக்காக சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு நானும் மகிழ்ச்சியடைகிறேன். அதேவேளை வாழும் போதே வாழ்த்தும் பாக்கியத்தை அளித்த இந்தக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. தண்டாயதபாணி அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்பும் பெற்று நல்ல தேகாரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

மூதூர் வெளி
மூதூர் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - 3

# வாழ்த்துச் செய்திகளும்
# வாழ்த்துப்பாக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கல்விச் சேவையில் திரு.தண்டாயுதபாணி அவர்கள் ஆற்றிய பெரும் சேவைக்காக அவரை கௌரவித்து வெளியிடப்படும் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்றது முதல் திரு.தண்டாயுதபாணி அவர்கள் ஓய்வு பெறும் வரை அவரை மாகாணக் கல்விப் பணிப்பாளாராக, கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக நான் நன்கு அறிவேன். அர்ப்பணிப்புள்ள சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட நேர்மையான, ஒரு எளிமையான சேவையாளராக அவரைக் காண்கின்றேன். அவர் மாகாணக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலம் கிழக்கு மாகாண கல்வித்துறை பாரிய சவால்களை எதிர் கொண்டிருந்த காலப்பகுதியது. கொடுமையான யுத்தம் எமது மாகாணத்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை சீர்குலைத்து கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் எமது மாகாணத்தை கொண்டு சென்று இருந்தது. திரு.தண்டாயுதபாணி அவர்கள் மிக அர்ப்பணிப்புடன் இச்சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு கிழக்கு மாகாண கல்வி வளர்ச்சியில் அபரீதமான முன்னேற்றம் அடைவதற்கு முக்கிய காரணகர்த்தாக்களுள் ஒருவராக இருந்தார். இவர் போன்ற சமூகத்தின் நலனின் பால் அக்கறை கொண்ட அதிகாரிகளின் அளப்பரிய பங்குபற்றுதலுடன் தான் கிழக்கு மாகாணம் இன்று கல்வித்துறையில் கோலோச்சுகின்றது.

கல்வித்துறையைத் தவிர மக்களின் சமூக, சமய கலாச்சார , பண்பாட்டு , செயற்பாடுகளில் அதிகூடிய அக்கறை கொண்டு கலாச்சாரத்தின் காவலனாய் ஒழுக்கநெறி, பண்பாட்டுடன் கூடிய கல்வி வளர்ச்சி தான் சமூகத்தின் உண்மையான வளர்ச்சி என்பதில் நம்பிக்கை கொண்டு அதனை மேம்படுத்த அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

இவ்வாறான ஒரு உண்மையான சேவையாளனை, சமூகப்பற்றாளனை கௌரவிப்பது எமது மாகாணத்தின் கடமையாகும். இதனை சிறபாக்க நடவடிக்கை எடுத்திருக்கும். திருகோணமலை ஸ்ரீ / கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர் போன்றோருக்கு எனது நன்றிகளையும் , பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தின் கல்வியும் அதன் வளர்ச்சியும் நினைவு கூறப்படும் போது திரு.தண்டாயுதபாணியும் நினைவு கூறப்படுவார்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சர்.
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

திரு.சி.தண்டாயுதபாணி, திருகோணமலை மண்ணின் மைந்தன்.திருகோணமலையில் கல்விகற்றார். ஆசிரிய சேவையில் இணைந்து ஆசிரியராக, உபஅதிபராக, திருகோணமலை இராமகிருஷ்ணமிஷன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றினார். இக்கல்லூரியில் இருபத்திரண்டு வருட காலம் ஆசிரியப் பணியாற்றினார்.அக்காலத்தில் அவரின் அர்ப்பணிப்புடனான சேவை காரணமாக திருகோணமலையின் முன்னணிக் கல்வி நிறுவனம் என்ற மரபு பேணப்பட்டு கல்லூரி வளர்ச்சி கண்டது. பின்னர் அவர் கல்வி நிர்வாக சேவைக்கு தரம் உயர்த்தப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பணியாற்றினார். மொத்தமாக நாற்பத்தியொரு ஆண்டுகள் திரு.தண்டாயுதபாணி கல்விப் பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றியுள்ளார். இது பாராட்டுதற்குரிய மகத்தான சாதனையாகும். திரு.தண்டாயுதபாணியின் கல்விச் சேவை அமைதியானதாகவும் திறமையானதாகவும் அமைந்திருந்தது என்பதே எனது கருத்தாகும். கல்வித்துறையில் முதன்மையானதும் சீர்மையானதுமான சேவையை ஆற்றிய திரு.தண்டாயுதபாணிக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். திருகோணமலையில் சமூக, சமய மற்றும் கலாசார செயல்பாடுகளிலும் மிகுந்த அக்கறை செலுத்தி வந்துள்ள திரு.தண்டாயுதபாணி பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட மக்களுக்காக எதிர்காலத்திலும் திரு.தண்டாயுதபாணி தனது சேவைகளைத் தொடருவார் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

திரு.தண்டாயுதபாணிக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன் அவரின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

இரா.சம்பந்தன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# උපහාරයක්ම වේවා !

නැගෙනහිර පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂ තනතුර හා අධ්‍යාපන අමාත්‍යංශයේ නියෝජ්‍ය ලේකම් ධූරය හොබවමින් සිට විශ්‍රාම ලැබූ තණ්ඩායුදපානි මහතාට උපහාර දැක්වීමට ඔබ විදුහල ගත් උත්සහය ඉතා අගය කොට සලකමි.

ගුරුවරයෙකු ලෙස සිය වෘත්තිය ජීවිතය ඇරඹූ තණ්ඩායුධපානි මහතා පියවරින් පියවර ගමන්කොට අවසානයේ දී අමාත්‍යංශ නියෝජ්‍ය ලේකම් තනතුර දක්වා ගමන් කළේය. සිය විෂය වූ අධ්‍යාපනය පිළිබඳ විශේෂඥ ඥානයක් හා පරිපාලනය හා කළමනාකරණය පිළිබඳව විශිෂ්ට දැනුමැත්තෙකු ලෙස ඔහු එම ගමන් මගෙහි ඉදිරියට පැමිණියේ ය.

ඔහු නැගෙනහිර පළාත් අධ්‍යාපනය සඳහා ඉටු කළ මෙහෙය අති විශිෂ්ට එකක් වන අතර එය අප හදවත්හි සදා අමරණීය වේ.

විෂයභාර අමාත්‍යවරයා ලෙස ඔහු මාගේ කාර්යයන් සඳහා ඉමහත් සහයක් දැක් වූ අතර ඇතැම්විට මාගේ උපදේශකයෙකු ද විය. සන්සුන්ව තැන්පත් බුද්ධියෙන් හැමට සවන්දුන් ඔහු අඩුවෙන් කතාකොට වඩා නිවැරදි තීරණ ගැනීමේ සමතෙකු ද විය.

මේ සියලු කාරණා සලකා බලන විට තණ්ඩායුදපානි මහතා අපගේ උපහාරයට බඳුන් වන පුද්ගලයෙකුම විය. ඒ අනුව පාසල ගත් ක්‍රියා මාර්ගය ඉතාම ප්‍රසංසනීය බව සඳහන් කරන අතර තණ්ඩායුදපානි මැතිතුමාට සුභ පැතීමටද මෙය අවස්ථාවක් කොට ගනිමි.

විමලවීර දිසානායක
නැගෙනහිර පළාත් අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු හා
ඉඩම් ඉඩම් සංවර්ධන සහ ප්‍රවාහන අමාත්‍ය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின்பிரதிச் செயலாளராக சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவின் நிமித்தம் வெளியிடப்படுகின்ற நினைவு மலருக்கு பாராட்டுரை வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சேவை நிறைவில் ஓய்வு பெற்றுச் செல்லும் அரச ஊழியர்கள் மத்தியில் சேவையின் போது சாதனைகளைப் படைத்து ஓய்வு பெறும் ஒருவராக திரு.சி.தண்டாயுதபாணி மிளிர்ந்து நிற்பதனையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

தனது ஆசிரிய, அதிபர் சேவைக்காலத்தின் போது கல்வியில் மட்டுமன்றி நல்லொழுக்கமும், கட்டுப்பாடும் சமய கிருத்தியங்களில் ஈடுபடும் மிக்கதொரு புதிய மாணவ தலைமுறையினரை உருவாக்கும் பணியில் அவர் காட்டிய ஆர்வம், அதற்கான அவரின் உயர் பங்களிப்பு என்றென்றும் மறக்கமுடியாத பணிகளாகும்.

ஆசிரிய தொழிற்சங்கத்திலிருந்து கொள்கைப் பற்றுறுதிமிக்க செயலாளராக ஆசிரிய சமூகத்திற்கு அவர் ஆற்றிய அருஞ்சேவை ஆதர்சமிக்க தொன்றென்பதனை மறுப்பாரிலர்.

ஓட்டுமொத்த சமூகமும் போர்க்காலச்சூழலில் சிக்கி நலிவுற்றிருந்த சந்தர்ப்பத்திலும், சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் உயிர் பொருளை இழந்து கலங்கித் தவித்து நின்ற காலகட்டத்திலும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஆசிரிய, மாணவர்களின் ஒத்துழைப்புடனும், தொண்டு நிறுவனங்களின் ஒத்தாசையுடனும், அவரால் முன்னெடுக்கப்பட்ட சமூக சேவைகள் என்றும் நினைவு கூறத்தக்கனவாகும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் கல்வியில் சகல வளங்களையும் பெற்றதொரு சிறந்த உயர்தர தேசிய பாடசாலையாக இ.கி.மி.ச.இந்துக்கல்லூரியை பெயர் விளங்கச் செய்த பெரும் பணியில் இவரது பங்களிப்பு அளப்பரியது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இன்று உயர் பதவிகளை வகித்துவரும் நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்களின் நல்லாசனாக மதிப்பப்பட்டுவரும் அவருக்கு என் நல்லாசிகளைத் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

வே.பொ.பாலசிங்கம்
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Secretary

I am very happy to contribute a message to this souvenir which is to be introduce at the occasion of pay tribute to Mr. S. Thandayuthapani.

He had serve for nearly 41 years in various capacities in the field of Education including 22 years of dedicated services to T/ R.K.M. Koneswara Hindu College in Trincomalee.

In this last two years he worked at the Ministry of Education, Eastern Province as the Deputy Secretary with me. During his period of service in this Ministry he worked efficiently and honestly for the upliftment of the socio-economic conditions in the province.

Finally, I would like to mention that Mr. S. Thandayuthapani's valuable service for the Education sector in this province. Led to enhancement the quality of education in the Eastern Province.

I wish him all the best in future and a long life.

**N.A.A. PUSHPAKUMARA**
**SECRETARY**
**Ministry of Education, Cultural Affairs,**
**Land, Land Development & Transport**
**Eastern Province.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து........

கல்விச் சேவையில் ஆசிரியராக, அதிபராக பணி தொடங்கி அதிபர் எனும் முகாமைத்துவ பொறுப்பினை வகித்து பின் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைக்கப்பட்டு அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளையும் வகித்து கல்வித்துறையில் அதியுயர் நிர்வாகப் பொறுப்பாகிய மாகாணக் கல்விப் பணிப்பாளர், என உயர்ந்து கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக பணி செய்து 41 வருட காலம் நிகரற்ற சேவை புரிந்து 2011 ம் ஆண்டு யூன் மாதம் ஓய்வு பெற்ற திரு.சி.தண்டாயுதபாணி அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இராம கிருஸ்ண சபைப் பாரம்பரியத்தில் கல்வி கற்று அதே சங்கத்தினுடைய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக 22 வருட காலம் தொடர்ச்சியான கல்விப் பணி புரிந்து இராம கிருஸ்ண சங்கத்தின் பாரம்பரியத்தை பேணி வந்ததோடு இராம கிருஸ்ணர் காட்டிய பாதையினை பின்பற்றியதோடு பண்பிலும், ஒழுக்கத்திலும் முன்னுதாரணமாக திகழ்ந்ததை நாம் அறிவோம்.

வவுனியா வடக்கிற்கென புதிய வலயம் ஒன்று உருவாக்கப்பட்ட போது வலயக் கல்விப்பணிப்பாளராக பணி ஏற்று அதனை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டதுடன் இக் கட்டான கால கட்டங்களிலும் கூட வவுனியா வடக்கு வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளில் இடைவெளியில்லாது தொடர்வதற்கு அயராத உழைப்புடன் செயற்பட்டு வெற்றி கண்ட ஒரு பணிப்பாளர் என்று சொல்வது மிகையாகாது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தில் நீண்டகாலம் தலைவராக கௌரவப்பணி புரிந்து ஆசிரியர்களின் நலன்களை தன்நலன் போல் கருதி பல போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி பெற்றமை அவரது தலைமைத்துவத்திற்கு சிறந்த சான்றாகும். அவர் ஓய்வுக் காலத்திலும் கல்வி, சமய, சமூகப் பணிகளை தொடர்ந்தும் ஆற்ற வேண்டும். திரு.தண்டாயுதபாணி ஐயா ஆற்றிய அளப்பரிய சேவையினை மறவாது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாராட்டு விழா எடுப்பது பாராட்டிற்குரிய ஒன்றாகும்.

பாராட்டு விழாவின் போது வெளியிடப்படும் மலர் சிறப்பான செய்திகளை தாங்கி முகிழ எனது நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இறைவனது உன்னத சிருஸ்டிப்பிலே மனிதன் பிரம்மிக்கத்தக்கவிதமாகப் படைக்கப்பட்டவனாவான். ஒவ்வொரு மனிதனுக்குமுரிய காலங்களை வகுத்து இறைவன் அவரது நோக்கத்தையும் பணியையும் நிறைவேற்றும் படி சிருஸ்டிக்கிறார். பலர் அப்பணியிலிருந்து விலகிவிடுவதுண்டு. சிலர் முழுமையாக பணிகளை செய்து முடிப்பதுண்டு.

அந்த வகையில் மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் தலைசிறந்த செயல் வீரனாக நம் மத்தியில் இருப்பது நம் அனைவருக்கும் பெருமை தரக்கூடியதொன்றாகும்.

கடந்த 41 வருட காலம் தன்னை முழுமையாக கல்வித்துறையில் அர்ப்பணித்த இவர் கல்விசார் பதவிகளில் அதி உன்னத நிலையை அடைந்திருப்பது அவரது தூய்மையான பணிகளைப் பறை சாற்றி நிற்கிறது.

பட்டதாரியான இவர் சிறந்ததொரு ஆசிரியராக, அதிபராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, வலயக்கல்விப் பணிப்பாளராக பின்னர் உயர் பதவியான மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியையும் பல காலம் வகித்துள்ளார். தொடர்ந்து மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக இருந்து முழுமையான பணிகளை வெற்றியுடன் செய்து முடித்துள்ளார்.

திரு.S. தண்டாயுதபாணி அவர்கள் கல்வி உலகிற்கு மட்டும் தன்னை அர்ப்பணிக்கவில்லை. மாறாக மனித நேயத்துடனான சமூக, கலை, கலாசார, சேவையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவராவார். அது மாத்திரமல்ல தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பிரதான தூணாக நின்று ஆசிரியர்களின் இழந்து போன உரிமைகளை மீண்டும் வென்று கொடுத்த பல உரிமைச் சான்றுகள் இவரைச் சேரும்.

அறநெறியை வளர்ப்பதிலும், விழுமியத்தைக் கட்டிக் காப்பதிலும் எதிர்கால சந்ததி விழுந்து விடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்து செயற்பட்டவராவார். ஆலயக் காரியாலயங்களை பயபக்தியுடன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய இவர் பின்பற்றக்கூடிய ஒரு முன்னுதாரணமான மனிதராவார்.

தன்னை நாடி வருபவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று பிரச்சினைகளைக் கேட்டறிந்து உரிய பரிகார நடவடிக்கைகளைச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே தான். உடன் ஊழியர்கள் உத்தியோகத்தர்கள், பணிப்பாளர்களுடன் மிகப் பௌவியமாக பழகும் இவர் நல்ல சிந்தனையும் செயலூக்கமுள்ள ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இடத்திலும் தனது உரையை இனிமையாகவும் கனிவுடனும் தர்க்க ரீதியாக முன்வைப்பதில் இவர் மற்றவர்களுக்கு ஒரு முன்னோடியான பேச்சாளர் ஆவார். மனிதனை மனிதனாக மதிக்கவேண்டும் என்ற பொறுப்பிலும் கடமையிலிருந்தும் இவர் பின்நோக்கிச் சென்றதில்லை. நாட்டின் சகல இன மத மொழி மக்களையும் பண்புடன் நேசிக்கும் பழக்கம் இவருக்குண்டு.

இவரது கரங்களிலிருந்து வெளிப்பட்ட மாணவர்கள் உலகத்தின் பல பாகங்களிலும் ஆங்காங்கே சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர். இவர் இந்த உலகத்தில் சம்பாதித்தது அருமையான மாணவர் செல்வங்கள் தான் என்றால் அது மிகையாகாது. சமூகத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தன் பங்களிப்பைச் செய்து தனது தடயங்களை ஆங்காங்கே பதித்து வைத்திருப்பதை எவரும் வெகு இலகுவில் மறந்து விடமுடியாது

இனிய சுபாவமும் புன்முறுவல் பூத்த முகமும் பரஸ்பர ஐக்கியத்தை வேண்டி நிற்கின்ற பண்பும் இவருக்கே உரித்தான குண இயல்புகளாகும். இத்தகைய உயரிய பண்பு கொண்ட ஒரு நல்ல மனிதரை பற்றி வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவரைப்பாராட்டி கௌரவித்து எடுக்கப்படும் சிறப்பு மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறேன். இதனை முன்னெடுத்துச் செல்லும் பழைய மாணவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். நன்றி நிறைந்த இதயத்துடன் நீங்கள் கையிட்டுச் செய்யும் இக் காரியத்தை மிகவும் பெருமையுடன் வாழ்த்துகிறேன்.

திரு.S. தண்டாயுதபாணி அவர்களை குழந்தையாய்ப் பெற்ற பெற்றோரையும் கரம் பிடித்து கணவரின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் கால்கோளாக இருந்து உழைத்த அவரது அன்பு மனைவிக்கும் அவரது அன்பு பிள்ளைகளுக்கும் என் வாழ்த்துதல் உரித்தாகட்டும். அவர் நீடித்தகாலம் உலகில் சுகபலத்துடன் வாழ, தளைத்தோங்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**A.M.E.** போல்
பிரதிச் செயலாளர் கல்விஅமைச்சு
கிழக்கு மாகாணம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவனாய் வாழ்பவரே

கடல் சூழ்ந்த மலை கொண்ட நிமலன் அடியொற்றி வாழும் திருகோணமலை மக்களுக்கு ஓர் வழிகாட்டியாக விளங்குபவர் திரு சி.தண்டாயுதபாணி என்றால் அதுமிகையாகாது. கடந்த 29 வருடங்களுக்கு மேலாக ஆசான், கல்வி, அபிவிருத்தி, தொழில், நட்பு என்கின்ற விடயங்கள் சார்பாக கொண்ட தொடர்புகளால் மிகவும் நெருங்கியவன் என்ற வகையிலும், அவரது ஆற்றல், திறன், சாதனைகள், மற்றும் விழுமியங்கள் பற்றி அறிந்தவன் என்ற வகையிலும் அவர்பற்றிய வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

தோற்றத்தில் சாந்தமும் பண்பில் அடக்கமும், பேச்சில் நிதானமும், அறிவில் நிறைவும் கொண்ட இவரின் பன்முகப்பட்ட ஆளுமை காரணமாக கல்விச் சமூகத்தினரால் மட்டுமன்றி மற்றெல்லா சமூகங்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டு போற்றப்படுபவர் எமது ஆசான்.

பொதுவாகவே அரச உத்தியோகத்தர்கள் தமக்கொன்று வழங்கப்பட்ட கடமைக்கூறுகளுக்குள் மட்டுமே எல்லைப்பட்டு நின்றுவிட , இவர் தன் சிந்தனை விரிவால் புதிய எல்லைக் கோடுகளை தொட்டு செயலாற்றி தாம் சார்ந்தோரையும் செயற்பட வைத்து, அதன்வழி அவர்களையும் படிப்படியாக உயர்த்தி விடும் இயல்பு கொண்ட இவரின் நிர்வாக திறமை மற்றவர்களுக்கொல்லாம் எடுத்துக்காட்டாகும்.

இன்றைய கால கட்டத்தில் மனிதத்துவத்தினை கடைப்பிடிப்பவர்கள் ஒருசிலரே. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்திற்கு ஒப்பானவர்களின் பட்டியலில் இவர் பண்புகள் மிகவும் மிளிர்ந்து நிற்கின்றது. நேர்மை, கடமை உணர்வு, குழுவாக பணியாற்றுதல், மற்றவர்களை ஊக்குவித்தல், சமூகப்பணி, ஆன்மீக பணி என்கின்ற பல சமூதாய பார்வையில் செயற்பட்டு மற்றவர்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழ்பவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களே.

ஆளுமை மிக்க நிர்வாகியான இவர் மக்கள் நலனில் அதிக அக்கறை கொண்டவர். மக்களுக்கு சேவையாற்றுவதே மகேசனுக்கு செய்யும் பெரும் பணி என்ற கொள்கைகொண்ட இவர் பலனை எதிர்பாராமல் கடமை புரியும் ஓர் கர்மயோகி. அத்துடன் அனைவரையும் அரவணைக்கும் பண்பாளர்.

இன்று பலர் சமூகத்தில் முன்னிலையில் இருப்பதுடன், பல உயர் பதவிகளையும் வகிப்பது இவரது வழிகாட்டலின் மூலம் மற்றவர்களுக்கு கிடைத்த பலாபலன்களாகும். இன்றும் இவரின் மாணவர்கள் இவரை ஓர் உதாரண புருஷராக ஏற்று நடப்பதை கண்ணூடாக காணமுடிகின்றது. இத்தனை பெருமைகளையும் கொண்ட நாயகரை உளமார வாழ்த்துவதுடன் இவர் மற்றவர்களுக்கொல்லாம் ஒளி கொடுக்கும் ஆதவனாக வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரரின் அருளாட்சி கிட்ட வேண்டுமென்று இறைவனை பிரார்திக்கின்றேன். அத்துடன் அவர்பற்றிய மலரினை வெளியிடுவதற்கான பெரு முயற்ச்சியில் ஈடுபட்ட அனைத்து அன்புள்ளங்களையும் மனதார வாழ்த்துகின்றேன்.

*இரங்கநாதன் உமாகாந்தன்*
*பிரதிப் பிரதம செயலாளர் – திட்டமிடல்*
*மாகாண திட்டமிடல் செயலகம் - வடமாகாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி
# திரு.சி.தண்டாயுதபாணி

திருமலையில் வாழும் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்விக்கும், சமய, கலாசார, சமூக வாழ்வியலுக்கும் செய்த சேவைகளைப் பாராட்டு முகமாக வெளிவரவிருக்கும் சிறப்பு மலரில் அவர் பற்றிய எனது எண்ணப்பதிவுகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பாராட்டுக்கள், பாராட்டப்படவேண்டியவை மட்டுமன்றி சமூகத்தின் தொடர் நல் விளைவுகளுக்கு அவசியமானவை. குழந்தைகளையும் சிறுவர்களையும் பாராட்டுவது அவர்களின் வளர்ச்சிக்கு உரமாகும். அவர்கள் பாராட்டுக்கள் மூலம் எண்ணக் கருக்களை கருவாக்கி வளர்ச்சி காண்பவர்கள்.

முதியோர்களைப் பாராட்டுதல் அவர்களின் மகிழ்ச்சிக்கு உதவுவதோடு அவர்கள் தங்களின் வாழ்க்கையின் தாக்கத்தை மீள்பார்வை செய்யும் உதவுவதாகும். அந்தப் பார்வையில் திரு.தண்டாயுதபாணியின் வாழ்க்கையும் செயற்பாடுகளும் மெச்சத்தக்கவையுடன் இளைஞர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் அமையும் எனத் துணிந்து கூறலாம்.

நான் அவரை எனது கல்விசார் தொழிற்பாட்டில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் முதன் முதலாகச் சந்தித்தது ஞாபகம் வருகின்றது. இந்துக் கல்லூரியின் மைதானத்திற்கு எல்லை போடும் விடயமாகச் சந்தித்தேன். பொதுவாக எல்லை போடுவது உணர்வுடனும் உணர்ச்சியுடனும் ஒன்றியதானாலும் திருகோணமலையில் வாழ்வியல் பிரச்சினையுமாகும். அதனை அவர் நுட்பமாகவும், சமநிலைச் சிந்தனையுடனும் கையாண்டது பாராட்டிற்குரியது.

ஆசிரியர், அதிபர் சேவையினை 22 வருடங்கள் விளைவுகள் பல நிறைந்து, நிறைவேற்றி கல்வி முகாமைத்துவத்துக்குள் அவர் வந்த காலம் தொட்டு எனது கண்காணிப்பில் இருந்தார்.

அவரை மாகாணக் கல்விப் பணிப்பாளராக எதிர்காலத்தில் நியமிக்கவேண்டுமென திட்டமிட்டு எங்களில் சிலர் செயற்பட்டோம். அதற்கான தயாரிப்பு செயற்பாடுகளில் ஒன்று தான் வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம். பல்வேறு பிரச்சினைகள் நிலவிய வலயத்தில் நியமிக்கப்பட்டார். திறமையாகச் செயற்பட்டார்.

அதன் பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி தொடர்ந்து கல்வி அமைச்சில் பதவி அவர் பயணம் தொடர்ந்தது தற்போது இல் திரு.தண்டாயுதபாணி கல்வி அதிகாரியாக செயற்பட்ட காலம் மிக முக்கியமானதாகும். முகாமையாளன் வேதனைகள் இழப்புக்கள் கண்டு உணர்ச்சிவசப்படாமல் அவதானமாக உள்வாங்கி புத்திசாதுரியமாக செயற்பட வேண்டும். தண்டாயுதபாணி குறிப்பிடத்தக்களவு சமயோசிதமாகச் செயற்பட்டு பாதுகாத்தார் எனக் கூறுவேன்.

அழுத்தங்கள் ஆபத்தானவை அவற்றை எதிர்கொண்டு செயற்படுவதென்பதும் தாக்கமின்றி வெளிவருவதென்பதும் இலகுவானவையல்ல. அதில் தண்டாயுதபாணி வெற்றி கண்டார். இவரின் இச்செயற்பாடுகள் இளைஞர்களுக்கு நல்ல "நற்செய்திகள் மட்டுமன்று, பாடங்களாகும்". செயற்பாட்டு விளைவுகளை அறிந்து விழாவெடுக்கும் பழைய மாணவர் சங்கம் பாராட்டிற்குரியது. அதில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

திரு.தண்டாயுதபாணி செயற்படக்கூடிய காலம் வரை அவரின் பன்முறை செயற்பாட்டினை சமூகம் வேண்டி நிற்கின்றது. நிறைவாழ்வுடன் நீண்டு வாழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள் அவருக்கு என்றுமுண்டு.

சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர்
கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திரு.தண்டாயுதபாணி அவர்களின் கல்வி மற்றும் சமூகசேவைகளைப் பாராட்டிப் பணிநலன் பாராட்டு விழாவினையும், சிறப்புமலர் ஒன்றின் வெளியீட்டினையும் நடாத்துவதற்கு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் முன்வந்ததையிட்டுப் பெருமிதமடைகின்றேன். அன்பு, அடக்கம், மனிதநேயம், எளிமை, தயாளகுணம், எல்லோரிடமும் நலமாகவாழும் நல்லவிருப்பம் ஆகிய மகத்தான குணங்களைக் கொண்டவர் திரு.தண்டாயுதபாணி, நல்லாசரியனாக , நேர்மைமிக்க நிருவாகியாக, இன்சொல் இயம்புவனாகி குணக்குன்றாக என்றும் மலர்ந்த புன்னகையின் உருவமாகக்காட்சி தருபவர். இவரை நான் 1995 ம் ஆண்டு கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளராகக் கடமைபுரிந்த காலத்திலிருந்து அறிவேன். இவர் அப்போது இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராக, கடமை. கண்ணியம். கட்டுப்பாட்டுடன் செயலாற்றி வந்தார். இவர் பாடசாலையில் கல்விக்கண்ணை திறந்து வைத்ததுடன் எதிர்கால சிற்பிகளாக சிறுவர்களை ஒழுக்கசீலர்களாகத் திகழச்செய்தார். எவரும் இலகுவில் அனுகக்கூடிய இனியசுபாவம் கொண்ட இவர் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உந்துசக்தியாக ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி உயர்ந்த இலக்கை ஈட்டுவதில் செயலாற்றி வந்தார். அதிபராகச் செயலாற்றும் வேளையில் இலங்கை கல்வி நிருவாகசேவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளராக மேலதிக பணிப்பாளராக, கல்விப்பணிப்பாளராக பிரதிச் செயலாளராகப் பல்வேறு உயர்பதவிகளை பெற்றுத் தன்னை அலங்கரித்துக் கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக இவர் பழகியோரின் உள்ளங்கவர்ந்தவர் என்றே கூறலாம். அதற்குக் காரணம் இவரது எளிமையான குணம், தயவானதன்மை அவற்றுடன் சேர்ந்த ஒரு சிறந்த அறிஞனின் பண்பு என்பவையாகும். இறுமாப்பு, தற்பெருமை, அகங்காரம், ஆணவம் போன்ற திமிர் பிடித்ததலைக்கனத்தில் வாழும் எமது சமுதாயத்தின் மத்தியில் இவர் விதிவிலக்காகத் திகழ்ந்தார். எந்தப்பிரச்சனைகளுடன் வருபவர்களையும் அரவணைத்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைச் செவிமடுத்து உதவும் பண்பு இவரது இரத்தத்துடன் ஊறியவை. தனது திணைக்களம், அமைச்சு போன்றவற்றில் உள்ளேயும், வெளியேயும் இவர் தன்னிகரற்ற ஒரு சிறந்த நிருவாகியாகச் செயற்பட்டார். அதிபராக இருந்தபோது அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவராகவும் செயற்பட்டமை இவரது சமூகத்தொண்டையும் சேவைமனப்பான்மையும் எடுத்துரைக்கிறது.

இவரது பரந்துபட்ட சமுதாயநோக்கு இவர் மேல் சமூகம் கொண்டுள்ள மதிப்பை மேலோங்கச் செய்கிறது. பாடசாலையின் பரிசளிப்புவிழாக்கள், கலைவிழாக்கள், விளையாட்டுப்போட்டிகள், அரங்கேற்றங்கள் போன்ற பல்வேறுமட்ட மாவட்ட, மாகாண நிகழ்வுகளுக்கு சிறப்பு விருந்தினராக, பிரதமவிருந்தினராகச் சென்று மரியாதைக்குரியராக, கௌரவத்திற்கு உரிவராக தம்மை வளர்த்துக் கொண்ட பெரியவராவார் இவரது பேச்சுவன்மை, எல்லோரையும் கவருந்தன்மையும். சிந்தனை, சொல், செயல் என்பவற்றை உயர்ந்த இலட்சியத்துடன் பேணிப்பாதுகாத்தார். "வாழ்வதுகலை" என்றால் அதனை எவ்வளவு அக்கறையுடனும், அன்புடனும், அறிவுடனும், அமைதியுடனும் வாழவேண்டுமென என உறுதியாக உலகிற்கு உணர்த்திய பெருமகன். "உயர்ந்த உன்னதமான கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறந்தவன் நீ என்று எப்போதும் எண்ணுவாய்" என்று கூறுகிறார் பென்ஞமின் டிஸ்ரேலி.கடமையே கண்ணாகக் கொண்டு செயற்பட்டதனால் இன்று ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பிரபல்யமாக புகழ் படுத்துகின்றார்.

இவர் தான் வகிந்த பதவிகளுக்கெல்லாம் பெருமை சேர்த்தவர். இவர் விரும்பியது ஒழுக்கம், மனவலிமை, சிறந்த அறிவுபுகட்டும் கல்வியையேயாகும். தன்னம்பிக்கையுடன், கடின உழைப்புடன் இவர் கல்விக்காக தன்னை அர்ப்பணித்தவராவர். மொத்தத்தில் ஆண்மையை அளிப்பதே கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். இவரிடம் படைப்பாற்றல், பகுத்தறிவு செயற்றிறன், சேவைஉணர்வு, சிந்திக்கும் உணர்வு என்பன மேன்மையுற்று காணப்பட்டன. "கூர்மையான அறிவும் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், கடினஉழைப்பும், திறமையும் கொண்ட மனிதனின் இன்பப் பயணம் என்றும் எதனிலும் தடைப்படாது, தடம்புரளாது" என்று அறிஞர் நார்மன்வின்சென்ட் பீல் கூறுகிறார். இவரிடம் கடுமையான உழைப்புண்டு, திறமையுண்டு இதனாலன்றோ அதிபராக இருந்தவர் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு தலைமைதாங்கி கல்சிச் சிந்தனையைப்பரப்பி எதிர்காலச் சிற்பிகளுக்கான காலச்சிற்பிகளான மாணவர்களுக்கு வழிகாட்டியாக கல்விக்கண்ணைத் திறந்து வைத்தவராவர்.

தனது திறமையின் மீது நம்பிக்கை கொண்டு செயற்பட்டதனால் வாழ்வாங்கு வாழ்கிறார்.

வான்புகழ் கொண்டவள்ளுவர் பெருமகன் கூறியது போல்

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றபடி கசடறக்கற்று அதன்படி ஒழுகியவர். அன்னார் நல்ல உடல் நலத்ததுடன் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து எமது மாணவச் சமூகத்திற்கு கல்விச் செல்வத்தைத் தொடர்ந்துவாரி வழங்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரை மனமார வாழ்த்துகிறேன்.

சொ.அமிர்தலிங்கம்
அகில இலங்கை சமாதான நீதவான்
தலைவர், பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்.
இளைப்பாறிய ஆளுநரின் செயலாளர் வடக்கு, கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கோயிலும் சுனையும் கடலுடன் சேர்ந்து வீற்றிருக்கும் கோணேசர் பிரதேசத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து கல்விப் பணியைக் கண்ணெனப் போற்றி தமது கடமை தனைச் செவ்வனே செய்து முடித்த பெருந்தகையாளன் திரு.எஸ்.தண்டாயுதபாணி அவர்களுக்கு நடாத்தப்படும் சேவை நலன் பாராட்டு விழாவுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருக்கோணமலை மண்ணில் பிறந்து சைவமும் தமிழும், தமிழ் பாரம்பரியங்களும் கலை கலாச்சார விழுமியங்களும் தழைத்தோங்க தமது பாரிய பங்களிப்பைச் செய்து முடித்த இவரின் சேவை காத்திரமானதாகும். ஆசிரியனாக, அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக, பிரதிச் செயலாளராக என கல்விப்புலத்திலுள்ள சகல பதவிகளையும் அவரின் 41வருட வாழக்கையில் செய்து முடித்த பூரண திருப்தியுடன் ஓய்வு பெறுகின்றார்.

தனது கல்வி வாண்மையிலும் கலை மானிப் பட்டப்படிப்பை முடித்து பட்டப் பின்படிப்பையும் முடித்து கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்று கல்வியிலும் பூரணமாகத் தன்னை நிரூபித்துக்கொண்டார். மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக அவர் பணியாற்றிய போது அவருடன் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய பெருமை எனக்குண்டு. அவ்வேளையில் அவரின் வழிகாட்டலின் பாங்கு ஏனைய மாகாணக் கல்விப் பணிப்பாளர்களைவிட வித்தியாசமானது. தட்டிக்கொடுத்து வேலைவாங்கும் பாணி அவரது பாணி.

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் தனது அனுபவங்களையும் பயன்படுத்தி மாறிவரும் உலகின் மாற்றங்களுக்கேற்ப தன்னையும் உட்படுத்தி, தனது மாகாணத்தில் அனுபவமுள்ள அதிபர்கள், ஆசிரியர்களையும் உள்வாங்கி பாடசாலைகளை அறிவு திறன் மனப்பாங்கை வளர்க்கும் தளமாக மாற்றும் பாரிய திட்டத்துடன் ஈடுபட்டு உழைத்தார்.

அலுவலகத்தில் தமது தேவைகளுக்காக வரும் ஆசிரியர்களை, அதிபர்களை, அலுவலர்களை அவர்கள் எந்த நோக்கத்திற்காக எங்கிருந்து வருகின்றார்களோ என்பதை மிகவும் கவனமாக அறிந்து அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதோடு செய்ய முடியாத விடயங்களை நிதானமாக அவர்களாகவே உணரும்வரை பொறுமையாக விளங்கப்படுத்தும் தன்மை கண்டு வியந்திருக்கின்றேன். அதேவேளை தனது பதவி ரீதியாக வரும் எவ்வித அழுத்தங்கள் அவை எங்கிருந்து வந்தாலும் சரி திண்ணிய மனதுடன் எதிர்த்து நின்று அவற்றை உள்வாங்காமல் திடமாக நிற்கும் பாணி அவரிடம் மட்டுமே கண்ட உன்னதம். இந்த திடத்தினாலோ, என்னவோ மிகவும் திறமையாகப் பணியாற்றியவருக்கு ஏற்பட்ட இடமாற்றத்தினால்கூட அவரிடம் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. அதையும் ஏற்றுக்கொண்டு சிறப்பாகப் பணியாற்றியமை அவரின் கல்விப்புலப் பக்குவத்திற்குச் சான்று. இவரின் சேவைகளைப் பாராட்டி கௌரவித்து விழா எடுக்கும் தி/இ.கி.மி.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழையமாணவர்களின் சிறப்பான சிந்தனை வாழ்த்தத்தக்கதே. திருக்கோணமலை மண்ணின் மைந்தனான திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் சேவை நலன் பாராட்டுவிழா சிறக்க எனது நல்லாசிகளும், வாழ்த்துக்களும்.

கி.முருகுப்பிள்ளை,
வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், *திருகோணமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திரு.சி.தண்டாயுதபாணி சேர் அவர்களின் சேவையை மதித்து, வெளியிடப்படும் இச்சிறப்பு மலருக்கு எனது செய்தியினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையை பாக்கியமாக கருதுகின்றேன்.

அன்னார் 41 வருட கால கல்விச்சேவையினை பூர்த்தி செய்து அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார். இவர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் கல்விப்பணி, சமூக சமய பண்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகியவற்றிலிருந்து ஓய்வு பெறவில்லை. மேலும் இவருடைய சிந்தனைகள், ஆலோசனைகள் கல்விச் செயற்பாடுகளில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு கொண்டேயிருக்கின்றன.

தனது தலைமைத்துவத்தினூடாக ஆசிரியராக, அதிபராக , வலயக்கல்விப் பணிப்பாளராக , மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக , மாகாணக் கல்விப் பணிப்பாளராக, பிரதிச் செயலாளராக பல பதவிகளை வகித்து வழிகாட்டியிருக்கின்றார்.

இவர் எங்கு தனது கடமையை மேற்கொண்டிருந்தாலும் தான் ஆசிரியராக , பிரதி அதிபராக , அதிபராக 22 வருடங்கள் அர்ப்பணிப்புடன் சேவை புரிந்த தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளார். இப்பாடசாலையில் இவருக்கிருந்த பற்றினை இது வெளிப்படுத்துகின்றது.

தனிப்பட்ட முறையில் கூறுவதாகவிருந்தால் என்னையும் இவருடைய சிந்தனைகள் வழிப்படுத்தியிருக்கின்றது. இவ் உன்னத மனிதருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இவருக்காக பாராட்டு விழா, சிறப்பு மலர் , வெளியீடு என்பன ஒழுங்கு செய்தமைக்காக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எனது பாராட்டினை தெரிவித்துக் கொண்டு, எனக்கு இச்சந்தர்ப்பத்தினை வழங்கியமைக்காக விழாக்குழுவினருக்கு நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.விஜயானந்தமூர்த்தி,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

"ஒரு சிறந்த மனிதன்
உலகின் அனைத்து உயிர்களுக்கும்
சிறந்த நண்பன் ஆவான்"
-மகாத்மா காந்தி -

மனிதர்கள் அடிப்படையில் மகிழ்வாகவும் உளத்திருப்தியுடனும் வாழவே விரும்புகின்றனர். சிலர் இந்த எண்ணத்துடன் ஏனையோரும் மகிழ்வாகவும் உளத்திருப்தியுடனும் வாழ உதவுகின்றனர். அந்தச் சிலரில் தண்டாயுதபாணி சேர் முதன்மையானவர்.

ஒரு தடவை நான் கையடக்கத் தொலைபேசியை நிறுத்தியிருந்தபோது "மன்சூர்" நாம் இந்த மாகாணத்தின் 20,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் பொறுப்பிலிருப்பவர்கள். நமது தொலைபேசிகள் அவர்கள் அனைவருக்கும் தொடர்புகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும்;" எனக் கூறினார். அவ்வாறே அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டினார். வலயக் கல்விப் பணிப்பாளர்களின் தொலைபேசி அழைப்புகளை உதாசீனம் செய்து கொண்டு தொழில் புரிந்த பணிப்பாளர்கள் மத்தியில் ஒரு சிற்றூழியருக்கும் திணைக்களத் தலைவர் என்ற வகையில் நெருங்கக்கூடியவாறு இருந்தவர் தண்டாயுதபாணி சேர் அவர்கள்.

கல்வித் துறையில் செலவிடப்படும் நிதி வளம், மனிதவள அபிவிருத்திக்கான முதலீடாகும். பாடசாலை என்பது மனிதவள அபிவிருத்தியில் முக்கிய பணி நிறைவேற்றும் நிறுவனம் என்ற வகையில் நிதிச் செலவீனத்தின் வெளியீடு தொடர்பாக தொடர்ந்து கவனம் செலுத்தி பணத்தை வீண்விரயம் செய்யாமல் திணைக்களம் செலவு செய்வதற்கு தொடர்ந்து ஆலோசனை வழங்கியவர் அவர்.

ஏனைய திணைக்களங்களுக்குரிய சகல கடமைப் பொறுப்புக்களுடனும் மேலதிகமாக வருங்கால சந்ததியினருக்கு வேண்டிய தேர்ச்சி அடிப்படையிலான அறிவு, திறன், மனப்பாங்கின் விருத்திக்கு வகைகூறவேண்டிய பொறுப்பும் கல்வித் திணைக்களத்திற்கு உண்டு என நினைப்பவர். இதனடிப்படையில் தான் தொடர்ந்து முன்மாதிரியாக செயற்பட வேண்டும் என்பதை அவரது உடைகள், தொடர்பாடல் பாங்கு, கட்டளையிடும் விதம், மேற்பார்வைமுறை என்பவற்றினூடாக ஏனையோருக்கு வழிகாட்டியாக இருந்தவர்.

திணைக்களத்தின் தலைவர் என்ற வகையில் கருத்தரங்குகளை மேற்பார்வை செய்வதுடன் மட்டும் இருந்துவிடாமல் சகல விடயங்களிலும் ஒரு சிறந்த வளவாளராக இருந்தவர். சகல பங்குபற்றுனர்களையும் சலிப்பின்றி ஈடுபடவைத்து ஒரு நாள் முழுவதும் ஒரு கருத்தரங்கை நடத்தத் தக்க திட்டமிடலும், அறிவும், முன்வைக்கும் திறனும் உள்ளவர். இதை நான் பல சந்தர்ப்பங்களில் நினைத்துப்பார்த்ததுண்டு.

எந்தவோர் விடயமானாலும் இதனை அதன் முழு எதிர்பார்ப்பின் வெளியீட்டுடன் தொடர்புபடுத்தியே தனது திட்டமிடலை மேற்கொள்வார். ஒரு போதும் அவர் மறந்துவிட்ட விடயம் என எதுவும் இருப்பதில்லை. எமக்கு இட்ட கட்டளைகள், அதன் காலம் தொடர்பாக எப்போதும் விழிப்புடன் இருந்து எங்களை ஊக்குவிப்பார். நாங்கள் செய்து முடிக்காவிட்டால் அதனை செய்விக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நுட்பம் அவரிடம் உண்டு. அது தொடர்பாக நாம் கற்கவேண்டியவை ஏராளம்.

ஒரு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பல்வேறு முனைகளிலிருந்தும் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ச்சியாகப் பெறுபவராவர். இவற்றில் கல்வி ரீதியான வளர்ச்சிக்கு உதவுகின்ற கோரிக்கைகளும், அரிதாக பின்தங்கிய பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்யத்தக்க கோரிக்கைகளும் காணப்படும். இவை யாவற்றையும் மிகவும் லாவகமாகக் கையாண்டு முடியுமானவரை அனைவரையும் திருப்திப்படுத்திக் கடமையாற்றியவர். வீட்டைவிட அலுவலகத்தை அதிகமாக நேசித்தவர். எல்லாத்தினங்களும் அலுவலகத்திற்கு வருகைதருவதோடு சனி,ஞாயிறு தினங்களிலும் அலுவலகத்திலிருந்து சேவை செய்பவர். இச்சந்தர்ப்பங்களில் அவர் யாவரையும் கடிந்து கொண்டது கிடையாது. அவர் வேலைகளை வழங்கும் போது அவற்றை செய்யவேண்டிய விதங்கள் தொடர்பாகவும் சரியான கட்டளைக் கற்களை வழங்கிவிடுவார். இதனால் அவ்வேலைகளை இலகுவாக நிறைவேற்றிட முடியும். ஒரு தலைவர் என்ற வகையில் தானே வேலைகளைச் செய்யாமல் ஏனையவர்களைக்கொண்டு குறித்த இலக்கை அடைவதில் கைதேர்ந்தவர்.

அவர் மாகாணக் கல்விப் பணிப்பாளராக அவ்வறைக்குள் சென்ற அதே தினம் அதே நேரம் நான் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக அவரது அறையில் கடமையேற்றேன். பின்னர் இருவரும் ஒரே தினத்திலேயே அவ்வலுவலகத்தை விட்டு வெளியேறியோம். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் நானும் அவரும் ஒன்றாக ஒரே அலுவலகத்தில் கடமைபுரிந்துள்ளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் குறைகூறுபவராகவோ அல்லது இயலாமை பற்றிக் கதைப்பவராகவோ இருக்கவில்லை. நேர்ப்பாங்கான சிந்தனையும், முறையான அலுவலக நிருவாகமும் நான் கற்றுக் கொள்ள அவர் உதவினார். அவர் அங்கு இருக்கும்போது அவரும் எம்மைப்போன்ற வழிநடப்பவர்களும் நோக்கத்தில் ஒன்றுபட்டிருந்தோம். எங்களது உணர்வுகளைப் புரிந்து பிரச்சனைகளைத் தீர்த்தவர். எங்களது செயல்களுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டவர். நடுநிலை மனப்பான்மை கொண்டவராகவும் தொழில் தன்னம்பிக்கை கொண்டவராகவும் தனது நடத்தை மூலம் பிறருக்கு வழிகாட்டியாகவும் இருந்தவர். தொழில் அறிவும், அறிவுக்கூர்மையும் அவரிடம் மிகுந்து காணப்பட்டது. தனது மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவிக்குரிய சகல பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்பட்டார். இவர் மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலங்களில் ஒரு நம்பிக்கையுடன் கல்விச் சமூகம் இவரை நெருங்கியது. அவர்களது விருப்பங்களை முடிந்தவரையில் அவர் பல இளம் முகாமையாளர்களுக்கு பின்பற்றத்தக்க பல இயல்புகளை விட்டுச் சென்றுள்ளார்.

அவர் மேலும் மன மகிழ்வுடனும் உளத்திருப்தியுடனும் வாழ்ந்து ஏனையவர்களை அவ்வாறு வாழ உதவ வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

எம்.கே.எம்.மன்சூர்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
சம்மாந்துறை,
(முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றி, கடந்த 30.06.2011 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்சென்ற திருவாளர்: சீ.தண்டாயுதபாணி (இ.க.நி.சேவை – 1) அவர்களின் மாபெரும் சேவையினை மதித்தும், பாராட்டியும் இடம்பெறவிருக்கும் சிறப்பு மலர் வெளியீட்டின் ஒரு பக்கத்தில், எனது வாழ்த்துச்செய்தியும் உள்ளடங்குவதனையிட்டு நான் மிகவும் பெருமிதமடைகின்றேன்.

திருவாளர்: சி. தண்டாயுதபாணி அவர்களின் சேவையானது 41 வருடங்கள் என்ற நெடுந்தூரப் பயணமாகும். இப்பயணத்தில் இவர் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராக, மாகாணக்கல்விப் பணிப்பாளராக, கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக எனப் பலவடிவங்களிலும் பல அவதாரங்களைப் பெற்று, பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் எதிர்நோக்கி, அதற்கான தீர்வுகளையும் வழங்கி இப்பயணத்தினை அழகான முறையில் நிறைவு செய்துள்ளார். இவர், தனது ஒவ்வொரு அவதாரத்திலும் தான் பெற்ற அனுபவங்களை தனது அடுத்தடுத்த அவதாரங்களிற்கு வழிகாட்டியாகவும், முன்னுதாரணமாகவும் வைத்திருந்தார். அதனால், சகல மட்டங்களிலும் என்னென்ன பிரச்சினைகள் எவ்வாறு ஏற்படும் என்பதனையும், அதற்கான தீர்வினை எவ்வாறு வழங்கலாம் என்பதனையும் தான் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மூலம் தெளிவுபடுத்தித் தீர்த்துவைக்கும் வல்லமையினைத் தன்னகத்தே கொண்டிருந்தார்.

மேலும், கல்விச் சமூகமானது இவரது மகத்தான சேவையினை மறப்பதென்பது இயலாத விடயமாகும். அதிலும், குறிப்பாகக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் ஆசிரிய சமூகமே மெச்சுமளவிற்கு இவரது சேவை மிகவும் சிறந்து விளங்கியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இவரது சேவையானது கல்வித் துறையுடன் மட்டும் நின்றுவிடாமல் அதற்கப்பாலும் சமய கலாச்சார பண்பாட்டு செயற்பாடுகளிலும் மற்றும் தமிழர் வாழ்வில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக துல்லியமான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதிலும் பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்கினார். கடந்த 30.06.2011 ஆம் திகதி முதல் இவரது ஓய்வு பெறுதலானது கிழக்கு மாகாணத்திற்கே பாரிய இழப்பாக நான் கருதுகின்றேன்.

"கற்றவர்கள் எல்லோரும் சிறந்த சேவைகளை வழங்கியதுமில்லை"
"சிறந்த சேவைகளை வழங்கும் எல்லோரும் கற்றவர்களுமில்லை"

அந்தவகையில் திருவாளர்: சி.தண்டாயுதபாணி அவர்கள், கற்றவர் மட்டுமல்ல சிறந்த சேவைகளைப் புரிந்த மனிதாபிமானம் கொண்ட சிறந்த மனிதனும் ஆவார் என்பதனைக் கூறிக்கொள்வதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

எம்.ரீ.ஏ.தௌபீக்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் இவ் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி.வி.ஆர்.ஏ. ஒஸ்வேல்ட் இடமாற்றம் பெற திரு.சி.தண்டாயுதபாணி வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று வந்திருந்தார்.

அவரின் கீழ் கடமையாற்றிய காலத்தில் அவரது பண்புகளையும், சேவைத்திறனையும் நேரடியாக அறியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது. வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கட்கும், பாடசாலைகட்கும் இவரது சேவை சிறப்பான முறையில் கிடைத்து வந்தது. முடிவுகள் யோசித்தே எடுக்கப்படும். பிறகு மாறாத, மாற்றப்பட முடியாதவையாக இருக்கும். தன் கீழ்ப் பணிபுரியும் எல்லோருக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து வேலைகளைச் செய்விப்பதில் வல்லவர். இலங்கை கல்வி நிர்வாக சேவையிலிருந்துகொண்டு பாடசாலை அதிபராக நீண்ட காலம் பணியாற்றிய பெருமை இவருக்குரியது. கல்வி அலுவலர் கூட்டங்களில் கல்விச் சிந்தனை என்ற பெயரில் அலுவலர்கள் கல்வி தொடர்பான தேடல்களினூடாக சிறிய ஆக்கங்களை எழுதி வாசிக்கச் சொல்வார். இது சிறப்பான செயற்பாடாக இன்றும் எனது வலயத்தில் செயற்படுத்தி வருகின்றேன். வவுனியா வடக்கு கல்வி வலயம் பின்னடைவான நிலையிலிருப்பதை அவதானித்து பெரு முயற்சியுடன் கல்வி மாநாடு ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். கல்விக்கான மாநாடு ஒன்றை ஏற்படுத்திய பெருமை திரு.சி.தண்டாயுதபாணியையே சேரும். இதன் போது பல அம்சங்கள் அவரது நேரடிக் கண்காணிப்பில் ஒத்திகை பார்த்த பின்பே மேடையேற்ற அனுமதித்த படியால் மாநாடு சிறப்பாக அமைந்திருந்தது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்து ஆசிரியர்கட்கான தேவைகளை நிறைவு செய்து கொடுத்து வந்தார்.

வவுனியா வடக்கு புதிய கல்வி அலுவலகத்திற்கான அத்திவாரக் கல்லை நாட்டி ஆரம்பிக்கப்பட்ட வலய அலுவலகம் இன்று புளியங்குளத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றது. போக்குவரத்துக் கடினமான சூழலிலும் திருகோணமலையிலிருந்து வருகை தந்து சிறப்பான பணியாற்றி மீண்டும் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகச் சென்றிருந்தார். வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் தனது கதிரையில் என்னை இருக்கச் செய்து வலயக் கல்விப் பணிப்பாளராக மாற்றிச் சென்றிருந்த திரு.தண்டாதயுதபாணி அவர்களின் பல செயலொழுங்கினை இன்றும் என்னால் பின்பற்றக் கூடியதாக இருப்பது சிறப்பானது. திருமலை வாழ் தமிழ் மக்களிற்கான சேவைகளை ஓய்வு காலத்தில் நல்க வேண்டும். வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென்று கோணேஸ்வரப் பெருமானை வேண்டி நலம் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

த.மேகநாதன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்

அன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி முதல் முதலில் வலயக்கல்விப்பணிப்பாளராக வவுனியா வடக்குக் கல்விவலயத்தில் கடமையேற்றபோது அவர்களை வரவேற்று அவர்களின் கீழ் சிறிதுகாலம் கடமையாற்றிய நான் அவர் சேவையில் அனுபவித்தவற்றுள் சில.

வலயத்திற்கு வருகை தந்தபோதுதான் முதன்முதலில் அவரைப்பார்த்தேன். அவர்களின் அமைதியே உருவான தோற்றம் என் மனதில் ஒரு தெய்வீக உணர்வை ஏற்படுத்தியது. அவர்கள் எங்களுடன் கலந்துரையாடிய போது சாந்தமான, மென்மையான பேச்சு என்னை வசீகரித்தது. இவையே அவர்களுடன் சேவையாற்றக் கிடைத்த காலம் முழுவதும் எம்முடன் இருந்தன.

அவர்கள் வலயத்தில் கடமையேற்க வருமுன்னரே வலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்கள் பற்றி அறிந்து கொண்டு வந்துள்ளார் என்பதை அவர்களது பேச்சிலிருந்து அறியமுடிந்தது. அதுபோலவே இடமாற்றம் பெற்றுச்செல்லும் போது அவர்கள் ஆற்றிய சேவையைத் தொடர யாரை விட்டுச் செல்லப் போகிறேன் என்பதையும் தீர்மானித்து அப்பதவியில் உரியவரை அமர்த்தி விட்டுச் சென்றார்கள். இதிலிருந்து நாம் கற்றுக் கொண்டவை பல.

திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்கள் என்றதும் ஒவ்வொருவர் மனதிலும் வெவ்வேறு நிகழ்வுகள் நினைவுக்கு வரலாம். என் மனதில் பளிச்சென்று பட்டவற்றுள் இரண்டைக் குறிப்பிடுகின்றேன். ஒன்று எமது வலயம் வவுனியா நகரப்பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக இயங்கி வந்த காலத்தில் அங்கிருந்து வலயத்தை வெளியேற்றப் பாடசாலைச்சமூகம் முயற்சித்தது. அதற்காக ஒரு நாள் சில தடைச்செயற்பாடுகளைச் செய்தது. இக்காலகட்டத்தில் கல்விச்சமூகத்தினரே அவர்களை எதிர்த்துக் கதைக்கமுடியாத நிலை இருந்தது. அவ்வேளையில் யாருடைய உதவியுமில்லாமல், எங்களையெல்லாம் வெளியே நில்லுங்கள் என்று கூறிவிட்டுத் தன்னந்தனியே சென்று உரியவர்களுடன் கதைத்துச் சுமுகநிலையை ஏற்படுத்தி காரியாலயத்தை அன்றே இயங்க வைத்தமை.

மாற்றயது 2005ம் ஆண்டு செப்ரெம்பர் 16ம், 17ம் திகதிகளில் நடாத்திமுடித்த கல்வி மாநாடு இதற்காக மாதக்கணக்கில் இரவு பகலாக திட்டமிட்டுச் செயலாற்றியவர். இதன் மூலம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் கவனத்தை வலயத்தின் கல்விப்பிரச்சினைகள் மீது குவிமைப்படுத்த முடிந்தது. இது வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கான வளங்களை இன்றும் பெற்றுத்தந்து கொண்டேயிருக்கிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் பண்புகளில் ஒன்று கடந்தகாலங்களில் சேவையாற்றிய நிலையங்களில் கடமையாற்றியவர்களுடன் தற்போதும் நட்புத்தொடர்பைப் பேணிவருவதாகும். தன்னுடைய நண்பர்களுக்கிடையிலான ஒரு வலைப்பின்னலைப் பேணி நற்பணிகளை ஆற்றிவருவதைக் கண்டு வியந்துள்ளோம்.

இப்பண்பு போலவே சக உத்தியோகத்தர்களின் கஷ்டங்கள், பிரச்சினைகளை நாசூக்காக கேட்டறிந்து அவற்றிற்கான பொருத்தமான தீர்வுகளை எட்டக்கூடிய வழிகாட்டல்களைச் செய்து சக உத்தியோகத்தர்களினது குடும்பங்களிலும் நீங்காத இடம்பிடித்துள்ளார் என்பதை அனுபவித்தவன் என்ற முறையில் இதைக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

அடக்கம், அறிவு, அன்பு, பொறுமை, வாய்மை, விருந்தோம்பல் போன்ற சிறந்த பண்புகளைக் கொண்டு தனது சேவையை மனமுவந்து செய்து இமயம் போல் வளர்ந்து நிற்கும் எங்கள் வழிகாட்டி திரு. சி. தண்டாயுதபாணி அவர்களையும், அவர்தம் பாரியார் அவர்களையும், பிள்ளைகள் இருவரையும், நானும், குடும்பத்தினரும் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

"வாழ்க வளமுடன்"

இ.ரகுபதி
45/75 திருநாவற்குளம்
வவுனியா

ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வவுனியா வடக்கு கல்வி வலயம்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க
# அகவை அறுபதில் அதிபர்
# திரு.சி.தண்டாயுதபாணி

எனது அன்பிற்குரிய நண்பர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களுக்கு திருக்கோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் வெளிவரும் மணிவிழா மலரின் மூலம் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். திரு.திருமதி சிங்காரவேலு அன்னநாச்சியார் தம்பதிகளின் புதல்வனாக அவதரித்து கல்விப்பணியும், சமூக, சமயப்பணியும் ஆற்றும் திருக்கோணமலை மண்ணின் மைந்தன் இளவயதுமுதல் தி / ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று அதே கல்லூரியில் அதிபராக சேவையாற்றி இன்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி வகிப்பதில் மகிழ்வு அடைகின்றேன்.

இளமைக்காலம் முதல் தமிழின உணர்வாளராக செயற்பட்டு இன்று வரை பொதுச் சேவைகளிலும் தன்னை அர்ப்பணித்து திருக்கோணமலை மாவட்டத்திற்கு ஆற்றும் பணிபாராட்டத்தக்கது. திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் இலண்டன் மாநகருக்கு வருகைதந்த வேளையில் எமது முன்னாள் அதிபர் அமரர்.கா.சிவபாலன் அவர்களது பெருமுயற்சியினால் உருவாக்கப்பட்ட இலண்டன் திருக்கோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் புத்துணர்வுடன் செயற்பட பழைய மாணவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து வைத்த பெருமை அதிபர் சி.தண்டாயுதபாணி அவர்களுக்கு உரியது.

திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியை பல்லோராலும் புகழும் வண்ணம் நிர்வகித்து, மாணவர்களையும் ஆசிரியர்களையும் தனது அன்பின் வழியாய் அரவணைத்து பாடசாலையினது உயர்ச்சிக்கு இவரது அர்ப்பணிப்பான சேவை பாராட்டத்தக்கது. இலங்கையில் இன்று முன்னனிப் தேசிய பாடசாலையாக மிளரும் தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் வருடந்தோரும் அநேக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனைத்துப்பீடங்களுக்கும் தெரிவாகி தேசிய மட்டத்திலும் தெரிவாவதற்கு அதிபர் சி.தண்டாயுதபாணி அவர்களது நிர்வாகத்திறமையும் காரணமாகும். தாயகம் வந்த வேளை என்னையும் கல்லூரிக்கு அழைத்து கௌரவ விருந்தினராக ஒரு வைபவத்தில் கௌரவித்தமையை நன்றியுடன் இவ்விடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். திருக்கோணமலை இளைஞர் அருள் நெறிமன்ற ஸ்தாபகர் திரு. தொண்டர் ஐயா பட்டறையில் உருவாகிய அதிபர் சி.தண்டாயுதபாணி அவர்கள் என்றும் எளிமையுடன் திருக்கோணமலையில் வாழும் மூவின மக்களுக்கும் சிறந்த பணியாற்றுவது யாவரும் அறிந்ததே. அதிபர்சி.தண்டாயுதபாணி அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்வி,சமய, கலாசாரப்பணிகளை ஆற்றி எம்மண்ணுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென எல்லாம் வல்ல கோணேசப் பெருமானைப் பிரார்த்தித்து, தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினர் சார்பிலும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்
இராமலிங்கம் பாலேந்திரநாதன்
கலாச்சாரச் செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கல்விச் சேவைக்கென்று அவதரித்து பல்வேறு பணிகளில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமலை மண்ணின் மைந்தன் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களுக்கு தி/இ.கி.மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் மன்றம் பாராட்டு விழாவெடுத்து சிறப்பு மலர் வெளியிடுவதில் மட்/சிவாநந்த வித்தியாலய தேசிய பாடசாலையின் அதிபர் என்ற வகையில் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆதியில் நல்லாசிரியராக, ஆற்றல் மிகு அதிபராக, வலயக் கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாணத்தின் கண்ணியம் மிக்க கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக 41 வருடம் நிறைவான சேவை செய்து ஓய்வு பெற்றுச் செல்பவர்தான் அன்புக்கும் மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி ஐயா அவர்கள்.

அமைதியான சுவாமும், ஆழமான அறிவும், அனைவருடனும், அன்பாகவும் பண்பாகவும், பழகும் பண்பும் இயல்பாகவே அமையப் பெற்ற ஐயா அவர்கள், கல்விப் பணியோடு மாத்திரம் நின்று விடாது பல்வேறு சமூகப் பணியோடு தன்னை ஈடுபடுத்தி தேவையறிந்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் பெருமகனார். சுவாமி விபுலாநந்த அடிகளால் உருவாக்கி ஆசீர்வதிக்கப்பட்ட மட்/சிவாநந்த வித்தியாலய தேசிய பாடசாலைக்கும், தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கும் இடையே நீண்டதொரு உறவுப் பாலத்தை ஏற்படுத்திய பெருமை அன்னாரையே சாரும். இவ் இரு பாடசாலைக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி (BATTLE OF THE GOLDS) 1993ம் ஆண்டு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையும் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் இச் சமரினால் இரு கல்லூரிக்கும் இடையே ஓர் உறவுப் பாலத்தை ஏற்படுத்திய பெருமையும் அவரையயே சாரும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்பதற்கு ஒப்ப வாழ்ந்து காட்டியவர், அவரது ஓய்வு காலம் மகிழ்ச்சி நிரம்பியதாக அமையவும், அவர் நோய் நொடியின்றி நீண்ட காலம் குடும்பத்தாருடன் மகிழ்வுடன் வாழவும், இறைவன் அவருக்கு நல்லாசிகளையும் நற் சுகத்தையும் வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதுடன், இம்மலர் சிறப்படையவும் வாழ்த்துகின்றேன்.

திரு.தெ.ரவீந்திரமூர்த்தி
அதிபர்
மட்/சிவாநந்த தேசிய பாடசாலை
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திருமலை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், கிழக்கு மாகாண முன்னாள் மாகாணக் கல்வி பணிப்பாளரும், திருமலை மாவட்டத்தின் கல்விச் சமூகத்தின் காவலருமான திரு.சி.தண்டாயுதபாணி அவர்களிடம் பற்றும், பெரு மதிப்பும் வைத்திருந்தவன் என்ற வகையிலும் கல்வி அமைச்சின் அதிபர்கட்கான கருத்தரங்குகள், தேசிய பாடசாலைகளின் கூட்டங்கள், மற்றும் கல்வி அமைச்சினால் 1998 / 1999 ஆண்டுகளில் வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்முனை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான 9 நாட்கள் கொண்ட கருத்தரங்குகளில் நாங்கள் இருவரும் வளவாளர்களாக இணைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேலான செயற்பட்ட வகையிலும் , கடந்த பதினந்து வருடங்கட்கு மேலான தொடர்புடன் மிக நெருக்கமாக பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது எமக்கு பெரும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவை மட்டுமல்லாமல் திருமலை மட்டுநகர் கல்வி சமூகங்களுக்கிடையே உறவுப்பாலமாக அமைந்து கொண்டிருக்கும் கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும், சிவானந்தா வித்திலாயத்திற்குமிடையே 1994 ம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்று வரும் தோற்பந்து கிரிக்கற் போட்டியின் தாபக அதிபராக முக்கிய பங்கினை ஏற்று இன்று வரை செவ்வனே இடம் பெறுவதற்கும், தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் அவர் எடுக்கின்ற முயற்சிகள் சொல்லில் அடங்காதவை. இப் போட்டிகள் நடைபெறும் வேளை 1998 - 2008 வரையிலான காலப்பகுதியில் அவருடன் இணைந்து இப்போட்டிகளை முன்னெடுத்த போது இராம கிருஷ்ண மிசன் பாரம்பரியங்களை முதன்மைப்படுத்தி இரு பாடசாலைகளினதும் . நகரங்களினதும் பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்றதாக முன்னெடுத்ததில் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் பங்களிப்பு அளப்பெரியதாகும்.

திரு.சி தண்டாயுதபாணி அவர்கள் மீது கிழக்கு மாகாண கல்விச் சமூகம் விஷேடமாக திருமலை மாவட்ட மக்கள் மதிப்பு வைத்திருப்பதற்கு அவர் கொண்டிருந்த பல குணாதிசயங்களில் மிக முக்கிய மூன்று குணங்கள் காரணாமாயிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவரோடு பழகியோர் அவரிடம் திகழ்ந்து கொண்டிருக்கின்ற நேர்மை, செம்மை , சிரத்தை ஆகிய இயல்புகளை அறிந்திருக்க தவறியிருக்கமாட்டார்கள். அண்மைக்கால நெருக்கடிகளுக்கு மத்தியில் நேர்மை எனும் அரிய பண்பை இயல்பாகக் கொண்டவர்களைக் காண்பது அரிதாகும். பிறருடன் பழகிய விதத்தால், பேசிய முறையால், நேரிய போக்கால் நெஞ்சுரமிக்க நேர்மையாளர் என்பதை கிழக்குக் கல்வியின்பால் அக்கறை கொண்ட சமூகம் உணர்ந்து கொண்டதென்றால் மிகையாகாது.

இரண்டாவதாக இவரது பேச்சிலும்சரி, எழுத்திலும் சரி, செயற்பாடுகளிலும் சரி, ஒரு செம்மையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். நேரிய சிந்தனையின் காரணமாக வழுக்கள் அற்ற செம்மையான போக்கு மிளிர்ந்தது. தவறுகள் , குற்றங்கள் தேடியும் கண்டுபிடிக்க முடியாத வகையில் திட்டங்களும், அமுலாக்கலும், மதிப்பீடுகளும் அமைந்து இருந்ததோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுகளின்றி எச்செயற்பாட்டையும் செம்மையாக நிறைவேற்றி முடித்தமை இவருக்கே உரிய சிறப்பம்சமாகும்.

மூன்றாவது சிறப்பு அம்சம் அவரிடம் காணப்படும் சிரத்தை ஆகும். நாம் எந்தளவிற்கு ஒரு காரியத்தின்பால் சிரத்தை கொள்கின்றோமோ அந்தளவிற்கு வெற்றியையும் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். விஷேடமாக கல்விப்புலம் சார்ந்த வெற்றிகளுக்கு தனி மாணவனது சிரத்தைமட்டும் போதாது அப்புலத்துடன் இணைந்த அனைத்து சமூக உறுப்பினர்களது சிரத்தையும் அத்தியாவசியமாகும். இதனை நன்குணர்ந்திருந்த திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் ஆசிரியரிலிருந்து ஆரம்பித்து மாகாண உதவிக் கல்விச் செயலாளர் வரையிலான கடமைகள் அனைத்திலும் சிரத்தையுடன் தொழிற்பட்ட வகையினால் இன்று கல்விச் சமூகத்தினால், விசேடமாக திருமலை கல்விச் சமூகத்தினால் பாராட்டப் படுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன்.

எழுமின்! விழுமின்!
குறிசாரும் வரை
நில்லாது உழைமின்! உழைமின்!!

- சுவாமி விவேகானந்தர்.

திரு. பொன்னம்பலம் ஆனந்தராசா,
முன்னாள் அதிபர்
மட்/ சிவானந்த வித்தியாலயம்.
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கல்விபுலத்தில் நீண்டகாலம் பல்வேறு பதவி நிலைகளில் மகத்தான சேவையாற்றி மாண்புடன் ஓய்வுபெற்றுச் செல்லும் எமது சகோதர பாடசாலையான இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளருமாகிய திரு. சி. தண்டாயுதபாணி அவர்களை கௌரவிக்கும் முகமாக ஆவணப் பதிவாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அக மகிழ்வடைகின்றேன். ஒரு ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப்பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக, கல்வி அமைச்சின் சிரேஷ்ட பிரதிச் செயலாளராக இருந்து எமது மக்களுக்காற்றிய சேவைகளைப் பாராட்ட எடுத்த இம் முயற்சி உண்மையில் பாராட்டுதற்குரியது.

இவரிடம் காணப்பட்ட நேரிய சிந்தனை, அமைதியான பேச்சு, எதனையும் நிதானமாக அணுகுந் தன்மை என்பன இவரை ஒரு சிறந்த மானுடநேயனாக அடையாளப்படுத்தியது. எந்தவித சலனமுமின்றி எந்தப் பிரச்சினைகட்கும் முகங்கொடுக்குந்திறன், தனது ஆளணி வளத்தினை வினைத்திறனுடன் பயன்படுத்தி அவர்களின் வினைத்திறனை உயர்நிலைக்குக் கொண்டுசெல்லும் நுட்பங்கள் என்பன இவரை ஒரு தலைசிறந்த முகாமையாளராக உயர்த்தி வைத்தன. மேலும் இந்துக் கல்லூரிக் கென்றுதனித்துவம் மிக்கமாணவர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் என்பவற்றைகட்டியெழுப்புவதில் முனைப்புடன் பணியாற்றிய ஒருசிற்பி.

இந்தவகையில், திரு.தண்டாயுதபாணி அவர்களுக்கு சேவைநலம் பாராட்டு விழா மேற் கொள்ளப்படும் இம் முயற்சி மிகவும் பொருத்தமானதும் பாராட்டுதற்குரியதாகும். இவ்வாறு மாண்புடன் ஓய்வு பெற்றுச் செல்லும் இவருக்கு ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியின் பயனாளிகள் சார்பாக எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. சுலோசனா ஜெயபாலன்
அதிபர்
ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரி
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

## மகத்தான மனிதர்

ஈழமணித்திருநாட்டின் எழில் நகராம்
திருமலை ஈன்ற தவப் புதல்வரே!
பொதிகை மலைத் தென்றலாய் தவழ்ந்து
தமிழ் கூறும் நெஞ்சமெல்லாம் நிறைந்த
கல்விச் சமூகத்தின் பெருந்தகையாளரே!

உங்கள் வளர்ச்சியோ தனிவளர்ச்சி தான்
உங்கள் சேவையோ சொல்லில் அடங்காதவை
ஆசிரியராய் கண்டோம் அரவணைத்து நின்றாய்
அதிபராய் கண்டோம் ஆளுமை வளர்த்தாய்
பணிப்பாளராய் கண்டோம் பண்புகள் தந்தாய்
செயலாளராய் கண்டோம் செயற்திறன் படைத்தாய்
பட்டங்கள் பதவிகள் பல பெற்றாலும்
பணிவாலும் பண்பாலும் பாரினில் உயர்ந்தாய்

சாதனையின் சிகரமாம் இந்துக் கல்லூரியினால்
தேசத்தின் மகுடத்தை தன்வசப்படுத்தினாய்
கிழக்கின் சொத்தாய் திகழ்ந்தது மட்டுமா
வடக்கின் பொக்கிசமாகவும் ஆக்கியது
வவுனியா வடக்குவலய பணிமனை

பெயர் சொல்ல வாய் கூசும் உம்பெயரை
சர்வதேசமும் வாழ்த்தி பெருமை கொள்கிறதே!
எட்டுத் திசையும் புகழ் பரப்ப
பூ மாலைகளும் புகழ் மாலைகளும்
உம் கழுத்தை நிறைந்த போதும்
புகழுக்கு என்றும் மயங்கிடாத – எம்
தண்டாயுதபாணி பெரியோனை பெற்ற யாம்
பாக்கிய சாலிகளாய் பெருமிதம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறாத பதறாத பள்ளிச் சாதனைகள்
நிமிர்ந்த நன்நடை, அஞ்சாத நெஞ்சம்
அயராத ஆற்றுகை, அசையாத மனவுறுதி
எளிமையான தோற்றம், பணிவான அடக்கம்
நேரிய சிந்தனையின் வற்றாத ஊற்று
நெஞ்சை நெகிழ வைக்கும் வார்த்தைகள்
எவரையும் உணர வைத்துவிடும்
உண்மையான உன்னத உரைகள்

மனித நேயம் கொண்ட சமூகத்தை
சீராக சிலை வடித்த சிற்பியே – ஐயா!
ஆயிரம் ஆயிரம் மாணவர்களை
ஒளிர வைத்த அணையா விளக்கே
ஏழைமாணவர்கள் வாழ்வு பெற
ஏணியாய் நின்று ஏற்றம் தந்தவரே!

பெற்றெடுத்த பிள்ளையாய் நம் பாடசாலைகளை
பொறுப்போடு பணிசெய்து தரமுயத்தியவரே
சேவைக்கே சேவகம் செய்த செம்மலுக்கு
விழாவெடுப்பது விழாக்களுக்கே கௌரமாம்
உம்மை இந்நாளில் நாமும் வாழ்த்துகின்றோம்.

தொட்ட தெல்லாம் பொன்னாகிவிட
பார்வைப் பட்டதெல்லாம் வைரமாகிட
காலம் கடந்தும் வரலாற்றின் ஆவணமாகி
பேறுகள் பல பெற்று வாழ்வாங்கு வாழ
வாழ்க, வாழ்க, வாழிய பல்லாண்டு என்று
இறையாசிகளையும், வாழ்த்துக்களையும் வாழ்த்தி நிற்கும்
அதிபர், ஆசிரிய, மாணவ சமூகத்தினர்.

* நன்றி

தி/ சென்மேரிஸ் கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புடன் ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. சிங்காரவேல் தண்டாயுதபாணி அவர்களுக்கு திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரிச் சமூகத்தால் மனமுவந்து அளிக்கப்பட்ட வாழ்த்துப்பா.

***நேரிசை வெண்பா***

மங்காப்புகழ் விளங்கும் மன்னும் திருமலையில்
தங்கா நீடுபுகழ் தண்டாயுதபாணியினார் - மின்னும்
கல்விஒளி பரப்பி கண்டோர் தினம்புகழ
கலங்கரையாய் நின்றார் அறி.

# வாழ்த்துப் பா

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
விரிந்துயர் மௌவல் மாதவிபுன்னை
வேங்கை வண்செருந்தி சண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும்
பொழில் சூழ் கோணமாமலையாம் நகரில்

சீரும் சிறப்பும் திருவும் பொலிந்த
சிங்காரவேலு தம்பதியினர்க்கு
திருமலை நகரை பொலிவுறக் காக்கும்
திருவுரு காளியாம் தெய்வத்தின் அருளால்
அருந்தவப் புதல்வனாய் ஆயிரத்து
தொளாயிரத்து ஐம்பதாம் வருடம்
பெருமையுறவே பிறந்து நின்றார்.

பெற்ற குழந்தையை பெரும் பேறெனவே
உற்றார் உறவோர் மற்றோர் மகிழ
பெரும் பெயரிட்டு பெரிதும் மகிழ்ந்தனர்.
தன்னிகரில்லா தனிப் பெரும் வேலவன்
தன்னிகர் நாமம் தாம்வைக்க எண்ணி
தண்டாயுதபாணி என்றே பெயரிட்டு
தக்கோர் புகழத் தாமும் ஏற்றனர்.
வாழையிளங் குருத்தாய் வளர் பிறையாய்
மாழைபொலி வண்ணச் சுடரொளியாய்
வளர்ந்து நின்றார் நம்மிளவல்

ஐந்து வருடம் அடுக்கடுக்காய் ஓடிவந்து
பள்ளிப்பருவமும் பாங்காய் நிறைந்துநிற்க
கோதில்லா வித்தியாலய
கோணேஸ்வராவுக்கு
கொள்ளும் மகிழ்வு குறித்தோடிநிற்க
ஆரம்பக்கல்வியில் அடி யெடுத்து வைத்தார்.

ஆரம்பக் கல்வியில் ஆர்வமுடன் நின்று
க.பொ.த சாதாரணம், உயர்தரம் கற்று
சிறுமையேயில்லா சிறந்த பேற்றினை
உள்ளம் உவப்ப உறுதியுடன் பெற்றார்.
தொழில் முறை தேடும் தொடரிய நோக்கில்
யாழ்நகர் சென்று தொழில்நுட்பக்கல்லூரியில்
ஈராண்டுகள் இன்பமுறக் கற்றுபின்னர்

பல்கலை பயிற்றும் பயிற்சிக் கல்லூரி
பலாலி சென்று பாங்குடன் பயின்று
ஆசிரியராகி அருமைப் பணிபுரிந்தார்.
ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதில் தானும்
ஆசிரியப்பணியில் அடியெடுத்து வைத்தார்.
முதுமை நகராம் மூதூர்ப்பதியும்
ஏற்றம் மிகுந்த ஏறாவூரும்
ஊற்றம் மிகுந்து உறுதொழிலை உயர்த்தின
ஆசிரியப் பணியில் அமர்ந்திடும் போதே
களனிப் பல்கலைக்கழகம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பட்டதாரியாய் சிறப்பும்பெற்று
சிந்தையில் நிறைந்த யாழ்நகர் தன்னில்
பல்கலைக் கழகமாம் மீண்டும் சென்று
பிரியமுடன் நல்ல பி.ஜி.டி.ஈ முடித்து

தேசியக் கல்வியை தேசுடன் போற்றும்
தேசிய கல்வி நிறுவகத்தினிலே
எம்.ஈ.டியை இறுக்கமாய் முடித்து
ஈடும் எடுப்புமாய் எல்லோரும் போற்ற
கல்விமானாய் களிப்புற நின்றார்
இருபது வருடங்கள் ஏற்றமிகு ஆசானாய்
எல்லோரும் போற்ற ஈடற்று விளங்கினார்

திருமலை நகரினிலே கல்வி ஒளிபரப்பும்
இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராய்
எண்பத்தொன்பதில் ஏற்றுக்கொண்டார்
தொடங்கும் நல்ல தொண்ணூறு தன்னில்
அதிபர் பதவியை அழகுற ஏற்றார்
மதிப்புற விளங்கும் அதிபர் பதவியை
மகிமையுறவே மதித்து நின்றார்.

அதீதம் மிக்க அதிபர் சேவையால்
அநேக உயர்வுகள் அடுக்கடுக்காய் வந்தன
கூட்டுகள் கொண்ட கொத்தணி அதிபராய்
வவுனியா வலயக் கல்விப்பணிப்பாளராய்
வடக்கும் கிழக்கும் இணைப்பின் மேன்மை
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராய்
வடக்குப் போக கிழக்கின் நின்ற

மாட்சிமையுற்ற மாகாணக் கல்விப்
பணிப்பாளராய்
கண்டிடும் நல்ல கல்வி பண்பாட்டலுவல்கள்
காணி, காணி, அபிவிருத்தி போக்குவரத்து
அமைச்சின் பிரியமாம் பிரதிச் செயலாளராய்
கல்வியுலகிலே காலங்கழித்து
நன்குற அமைந்த நாற்பத்தொருவருடங்கள்
நற்சேவை செய்த நல்லாசானாய்
நற்பெயர் பெற்ற நல்லதிகாரியாய்
நிர்வாகத்திறன் உறு நல்ல நிர்வாகியாய்

கற்றோர் மற்றோர் யாவரும் மதிக்க
களிப்புறு சிந்தையான் கல்விமானாக
வியப்புறு நல்ல விந்தையாளனாக
சாந்தகுணத்தினன் தண்ணளியாளன்
பெயருக் கேற்ற பெரும் பண்பாளர்

பெற்ற கல்வியை மற்றையோர்க்குக் கொடுத்து
பெரும் பேறு பெற்ற பெருந்தகையாளர்
இயங்குறும் நல்ல இரண்டாயிரத்துப்
பதினொன்றில்
கல்வியுலகு கலங்கிப் போய் நிற்க
ஓய்வினைப் பெற்றார் யாதுதான் செய்வோம்.
இந்துக் கல்லூரி இருக்கும் வரையில்
இவரது நாமம் என்றும் ஒலிக்கும்

எத்தனை வைத்தியக் கலாநிதிகள்
பொறுப்புறு நல்ல பொறியியலாளர்கள்
முந்துறும் நல்ல முகாமையாளர்கள்
கலையில் மிளிரும் கலைப்பட்டதாரிகள்
விந்தைமிகு விஞ்ஞானப்பட்டதாரிகள்
விளைவுடன் கொண்ட வெற்றியாளன்

இல்லற மென்னும் நல்லறப்பாதையில்
புதுமைவிரும்பும் புவனேஸ்வரியை
நல்ல மனைவியாய் நற்கரம்பற்றி
நன்கலனாகும் நன் மக்கட் பேற்றை
நயந்து பெற்று நனி மகிழ்ந்தாரே
பார்ப்போர் புகழும் பாலமுரளியும்
மேன்மையுற விரும்பும் மேகலாவும்
ஆசையுடன் பெற்ற மக்களாவர்

நல்லதொரு ஆசானாய், அதிபராய்
பணிக்கெனப் பிறந்த பணிப்பாளராய்
செயற்றிறன் மிக்க செயலாளராய்
சொல்லால் தூயதிறன் மனத்தால்
போற்றவே வாழ்ந்தீர் வாழ்கின்றீர்
நலம்பலவிளைக நாமும் வாழ்த்துகின்றோம்.
மனைவி மக்களோடு பல்லாண்டு வாழ்க
வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியெனும் வானில் ஓர் வளர்பிறை.....

பழைய மாணவனாய் இந்துவில் பரிணமித்து
படித்த பள்ளியிலே ஆசானாய் பணியேற்று
இளைய தலைமுறைக்கோர் இலக்கணமாய் நின்று
ஏற்றம் பலதந்த எழிலோனே! வாழ்க பல்லாண்டு.

தலைமை ஆசானாய் தன்கல்லூரியில் சேவைநல்கி
தன்னலமற்ற சேவையால் தரமான தளமமைத்து
நிலைமை அறிந்து நிதானமாய்செயலாற்றி நிலைபெற்று
நேர்பணிசெய்த நித்திலமே! வாழ்க பல்லாண்டு.

சீரிய சிந்தனையும் சிங்காரச்சிரிப்பும் சிறப்புத்தந்திட
சிறப்பான சேவையாளரென பலரும் சிலாகித்துப் பேசிட
கூரிய அறிவும் குறைவில்லாச் சேவையும் நின்குணம் கூறிட
கோபுரமாய் நிமிர்ந்து நிற்கும் குருவே! வாழ்க பல்லாண்டு.

விரிந்து கிடக்கும் கல்விவானில் விண்நிலவாய் நின்று
வெறுப்பேதும் வளர்க்காது பொறுப்புடனே கல்வி ஒளிபரப்பி
புரிந்து கொண்டு பணிபுரியும் புலமையாளரென புகழும்பெற்று
பொன்னிலவாய் ஒளிறும் புதுப்புனலே! வாழ்க பல்லாண்டு.

ஒதுக்கிய பணியினை உன்னதமாய் நிறைவேற்றி
உயர்வான பதவிகளையும் உரிமையோடு ஏற்று
செதுக்கிய சிலைபோல் தன்பணியினை அழகாக்கி
செம்மலாய் நிற்கும் சிற்பியே! வாழ்க பல்லாண்டு.

காலநேரம் கூடிவந்து கடமையுணர்வைத் தட்டும்போது
காலதாமதம் காட்டாது துணிவுடனே கால்பதித்து
வாழவூரம் வேணுமெனும் வழியினைக் காட்டி நின்று
வானுயர நிற்கும் வலிமையாளனே! வாழ்க பல்லாண்டு.

பாமாலைபாடி பாராட்டுக்கூறி பட்டமும் வழங்கி
பயன்மிகு அவர் சேவைக்கு பரிகாரம் அளித்து
பூமாலைசூடி பொன்னாடைபோர்த்தி புகழாரம் பொழிந்து
பூக்கள்தூவி வாழ்த்துகிறோம் வாழ்க பல்லாண்டு.

*இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால்
திரு. சி. தண்டாயுதபாணி அவர்களின் சேவை நலன் பாராட்டு நிகழ்வில்
08.10.2011 திகதி கையளிக்கப்பட்டது.*

**பாவாக்கம்-ச.பாரதிநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 4

## நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் தண்டாவின் தலைமைத்துவம்

கே.கே.தயாநிதி
(தலைவர், இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா)

அதிபர் தண்டாயுதபாணி அவர்களை கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக நான் நன்கறிவேன். ஒரு மாணவனாக நான் அவரிடம் கல்வி கற்றதில்லை. ஆனால் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் அவருடன் இணைந்து பணியாற்றிய காலத்தில் அவரது தலைமைத்துவம், நிர்வாகத்திறன், அனைவரையும் அரவணைத்துப் போகும் பாங்கு போன்றவற்றை நேரில் கண்டு நிறையவே கற்றுள்ளேன். அவருடன் நான் இணைந்து பணியாற்றிய காலம் என் வாழ்நாளில் ஒரு வசந்த காலம். இக்காலத்தில் அவருடன் எனக்கு ஏற்பட்ட சில நல்ல அனுபவங்களை இங்கு பதிவது சாலப் பொருத்தம் என்று எண்ணுகிறேன்.

"இதனை இவன் முடிப்பான் என்று ஆய்ந்து
அதனை அவன் கண்விடல்"

இது வள்ளுவன் தந்த குறள். அதிபர் தண்டாயுதபாணி இதற்குப் பொருள். ஒரு கல்லூரியை அதிபர் ஆளக்கூடாது. முறைமைகள் (systems) தான் ஆளவேண்டும். அதிபர் தண்டாயுதபாணி அடிக்கடி சொல்லும் ஒரு தத்துவமிது. முகாமைத்துவ கல்வியில் ஒரு பகுதி (succession planning and management) ஒரு நிறுவனத்திற்கு தேவையானவற்றை முறையாக இனம்கண்டு மேம்படுத்தி அவற்றை தற்கால எதிர்கால நோக்கங்கள் நிறைவேறப் பயன்படுத்தி அதை தக்க வைக்கவும் வேண்டும். ஒரு தலைவனின் தலையாய கடமை தனக்குப்பின் வரும் ஒரு தலைவனை உருவாக்குவதும் தான். இவற்றை செவ்வனே நடைமுறைப்படுத்தியவர் அதிபர் தண்டாயுதபாணி. அதனால்தான் அவருக்கு பின் கல்லூரியில் ஏற்படும் நிர்வாக மாற்றங்கள் சுமூகமாக நடந்து வருகின்றது. முறைமைகள் கல்லூரியை நிர்வகிக்க அதிபர் அதனை மேற்பார்வை செய்யும் முறைமை அவர் காலத்தில் முறையாக செயல் வடிவம் பெற்றது.

திருகோணமலை இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1963ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் பல்வேறு காரணங்களால் அது தொடர்ந்து செயற்படவில்லை. 1981ல் அதிபர் சிவலோகநாதன் அவர்களால் மீளமைக்கப்பட்ட இச்சங்கம் 1983 ஆடிக் கலவரத்தின் பின் மீண்டும் ஒரு இயங்கா நிலைக்குச் சென்று இருந்தது. 1991ம் ஆண்டு திரு தண்டாயுதபாணி கல்லூரி அதிபராக பொறுப்பேற்ற பின்பு புத்துயிர் பெற்ற இச்சங்கம் இன்றுவரை ஒரு பலமான அமைப்பாக இயங்கி வருகின்றது. 2002ம் ஆண்டு வட அமெரிக்காவிலும், 2006ம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்திலும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தாய்ச்சங்கமும் கடல் கடந்த நாடுகளின் கிளைச்சங்கங்களும் கல்லூரி நிர்வாகத்தில் எந்த வகையிலும் தலையிடாமல் அதன் வளர்ச்சியிலும் மாணவர்களின் உயர்ச்சியிலும் இன்றுவரை சிறப்பாக செயற்பட்டு வருவதற்கு அதிபர் தண்டா அவர்களின் முறையான வழிநடத்தலே முக்கிய காரணம்.

கல்லூரியை நிர்வகிப்பதிலும் உப அதிபர்களிடம் இருந்தும் மற்றும் ஆசிரியர் மாணவர்களிட மிருந்தும் அவருக்கு நிறைவான ஒத்துழைப்பு கிடைத்திருந்தது. இது தவிர பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தமது முழுமையான ஒத்துழைப்பை எப்பொழுதும் வழங்கி இருந்தனர். ஆனால் இதற்கப்பாலும் சில சிக்கல்களை எதிர் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டித்தான் இருந்தது. குறிப்பாக கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தும் விடயத்தில் அதற்கான சகல தகுதிகளும் அப்போது கல்லூரிக்கு இருந்தும் மாணவர் தொகை ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. இதற்காக அவர் வாழாதிருந்து விடவில்லை ஸ்ரீமத் சுவாமீ ஆத்மானந்தாஜீ அவர்கள் தலைமையில் முன்னாள் அதிபர் திரு சிவலோகநாதன் மற்றும் பழைய மாணவர் சங்க, பாடசாலை அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகளையும் அழைத்துக்கொண்டு அக்காலகட்டத்தில் திருமலையில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த மேதகு ஆர்.பிரேமதாச அவர்களை நேரில் சந்தித்தார். கல்லூரியின் வரலாற்றை திரு. சிவலோகநாதன் அவர்கள் மூலம் கேட்டறிந்த ஜனாதிபதி ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயமும், இந்துக்கல்லூரி யையும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள், ஒரே பாரம்பரியத்தை கொண்டிருக்கும் இவ்விரு பாடசாலைகளும் இணைந்து ஏன் ஒரு தேசிய பாடசாலைகளாக மிளிரக்கூடாது என்ற அவரது ஆலோசனைப்படி இரு பாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு திருமலை மாவட்டத்தின் முதலாவது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. எந்த ஒரு அரசியல்வாதி களினதும் அனுசரனையின்றி முழுத் தகுதியின் அடிப்படையில் எமது கல்லூரிக்கு கிடைத்த இத்தகமை திரு தண்டாயுதபாணி அவர்களின் விடாமுயற்சிக்கும், அவர்தம் ஆளுமைக்கும் கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும்.

ஒரு கல்லூரிக்கு அதிபரோ, ஆசிரியர்களோ, பெற்றோரோ, அல்லது மாணவர்களோ நிரந்தர மல்ல. ஆனால் பழைய மாணவர்கள் என்போர் என்றைக்கும் நிரந்தரமானவர் என்பதனால்தானோ கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளிலும் பழைய மாணவர்க்கு முன்னுரிமை கொடுக்கும் வழக்கத்தை அவர் ஏற்படுத்தி இருந்தார். கல்லூரியில் நடைபெறும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி, சமய சமூக நிகழ்வுகள், உயர்தர மாணவர் ஒன்றுகூடல் போன்றவற்றிற்கு அரசியல்வாதிகளையோ, அரச அதிகாரிக ளையோ பிரதம விருந்தினராக அழைக்கும் வழக்கத்தை முடிந்தளவு தவிர்த்து புகழ் பெற்ற பழைய மாணவர்களுக்கே இக் கௌரவத்தைக் கொடுத்தார். இன்றுவரையிலும் இப்பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்க பாரம்பரியத்தில் ஊறி வளர்ந்த இந்துக்கல்லூரி அப்பாரம்பரியத்தை தொடர்ந்து பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். கல்லூரி வைபவங்களில் மாமிசம் பரிமாறப்படுவதை முற்றாக தவிர்த்ததும், கல்லூரி வளாகத்தில் சித்தி விநாயகர் ஆலயம் அமைத்ததும், சுவாமி விபுலானந்தரின் சிலை அமைக்க பழைய மாணவர்களுக்கு ஊக்கமும், ஒத்துழைப்பும் வழங்கியதும் இதற்குச் சான்று. பெரியவர்களை மட்டுமல்ல சிறியோரையும் மதித்து நடப்பது அதிபர் தண்டாவின் ஒரு உயரிய பண்பு. முதலாமாண்டு கல்லூரியில் சேரவரும் சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதும் தொடர்ந்து அவர்கள் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சாதனை ஈட்டும் போது முறைப்படி கௌரவிக்கப்படுவதும் அவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களே.

ஆசிரியர்கள்தான் மாணவர்களின் இரண்டாவது பெற்றோர் என்பதை தன் சக ஆசிரியருக்கு அடிக்கடி எடுத்துரைத்து அவர்களும் மாணவர் களுடன் அன்பாக பழக வழி அமைத்தார். அதிபர் தண்டா அவர்கள் தன்னொழுக்கமும், கட்டுப்பாடும் மிக்க ஒரு பண்பாளர். கல்லூரி சித்தி விநாயகர் குடமுழுக்குக்காக தன் விரலில் எப்போது தற்பை அணிந்தாரோ அன்று முதல் மாமிசம் உண்பதை அறவே தவிர்த்தவர். கருணை உள்ளம் கொண்டவர். 1999ம் ஆண்டு நான் கனடா வரும்போது அக்கால கட்டத்தின் தங்குமிட வசதியின்றி வகுப்பறைகளிலே தங்கிப்படித்த வசதியற்ற கிராமப்புற மாணவர்களை கௌரவமாக ஓரிடத்தில் தங்கிப்படிக்க ஏதாவது செய்ய முயற்சிக்கும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்காக என்னிடம் கேட்டுக் கொண்டவர். கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் டாக்டர் ஞானி கல்வி நிதியத்தின் மூலம் இக்குறை தற்போது ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. திரு தண்டாயுதபாணி அதிபராக கடமையாற்றிய காலம் மிகவும் ஒரு இக்கட்டான காலம். எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பல கெடுபிடிகளுக்கு மத்தியில் பலரிடம் இருந்தும் மாணவரைக் காப்பாற்றி பாதுகாக்க வேண்டியதையும் தனது தார்மீக கடமையாக ஏற்றிருந்தார்

திரு தண்டாயுதபாணி அவர்கள் காலத்தில் உபஅதிபர்களாக பணியாற்றிய திரு.மா.இராஜரட்ணம், திரு.அ.அருணகுமார் ஆகியோரின் சேவைகள் நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டியது. இருவரும் அதிபரின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் முழு ஒத்துழைப்பு கொடுத்தவர்கள். இக்கால கட்டத்தில் கல்லூரி அநேகமாக எல்லாத் துறைகளிலும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் முதன்மை நிலை அடைந்திருந்தது. பௌதிகவள விருத்தியிலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியலும், சமூக உறவுகளிலும் துரித வளர்ச்சி கண்டிருந்தது. இக்காலம் கல்லூரியின் வரலாற்றில் உண்மையில் ஒரு பொற்காலமே. இப்பொற்காலம் இன்றுவரை தொடர்வதற்கு வாழையடி வாழையாக வந்த அதிபர்களின் தன்னலமற்ற சேவையும் அவர்கள் கடைப்பிடித்த முறைமைகளுமே முக்கிய காரணம்.

பாடசாலை நிர்வாகம் என்பது தினசரி இருபத்தி நான்கு மணி நேர அர்ப்பணிப்பினை வேண்டும் ஒரு தொழில். அதுவும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும், ஊழியர்களையும் கொண்டு கல்வி தவிர்ந்த விளையாட்டு, சாரணியம் மற்றும் ஏனைய பிற நிகழ்சிகளிலும் பெரிதும் சிறப்புற பங்கு கொள்ளும் கல்லூரியை நடாத்த இருபத்தி நாலு மணி நேரம் என்பது துச்சமே. பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர்சங்கம் போன்றவற்றை தலைமை ஏற்று நடத்துவதும் அதிபர்களின் கடமைகளில் ஒரு பகுதியாக இருந்தது. இது தவிர திரு தண்டா அவர்கள் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்திற்காகவும் தனது நேரத்தின் ஒரு பகுதியை செலவழித்திருந்தார். எனவே அவர் வீடு செல்வது உறங்குவதிற்கும், ஓரளவு உணவு உண்பதிற்குமே இவ்வாறு பாடசாலைக்கும், கல்வி, சமூகத்திற்கும் அவரை தத்துக் கொடுத்துவிட்டு தனது இரண்டு பிள்ளைகளையும் முறைப்படி வளர்த்து குடும்பத்தை பராமரித்த திருமதி தண்டாயுதபாணி அவர்களை இங்கு பாராட்டாமல் விட்டால் அது நியாயமாகாது. ஆம் தண்டா கொடுத்து வைத்தவர் அவரது அத்தனை காரியங்களுக்கும் அங்கீகாரம் கொடுத்தது மட்டுமன்றி உறுதுணையாகவும் நின்ற பெருமைக்குரிய மனைவியைப் பெற்றது அவர் பெற்ற பெரும் பாக்கியமே.

அதிபர் தண்டாயுதபாணி ஒரு சரித்திர புருஷர். ஆசிரியர், மாணவர், பழைய மாணவர், பெற்றோர் மற்றும் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றவர். பதவி உயர்வுகளை முறைப்படி பெற்று தனது நாற்பது ஆண்டு கால அரச சேவையிலிருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இந்துக்கல்லூரியும், திருகோணமலை கல்விச்சமூகமும், புத்திசாலிகள். அவரை முறைப்படி பயன்படுத்திக் கொண்டார்கள். பயனடைந்தார்கள். ஆனால் அவருக்கு சமுதாயத்தின் மேலிருக்கும் அக்கறையையும், தலைமைத்துவத்தையும், ஈட்டியிருக்கும் நற்பெயரையும் திருகோணமலை சமூகம் சரியான நேரத்தில் சரியாக பயன்படுத்துமா? நல்லதோர் வீணை செய்து அதை நலம்கெட புழுதியில் எறிய விடலாமா? திருமலை மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய நேரமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுரமிக்க நேர்பார்வையும் சீரிய சிந்தனையும் கொண்ட சிறந்த சேவையாளன்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

திரு சி. தண்டாயுதபாணி அவர்கள் தமிழ் மொழிமூல மாணவ சமூகத்தை பொருளியல் ரீதியில் அறிவுசார் அபிவிருத்திப் பாதையில் வழிநடாத்தி வெற்றி கண்டவர். தமிழ் சமூகத்தை அதே பாதையில் வழிகாட்டும் தலைமைத்துவப் பண்பு, திறன்களை தன்ன கத்தே முழுமையாகக் கொண்ட சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தலைவன். மூன்று தசாப்தத்திற்கு மேலான கால கல்வி, சமூகப் பணியின் மூலம் பல சாதனை களையும், வரலாற்றுப் பதிவுகளையும் சாதித்த தலைவன்.

கடந்த மூன்று தசாப்தங்கள் திரு எஸ் தண்டாயு தபாணி அவர்களும் நானும் நண்பனாக தோழனாக பழகியுள்ளோம். 1980ம் ஆண்டில் எமது சங்கத்தின் அன்றைய தலைவர் காலஞ் சென்ற டி. எஸ் கே. வணசிங்கா அவர்கள் திரு தண்டதயுதபாணி அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்று அவர் சொன்னார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எதிர் காலத் தலைவராகத் தெரிவு செய்யக்கூடிய தகுதிவாய்ந்தவர் என்று கூறிய படியே எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஆவரின் மூன்று தசாப்த காலப் பணியைப் பராட்டி விழா எடுப்பதையிட்டு மிகவும் மன மகிழ்ச்சி அடைகின்றேன். இக்காலப்பகுதியில் அவர் பல சாதனைகளை யும் வரலாற்றுப் பதிவுகளையும் வெற்றிகரமாகப் புரிந்துள்ளார்.

1982ம் ஆண்டு தமிழர் ஆசிரியர் சங்கத் தேர்தலில் சங்கத்தின் பிரசாரச் செயலாளராக அவர் போட்டி போட்டு நீண்டகாலமாக அப்பதவியிலருந்தவரைக் காட்டிலும் மிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார்.

சங்கத்தின் பிரசாரச் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில் 1985ம் ஈண்டில் சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத் தின் ஆசிய பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரை அங்கு சமூகமளித்திருந்த உலக நாட்டுப் பிரதிநிதிகளை மிகவும் கவர்ந்திருந்தது. பலரின் பாராட்டுக்களையும் பெற்றிருந்தார்.

தென் இலங்கை ஆசிரிய தொழிற் சங்கங்கள் போாடினால் தான் நாமும் போராடலாம் என்றே முன்னைய தலைவர்கள் நம்பியிருந்தனர். இது தவறு நாம் தனித்து எமது உரிமைகளுக்காக போராடலாம் என்ற கருத்திற்கு வித்திட்டு 1998ம் ஆண்டில் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன் மறியற் போராட்டம் நடைபெற முன்னின்று உழைத்தார். ஏறக் குறைய ஒரு வாரகாலம் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணத் திறைச்சேரி, வடக்கு கிழக்கிலுள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்கள் பாடசாலைகள் அனைத்தையும் மூடச் செயது தமிழர் ஆசிரியர்களின கோரிக்கைகளை வென்றெடுத் தோம். இது தமிழர் ஆசிரியர் சங்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் ஒரு முக்கிய மைல்கல்லாகவும் அமைந்திருந்தது. இப்போராட்டம் முதல் நாள் வெற்றிகரமாக திருமலையில் நடைபெற்ற படியினால் தான் மறுதினம் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் வெற்றிகரமாகப் பரவியிருந்தது. முதலநாள் வெற்றிக்கு அடிகோலிய முழுப் பொறுப்பும் திரு தண்டாயுதபாணி அவர்களையே சாரும்.

தமிழர் ஆசிரியர் சங்கம் முன்னெடுத்த போராட்டத்தை அச் சங்கத்தின் தலைமையை ஏன்று மறுதினம் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் உட்பட சிங்கள ஆசிரியர்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஆசிரியர் சங்கங்களும் வடக்கு கிழக்கில் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமையை ஏற்று போரட்டத்தில் இறங்கியமையும் மற்றுமொரு வரலாற்றுப் பதிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ம் ஆண்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு திருமலையில் நடைபெற்றபோது சங்கத்தின் தலைவராக திரு தண்டாயுதபாணி அவர்கள் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வரலாற்றில் தலைவர் ஒருவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற் தடைவ என்பதும் ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவாகும.

2000ம் ஆண்டில் தாய்வானில் நடைபெற்ற எடயுகேசன் இன்ரநாசனல் என்ற சர்வதேச ஆசிரியர் சங்கங்களின் ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டில் பங்குபற்றி உரையாற்றியிருந்தார். இம்மாநாட்டில் இவ்அமைப்பின் மத்திய குழு உறுப்பினராக ஏகமனதாகத் தெரிவு செய்ப்பட்டார். சங்க வரலாற்றில் ஆறிய பசுபிக் மாநாட்டில் இலங்கைத் தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும் என்பதோடு சங்கத்திற்கும், தமிழினத்திற்கும் பெருமை தேடித்தந்த சந்தர்ப்பம் ஆகும்.

ஆசிரிய வகுதியில் அடிமட்டத்தில் தனது கல்விச் சேவையை ஆரம்பித்து தனது கடின உழைப்பாலும், திறனாலும் மிகக் குறுகிய காலத்தில் உச்ச மட்டத்தை அடைந்து கல்விப் புலத்தின் அதிஉன்னத சேவையாகிய இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவானார். இச் சேவையிலும் மிகக் குறுகிய காலத்தில் முதலாம் வகுப்பிற்கு தனது சொந்தத் திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு பெற்றார் எவ்வித அரசியல் செல்வாக்கையும் அவர் பயன்படுத்தாமலேயே இப்பதவி உயர்வுகளை பெற்றுச் சீரும் சிறப்புமாக கல்விப் பணிபுரிந்தார். திருமலை மாவட்டத்திலிருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்ற முதலாவது தமிழர் இவரே ஆவார்.

இவரது கல்விப்பணிக்கும், பதவி உயர்வுக்கும், சாதகமாகவே, துணையாகவோ கட்சி அரசியல் இருந்ததில்லை. குடசி அரசியலின் செல்வாக்கை இவர் நாடியதுமில்லை, உபயோகித்ததுமில்லை. கட்சி அரசியல் இவரை திருமலை மாவட்டத்தில் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றத் தடையாக இருந்தமையினால், சிறிது காலம் புகுந்த மண்ணிற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றக் கூடிய வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. இச்வேவையின் சிறப்புக் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளராக பதவிஉயர்வு பெறும் வாய்ப்பும் அவருக்கு எட்டியது.

தெற்கு அரசியல் சதி காரணமாக வடக்கு கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது கிழக்குமாகாணத்தின் முதலாவது மாகாணக் கல்விப் பணிப்பாளராகபதவி உயர்வும் அவருக்குக் கிட்டியது. கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளராக திறம்பட சேவையாற்றிய காலத்தில் கிழக்கு மாகாணம் கல்விப் புலத்தில் பல சாதனைகள் படைக்கப்பட்டன. இதன் காரணமாக கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, காணி, காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் பிரதிச் செயலாளராகவும், பதில் செயலாளராகவும் பதவி உய்ர்வு பெற்று சேவையாற்றிய முதலாவது திருமலை மாவட்ட தமிழர் இவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கட்சி அரசியலை எள்ளளவும் தனது தனிப்பட்ட நலனுக்காகப் பாவிக்காதவர். ஆனால் நாட்டின் கடசி அரசியலும், விடுதலைப் போராட்டக் குழுக்களும் இவருக்குப் பல நெருக்கடிகளையும், சோதனைகளையும் பழிவாங்கல்களையும் மேற்கொண்ட போதும் எவ் அரசியல் கட்சிக்கோ, விடுதலைப் போராட்டக்குழுக்களுக்கோ தனது தனித்துவக் கொள்கைகளை அடகு வைக்காத, சரணடையாத திருமலை உத்தமபுத்திரன். ஒரு தடவை விடுதலைப் போராளிக்குழுவொன்று துப்பாக்கி முனையில் கொலை அச்சுறுத்தல் செய்தும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாத உன்னத தலைவன்.

அரச சேவையில் ஓய்வுபெற்ற நண்பன் திருமலை அரசியலிலும் தனது பங்கைச் செலுத்தி திருமலை வாழ் தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் வழிவகுப்பான் என நம்புகின்றேன்.

அவர் சகல சௌபாக்கியங்களுடனும் தனது சேவையைத் தொடர வதழ்த்துகின்யோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமையாளன் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் மணிவிழா வாழ்த்துக்கள்

ஆ. செல்வநாயகம்
அதிபர், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை.

திருகோணமலை கல்வி வரலாற்றில் ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற தூர நோக்கும், சிறப்பான கல்விச் சிந்தனையும், சமூக நோக்கும், நேர்மைத் திறனும் உடைய பன்முக ஆளுமையாளன் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் ஓய்வு உரியகால ஓய்வாகவிருப்பினும் ஈடு செய்ய முடியாத வெற்றிடத்தை தோற்றுவித்துள்ளது.

திருகோணமலையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திரு. சிங்காரவேலு தண்டாயுதபாணி யவர்கள் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் இந்துக் கல்லூரியில் கற்றவர் ஆசிரியராக தி/மூதூர் மகா வித்தியாலயத்தில் கடமையேற்று அங்கு கடமை புரியும் போது யாழ் பலாலி ஆசிரியர் சாலையில் பயிற்சிக்காக சென்று இரு வருட முடிவில் மட்/ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி தொடர்ந்து கொ/அல் - ஹுசைனியா மகா வித்தியாலயத்தில் பணியை தொடர்ந்தார். ஓர் ஆசிரியர் கற்றுக் கொண்டு இருக்க வேண்டும் என்பதால், கொ/களனி பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாட துறையில் சிறப்புப் பட்டத்தை B.A (HONS) பெற்றார். அப்பல்கலைகழகத்தில் வருகை தரு விரிவுரையாளராகவும் பணி புரிந்தார். தொடர்நது பட்டபின் கல்வி டிப்ளோமா (PGDE) கல்வி முதுமானிப்பட்ட கற்கை நெறி (MED) களையும் கற்று சிறந்த கல்வியாளனாய் திகழ்கின்றார்.

தி/இந்துக்கல்லூரியில் ஆசிரியராக தமது பாடத்தில் சிறப்புச் சித்திகள் பெறச் செய்ததோடு திருமலை மாவட்ட பாடசாலையின் மாணவர்கள் பலரும் பொருளியல் பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகம் செல்ல கற்பித்தவர். பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப்பட்ட G.A.Q, B.A வகுப்புகளும் போதித்துப் பலர் பட்டதாரியாகியுள்ளனர்.

பிரதி அதிபராகி இணைந்து பாடசாலையின் சிறப்பான முகாமைத்துவத் திறனால் பலவகையிலும் பாடசாலை வளர்ச்சி பெற உழைத்தவர். - இலங்கை அதிபர் சேவை தரம் I, இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLPS I, SLEAS) போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தமையால் தொடர்ந்து அதிபராகி இந்துக்கல்லூரிக்கென முகாமைத்துவ முறைமையை உருவாக்கி (System Mgt) இயங்கச் செய்தமையால் அது இன்று வரை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. ஒரு முறைமை முழுமையாக செயற்படும் போது இவ்வித முரண்பாடுகளுக்கும் இடமின்றியும் பக்கச்சார்பின்றியும் வெளிப்படையான (Transperance) தன்மையும் இந்துக்கல்லூரியை இன்றும் மாவட்டத்திலும், மாகாணத்திலும் ஏன் அகில இலங்கையிலும் நற்பெயரைப் பெற்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு திரு.தண்டாயுதபாணி அவர்களின் (System Management) முகாமைத்துவ முறைமை காரணம் என்பதை எல்லோராலும் உணரக் கூடியதாயும், ஏற்றுக் கொண்டதாயுமுள்ளதை அறிய முடிகின்றது. ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு முன்மாதிரியாகவும், அவர்களுக்கு பல வகையில் முகாமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளை வழங்குவதோடு அவர்களின் பாடசாலை நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்கும் பண்புள்ளம் கொண்டவர்.

ஆசிரியர்கள் அதிபர்களின் அமோக ஆதரவுடன் அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராகி தொழிற்சங்கவாதியாக ஆசிரியர் அதிபர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வெற்றியீட்டியதோடு அதிபர் சேவை (SLPS), இ.க.நி.சேவை (SLEAS) போட்டிப்பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கு பயிற்சி வகுப்புகளை நடாத்தி ஆசிரியர்களின் பதவி உயர்வுக்காக உழைத்தவர்.

கல்வி நிர்வாக சேவையாளர் என்பதால் பதவியுயர்வு வழங்கப்பட்டு வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையேற்றார். இவ்வலயம் வடக்கு கிழக்கில் மிகவும் பின்தங்கிய வலயமாக காணப்பட்டது. சிறந்த முகாமையாளருக்கான பணி இருக்கும் நிலையை அறிதல், தேவைகளை இனங்காணல், திட்டமிடல் முதலான முகாமைத்துவ செயற்பாட்டில் முதலாவதாக அங்குள்ளவர்களையும் பிரதேச கல்வியாளர்களையும் இணைத்து இரு நாட்கள் கல்வி மகாநாடு நடாத்தி துறைசார் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கச் செய்து திட்டமிடலை அங்கிருந்தே ஆரம்பித்தார். இதன் பயனாக தற்காலிகமாக வவுனியா/காமினி வித்தியாலயத்தில் இயங்கிய வலயக்கல்விப் பணிமனை புதிய சகல தேவைகளையும் நிவர்த்திக்கக் கூடியதாக கட்டிடத் தொகுதியை வலயத்தின் மத்தியில் நிறுவச் செய்தார். இனங்காணப்பட்ட நலிவுகளை படிப்படியாக சிறந்த ஆளணி முகாமைத்துவத்தினூடாக நிறைவு காணக்கூடியதாய் அமைந்தது. அங்கும் சிறந்த முகாமைத்துவ முறைமையை உருவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக கடமையேற்று ஆசிரியர்களின் நீண்ட கால பிரச்சனைகளை தீர்க்கக்கூடிய வாய்பாய் அமைத்தமை குறிப்பிடத்தக்கது. மாகாணக்கல்விப் பணிப்பாளராகி மாகாணத்தின் பலவகை கல்வி அபிவிருத்திக்கு துணை புரிந்ததோடு கல்விச் சமூகத்தின் ஒட்டுமொத்த பாராட்டுக்களைப் பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளராக திகழ்ந்தார். பிரதிச் செயலாளராகி மாகாணக்கல்வி அமைச்சை அலங்கரித்த பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். மாகாணத்தமிழ்மொழித்தினம் முதலான பல விடயங்களை செய்து பாராட்டுக்களை பெற்றுக் கொண்டவர்.

அதிபராக இந்துக்கல்லூரியில் கடமையாற்றுகையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்காலங்களில் பாதிக்கப்பட்ட கிராமப்புற பாடசாலைகளுக்கு மிக அத்தியாவசிய கற்றல் உபகரணங்களையும் பாடசாலையின் இயக்கத்திற்கு தேவையான உதவிகளை தமது பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து வழங்கினார். அத்துடன் திருகோணமலை பாடசாலைகளின் ஆண் மாணவர் விடுதி இல்லாத போதும் கிராம்புற மாணவர்கள் திருமலையில் தங்கி கற்க முடியாத சூழ்நிலையில் வகுப்பறைகளை இரவு வேளைகளில் விடுதிகளாகப் பயன்படுத்தி பல மூதூர், ஈச்சலம்பற்று போன்ற பிரதேச பிள்ளைகளின் உயர்தர வகுப்புகளுக்கு கற்க இடமளித்தமை இவரது தற்துணிவான செயற்பாடாகும். அம்மாணவர்கள் இன்று பட்டதாரிகளாகி ஆசிரியர்களாகவும் பல உயர் பதவிகளிலிருந்தும் அப்பிரதேசங்களுக்கு பணிபுரிகின்றார்கள். அன்று அந்த உதவி கிடைக்கப்பெற்றிராவிட்டால் அவர்களின் உயிருக்கே உத்தரவாதம் இல்லாத வகையில் இவர்களை அப்பெற்றார் இழக்க வேண்டி ஏற்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறையில் மேலும் பல அனுபவங்களாக :

இந்தியாவின் தேசிய கல்வி நிறுவனத்தில் NIEPA – New Delihi இல் முகாமைத்துவ பயிற்சியும் பெற்றார். அவ்வேளை லண்டனின் Oxford பல்கலைக்கழகம் முதலான உயர் பல்கலைக்கழகங்களிலும் தமது களப் பயணத்தின் போது கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர். மேலும் மாகாணக் கல்விப்பணிப்பாளராக இருக்கும் போது அமெரிக்காவில் கல்வியல் சம்பந்தமான கற்கை ஆய்வு விடயங்களிலும் பங்கேற்ற சிறந்த உலகளாவிய கல்வியலாளனாக அனுபவங்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

புலமைப்பரிசில் லண்டன் சென்றிருந்த வேளை இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் சார்பான வரவேற்பும் திருமலை கல்வி நிலை தொடர்பான ஆய்வுக்கருத்தரங்கு நடைபெற்றது. அப்போது மாவட்ட கல்வி நிலை சம்பந்தமாக மாவட்டத்தின் அனைத்து பாடசாலை பழைய மாணவர்களும் ஒன்று கூடிய கருத்தரங்கில் சிறப்புரையாற்றியமையும் ஒவ்வொரு பாடசாலையின் நிலைமைகளை அங்கு அவர்களுக்கு தெளிவாக விளக்கம் அளித்தமையும் போராட்ட சூழ்நிலைக்குள் கல்விச் செல்வத்தை தமிழினம் இழக்காது இருக்க தாம் எடுக்கும் நடவடிக்கைகளை கூறும் போது பலத்த கரகோசத்துடன் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் கனடாவின் தி/இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க அழைப்பின் பெயரில் சென்று அங்கு திரு தண்டாயுதபாணி அவர்களை கௌரவித்தது அன்னாரின் சேவைக்கு கிடைத்த பெருமையாகும். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் மட்டுமல்லாது இக்காலத்தில் தி/ சென்யோசப் கல்லூரி U.K பழைய மாணவர்களும் பிறிதொரு தினத்தில் வரவேற்று பாராட்டி கௌரவித்தமை மாவட்டத்தின் அனைத்து பாடசாலை பழைய மாணவர்களும் ஏகோபித்த கௌரவத்தை வைத்துள்ளார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

PGDE - பட்டபின் கல்வி டிப்ளோமா OUSL திறந்த பல்கலைக்கழகம் NIE தேசிய கல்வி நிறுவகம் முதலியவற்றின் விரிவுரையாளராக இன்றும் ஓய்வு நிலையில் பணி புரிந்து வருகின்றமை பயிலும் ஆசிரியர்களின் பேறு என்றே கூற வேண்டும். சிறந்த அனுபவமும் கல்வித் தகமையும் ஆற்றலும் உள்ள இவரிடம் கற்கும் பேறை பெறும் ஆசிரிய மாணவர்கள் பாராட்டுகின்றனர்.

அதிபராக இருந்த காலம் தொடக்கம் ஏனைய அதிபர்களுக்கான கல்விப் பணிப்பாளர்களுக்கான விரிவுகளை நிகழ்த்தியவர் தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளராக பயிற்றப்பட்டு முகாமைத்துவ செயலமர்வுகளை விரிவுரைகளை நடாத்தி வடகிழக்கு மாகாண பாடசாலைஅதிபர் ஆசிரியர்கள் கல்விப் புலத்தில் உள்ளோர் பயன்பெற்று வந்துள்ளனர்.

சிறந்த ஆசிரியத்துவத்தையும், தலைமைத்துவ பாணியையும் உடைய தொழில் வாண்மைத்துவ வாளரான முன்னுதாரண வழிகாட்டியாக திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்வித்துறை மட்டுமல்லாது சமூக மேம்பாட்டுக்காகவும் அரசியல் சார் துறைகளிலும் பரப்புரைஞனாக திகழ்நதார். குட்டிப் பாராளுமன்றம் என்று அதிகாரபரவலாக்கமென்ற மாவட்ட அதிகாரசபை தோற்றம் பெற்றதை தொடர்ந்து ஓவ்வொரு முன்னெடுப்புகளிலும் பங்குதாரராக தமிழ் மக்கள் ஏற்கும் தலைவனாக தலைமை தாங்கி பல சமூகம்சார் செயற்பாடுகளிலும் பங்குதாரியாக திகழ்ந்த மாமனிதன் சமூகம் ஏற்கும் தலைமகனின் 60 வது அகவையின் மணிவிழா சிறப்பாக அமையவும் தொடர்ந்தும் அன்னார்பணிகள் சமூகம் பெற வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டாயுதபாணி பன்முக ஆளுமையின் தடமிடல்

திரு.சு.ஜெயச்சந்திரன்
முகாமையாளர்,
ஆசிரியர் நிலையம்,
புளியங்குளம்,

திரு.ம.ச.பத்மநாதன்
(முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் - வவுனியா வடக்கு)
முதல்வர், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்

திரு.சிங்காரவேலு தண்டாயுதபாணி அவர்கள் திருகோணமலையினைப் பிறப்பிடமாகக் கொண்டு அங்கேயே உயர்கல்வியைக் கற்று களனி பல்கலைக்கழகத்தின் தன் பட்டப்படிப்பினை மேற்கொண்டு கலைப்பட்டதாரியாக ஆசிரியர் சேவையில் தன்னை இணைத்து கொண்டவர். உலகத் தொழில்கள் அனைத்திலும் தாய்த் தொழிலாக, அறிவுப் பொருளாதாரத்தை வளப்படுத்துகின்ற ஆசிரியத்துவத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நாள் முதல் அதற்கேற்ற பக்குவத்துடன் தன்னை மாற்றிக் கொண்டவர் தான் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள்.

ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப்பணிப்பாளராக, கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக பன்முகப் பணிகளில் தன் பன்முக ஆளுமையின் தம்மிடல்களைப் பதித்தவர்.

ஒரு மனிதனின் வளர்ச்சியில் குடும்பம், சூழல், சமூகம், சகபாடி, ஆசிரியர்கள் ஆகியோரின் வகிபாகங்கள் முக்கியமானவை. இவைகளின் தாக்க விளைவுகளே தனியாள விருத்தியில் நடத்தை, அறிகை, கட்டுகைமானம் என்பவற்றை ஏற்படுத்தும். இந்த மூன்றின் தாக்கங்களும் அவரின் தொழில் வாழ்க்கையிலும் காணப்படும். ஒருவர் தனது வாழ்நாளில் மேற்கொள்ளும் சகல தொழில்களும் தொழில் வாழ்க்கை எனப்படும். திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் தொழில் வாழ்கை ஐந்து வகிபாகத் தன்மைகளைக் கொண்டது.

1) ஆசிரியர்
2) அதிபர்
3) வலயக்கல்விப் பணிப்பாளர்
4) மாகாணக் கல்விப்பணிப்பாளர்
5) உதவிச் செயலாளர்

இவற்றுள் கட்டுரையாசிரியர்கள் இருவரும் இவரைக்கண்டு கொண்டது வலயக் கல்விப்பணிப்பாளர் என்ற வகிபாகத் தன்மைக்குள் தான்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 2004-2006ஆம் ஆண்டு வரையான வலயப்பகுதியில் குறிப்பாக இரண்டரை ஆண்டுகள், வவுனியா வடக்கு வலயத்தின் நான்காவது வலயக் கல்விப்பணிப்பாளராக திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பள்ளி முதல்வர் வகிபாக நிலையிலிருந்து பத்துப் பேர் புடைசூழ வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை தந்தார். வவுனியா வடக்கு கல்வி வலயம் இன்று வரையில் ஏழு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கண்டுள்ள நிலையில் பலரால் அழைத்து வரப்பட்டு பதவியேற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. தண்டாயுதபாணி அவர்களே. இது அவரின் ஆளுமையின் "உறவுநிலை பேணல்" சார்ந்த முகத் தடமிடலாகும்.

"ஆளுமை என்பது ஒருவர் தனக்கேயுரிய முறையில், சூழல் சந்தர்ப்பங்களுக்கேற்ப பொருத்தப்பாடு காணும் தன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணயிக்கும் உள, உடல் அமைப்பு ஆகும்." என Gordon Allport என்பவர் குறிப்பிட்டுள்ளார். இதனைச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களிடம் இத்தகு இயல்புகள் முழுமையாகக் காணப்பட்ட தென்பதாகும்.

உளவியலாளர்கள் ஆளுமையின் கூறுகளை பிரதானமாக ஐந்தாக வகுப்பார்.

1) உறுதியான மனவெழுச்சி ( Emotional Stability)
2) புறமுகமன தன்மை ( Extraversion)
3) சிறந்த மனமுள்ள இயல்பு (Openness)
4) ஒத்துப்போகும் தன்மை (Agreeableness)
5) மனச்சாட்சிக்கிணங்க செயற்படல் (Conscientiousness)

இந்த ஐந்து ஆளுமையின் கூறுகளும் கொண்ட பன்முக ஆளுமை மிக்கவராக அதனை வாழ்நாளில் கடைப்பிடித்து தடமிடல் செய்தவராக திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் செயலாற்றினார்.

வவுனியா வடக்கு வலயத்தில் சேவையும் கடமையும் செய்த காலத்தில் பின்வரும் முக்கிய நிகழ்வுகள் நடந்தேறின. வவுனியா வடக்கு வலயம் மிகவும் பின்தங்கிய வலயமாக அன்றைய காலகட்டத்தில் காணப்பட்டதோடு இரு கூறுகளாக, இரு நிர்வாக ஆளுமைக்குள் சிக்கித் தவித்துத் தாண்டவமாடியது. இரு ஆளுகையிலும் விசேடமான, தனித்துவமான நிலைமைகள், சமூக பொருளாதார ஏற்ற இறக் கங்கள், ஆளணி பங்கீட்டில் சமவாய்ப்பின்மை போன்ற பல இருள் சூழ் மேகங்கள் கவித்திருந்தன. எனினும் இருள்சூழ் மேகங்களின் நடுவே பிரகாசமான வலயமாக வவுனியா வடக்கு வலயத்தினை மாற்றியமைக்க வேண்டுமென்ற பேரவா, விருப்பு இயங்கு நிலைத்தன்மை, தற்துணிவு, முடிவெடுக்கும் ஆற்றல் என்பன தண்டாயுதபாணி அவர்களிடத்தில் சிறப்பாக காணப்பட்டன. குறிப்பாக,

1) வவுனியா வடக்கு வலயத்தின் கல்வி அபிவிருத்தி மாநாடு
2) பெரும்போர் எனப்படும் (Big March) பாடசாலைக்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி
3) ஆசிரியர் வாண்மை விருத்தி தினம்
4) தமிழ்மொழி தின விழா
5) "அறிதல்" செய்திமடல்
6) கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் புதன்தோறும் கல்விசார் ஆளணியினரால் சமர்ப்பிக்கப்படும் "கல்விச் சிந்தனை"

ஆகியன மிகவும் குறிப்பிடவேண்டியதும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் வரலாற்றுப் பெருமை வாய்ந்த தடமிடல்களுமாகும். மேற்குறித்த நிகழ்வுகள் தான் இன்று வவுனியா வடக்கு கல்வி வலயம் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் கால்கோள் இட்டவைகளாகும். இது அவரின் பன்முக ஆளுமையின் ஒரு குறித்த வகிபாகம் எனலாம்.

திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்வியியல் முதுமானிப்பட்டதாரி, தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையாளருமாவார். அத்துடன் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்திச் செயற்பாடுகளில் தேசிய கல்வி நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்பவற்றோடு சேர்ந்தியங்கும் ஒரு மிகச்சிறந்த வளவாளர். இதன் பன்முகப் பார்வையினை வவுனியா வடக்கு கல்வி வலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள் அவரின் விரிவுரைகளின் மூலம் புடம் போடப்பட்டவர்கள். ஆசிரிய நிலையத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு வாண்மை அமர்வுகளில் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் வளவாளராகச் செயற்பட்டுள்ளார். குறிப்பாக,

1) ஆசிரியர்களுக்கான முன்சேவைப்பயிற்சி
2) Swap - செயற்றிட்டம்
3) ESDFP - செயற்றிட்டம்
4) தரமான உள்ளீடுகள்
5) நேர் முகாமைத்துவம்
6) அதிபர் திறன்விருத்தியும் முகாமைத்துவமும்

போன்ற பல்வேறு செயற்கூறுகளின் வளவாளராகச் செயற்பட்டு தனது அறிகை ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். வவுனியா வடக்கு வலயத்தின் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியர் தொடர்பில் அவர் கொண்டிருந்த கருத்து முக்கியமானது.

**"எனக்கு நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் வேண்டாம். கற்பித்தல் திறன் மிக்க ஆசிரியர்களே தேவை"** என்பதாகும்.

உண்மையில் கற்பித்தலியல் என்பது நிபுணத்துவத்தில் தங்கியிருப்பதில்லை. கற்பித்தல் திறனிலேயே தங்கியுள்ளது. என்பது இங்கு முக்கியமானது. அதிபர்கள் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தார்.

**"நல்ல மனிதராக இருந்து பயனில்லை; நல்ல அதிபராக இருக்கப்பழகுங்கள்"**

இதற்குள் அவரின் ஆளுமையுள்ள முக்கிய கூறுகளில் ஒன்றான "திறந்த மனது"டன் ஆரோக்கியமான கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் காணப்பட்டது. அது மட்டுமன்றி நல்ல அதிபராக இருக்கப்பழகுங்கள் என்பதனூடாக வெளிப்படுவது.

1) முகாமைத்துவம்
2) நிருவாகம்
3) நடத்தைப்பாங்கு
4) அர்ப்பணிப்பு/ சேவை
5) முடிவெடுக்கும் ஆற்றல் திறன்

ஆகியன நல்ல பள்ளி முதல்வரிடத்தில் காணப்படுதல் அவசியம் என்பதையே அவரின் இக் கூற்று காட்டுகின்றது.

திரு.சி.தண்டாயுதபாணி அவர்களிடத்தில் நாம் கண்ட இன்னொரு முக்கியமான ஆளுமை கூறு "ஆரோக்கியமான கலந்துரையாடல்" வாகனச் சாரதி முதல் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் வரையில் என்றும், எப்போதும் ஆரோக்கியமான, மற்றவரின் மனம் நோகா வண்ணமாகவே கலந்துரையாடல்கள் காணப்பட்டன. மென்மையான பேச்சு எனினும் அதற்குள் ஆணித்தரமான தற்துணிவான சிந்தனையும் ஆழமான அர்த்தங்களும் காணப்பட்டன.

நிர்வாகி அல்லது திணைக்களத்தலைவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய மிக அவசியமான ஆளுமைப்பண்பு "தன்சார்ந்த அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் மீதான கணிப்பும் பாதுகாப்பு உணர்வும்" இத் திறன் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களிடத்தில் மிகச் சிறப்பாக காணப்பட்ட ஆளுமை வெளிப்படுத்துகையாகும்.

விருந்தோம்பல், வரவேற்றுக் கருத்தாடல் செய்தல், நாசூக்காக கருத்தாடலை முன் வைத்தல், படித்தவர்களை, பெரியார்களை மதித்தல் என்பனவும் சிறப்பாக விழுமியப் பண்புகளாகக் காணப்பட்டன. குறிப்பாகக் கூறவேண்டிய விடயம் ஒன்றுள்ளது. தகைசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுசிலைப் பேராசிரியர் (அமரர்) கா.சிவத்தம்பி அவர்களோடு மாணவ உறவு எமக்குள் இருந்த வேளை 2005 இல் கிளிநொச்சியில் கல்வி மகாநாடொன்றுக்கு அழைத்து வந்த போது வவுனியா வன்னி விருந்தகத்தில் சில மணிநேரம் தங்கியிருந்தோம். அப்போது தொலைபேசியில் கூறினோம். பேராசிரியர் கா.சிவத்தம்பி சேர் இங்குள்ளார் என்று உடனே வந்து அவ்விடத்தில் கருத்தாடல் செய்து அவரின் "பாதங்களைத் தொட்டு வணங்கினார்" நாம் மெய் சிலிர்த்து நின்றோம். "தண்டா நல்லாயிரு" என்று பேராசிரியர் கூறிய வார்த்தையும் இன்றுபோல் எம்முள் நிழலாடுகின்றது.

2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போதும் இவரின் "உறவு மேம்பாடு" தொடர்பான ஆளுமையின் வீச்செல்லையை காண முடிந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடு விடாகச் சென்று ஆறுதல் வார்த்தைகளையும் தன்னால் இயன்ற உதவிகளையும் வழங்கினார்.

உண்மையில் ஒரு மனிதன் இம் மண்ணின் எவ்வளவு காலம் வாழ்கின்றான் என்பதல்ல முக்கியம். எப்படி, எவ்வாறு வாழ்ந்தான்; அவன் இம்மண்ணிற்கு தடமிடல்களாக எவற்றை விட்டுச் சென்றான் என்பதே முக்கியமானதாகும். இவ்வகையில் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களிடத்தில் நாம் கண்டவைகள் அதிகம் அவை எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடமுடியாது. மனதுக்குள்ளும் மறைபொருளாகவும் உள்ளவை அதிகம் அவற்றைக் கூறும் காலமும் தொலைவில் இல்லை அதுவும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தான்.

எனவே பன்முக ஆளுமையின் தடமிடல்களாக நாம் அவரூடாகக் கற்றுக் கொண்டவைகளாக;

1) சமூக இணக்கம்

2) சரளமாகப் பழகும் இயல்பு

3) மற்றவர்களின் கருத்தை உணரக்கூடிய ஆற்றல்

4) இணங்கு தன்மை கொண்டமை.

5) தலைமைத்துவ பாங்கு

6) எதிர்ப்பற்ற இயல்பு

7) கவனமாகச் செயற்படும் இயல்பு

8) முன்யோசனை கொண்ட செயற்பாடு

9) சமாதானம் மற்றும் அமைதி

10) நம்பகமான நிதானமான மனிதர்

ஆகவே திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் காலம் வவுனியா வடக்கு வலயத்தில் "அறிகை மாற்று நிலைக் காலம்" எனக் குறிப்பிடலாம். நிதர்சனமாக நோக்கின் ஒரு நடப்பியல் சார்ந்த மனிதனாக, யதார்த்தபூர்வமான செயற்பாடுகளுக்கு முதன்மை கொடுத்து ஓடுக்கப்பட்ட மக்களின் விடுதலை, கல்வி விடுதலையே என்பதனை தாரக மந்திரமாகக் கொண்டு இயற்குநிலையோடு அர்ப்பணிப்பும் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு செயற்பட்டவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள்.

வாழ்வும் வளமும் பெற்றுயர்க........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. S. Thandayuthapani – A role model

**T. Kulaveerasingam**
**An old boy**

It is with pleasure that I contribute this message to felicitate Mr.S. Thandayuthapany for his invaluable service to T/RKM Koneswara Hindu College as an old boy, for well over two decades and for his services to the community at large as an education administrator in the Eastern Provincial Council, besides his services in socioeconomic endeavours for the uplift of conflict affected people of the Eastern Province.

Human life has a purpose, a noble purpose. It is often confused and mistakenly identified. Man is bestowed with ego and intelligence, undoubtedly to promote his personal efforts and endeavours, not only to survive as a fittest in the struggle for existence but also to be a useful limb of the society. However, these faculties are put to optimum use mostly for personal gains. Man has a duty or dharma by the society he lives in. While in society, one cannot lead an isolated selfish life forgetting or ignoring his dharma to the society. When a part of one's limb sustains an injury, the whole body feels the pain and the entire body works in perfect coordination till the pain is alleviated. The body does not dismiss the injury as only a part of the limb is affected. So also is man, as a limb of the society, cannot ignore or dismiss his responsibility, but lend a helping hand to the society in whatever way possible. This dharma was followed by Mr. Thandayuthapany by offering his services to the College that brought him up and worked day in and day out, sacrificing his time and energy for its overall development. Service to an educational institution is service to the community.

Swami Vivekananda defines education as "The manifestation of the perfection already in man" and goes on to further define as "The highest education is that which does not merely give us information but makes our life in harmony with all existence". As we know, education today is invariably used merely for living and not for life. Those in the teaching profession should have this concept in their minds and try their best to guide the students to achieve this goal at least to whatever extent possible, because our present educational system is not based on this concept for want of a Holistic Educational Philosophy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Speaking from experience, the management of RKM schools, prior to take over by the State, apparently expected their teaching staff to keep this concept at the back of their minds in moulding children. This fact is evidenced by the life style, the aptitude for selfless service, feeling for others, caring and sharing etc. demonstrated by many old boys of RKM schools. Mr. Thandayuthapany is one such with these rare qualities. His exemplary life deserves to be emulated.

Mr.Thandayuthapany rose up in his carrier so quickly because of his devotion to duty and dedication. He started as a teacher and retired as Deputy Secretary. Ministry of Education, Cultural Affairs and Sports, Eastern Province.

I have had the opportunity of continuing to serve as the Secretary of the School Development Society during the tenure of office of Mr. Thandayuthapany as Principal also. Despite my heavy official responsibilities and engagements in various service activities, I gave him my fullest support and cooperation for two reasons – one as an old boy myself, sincerely interested in the welfare of the College and the other being Mr. Thandayuthapany's dedicated service with the interest of the College in his heart. It was during his period as Principal that the College was able to officially take over the College grounds and utilize same exclusively for College purposes. This was a long standing problem for the College and I had a key role to play in finding a permanent solution to the problem with the kind assistance of the then Hon. Governor of the Northern and Eastern Provinces.

May the Almighty bless Mr. Thandayuthapany with long life and good health to continue his service to humanity.

I wish him all the best in his personal life, in his carrier and in his service activities.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சி. தண்டாயுதபாணி ஒரு சகாப்தம்

ஆர். சுப்ரமணியம்
மாவட்ட முகாமையாளர்(ஓய்வு நிலை)
இலங்கை வங்கி.

கல்விச் சேவையில் காணப்படும் உயர்கல்வி பட்டங்கள், மேல் நிலைப் பதவிக் கௌரவங்கள் பலப்பல. பெரும்பதவிகளில் இருப்பதிலும், வகிப்பதிலும் ஏற்படும் அனுபவங்களை ஓப்பிட்டு நோக்குகையில், நல்லதோர் அதிபர் பதவியில் அனுபவிக்கும் இன்பசுகத்திற்கு இணையாகிவிடுமா என்ன? மாணவ சமூகத்தின் வளமான எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் தெய்வத்திருப்பணியாக கல்விச் சேவை கருதப்படுகின்றது. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்கின்ற தத்துவமும் இதுதானோ?

திரு.தண்டாயுதபாணி அவர்கள் கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய 14 வருட காலப் பகுதியை அசை மீட்டுப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும். அதிபராக பணியாற்றிய காலத்தில் திருக்கோணமலை வாழ் பல்வேறு சமூகங்களின் மத்தியில் அவருக்கு ஒரு உன்னதமான மதிப்பும், மரியாதையும், அந்தஸ்த்தும், கௌரவமும் இருந்தது. என்னவோ மறுக்கமுடியாத வரலாறாகும். மேலாக, வடக்கிலோ, கிழக்கிலோ, கல்விச் சமூகத்திலோ, ஏனைய துறைசார்ந்த சமூகத்திலோ தண்டாயுதபாணி என்ற நாமத்தை அறிந்திராதவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர்.

சேவைப் பாராட்டு விழாக்காணும் கதாநாயகன் தண்டாயுதபாணி அவர்களின் கல்விப் பணிமாட்சி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்கால சகாப்தம் என்று கூறுவதே சாலப் பொருத்தமுடைத்து.

உயர்ந்த கல்வித் தகமையை பெற்றிருந்தார். கணீர் என்ற குரல் வளம், அப்பழுக்கற்ற நேர்மை, கறைபடியாத வெள்ளை விரல்கள் நிலை தளம்பாத ஆளுமை, தூர நோக்கோடு கூடிய குறிதவறாத இலட்சிய இலக்குகள். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய நெஞ்சுரம் வியக்க வைக்கும் விழுமியங்கள் இயற்கையாக தன்னகத்தே கொண்டிருந்தார்.

அறிவு சால் வழிகாட்டலால் உயிரினும் மேலான ஒழுக்கத்தை மாணவ சமூகத்தில் ஓம்பச் செய்தார். கல்லூரியின் கல்வி விருத்தியும், மேம்பாடும் அவரது ஆத்ம ராகமாக இருந்தன. கல்லூரியின் ஏற்றத்திற்கு ஏணியாக நின்று அல்லும் பகலும் அயராது உழைத்தார். கல்லூரியின் வளர்ச்சியே அவரின் உயிரிலும், உதிரத்திலும் உறைந்து நின்றது.

திரு.சி.தண்டாயுதபாணி தனது தலைமைத்துவ ஆளுமைத் திறனால், வினைத்திறன் மிக்க ஆசிரிய மணிகளை கல்லூரியில் களஞ்சியப்படுத்தினார். ஆசிரிய சமூகத்தின் வாண்மை வளர்ச்சி கண்டது. மாணவ சமூகத்தின் ஒழுக்கசீலம் ஓங்கி உயர்ந்தது. அதன் தாக்கமாக திருக்கோணமலை சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வழி வகுத்தது. கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டோடு, மாணவ சமூகத்தின் வளர்ச்சி கண்டதிறனும் ஒருங்கிணையவே கல்லூரி மாகாண மட்டத்திலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று முன்னிலை வகித்தது. பெயரும், புகழும், பெருமாரி பொழிந்து கல்லூரியின் வரலாற்றில் புதியதோர் சகாப்தம், "தண்டாயுதபாணி சகாப்தம்' உதயமாகியது. கல்லூரியின் கால ஓட்டத்தில், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் பல அவ்வப் போது இயங்கியிருக்கின்றன. அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் என்று கொண்டுவரப்பட்டதோ அதன் பின்னரே இவைகள் உயிரோடும், உணர்வோடும் இயங்க ஆரம்பித்தன. OBAயும் SDSம் சாதனை படைக்கும் வலிமை சான்ற சங்கங்ககளாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. கல்லூரியின் வெளிநாட்டு OBA களோடு நேசக்கரம் நீட்டி இணைய வைத்த சிருஷ்டிக் கர்த்தா என்ற பெருமை திரு.சி.தண்டாயுதபாணி அவர்களையே சாரும்.

கல்லூரி கண்ட அரும் சாதனைகளில் திரு.சி.தண்டாயுதபாணியின் வகிபாகம் இமயம் போல் உயர்ந்து நிற்கின்றது. விரல் விட்டு எண்ண முடியாத சாதனைகள் வானத்தை முட்டும் மாடிக் கட்டிடங்கள், வித்தகர்க்கும், பிள்ளைகட்கும் விக்கனங்கள் வாராமல் காக்க விநாயகர் ஆலயம், வெவ்வேறு விளையாட்டுக்களை சமகாலத்தில் நடாத்தவல்ல விசாலமான விளையாட்டு மைதானம் என்பன சமய, சமூக, பண்பாட்டு, காலாசாரத்திற்கு அவர் ஆற்றிய அரும் பெரும் சேவைகட்டு என்றும் கட்டியம் கூறி நிற்க வல்லன.

கல்விச் சேவைக்கு அப்பால் அவரது தனிமனித சேவை, சமூகத்திற்கான அர்ப்பணிப்புகள் எண்ணில் அடங்காதவை.

அதிபர் பல துறைகளில் தனது விவேகத்தை, வினைதிறன் மிக்க ஆற்றலை வெளிப்படுத்த கல்லூரியை களமாக அமைத்து தடம் பதித்துக் கொண்டவர். அவர் வகுத்த அடிச்சுவட்டை தொடர்ந்து வாழையடி வாழையென வரும் அதிபர்கள் கல்லூரியை வளர்த்தெடுப்பது வரலாற்று கடமையாகும்.

அதிபருக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள் வாழ்க பல்லாண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகத் துளிகள்

வ. கந்தசாமி
(ஓய்வு பெற்ற அதிபர்)
வந்தாறு மூலை

பாராட்டு விழாக் காணும் நாயகனுக்கு என் ஞாபகத்துளிகள் சிலவற்றை அள்ளித் தெளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். திரு.சிங்காரவேலு - தண்டாயுதபாணி அவர்கள் மட் / ஏறாவூர் அலிகார் மகாவித்தியாலத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் போது அவரைப் பற்றி அறிந்திருந்தாலும் 1975 ஆம் ஆண்டு களனிப் பல்கலைக்கழகத்தில் நேரடியாகக் கண்டபோது தன் பெயருக்குப் பொருத்தமானவராகவே இருக்கின்றார். என்பதை உணர்ந்து கொண்டேன்.

அன்று பல்கலைக்கழகத்தில் எம்மிடையே ஏற்பட்ட நட்பு இன்று வரை நீடித்து நிலையாகவே உள்ளது. பல்கலைக்கழகத்தில் ஒரு முன்மாதிரியான ஆசிரியத் தொழிலுடன் கூடிய மாணவனாக இருந்தார் நான் ஆசிரியத் தொழிலுக்குள் புகுவதற்கு மூல காரணமாக இருந்தவரே இவர் தான். பூவுடன் சேர்ந்த நாரும் மணம் வீசும் என்பதற்கிணங்க இவருடன் பழகியதால் நானும் சிலகாலம் கல்விப் புலத்தில் பலராலும் மதிக்கத் தக்க அதிபராகச் செயற்பட்டேன். திரு.சி. தண்டாயுதபாணி அவர்களிடம் எல்லோரையும் மதித்து நடக்கும் பண்பு, பிறருக்கு உதவுதல், தானறிந்த நல்ல விடயங்களை மற்றவருக்கும் பகிர்ந்து கொள்ளல், கடினமான விடயங்களையும் இலகுவாகச் செய்து முடிக்குந் திறன் , நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகியன இவருக்கே உரித்தான சிறந்த குணங்களாகும் நாங்கள் இருவரும் எங்களது பல்கலைக்கழககாலத்தில் ஆசிரியராக அவர் மட் / கொ ஹமீத் அல் குசைனியா மகா வித்தியாலயத்திலும் நான் மட் /கொ/ புனித செசெபஸ்தியன் மகா வித்தியாலயத்திலும் கடமையாற்றினோம் அக்காலத்தில் காலஞ் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ. தங்கத்துரை அவர்களுடனும் பல்கலைக்கழக விடுதியிலும் நாங்களிலிருவரும் ஒன்றாகவே இருந்தோம். அந்நாட்களில் நாடகங்கள் நடித்தல் கல்விச் சுற்றுலாக்கள், ஆலய தரிசனங்கள், திரைப்படம் பார்த்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு மிகவும் சந்தோசமாகக் காலத்தைக் களித்தமை. இன்றும் என் நினைவை விட்டகலாதிருக்கின்றது.

களனி. பல்கலைக்கழகத்தில் இவர் தனது வாழ்க்கைத் துணைவியான இரத்தினம் - புவனேஸ்வரியைத் தேர்ந்தெடுத்து நாமிருவர் நமக்கிருவர் என்பதற்கிணங்க இரு குழந்தைச் செல்வங்களையும் பெற்று அவர்களையும் நல்வழிகாட்டி வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் மனிதருள் மாணிக்கமாவார். திருகோணமலையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் தனது விடாமுயற்சியின் பயனாக படிப்படியாக, ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் , வலயக்கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் பிரதிச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் ஆகிய உயர் பதவிகளை வகித்து தற்போது ஓய்வு பெற்றிருந்தாலும். இவரது தோற்றத்தையும், செயற்றிறன்களையும் கண்ணுற்று G.T.Z நிறுவனம் தங்களது நிறுவனத்திற்கும் இவரது சேவையைப் பெற் வேண்டும். என்ற நோக்குடன் இவரைக் கவர்ந்திழுத்துள்ளது. இவற்றிற்கெல்லாம் எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகள் இவருக்குக் கிடைப்தோடு இன்னும் பல்லாண்டு காலம் பார் போற்ற வாழ வேண்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவின் அழகும் நின்பணிமுன் குறைவே........

அதிபர்.இ.புவனேந்திரன்
இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

திருக்கோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் இலங்கையிலுள்ள முன்னணிக் கல்வி நிருவாகிகளில் ஒருவர். இத்தகைய ஒருவரை பாராட்டிக் கௌரவிக்க ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் திருக்கோணமலைச் சமூகத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கும் இம்முயற்சி மிகவும் ஒரு வரவேற்கத்தக்க செயற்பாடாகும். அத்துடன் அதனையொட்டி வெளியிடப்படும் மலரும். அதன் உள்ளடக்கமும் எமது கல்லூரிக்கு மேலும் ஒரு பெருமைசேர்க்கும் ஒரு விடயமாகும். ஒருவருடைய வாழ்நாளிலேயே அவர்தம் சேவையைப் பாராட்டுவதும், கௌரவிப்பதும்தான் உண்மையில் மகத்தான சேவைசெய்து மாண்புடன் ஓய்வு பெறுபவர்களுக்கு நாம் கொடுக்கும் அதியுயர் கௌரவமாகும்.

ஒரு பாடசாலையின் நடவடிக்கைகளில் சமுதாயத்தின் பங்களிப்பானது, பாடசாலைச் சமுதாய உறவை மேம்படுத்துவதுடன், கல்வித் தரத்தையும் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் வெற்றியைத் தீர்மானிக்கும் ஒரு முக்கியகாரணியுமாகும். இந்தவகையில் இந்துக் கல்லூரியின் மேம்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சக்திகளாக விளங்கும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஒன்றாகச் சேர்ந்து முன்னெடுக்கும் இப்பாரிய முயற்சியை, அதிபர் என்ற ரீதியில் நான் மனப்பூர்வமாகப் பாராட்டுவது டன் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு ஆசிரியராக, அதிபராக, கல்வி நிர்வாகியாக இவர் தனது வாழ்க்கைகளில் எடுத்த பாத்திரங்களின் போது அவ்வப்போது தனக்கே உரித்தான அமைதியான பாணியில் அனைவரையும் அரவணைத்து மனங்கோணாது சேவைசெய்த ஒரு பண்பாளர். எதனையும் இலகுவாக எடுத்து கச்சிதமாகக் கருமமாற்றும் ஒருவர். இவரது சேவைக் காலத்தில் இந்துக் கல்லூரி பெற்ற வளர்ச்சி நிலைகள் பல. கல்லூரியின் வினைத்திறனை அதிகரித்து அதனூடாக கல்வி அபிவிருத்தி சமூக அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்த இந்துக் கல்லூரியின் ஆசிரிய சேவையை உயிர்த் துடிப்புள்ளதாக மாற்றியவர். ஆசிரியர்களின் பயன்பாட்டுத்திறன்களை உயர்ந்த அளவுக்கு கொண்டுசென்று அவர்களின் வினைத்திறனை அதிகரிக்க பல்வேறு நுட்பமுறைகளையும், கருத்தியல் ரீதியான செயற்பாடுகளையும் மேற்கொண்டு அதன்மூலம் இந்துக் கல்லூரிக்கென்று ஒரு இலட்சியச் சமூகத்தினை உருவாக்கியவர்.

மேலும். இவரது வினைத்திறன் கொண்ட தலைமைத்துவம் காரணமாக இந்துக் கல்லூரியின் மேம்பாடானது பௌதிகவளங்கள், கலைத்திட்டம் அதற்கு மேலாக இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என்ற ரீதியில் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. ஒரு பாடசாலைச் செயற்பாடுகளின் ஒன்றிணைக்கப்பட்ட பகுதியே இணைப்பாட விதானச் செயற்பாடுகளாகும். ஆதலால் இந்துக் கல்லூரியின் பாடஏற்பாட்டுப்பணி மற்றும் அதன் முறையான ஒழுங்கமைப்பு தொடர்பாக அதிக கவனத்துடனும், தொலைநோக்குச் சிந்தனையுடனும் செயற்பட்டு அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டிலுள்ள பழைய மாணவர்கள், பெற்றார்கள், நலன் விரும்பிகள் என்போருடன் முறையான உறவுகளைப் பேணி கல்லூரியின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மற்றும் அவற்றிற்கான உட்கட்டமைப்புகள் மற்றும் பௌதிக வள வசதிகளை இந்துக் கல்லூரிக்குப் பெற்றுக்கொடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண மிஷன் அமைப்பினால் தோற்றுவிக்கப்பட்ட இந்துக் கல்லூரிக்கென்று பாடசாலைச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரியமாகக் கையளிக்கப்படும் நியமங்கள், பெறுமானங்கள், நம்பிக்கைகள், விழாக்கள், மதவைபவங்கள் என்று அதற்கேயுரித்தான ஒரு கலாச்சாரக் கட்டமைப்பு உள்ளது. இதனைச் சற்றும் விலக விடாமல் தொடர்ந்து கட்டிக்காத்து அதனை மெருகூட்டி இந்துக் கல்லூரியின் கலாச்சாரத்தை சிறப்பாகப்பேணி சமூகமதிப்பைப் பெற்ற ஒரு அதிபராக திரு. தண்டாயுதபாணி அவர்களை நாம் காண்கின்றோம்.

வினைதிறன்மிக்க கற்போனாக மாணவர்கள் உருவாகவேண்டுமெனில் அவர்களின் குறிப்பான திறன்களை வழங்கும் இடங்களாகப் பாடசாலைகள் திகழவேண்டுமென்பதுடன் அதற்கான அக, புறச் சூழல்களை பாடசாலைகள் கொண்டிருப்பதுடன் அதிக கற்றல் வாய்ப்புகளையும் பாடசாலைகள் வழங்கவேண்டும். இந்தவகையில் இந்துக்கல்லூரியின் வெளியீடுகள் எப்போதும் விளைதிறன் உள்ளவைகளாக இருத்தல் வேண்டுமென எண்ணி, அதற்கேற்ற வகையில் தீர்மானங்களை மேற்கொண்டு, உரிய காலப்பகுதியில் அவற்றை நிறைவேற்றுதற்கேற்ற வகையில் அதிபர்களுக்கான நடிபங்கினை வினைத்திறனுடன் பயன்படுத்திய ஒரு சிறப்புமிக்க முகாமையாளராக விளங்கியவர். இவரிடம் காணப்பட்ட சிறந்த முகாமைத்துவத் திறன்கள் காரணமாக ஒவ்வொரு ஆளணியினரதும், தொழில்சார் பெறுமதி அடையாளத்தினையும் இனங்கண்டு அவற்றினை இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்தியவர்.

திருகோணமலை மாவட்டத்தில் வருடாவருடம் அதிகமான பொறியியலாளர்கள், மருத்துவர்கள், மற்றும் வணிக முகாமைத்துவ கலைத் துறை பட்டதாரிகள் ஆகியோர் இந்துக் கல்லூரியூடாகவே உருவாக்கப்படுகின்றனர். இதன்காரணமாக இந்துக் கல்லூரியில் முதலாந்தர அனுமதி, மற்றும் ஏனைய வகுப்புகளுக்கான அனுமதியின்போது கடுமையான போட்டியும், அழுத்தமும் காணப்படுகின்றது. இவ்வாறு இந்துக் கல்லூரியின் கற்றல் கலாச்சாரத்தில் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் நம்பிக்கை. உத்வேகம் என்பனவற்றை ஏற்படுத்தி அதனை ஒரு முன்னணிப் பாடசாலையாக உருவாக்கத் தன்னாலான பங்களிப்பினை வழங்கியவர்.

எமது கல்லூரியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது வலய கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று வவுனியா வடக்கிற்கு சென்றிருந்தார். இங்கே விரியத்தொடங்கிய அவரின் கல்விப்பணி பின்னர் கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளராக, கல்விப்பணிப்பாளராக பிரதிக் கல்விச் செயலாளராக பல பதவிகளையடைந்து தன்னாலியன்ற அர்ப்பணிப்புடன் கூடிய கல்விச்சேவையினை நல்கி நன்மதிப்பினைப் பெற்றிருந்தார். தனியே ஒரு கல்வியதிகாரியாக மட்டும் தன்னை வெளிக்கொணராது உணர்வுகளுக்கு மதிப்பளித்து பணியாற்றும் ஒரு பண்பாளராகவும் அன்னார் திகழ்ந்தார் என்பதனை யாரும் மறந்துவிட முடியாது.

இந்தவகையில் இந்துக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கும், வினைதிறனுக்கும் வடகிழக்குக் கல்விச் சமூகத்திற்கும் சிறந்ததொரு தலைமைத்துவத்தினை வழங்கி அதன் முன்னேற்றத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ள எமது முன்னாள் அதிபர் அவர்களுக்கு இந்துக் கல்லூரியிச் சமூகத்தால் முன்னெடுக்கப்படும் இப் பாராட்டு விழாவுடனான மலர் வெளியீட்டினை காலத்தின் கட்டாய தேவையாகவே நான் கருதுகின்றேன். தெளிந்த இலக்குடனும் நிதானத்துடனும் அவர் ஆற்றிய பணிகளை மனதார வாழ்த்தி இம் முயற்சிக்குப் பக்கபலமாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரிய தண்டாயுதபாணி

நடராஜா அனந்தராஜ்
நகர பிதா. வல்வெட்டித்துறை நகரசபை

தண்டா என்று நண்பர்களாலும், தண்டா சேர் என்று கல்விச் சமூகத்தினராலும் அன்பாக அழைக்கப்பட்டு வரும் எனது மதிப்புக்குரிய நண்பர் திரு.தண்டாயுதபாணி அவர்களை முதலில் புகழ் பூத்த கல்லூரியான திருக்கோணமலை இராமகிருஸ்ண மிஸன் இந்துக் கல்லூரியில் தான் சந்தித்தேன்.ஒரு சிறந்த அதிபருக்குரிய ஆளுமையும் ஆற்றலும் கொண்டவராக அவரை நான் பார்த்தபொழுது அதிபர் பதவிகள் இவரைப் போன்றவர்களால் தான் பெருமைப்படுத்தப் படுகின்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.

ஒரு சிறந்த தலைமைத்துவத்திற்கு இருக்க வேண்டியப பின்வரும் பண்புகளை அவரிடம் கண்டபொழுது இன்னும் ஒரு தடவை நான் அதிபராகப் போனால் என்ன என்றுகூட நினைத்துப் பார்த்தேன்.

- ❖ மற்றவர்களின் கருத்துக்களைச் செவிமடுப்பவராக (Mindful listening)
- ❖ பொறுப்புக்களை பொருத்தமானவர்களை இனங்கண்டு பகிர்ந்து அளிப்பவராக (Devolution)
- ❖ சரியான நேரத்தில் சரியான தீர்மானம் எடுப்பவராக (Decision Making)
- ❖ நேரமுகாமைத்துவத்தைப் பேணுபவராக (Time management)
- ❖ பிரச்சினைகளுக்குப் பதற்றம் அடையாது சரியான தீர்வுகளைக் காணக்கூடியவராக (Problem solving)
- ❖ வினைத்திறன் மிக்க பண்பான தொடர்பாடலினூடாக தான் நினைத்ததைச் செய்து முடிப்பவராக (Effective communication)
- ❖ மற்றவர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளைப் பாராட்டுபவராக (appreciation)
- ❖ சிறந்த ஊக்குவிப்பு முகாமைத்துவத்தினூடாக வேலைகளை விரைந்து முடிப்பவராக (Motivator)
- ❖ அர்ப்பணிப்புடையவராக (Dedication)
- ❖ நகைச்சுவை உணர்வு மிக்கவராக (Sense of humor)
- ❖ திறந்த மனம் மற்றும் வெளிப்படைத் தன்மையுடையவராக (Openness and Transparency)

போன்ற பல்வேறு தலைமைத்துவ பண்புகளைக் கொண்ட திரு.சி.தண்டாயுதபாணி அவர்களை 22 வருடங்கள் ஆசிரியராகவும்,அதிபராகவும் பெற்றிருந்த பெருமைக்குரிய இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் புகழ்பூத்த அதிபர்களின் வரிசையில் அவரும் இடம்பிடித்துள்ளமை எதிர்கால அதிபர்களுக்குப் பெருமை தருவதாகும்

அவர் அதிபராக இருந்து ஆற்றிய அதே பண்புகளையும் ஆற்றல்களையும் வவுனியா வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய பொழுதும் மாகாணக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய பொழுதும் பார்த்திருக்கின்றேன். அந்தப் பண்புகள் தான் அவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பையும் புகழையும் கொடுத்துள்ளது.

இத்தனைக்கும் மேலாக அவரிடம் நான் கண்ட சிறப்பு தமிழ் இனத்தின் சுபீட்சமான வாழ்வுக்காக அவர் எடுத்த முயற்சிகளும் ஆற்றிய பணிகளும் தான்.தமிழ் தேசியத்தின் மீது அவர் கொண்ட பற்றும் ஈடுபாடும் அவரைப் பின்பற்றும் ஒரு சமூகத்திற்கான பலமாக இருந்தது. திரு.சி. தண்டாயுதபாணி அவர்கள் தனது பணி ஓய்வு நிலைக் காலத்திலும் ஓய்ந்து விடாது தொடர்ந்தும் கல்விப் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டு எமது இனம் கல்வி, பொருளாதாரம், சமத்துவமான வாழ்வு,சுயநிர்ணய உரிமையுடனான நிம்மதியான வாழ்வு என்பவற்றை அடையும் வரை ஓயாது உழைக்க வேண்டும். அதற்கான மனோ பலத்தையும்,உடல் வலுவையும் இறைவன் வழங்கவேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் இணைத்த அவரது குடும்ப வாழ்வில் அவரும் அவரது மனைவி புவனாவும் எவ்வாறு மனம் ஒருமித்து ஆனந்த மான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனரோ அதே போன்ற ஒரு வாழ்வு வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் உறவுகள் பெற்று வாழவேண்டும் என்பதே எங்கள் ஒவ்வொரு வரினதும் விருப்பமும் அவாவுமாகும்.

பெருமைக்கும் மதிப்புக்குமுரிய நண்பர் தண்டாயுதபாணி அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் தனது மனைவி, பிள்ளைகள் சகிதம் நலமாகவும்,ஆனந்தமாகவும் வாழ்ந்து இந்த மண்ணுக்கும் எமது மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 5

## சிறப்புக் கட்டுரைகளும், திறனாய்வுக் கட்டுரைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலையில் மகிழ்பொழுது மற்றும் மகிழ்செயல்

பேராசிரியர் சபா ஜெயராசா.

சமகாலத்தைய கல்விச் செயற்பாடுகளில் மகிழ் பொழுது (LEISURE) மற்றும் மகிழ் செயல் (RECREATION) ஆகியவற்றை முகாமை செய்தல் ஒரு சிறப்பார்ந்த நடவடிக்கையாக மேலெழுந்து வருகின்றது. தரமான மகிழ்பொழுதும் மகிழ் செயலும் ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கு வளமும் விசையும் தருகின்றன. பல்வேறு தரப்பட்ட பன்மையான செயற்பாடுகள் அவை இரண்டிலும் அடங்குகின்றன.

தொன்மையான வாழ்க்கையிலே வேலைக்கும் மகிழ்பொழுதுக்குமிடையே திட்ட வட்டமான பிரிகோடு காணப்படவில்லை உழைப்புச் சுரண்டலொடும் தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியோடும் இரண்டினுக்குமிடையே வேறுபாடுகள் மேலெழுந்தன. சமூகத்திலே நிகழ்ந்த சடங்குகளினதும் விழாக்களினதும் வளர்ச்சியோடு மகிழ்பொழுது மற்றும் மகிழ் செயல் தனித்துவமான வாழ்க்கைப்பிரிவாகவும் தொழிற்பிரிவாகவும் மாற்றமடைந்தன.

நல்ல கல்வியாலும் நல்ல மகிழ்பொழுதாலுமே சிறந்த பிரசைகளின் உருவாக்கம் நிகழும் என்ற கருத்து தொன்மையான கிரேக்கச் சிந்தனைகளில் நிலவியது. பிளேட்டோ உடலுழைப்பைத் தாழ்வாகவும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மகிழ்பொழுதை உயர்வாகவும் கருதியமை அக்காலத்தைய சமூகத்திலே வேரூன்றி நிலைபெற்றிருந்த வர்க்க நிலைச் சமூகத்தைப் புலப்படுத்துகின்றது.

பாடசாலையைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லாகிய "ஸ்குலே" (SCHOLE) என்பது கற்றலையும் மகிழ் பொழுதையும் உள்ளடக்கியிருந்தது. தொன்மையான உரோமாபுரியில் மகிழ்பொழுது செல்வந்தர்களுக்கு மட்டுமே உரித்தாயிற்று அடிமைகளுக்கு அது கிடைக்கப் பெறவில்லை. அவர்கள் செல்வந்தர்க்கு மகிழ் பொழுதை உருவாக்குவதிலும் பயன்படுத்தப்பட்டனர்.

மகிழ் பொழுது மற்றும் மகிழ் செயல் ஆகியவை கிரேக்கத்தில் பெரும் நாடக அரங்குகளை உருவாக்குவதற்கும் துணை நின்றன. தமிழகத்தில் கூத்தர், பாணர், விறலியர், ஆகிய வகுப்பினரது உருவாக்கம் மகிழ் பொழுதுடனும் மகிழ் செயலுடனும் இணைந்திருந்தது. சமயங்களின் வளர்ச்சி அவற்றுக்குரிய விரிவாக்கத்தை மேலும் முன்னெடுத்து வந்தது.

ஐரோப்பிய மறுமலர்ச்சி மற்றும் சமய சீர்திருத்த நடவடிக்கைகளும் கைத்தொழிற்புரட்சியும், மகிழ் பொழுது, மகிழ் செயல் கல்வி செயல் முறை முதலியவற்றிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின. ஓய்வு நேரமும் அதனை அனுபவத்திலும் தொடர்பான கருத்துக்களும் செயற்பாடுகளும் வளர்ச்சியடையத் தொடங்கின. அவற்றின் தொடர்ச்சியாக மகிழ் பொழுது பின்வரும் அணுகுமுறைகளை அடியொற்றியதாக நோக்கப்படுகின்றது.

(1) மகிழ் பொழுதை ஒரு நேர ஒதுக்கீடாக கருதுதல்.
(2) அதனை ஒரு செயற்பாடாகக் கருதுதல்
(3) அது தன்னளவில் முடிவு கொண்ட ஒரு நிலவரம் என நோக்குதல்
(4) அதனை ஒரு வாழ்க்கை முறையாக நோக்குதல்
(5) அனைத்தையும் உள்ளடக்கியவாறு அதனை அணுகுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க நிலைக்கும் மகிழ்பொழதுக்குமிடையே நெருங்கிய உறவும் தொடர்புகளும் இருத்தலைக் காணமுடியும். பொருண்மிய நெருக்கடிகளால் மகிழ்பொழுது இன்றி தொழிற்படும் நிலைக்குத் தொழிலாளர் தள்ளப்படுகின்றனர். அதே வேளை அதிக பணத்தை உள்ளீடாக்கி மகிழ் பொழுதை அனுபவித்தல் பொருண்மிய வாய்ப்பு மிக்கோரிடம் காணப்படுகின்றது.

மகிழ் பொழுதையும் மகிழ் செயலையும் ஒருங்குறக்கையாளுதலும் முகாமை செய்தலும் உளச் சுகத்துக்கு இட்டுச் செல்லும், உளநெருக்கீட்டு நிலையில் மகிழ்பொழுதும் மகிழ் செயலும் பாதிப்புக்கு உள்ளாகும். அதே வேளை அவற்றை ஒழுங்குறக்கையாளும் பொழுது உள நெருக்கீட்டிலிருந்து விடுபட முடியும்.

செயற்பாடுகள் வழியாக ஒருவர் தம்மை உள நிலையிலும் உடல் நிலையிலும் உறுதிபடச் செய்தலே மகிழ் செயலாகின்றது. அது பின்வரும் பரிணாமங்களைக் கொண்டது.

(1) தேவை தணிக்கும் செயற்பாடாக அமைதல்
(2) தேவைகளை மேலெழச் செய்யும் செயற்பாடாக அமைதல்
(3) தனியாளுக்கும சமூகத்துக்கும் பயனும் பெறுமானமும் கொண்டதாக விளங்குதல்
(4) மீளாக்கும் நடவடிக்கையாக விளங்குதல்
(5) சமூக நிறுவனமாகவும் சமூகச் செயல்முறையாகவும் விளங்குதல்

மகிழ் பொழுதும் மக்கள் தேவைகளும் பற்றிக் கல்வியலாளரும் சமூகவியலாளரும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். மகிழ் பொழுது ஒரு தேவையாகப் பல்வேறு காரணிகளால் உருவாக்கப்படுகின்றது பின்வரும் மகிழ் பொழுதை ஒரு தேவையாக மாற்றமுறச் செய்து வருகின்றன.

(1) புதிய அனுபவங்களைத் தேடுதல்
(2) ஓய்வெடுத்தலும், கற்பனை இன்பங்களை நாடுதலும்
(3) தமது அடையாளத்தை வலுப்படுத்திக் கொள்ளல்.
(4) பாதுகாப்புத் தேடுதல்
(5) பிறர் மீது ஆட்சி செலுத்துதல்
(6) சமூக இடைவினைகளை மேற் கொள்ளல்.
(7) ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடல்.
(8) பிறருக்குப் பணி செய்தல்
(9) உடல் சார் செயற்பாடுகளில் ஈடுபடல்
(10) வேறு செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளல்

மேற்கூறிய செயற்பாடுகளில் ஈடுபடும் நிலையில் மகிழ் பொழுது ஒரு தேவையாக வளர்ச்சிய டையத் தொடங்கி விடுகின்றது. தனி மனித வளர்ச்சி, கல்வி சூழல், தொழில் நிலை சமூக மாற்றங்கள் முதலியவை மகிழ் பொழுதில் மாற்றங்களைத் தொடர்ந்து வருவித்த வண்ணமிருக்கும்.

விளையாட்டு, மகிழ் பொழுது மற்றும் மகிழ் செயற்பாடுகளில் ஈடுபடல் ஆகியவற்றுக்கிடையே பல நிலைகளில் ஒப்புமைகள் காணப்படுகின்றன. பின்வரும் நிலைகளில் அந்த ஒப்புமை நேர் நிலைகளில் இடம் பெறுகின்றது.
(அ) விடுதலை வெளிப்பாடு
(ஆ) தன்னிலை வெளிப்பாடு
(இ) உளநிறைவை எட்டுதல்
(ஈ) அனுபவங்களைத் திரட்டிக் கொள்ளல்.
(உ) தானே தொடங்கும் முனைப்பு
(ஊ) வேறு தேவைகள் இடம் பெறாதிருக்கும் நிலை
(எ) மகிழ் நோக்கு.

நவீன நுகர்ச்சிச் சமூகத்தில் மகிழ் பொழுதை அடிப்படையாகக் கொண்ட பொருள் உற்பத்திகளும் கைத்தொழில்களும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. மகிழ் பொழுதைக் கவர்ச்சியுடன். கழிக்கக் கூடியவாறு புதிய தொழில் நுட்பமும் புதிய கண்டு பிடிப்புக்களும் உட்புகுத்தப்படுகின்றன. மகிழ் பொழுதைக் கழிக்கக் கூடிய பன்முகவசதிகள் கொண்ட நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ் செயலை உருவாக்கும் நடவடிக்கைகள் அயற் சமூகம், விரிந்த சமூகம் என்ற தளங்களிலே செயற்பாடுகள் விரிவடைந்து செல்கின்றன. பாடசாலைகளில் ஆசிரியருக்கும் மாணவருக்குமுரிய மகிழ் செயல் வசதிகள் நவீன முறைகளிலே உருவாக்கம் பெற்று வருகின்றன.

அவற்றை முகாமை செய்தல் என்பது தனித்துவ மான ஒரு துறையாக வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது. குறிக்கோள்களை வடிவமைத் தல். இலக்குகளைச் சந்தித்தல், வளங்களை உச்சநிலையிலே பயன்படுத்துதல், நிதி இலக்குகளை அடைதல். முன்னுரிமைத் தேவை களைச் சந்தித்தல், கவர்ச்சிகரமான சேவைகளை வழங்குதல் முதலியவை முகாமையின் பிரதான பரிமாணங்களாக அமைகின்றன. உரிய இலக்கு களை எட்டுவதற்கு மனிதவளத்தையும் நிறுவன ஒழுங்கமைப்பையும் வினைத்திறனுடன் இயங்கச் செய்தல் முகாமைத்துவத்தில் முன்னெடுக்கப் படுகின்றது. முகாமை என்பது தனித்துவமான தொழிற்பாடு விளைவுகளை எட்டுவதற்குரிய ஆற்றல் மிக்க வினைப்பாட்டுடன் அது இணைந்தது.

மகிழ் பொழுது மற்றும் மகிழ் செயல் முகாமைத்துவத்தில் "நிகழ்ச்சித் திட்டப்படுத்தல்" (PROGRAMMING) சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. வளம், வசதிகள், ஆளணி முதலிய வற்றைப் பயன்படுத்தி உச்சநிலைப் பங்களிப்பை வழங்கும் செயலைத் திட்டமிடல், நேரசூசிப் படுத்தல், செயற்படுத்தல் முதலியவை நிகழ்ச்சித் திட்டப்படுத்தலில் உள்ளடங்குகின்றன. அது ஒரு செயல் முறையாகின்றது.

மகிழ்பொழுதும் செயலும் சமூக நிலையிலும் பொருண்மிய நிலையிலும் வலுவும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. அவற்றை உள்ளடக்கிய கைத்தொழில் துறைக ளிலே வேலை வாய்ப்புக்கள் பெருக்கமடையத் தொடங்கியுள்ளன. இத்துறைகளில் முறை சார்ந்த கல்வியும் முறைசாராக் கல்வியும் பரந்த அளவிலே ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பின்வரும் துறைகளிலே கல்வியும் பயிற்சியும் பரந்த அளவிலே முன்னெடுக்கப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

(1) விளையாட்டும் அதனோடு இணைந்த துறைகளும்
(2) நூலகங்கள், அரும் பொருட் காட்சியகங்கள்
(3) சுற்றுலாத்துறை
(4) ஹொட்டல் பராமரிப்புத் துறை
(5) கேளிக்கைத்துறை
(6) கலையாக்கத்துறையும் அரங்க நிர்வாகமும்
(7) தொடர்பாடல் துறை

உளவியலிலே குறிப்பிடப்படும் "தன்னியல் நிறைவு", "தன்னியல்பை நிறைவு செய்யும் வாழ்க்கை" "தற்கட்டமைப்பை உருவாக்கும் வாழ்க்கை, தனக்குப்பயனுற வாழ்தலையும் சமூகப் பயனுடைமையையும் ஒன்றிணைத்தல். முதலிய செயற்பாடுகள் விளையாட்டு மற்றும் மகிழ்பொழுது, மகிழ்செயல் ஆகியவற்றுடன ஒன்றிணைந்துள்ளன. அவற்றை ஒன்றிணைக்கும் "PLEISUR" என்ற சொல்லாட்சி ஆங்கிலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மகிழ்தளம், தேவைத்தளம், முகாமைத்துவதளம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் நிறுவனச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாழ்க்கைத்தரம், வாழ்க்கைப்பண்பு, ஆகியவற்றுடன் அவை ஒன்றிணைந்துள்ளன. வாழ் தொழில் எத்துணை முக்கியத்துவம் பெறுகின்றதோ அத்துணை முக்கியத்துவத்தை மகிழ்தளம் பெற்றுக் கொள்கின்றது. கற்பனை நிலையில் அது ஏற்புடையதாக இருந்தாலும், இன்னல்கள், அவலங்கள், ஒடுக்குமுறைகள் நிலவும் சமூகத்தில் "மகிழ்தளம்" என்பது கேள்விக் குறியாகவேயிருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச புதிய கல்விச் சட்டமும் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தியும்

தை.தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர்
கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

அறிமுகம்

இலங்கை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட கல்விப் பாரம்பரியங்களைக் கொண்டிருந்த போதும் முறைசார் கல்விக்கான அடித்தளம் 1869 ஆம் ஆண்டிலேயே இடப்பட்டதெனலாம். அவ்வாண்டு பொதுப் போதனாத் திணைக்களம் (Department of Public Instruction) ஆரம்பிக்கப்பட்டது. எனினும் கல்வியானது சமூகத்தின் உயர்குழாத்தினார்க் குரிய வரப்பிரசாதமாகவே இருந்தது. 1901 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையானது தேசத்தின் சிறார்களில் பெரும்பான்மையினர் கல்வியறிவும் அற்றவர்களாக எவ்வித அற்றவர்களாக உள்ளனர். என்பதை எடுத்துக்காட்டியதோடு பிரித்தானிய பாராளுமன்றத்தில் எதிர்ப்புக் குரல்களையும் தோற்றுவித்தது. இதன் விளைவாக சில கல்விச் சட்டங்கள் இலங்கையில் நிறைவேற்றப்பட்டாலும் 1931 இல் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையானது 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கம் கல்விச் சட்டத்துக்கு வழிவகுத்தது. மேற்படி கல்விச் சட்டம் பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து தேசிய கல்விமுறைமையை விடுவித்ததோடு இன்றுவரை இலங்கையின் முழுமையான கல்விச் சட்டமாக நின்று நிலைத்துள்ளது. கடந்த ஏழு தசாப்பதங்களில் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உள்வாங்கி சமகால தேசிய, உலகளாவிய செல்நெறிகளுக்குப் பொருத்தமான ஒரு நவீன கல்விக் கொள்கைளின் தேவைகளுக்குப் பொருத்தமான ஒரு நவீன கல்விக் கொள்கையின் தேவை இன்று உணரப்பட்டுள் ளமையின் காரணமாக ஒரு புதிய கல்விச் சட்டத்தை உருவாக்குவதற்காக கலாநிதி. ஜீ.பி. குணவர்த்தன அவர்களின் தலைமையின் கீழ் பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்காக தேசிய குழு அமைக்கப் பட்டு அதன் அறிக்கை 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இலங்கையின் தேசியகல்வி முறைமையின் சகல அம்சங்களையும் ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கை பொதுக்கல்விக்கான உத்தேச கல்விச் சட்டத்துக்கான அடிப்படை வரைபாகவும் அமைந் துள்ளது. கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி பற்றி மேற்படி அறிக்கை முன்வைத்துள்ள விதந்துரைகள் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

கல்வி முறைமையின் கட்டமைப்பும் தொழிற்பாடுகளும்

1987 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட அரசியல் யாப்பின் மீதான 13 ஆவது திருத்தச் சட்டம் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரங்களைக் குறைத்து மாகாண கல்வி அமைச்சுகளுக்கு அதிகார பரவலாக்கத்தை வழங்கியது தேசிய பாடசாலைகள் தவிர்ந்து ஏனைய பாடசாலை களின் நிர்வாகமும் முகாமையும் மாகாணங் களுக்கே கையளிக்கப்பட்டுள்ளது, எனினும் இன்றும் இலங்கையின் கல்விமுறையின் மத்திய அதிகாரக் கட்டமைப்பு கல்வி அமைச்சே ஆகும். கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (EPD) தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் நிலையங்கள் மற்றும் தேசிய பாடசாலைகள் கல்வி அமைச்சின் கீழேயே இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விச் சட்டத்தை தொடாந்து 1968 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டம் 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவேனைகள் சட்டம் 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் ஆண்டின் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்டம் 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய கல்வியியல் கல்லூரிச் சட்டம் 1991 ம் ஆண்டின் 19 ம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச்சட்டம் முதலான சட்டங்கள் விசேட தேவைகள் கருதி உருவாக்கப்பட்டன.

இவ்வாறு பல்வேறு அமைப்புகள் இயங்குகின்ற காரணத்தால் கல்விச் செயற்பாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உதாரணமாக கல்விசாா் ஆளணியைப் பயிற்றுவித்தல் தேசிய கல்வி நிறுவகத்துக்கு கையளிக்கப்பட்ட போதிலும் கல்வி அமைச்சும் பயிற்றுகையில் ஈடுபட்டுள்ளது. 13 ஆவது திருத்தச்சட்டம் மாகாணங்களுக்கு அதிகாரங்களினைப் பகிா்ந்தளித்த போதிலும் கல்வி அமைச்சு மற்றும் மாகாண அமைப்புக்களின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் துல்லியமாகவும் திட்டவட்ட மாகவும் வரையறை செய்யப்படவில்லை

இதனால் தொழிற்பாடுகளில் தெளிவற்ற தன்மையும் இரட்டைத் தன்மையும் காணப்படுகின்றன. ஆசிரியர் கல்வி மற்றும் அபிவிருத்தி தொடர்பான நிறுவனங்கள் மற்றும் முகவரங்களுக்கிடையிலும் பரஸ்பர விளக்கமும் ஒன்றிணையும் குறைவாகவே உள்ளது. (அதே நேரத்தில் குழப்ப நிலைமைகள் மற்றும் முகவரங்களுக்கிடையினும் பரஸ்பர விளக்கமும் ஒன்றிணைவும் குறைவாகவே உள்ளது). அதே நேரத்தில் குழப்ப நிலைமைகள் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒன்றையொன்று குற்றம் சாட்டுவதையும் காணலாம். உதாரணமாக பாடநூல்களில் காணப்படும் பிழைகள் மற்றும் விநியோகத்தில் ஏற்படும் தாமதம் ஆகியவற்றுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொண்டு பொறுப்பாண்மையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிப்பதைக் காணலாம்.

மேற்படி பின்னணியில் உத்தேச புதிய கல்விச்சட்டம் பின்வரும் பின்வரும் முன்மொழிவு களைத் தெளிவாக முன்வைக்கிறது.

பொதுக்கல்வியின் சகல அம்சங்கள் தொடர்பான கொள்கையாக்கம் தேசிய கல்வி ஆணைக்குழு (NEC) வின் தொழிற்பாடாகும்.

வலைத்திட்ட உருவாக்கம், அதன் அபிவிருத்தி, கல்வி ஆளணியினது வாண்மை விருத்தி ஆகிய தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) பொறுப்பாகும்.

தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கிய பொதுக்கல்வித்திட்டத்தின் அடிப்படையில் பாடநூல்களின் உருவாக்கம் மற்றும் விநியோகம் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரனையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களம் முழுமையான அதிகாரமும் சுதந்திரமும் கொண்டு கல்வி அமைச்சின் கீழ் இயங்க வேண்டும் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதாக ஓர் ஆலோசனைச் சபை அமைக்கப்பட வேண்டும். அதே போல கல்விவெளியீட்டும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயத்துக்கும் ஓர் ஆலோசனை சபை அமைக்கப்படல் வேண்டும்.

திட்டமிடல், அமுலாக்கம் ,கண்காணிப்பு, மேற்பார்வை. செயலாற்றுகை, மதிப்பீடு, தர உறுதிப்பாடு மற்றும் தேசிய மட்டத்தில் சகல ஆளணியினரின் முகாமையும் கல்வி அமைச்சின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

மேற்படி முன்மொழிவுகள் சட்டத்தில் உள்ளடக்கப்படின் இலங்கையின் கல்வி நிர்வாகத்தில் உடன்பாடான மாற்றங்கள் ஏற்படக்கூடும் கல்வி அமைச்சு ஏனைய தேசியமட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் கடமைகள் பொறுப்புக்கள் முதலியன இச்சட்டத்தில் துல்லியமாக வரையறை செய்யப்படுவதால் பணிகளின் இரட்டைத்தன்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத தாமதம் முதலிய நீண்டகால குறைபாடுகள் நீக்கப்பட்டு கல்வி நிர்வாகத்தின் (வினைத்திறனும்) மேம்படும் என எதிர்பார்க்கலாம்.

மாகாண கல்வி அதிகார அமைப்புக்கள்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பின்னிணைப்பு மூன்றில் மாகாணத்துக்கு பரவலாக்கப்பட்ட தொழிற்பாடுகள் குறிப்பிடப் பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் குறிப்பிடப் பட்ட அதிகாரங்களை நடை முறைப்படுத்தவதில் பல்வேறு வரையறைகளும் சிக்கல்களும் இருக்கவே செய்தன. உதாரணமாக ஆசிரியர் நியமனம் மாகாணங்களுக்கு அதிகாரமளிக்கப் பட்ட போதிலும் இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்த மாகாணங்களுக்கு வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டவில்லை. பல்வேறு விடயங்களில் மத்திய கல்வி அமைச்சுக்கும் மாகாண கல்வி அமைப்புகளுக்குமிடையில் இழுபறி நிலைமையே கடந்த இருபத்தைந்து வருடங்களாக காணப்படுகின்றன. தவிர மாகாண கல்விகட்டமைப்புள்ளும் பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டன. உதாரணமாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வித்திணைக்களத்தின் பணிப்பாளார் ஆகியோரது வகி பங்குகள் துல்லியமாக வரையறை செய்யப்படவில்லை. இவ்விடயம் பற்றி 1992 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாம் அறிக்கை எடுத்துக் கூறியது. ஆனால் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை.

மேற்படி பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு உத்தேசக் கல்விச் சட்டத்துக்காக பின்வரும் முன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மாகாண அமைச்சும் மாகாண கல்வித் திணைக்களமும் ஒன்றினைக்கப்பட்டு மாகாண கல்விச் செயலாளரும், மாகாண கல்விப் பணிப்பாளரும் பரஸ்பர விளக்கத்துடனும் ஒன்றிணைப்புடனும் செயற்பட வேண்டும்.

மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்டுள்ள சகல கல்விசார் விடயங்கள் தொடர்பாகவும் மாகாண சபைகள் சட்டமியற்றுவதுடன் அவற்றை அமுலாக்குவதற்கான துணைச் சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

வலயங்கள், கோட்டங்கள் தொடர்ந்தியங்க வேண்டும் அவற்றின் ஆளணி தேவைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு நிரப்பப்பட வேண்டும்.

மாகாண கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை கூறும் ஆலோசனைச் சபைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் உருவாக்கப்பட வேண்டும்.

மாகாண கல்விசார் கட்டமைப்பு பின்வரும் நான்கு மட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

மாகாண கல்வி அமைச்சும் கல்வித்திணைக் களமும், வலயக் கல்வித் திணைக்களம் ,கோட்டக் கல்வி அலுவலகம், பாடசாலை

மேற்படி முன்மொழிவுகள் மாகாண கல்வி அதிகார அமைப்புகள் (வினைத்திறனுடனும்) இயங்குவதற்கு வழிசமைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது கல்வி அதிகாரம் மத்தியில் குவிந்து கிடப்பது. சனநாயக பாரம்பரியங்களுக்கு இசை வானது அல்ல. பிராந்திய கட்டமைப்புகள் சுயமாக இயங்கக் கூடியவகையில் அதிகாரம் பரவலாக்கம் செய்யப்படுவதே நிர்வாகத்தில் மக்களின் பங்கேற்பை மேம்படுத்துவதற்கு உரிய வழியாகும். ஆனால் 13 ஆவது சீர்திருத்தம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை மாகாணங்களுக்கு வழங்கிய அதிகாரங்கள் பின்னர் படிப்படியாக மத்திய கல்வி அமைப்பினால் பறித்தெடுக்கப் பட்டன. சகல மட்டங்களிலும் வகி பங்குகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான தெளிவு, ஒத்திசைவு மற்றும் உடன்பாடு காணப்படாமை யினால் கல்வியின் உயரிய நோக்கங்களை அடையக்கூடியவகையில் மாகாண அமைப்புக்கள் சீரிய முறையில் இயங்கக் கூடவில்லை தவிர மிதமிஞ்சிய அரசியல் மயமாக்கமானது கல்வி அதிகார பரவலாக் கத்தின் ஆன்மாவையே சீரழித்துவிட்டது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேச கல்விச்சட்டம் மேற்படி பிரச்சனையினை கருத்தில் கொண்டுள்ளது.

பாடசாலை முகாமைத்துவம்

எந்தவொரு கல்வி கட்டமைப்பினும் மிகப்பிரதான மானதும் முக்கியமானதுமான ஒரு கூறு பாடசாலையாகும். ஆனால் இலங்கையின் கல்விக்கட்டமைப்பில் மிகவும் நிராகரிக்கப் பட்டதும் அசட்டை செய்யப்பட்டதுமான கூறு படசாலையே ஆகும். இலங்கையில் பாடசாலை களுக்கிடையே பௌதீக வசதிகளினதும் ஆளணி மற்றும் ஏனைய அம்சங்களினதும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. 1940 களிலிருந்தே மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் பாடசாலைகள் மத்தியில் காணப்படுகின்ற வளப்பற்றாக்குறை, ஏற்றத்தாழ்வுகள் குறித்து அக்கறை செலுத்திய போதிலும் இன்னும் பாடசாலை முறைமையில் சமத்துவம் நியாயத்துவமும் பேணப்படவில்லை.

உலகளாவியரீதியில் வினைத்திறன் மிக்க பாடசாலைகள் (Effective Schools) பற்றிய ஆய்வுகள் யாவும் பாடசாலைகளின் வெற்றியில் பாடசாலை அதிபர்கள் கொண்டிருக்கக்கூடிய பங்கினை வலியுறுத்துகின்றன. பல பாடசாலைகளில் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமான முதல்நிலைக் காரணி பாடசாலை அதிபர்ககளே என்பதை நாம் நடைமுறை ரீதியாகக் கண்டுள்ளோம்.

அதீதமான அரசியல் மயமாக்கம், காலத்துக்கு ஒவ்வாத சுற்றறிக்கைகள், சட்டதிட்டங்கள் முதலியவை வினைதிறன்மிக்க அதிபர்களாக செயற்பட விரும்புகின்ற செயற்திறன் மிக்க ஒரு சில அதிபர்களையும் கூட விரக்தியடையச் செய்கின்றன. பாடசாலை அதிபர், திட்டமிடுபவர், மேற்பார்வையாளர், கற்பித்தல் தலைவர், மற்ற முகவர் என்னும் பல்வேறு வகிபங்குகளை மேற்கொள்ள வேண்டிய முதல் நிலை முகாமையாளராவர். பாடசாலை தொடர்பான விதிகளும் சட்டதிட்டங்களும் மேற்படி பல்வேறு வகிபங்குகளையும் ஆற்றுவதற்கு அதிபருக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர அதிபரின் பணிக்கு இடையூறு விளைவிப்பவை யாக இருக்கக் கூடாது. ஆனால் இலங்கையின் பாடசாலை முறைமையில் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்க ளுக்கும் அப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அடிப்படையான அதிபரின் அதிகார எல்லைகளுக்கும் பாரிய பொருத்தமின்மையும் இடைவெளியும் காணப்படுகின்றன. இந்த இடைவெளியை நீக்காமல் பாடசாலைத் தலை வரின் வினைதிறனை மேம்படுத்திவிட முடியாது.

பாடசாலைக்கு மிக அண்மித்ததாக உள்ள அதிகார கட்டமைப்பு கோட்டக்கல்வி அலுவலக மாகும். ஆனால் மாகாண, வலய மட்டங்களில் மேற் கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் பாடசாலைக்குத் கடத்துகின்ற ஓர் ஊடகமாக செயற்படகின்றனவே தவிர தம்மளவில் எவ்வித நிதிசார், நிர்வாகம் சார் அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆசிரியர்களின் தனிப்பட்ட வேலைகள் கூட கோட்டக் கல்வி அனுபவத்தினால் அல்லது வலயக் கல்விப் பணிமனையினாலேயே பேணப்படுகின்றன.

மேற்படி வரையறைகளினால் பாடசாலையின் தலைவராக செயற்பட வேண்டிய அதிபர் வெறுமனே ஒரு நிர்வாகியாக மட்டுமே இயங்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. இவற்றை கருத்தில் கொண்டு புதிய கல்விச் சட்டத்தில் உள்வாங்குவதற்காகப் பின்வரும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

❋ பாடசாலைகள் வலுவூட்டப்படல் வேண்டும். இதற்கு ஏற்றவாறு சகல பாடசாலை களினதும் பாடசாலையைத் தளமாகக் கொண்ட முகாமைத்துவம் (SBM) ஏற்படுத்தப்பட்ட வேண்டும்.

❋ பாடசாலை நடத்திச் செல்லக்கூடிய வகையில் அதிபரின் தலைமையில் ஒரு பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC) அமைக்கப்பட வேண்டும். இதில் பாடசாலைச் சமூகம் உரிய அளவில் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டும். அத்துடன் பாடசாலை முகாமைக்குழுவும் (SMT) அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ மேற்படி இரு அமைப்புகளும் பாடசாலை மட்டத் திட்டமிடல், தரமேம்பாட்டுக்கான செயற்பாடுகளில் பங்குபற்றுவதோடு பெற்றாரும், மாணவரும், மேற்படி செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்குவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

❋ பாடசாலை அதிபர் கூடிய தன்னாதிக்கமும் அதே நேரத்தில் வகை கூறலும் கொண்டிருப்பதோடு கற்பித்தல் (Instructional) உருமாற்றம் (Trans formational) மற்றும் அறவொழுக்கம் (Ethical) சார்ந்த தலைமைத்துவ வகிபங்கினை ஆற்றுதல் வேண்டும்.

❋ அதிபர்கள் பங்குபற்றல் முகாமையை (Participate Management) யும் ஜனநாயகப் பாங்கையும் பின்பற்றுவதுடன் திட்டமிடல், கற்றல் கற்பித்தல் செயன்முறை,

இணைவிதானத்திட்டச் செயற்பாடுகள், ஆளணி அபிவிருத்தி, பாடசாலை வளத்தைப் பேணல் முதலிய விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்.

கல்வித் திட்டமிடல் செயன்முறை

அண்மைக் காலம் வரை இலங்கைப் பாடசாலை முறைமையில் செயற்றிட்ட அணுகுமுறை (Project Approach) யே பின்பற்றப்பட்டது. இம்முறையானது இரட்டைத்தன்மைக்கு வளங்களின் விரயத்துக்கும் காரணமாக அமையத்தக்கது. வளங்களின் விரயத்துக்கும் காரணமாக அமைந்தது எனவே துறை தழுவிய அணுகுமுறையே இன்று பின்பற்றப்படுகிறது. பாடசாலை முதல் கல்வி அமைச்சு வரையுள்ள பிரச்சினைகள் யாவும் கல்வித்துறை அபிவிருத்தி சட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (ESDFP) ஊடாக முகம் கொடுக்கப்படுகின்றன. வெளி நாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய உதவிகளும் ESDFP இன் ஊடாக பயன்படுத்தப்படுகின்றன. ESDFP இன் தொழில்நுட்பக்குழு மாகாண மட்ட திட்டமிட்டலாளர்களின் உதவியுடன் பாடசாலைகள், வலயங்கள் மற்றும் மாகாணங்களுக்கான திட்டமிடல் வழிகாட்டல் உருவாக்கியுள்ளது. இதன் மூலம் சகல மட்டங்களினும் திட்டமிடல் இயலளவு விருத்தி செய்யப்பட்டுள்ளது. தவிர கல்வி அமைச்சி, தேசிய கல்விநிறுவகம் பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆகியவற்றின் திட்டங்களும் கூட ESDFP இன் முழுமையான திட்டத்துக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

எனினும் கல்வித் திட்டமிடல் தொடர்பான பல்வேறு தேசிய மட்ட பிரச்சினைகள் இன்னும் இருக்கவே செய்கின்றன. கல்வி முறையில் பல்வேறு மட்டங்களினதும் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிடலானது நியாயத்துவம் , தரம், வினைத்திறன் மற்றும் சிறந்த ஆளுகையை உறுதிப்படுத்திக் கூடிய வகையில் தேசிய மட்டத்தில் இணைப்பாக்கம் செய்யப்படவில்லை அத்துடன் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் செயற்பாடுகள் அரிதாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அது மாத்திரமின்றி அரசியல் மயப்படுத்தப்பட்ட குறுங்காலத் திட்டமிடல், நிதியீட்டுபவரின் தலையீடு ஆகியவையும் வளப் பயன்பாட்டில் வினைத்திறன் இன்மைக்கு காரணமாய் அமைகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு பின்வருவன சட்டவாக்கத்தில் முன் மொழியப்பட்டுள்ளன.

கல்வித் திட்டமிடல் என்பது பொதுக்கல்விக்கான தேசிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை, கோட்டம், வலயம், மற்றும் மாகாணம் ஆகிய சகல திட்டமிடல் மட்டங்களினதும் உரித்தாளர்களைப் பங்குபற்றச் செய்யும் பங்கேற்பு தீர்மானம் மேற்கொள்ளும் செயன் முறையாக அமைதல் வேண்டும்.

கல்வி அபிவிருத்திக்கான திட்டமிடல் , அமுல்படுத்தல், முகாமித்தல் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் துறைதழுவிய (Sector - wide) அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும். நிதி ஒதுக்கீடு, பய்ன்பாடு மற்றும் கணக்காய்வு ஆகியவற்றில் அரசாங்க நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சகல நிதி வழங்கும் முகவர்களும் செயற்றிட்ட முறையக் கைவிட்டு கல்வித்துறை அபிவிருத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தில் (ESDFP) ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும். இவ்வாறு சேர்க்கப்படும் நிதியானது இரட்டைத் தன்மையைத் தவிர்க்கக் கூடியதாக கல்வி அமைச்சின் ஊடாக பகிரப்படல் வேண்டும்.

சகல மட்டங்களிலும் திட்டமிடல் என்பது கல்வி முகாமைத்துவ தகவல்கள் முறைமை (EMIS), நிதிசார் முகாமைத்துவ தகவல்கள் முறைமை (FMIS) , புவியியல்சார் தகவல்கள் முறைமை (GRIS) ஆகிய தகவல்கள் முறைமைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

இலங்கையில் கல்வித் திட்டமிடல் என்பது பாடசாலைகளின் தேவையினை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. மாறாக அரசியல்வாதி களின் நிறுவனங்களின் தேவை, நீண்டகால அபிவிருத்தி என்பவற்றை தவிர்த்து தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்ளக் கூடிய வினைத்திறனற்ற ஆனால் தமது அரசியல் நோக்கங்களினை நிறைவேற்றக்கூடிய விடயங் களிலேயே அரிதான வளத்தை விரயமாக்குகின்ற னர். கல்வித்திட்டமிடல் என்பது திறமையும் அனுபவமும் மிக்க திட்டமிடல் நிபுணர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். பன்முக வரவு செலவுத் திட்டம் என்ற பெயரில் நிதிவளம் அரசியல் வாதிகளின் குறுகிய அரசியல் தீர்மானத்துக்கு உட்படுத்தப்படும் நிலை தொடரும் வரை இந் நாட்டில் பாடசாலைகளின் தேவைகள் ஒழுங்கு முறையாகப் பூர்த்தி செய்யப்படும் நிலை ஏற்பட மாட்டாது. துறை சார்ந்த அணுகுமுறை இன, மத , மொழி மற்றும் பிரதேச பாரபட்சங்களின்றும், அரசியல் கலப்புகளின்றியும் நேர்மையாக செயற்படுத்தப் படின் பாடசாலைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

செயலாற்றுகை மீளாய்வும் இணைப்பாக்கமும்

இலங்கையின் கல்விமுறைமை என்பது சுமார் பத்தாயிரம் பாடசாலைகளையும் இரண்டு இலட் சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் மற்றும் பல்வேறு நிறுவனங்கள், ஆளணியர் முதலானவற் றைக் கொண்ட பாரிய அமைப்பாகும். எனவே பல்வேறு கல்வி நிறுவனங்களும் மாகாண கல்வி அதிகார அமைப்புகளும் (வினைத்திறனுடனும்) செயற்படுவதை மத்திய கல்வி அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் (தனது பொறுப்பிலுள்ள பல்வேறு முகவரகங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு உதவ வேண்டும். பல்வேறு நிறுவனகள், அமைப்புகளின் செயற்பாடுகள் அளவுரீதியான இலக்குகளின் அடைவு நோக்கியதாக மட்டும் அமையாது பண்புத்தரம் (Quality) சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றை செயலாற்றுகை மீளாய்வு மற்றும் இணைப்பாக்கத்தின் (Performance Review and Co - ordination) ஊடகவே மேற்கொள்ள முடியும். ஆனால் கல்வி அமைச்சில் இதற்கான பொறிமுறை எதுவும் தற்போது இல்லை இக்குறைபாட்டை நீக்கக் கூடியதாக கல்வி அமைச்சில் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் இணைப்பாக்கம் குழு (PRCC) ஒன்றினை அமைக்க வேண்டுமென முன்மொழியப் பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் இயங்கும் இக் குழுவுக்கு தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சின் முக்கிய அதிகாரிகள் மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் சார்பாக ஒரு பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்க வேண்டும்.

மேற்படி PRCC பின்வரும் பணிகளை மேற் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கத்தை மீளாய்வு செய்தலும் தேவை எனில் திருத்தங் களை முன்மொழிதல்

கொள்கையில் ஏற்படுத்த வேண்டிய திருத் தங்களை தேசிய கல்வி ஆணைக்குழுவிடம் விதந்துரைத்தல்

தேசிய , மாகாண திட்டமிடலுக்கான ஆலோச ணைகள், வழிகாட்டல்கள் மற்றும் நெறிப்படுத் தல்களை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு கல்வி முறைமையையும் கண்காணிக்கக் கூடியதாக செயலாற்றுகை குறிகாட்டிகள் (performance Indication) தனக் குறியீடுகள் (bench mark) மற்றும் தராதரங்களை (standards) முன் வைத்தல்

தேசிய இலக்கங்களின் அடைவை கண்காணித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பின்னூட்டல் வழங்குதல்.

முடிவுரை

இலங்கையின் முறைசார் கல்வி முறைமையானது சுமார் நூற்றைம்பது கால வரலாற்றைக் கொண்டது. காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக இலங்கையின் கல்விமுறைமை அளவு ரீதியான வளர்ச்சியை எய்தியுள்ளது. ஆனால் அதிலும் கூட சுமார் 18 வீதமான மாணவர்கள் தமது கட்டாயக்கல்வி வட்டத்தைக் கூட பூர்த்தி செய்யாமல் இடை விலகுகின்றனர் என ஓர் அறிக்கை தெரிவித்துள்ளது, அத்துடன் அளவுரீதியான வளர்ச்சியில் பிரதேச, மொழி மற்றும் இனத்துவம் சார்ந்த பாரபட்சங்களையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. எனினும் கூட இலங்கையின் அளவுரீதியான கல்வி வளர்ச்சி பாராட்டுக்குரியது என்பதில் ஐயமில்லை.

ஆனால் கல்வி முறைமையில் தரரீதியான வளர்ச்சி என்பது கேள்விக்குரியது. பரீட்சைப் பெறுபேறுகள், கல்வி வெளியீடுகளின் இயலளவு, தொழில் உலகத்துடனான பொருத்தப்பாடு முதலான அம்சங்களில் இலங்கையின் தேசிய கல்வி முறைமை பெரிதும் பின்தங்கியே உள்ளது. உலகளாவிய கல்விச் செல்நெறிகளை உள்வாங்கி எமது கல்வி முறைமையை நவீனமயப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

1939 ஆம் ஆண்டின் கல்விச் சட்டம் சமகால கல்வித் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியாது. கடந்த எழுபது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட திருத்தச் சட்டங்கள் மற்றும் விசேடமான தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு சட்டங்கள் தேசிய கல்வி முறைமையை 21 ஆம் நூற்றாண்டுக்குள் வெற்றிகரமாக அழைத்துச் செல்ல போதுமானவை அல்ல இந்த பின்னணியிலேயே கலாநிதி ஜீ.பி குணவர்தன தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் உத்தேச கல்விச் சட்டத்துக்கான காத்திரமான முன்மொழிவினை முன்வைத்துள்ளனர்.

மேற்படி முன்மொழிவுகளில் கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள விதந்துரைகளை மட்டும் இக்கட்டுரை மீளாய்வு செய்ய முற்பட்டது.

உசாத்துணைகள்

இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டம், இறுதி அறிக்கை (2009)

பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை (1992)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி முறையில் சமூக இணக்கத்துக்கான ஏற்பாடுகள்

பேராசிரியர். சோ.சந்திரசேகரம்
முன்னாள் கல்வியியல் பேராசிரியர்,
கொழும்பு பல்கலைக்கழகம்,

'கல்வி கல்விக்காகவே' என்னும் கல்வியின் கல்விப்பேறேயன்றி வேறில்லை' என்ற சிந்தனை பெருமளவுக்கு மறக்கப்பட்டு, கல்வியானது சமூக மேம்பாட்டை நோக்காகக் கொள்ள வேண்டும். சமூகம் பிரச்சினைகளை கையாள உதவ வேண்டும் என்ற சிந்தனை தற்போது வலுப்பெற்றுள்ளது. சனத்தொகை பெருகும் போது சனத்தொகைக்கு சுற்றாடல் மாசடையும் போது சுற்றாடல் கல்வி , எய்ட்ஸ் நோய் பெருகும் போது (இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில்) எயிட்ஸ் கல்வி என்று பாடசாலைக் கல்வி பல்வேறு சமூகப் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை கடந்த பல தசாப்த காலமாக எதிர்நோக்கி வந்துள்ள இனப்பிரச்சினைக்கும் பல்வேறு இனங்கள் மத்தியில் வளர்ந்து விட்ட குரோதங்களுக்கும் பல சமூக, அரசியல் , பொருளாதார காரணங்கள் உண்டு. ஆயினும் இலங்கைக்கான கல்விக் கொள்கை வகுப்போர், இலங்கையின் பாடசாலைக் கல்வியானது இன ரீதியான ஒற்றுமையையும் தேசிய ஐக்கியத்தை யும் வளர்க்கத் தவறிவிட்டது எனக் கூறினர். இச்சிந்தனையின் அடிப்படையில் சமூக இணக்கம், தேசிய ஒருமைப்பாடு என்பவற்றை ஊக்குவிப்பதற்கான கல்வி ஏற்பாடுகள் குறித்த பரிந்துரைகளைச் செய்யத் தொடங்கினர்

கல்விக்கொள்கை ஆவணங்கள்

1992 இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக் குழுவின் முதலாவது அறிக்கையானது ஒன்பது தேசிய இலக்குகளை எடுத்துக் கூறியது. இவ்விலக்குகளின் அடிப்படையில் ஆய்வில் கொள்கை வகைப்படல் வேண்டும். எனக்கூறிய ஆணைக்குழுவானது, அவ்விலக்குக்குகளில் மூன்றை சமூக இணக்கம் சமாதானம் என்பவை பற்றியதாக அமைதல் வேண்டும் எனக் குறிப்பிட்டது. தேசிய இணக்கம், தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை, சமூக நீதி என்பவற்றை வலியறுத்திய அத்தேசிய இயக்குகள், தேசத்தைக் கட்டி எழுப்பும் பணிகளில் பங்கேற்பதன் அவசியம் பற்றியும் சுட்டிக்காட்டியது.

1997 ஆம் ஆண்டின் பொதுக் கல்விச் சீர்திருத்தம் பற்றிய அறிக்கையும் ஆசிரியர் கல்விப் பாட ஏற்பாட்டில் மனித விழுமியங்கள், மனித உரிமைகள் சனநாயகத் தத்துவங்கள், பாலின உரிமைகள், மும்மொழிகளிலும் தேர்ச்சி முதலிய விடயங்களை வலியுறுத்தியது. பல்வேறு கற்பித்தல் முறைகளினூடாகப் பிள்ளைகளிடம் பிணக்குகளைத் தீர்த்தல் வழிமுறைகளைக் கற்பித்தல் வேண்டும் இவ்வறிக்கை தெரிவித்தது.

2003 ஆம் ஆண்டின் ஆணைக்குழுவின் தேசிய ஆணைக்குழுவின் பொதுக்கல்வி பற்றிய தேசியக் கொள்கை அறிக்கையும் கல்வியி னூடான தேசிய இணக்கம், தேசிய ஒருங் கிணைப்பு, ஒற்றுமை, சமாதானம் என்பவற்றையும் கலாசாரப் பன்மைத்தன்மையைப் பேணுதல் போன்ற விடயங்களையும் வலியறுத்தியது. நாட்டைக் கட்டியெழுப்ப இவை அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானவை என்பது ஆணைக்குழுவின் கருத்தாகும்.

2009 ஆம் ஆண்டின் கணவர்த்னத அறிக்கை (புதிய கல்விச்சட்டம்- முன்மொழிவுகள்) எடுத்துக்கூறும் முதலாவது தேசிய இயக்கு தேசிய பிணைப்பு. தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஐக்கியத்தை, வலியுறுத்துகின்றது. அதன் கல்வி முறைக்கான வழிகாட்டல் தத்துவமானது (1:2:9) "பண்முகப்படுத்தல்" ஊடாகக் கல்வியானது வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்பது கூறுகின்றது.

சமூக இணக்கம், தேசிய ஐக்கியம் என்பவற்றைக் கல்வியினுடாக ஏற்படுத்துவதை வலிறுத்தும் கல்விக் கொள்கை ஆவணங்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை (1992), பொதுக்கல்விச் சீர்திருத்தம் பற்றிய அரசாங்க அறிக்கை (1997) தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக்கல்வி பற்றிய தேசியக் கொள்கைச் சட்டகம் (2003) சமூக இணக்கம், சமாதானம் பற்றிய கல்வி அமைச்சின் ஆவணம் பொதுக்கல்விக்கான புதிய (20 ம் சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழுவின் அறிக்கை (2009) ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கல்வி அமைச்சின் சமூக இணக்கம் மற்றும் சமாதானக்கல்விக்கான பிரிவானது சமூக இணக்கத்துக்கான கல்வி பற்றிய கொள்கை ஆவணம் ஒன்றை வெளியிட்டது.

இக்கொள்கை ஆவணத்தைத் தயாரிப்பதில் சகல இனங்களையும் சார்ந்த இலங்கைக் கல்வியாளர்களும் ஈடுபட்டனர். ஜேர்மன் நாட்டு நிபுணர்களும் இப்பணியில் பங்கு கொண்டனர். பிரச்சினைகள் இக்குழுவினர் சமூக இணக்கத்துக்குமான கல்வி ஏற்பாடுகள் மூலம் தீர்க்கக் கூடிய பல பிரச்சினைகளை இனங் கண்டனர்.

அ) கலாசாரங்களுக்கிடையே ஒற்றுமையின்மை, இன முரண்பாடுகள், கலாசாரங்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை, பாகுபாடு, வேறுபாடுகள் பற்றிய எதிர்மறைச் சிந்தனை, பரஸ்பரபயம், பெரும்பான்மையினரின் மென்மை உணர்வு, தீவரவாதம்

ஆ) தொடர்பாடலின்மையும் அது தொடர்பான பிச்சினைகளும், திறந்த மனதுடன் பிரச்சினைகளை அணுகும் மொழித்தேர்ச்சியின்மையால் தொடர்பற்ற நிலை, இதனால் ஏற்படும் அவநம்பிக்கை

இ) மனித உரிமைகள், பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய அறிவின்மை மற்றவர்களின் உரிமைகளில் அக்கறையின்மை

ஈ) வன்முறை நடத்தைகள் அதிகரிக்கும் நிலைமை, முப்பாக்கிக் கலாசாரம், வன்செயல் சாதாரணமானது எனக் கருதுதல்

உ) வளங்களைப் பகிர்வதில் தயக்கம், மற்றவர்களுக்கு உதவுவதில் தயக்கம், சுயநலங் கருதுதல், அதிகாரமும் விதிகளும் முறையாகப் பகிரப்படாமை

ஊ) விதிகளையும் பிரமாணங்களையும் பின்பற்றுவதில் தயக்கம், ஒழுக்காற்றலின்மை, சட்டத்தை மதிக்காமை.

எ) பொருள் தேடுவதில் அதிக நாட்டம், சமய அறிவை நாளாந்த வாழ்வில் பயன்படுத்தாமை

ஏ) பிள்ளைகள் மத்தியில் பொது விழுமியங்கள் இல்லாமை, அவர்கள் ஒரு அணியாகப் பணியாற்றுவதில் உள்ள சிரமங்கள்.

ஒ) பாலின சமத்துவம், சமூக பொருளாதார நியாயத்தன்மை இல்லாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ) சுற்றாடல். சகாதாரம் பற்றிய சரியான விழிப்புணர்வின்மை.

ஔ) சமாதான விழுமியங்கள் பற்றிய பொது வான இனங்கண்ட மேற்கண்ட பிரச்சினைகள், பெரும்பாலும் இலங்கையின் பல்லின சமூகம் எதிர்நோக்கிய / நோக்கம் சகல பிரச்சனை களையும் உள்ளடக்குகின்றது. எனக் கொள்ள முடியும்.

சிறந்த பிரஜை யார்?
அத்துடன், சமூக இயக்கத்துக்கான கல்வியி னால் உருவாக்கப்படக்கூடிய ஒரு சிறந்த பிரஜை யின் பண்புகள் எப்படியாக இருக்கும் என்பது பற்றியும் குழு தனது கருத்துக்களைக் கூறியது.

ஒரு சிறந்த பிரஜை பன்மைச் சமூகத்தில் நன்கு வாழக்கூடியவன் பன்முகத்தன்மையை விரும்புகின்றவன். அதனைக் கௌரவிப்பவன் பிற கலாசாரங்களை மதிப்பவன், சகிப்புத்தன்மை உடையவன், இனவாதியல்லமறறவர்களையும் மனிதனாக மதிப்பவன், இன மோதல்களுக்கான காரணங்கள் பற்றித் தர்க்க ரீதியாகச் சிந்திப்பவர்.

தீர்மானம் மேற் கொள்வதில் சனநாயக ரீதியாகச் செயற்படுபவன், முரண்பாடுகள் இல்லாமல் ஒரு அணியில் செயற்படுபவன் மற்றவர்களின் கருத்துக்களை மதிப்பவன் வளங்களை அற்றவர்களுடன் பகிர விரும்புபவன்.

சமூக இணக்கத்துக்கான ஏழு உபாயங்கள்

மற்றவர்களின் உரிமைகளை மதிப்பவன், அவற்றை செய்ய விரும்புபவன் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்க்கும் ஆற்றலுடையவன், குறிப்பாக பன்மைக் கலாசார சமூகங்களின் பிரச்சினைகளை எதிர் கொள்ளக்கூடியவன்.

ஊழல் அற்றவன். எதிர்பார்ப்புகளின்றி பிரதிபலனைப்பாராது பணியாற்றுபவன் தியாக உணர்வு மிக்கவன்.

உலகளாவிய பார்வை கொண்ட ஒரு உலகப்பிரஜை, உலக அபிவிருத்தியில் பங்கு கொள்ளக் கூடியவன்

இலங்கைச் சமூகத்தின் விழுமியங்கள், மரபுகள், கலாசாரம் என்பவற்றைப் பாதுகாக்கக் கூடியவன்.

சட்டங்களை மதித்து ஒழுகுபவன், விதிமுறைகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கும் அப்பால் சிறந்த குணப்பண்புகளை உடையவன்.

உபாயங்கள்

சமூக இனத்துக்கான இக் கொள்கை ஆவணமானது (2007) கல்வியினூடாக இவ்வுயரிய நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு ஏழு உபாயங்களைப் பரிந்துரை செய்தது

1) பாடசாலைப் பாட ஏற்பாடு
2) ஆசிரியர் கல்வி
3) இரண்டாவது தேசிய மொழியைக் கற்றல்
4) பாடசாலைகளில் சமாதானப் பண்பாடு
5) இணைப்பாட ஏற்பாட்டு நடவடிக்கைகள்
6) ஐ.நா. அமைப்புக்கள்
அரச சார்பற்ற நிறுவனங்கள்
7) ஒருங்கிணைப்பு மாதிரிகள்

→ சமூக இணக்கமும் சமாதானமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட ஏற்பாடு

தேசியக் கல்வி நிறுவகமானது பாடசாலைப் பாட ஏற்பாட்டில் சமாதானக்கல்வி பிணக்குத்தீர்த்தல், பிணக்குகளை நிலை மாற்றுதல் , வாழ்க்கைத் தேர்ச்சி, குடிசார் கல்வி முதலிய விடயங்களை இணைத்துக் கொண்டது. 2007 ஆண்டில் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடிசார் கல்வியும் 6-9 தரங்களிலும் குடிசார் கல்வியும் சிறந்த ஆளுனராக ஆகிய விடயங்கள் 10 -11 ஆம் தரங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டன இப்பாடங்கள் தேசிய பரீட்சை முறையிலும் உள்ளடக்கப்பட்டன. இத்தகைய பாட ஏற்பாடு சமாதானம் தொடர்பான பல எண்ணக்கருக்களை உள்ளடக்கின. பன்மைக் கலாசார சமூகம், பிணக்குத்தீர்வு, சனநாயகம், மனிதஉரிமைகள், ஆட்களுக்கிடையிலான தொடர்பு என்பன அவற்றிட் சில.

இவ்விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடிய போது அவர்கள் இனப்பிரச் சினைக்கான காரணங்கள், இனவாதம். பாகுபாடு இப்பிரச்சனைகளைக் கையாளுவதற் கான திறன்கள், மனித உரிமைகள், பிள்ளை களின் உரிமைகள், பிரச்சினை தீர்க்கும் திறன்கள், சனநாயகத்தத்துவங்கள், ஊடகங்கள் பற்றிய விமர்சனம் முதலியன தொடர்பாகக் கற்றுக் கொள்ள விரும்பினர்.

இவ்வாறான விடயங்களில் தனியான ஒரு பாடநூலை எழுதுவதும் பாடசாலை கால அட்டவணையில் தனியாக நேரம் ஒதுக்குவதும் தேவையற்ற விடயம் எனக் கருதப்பட்டது. இதற்கு மாறாக இச்சகல விடயங்களும் முழுப்பாட ஏற்பாட்டினாலும் உள்வாங்கப்படல் வேண்டும் என்றும் சகல பாடங்களும் இவ்விடயங்களில் சிலவற்றை உள்வாங்க வேண்டும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இவ்விழுமியங்களும் திறன்களும் சகல பாடங்களிலும் இடம்பெறும் போது , மாணவர் அவற்றை இலகுவாக உள்வாங்கிக் கொள்வர் என்பது 2007 ஆம் ஆண்டின் கொள்கை அறிக்கையின் கருத்தாகும்.

ஆசிரியர் கல்வி

ஆசிரியர்கள் பொதுவாகவே தமக்குரிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியும் அத்தகையதேயாகும். அப்பாடங்களுக்கான பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைய வேண்டும் என்பதால் கல்விச் செயற்பாடு முழுவதும் பரீட்சையை மையமாகக் கொண்டமைகின்றது. மேலதிகமாக, பரீட்சையில் சித்தியடையும் நோக்குடன் தனியார் போதனையையும் மாணவர்கள் நாடுகின்றனர். இப்பின்புலத்தில், மேலே குறிப்பிட்ட இன ஐக்கியம், சமூக இணக்கம் தொடர்பான உணர்வுகளை வளர்க்கும் வகையில் ஆசிரியர் பயிற்சியையும்மாற்ற வேண்டியுள்ளது. சமூக இணக்கத்துக்கான விழுமியங்களையும் திறன்களையும் பெற்றுள்ள ஆசிரியர்கள் மட்டுமே மாணவர்களுக்கு சரியான வழிகாட்டல்களை வழங்கிட முடியும். எனவே ஆசிரியர் பயிற்சிக்கான பாட ஏற்பாட்டில் பிரச்சினை தீர்த்தல். ஆக்கச் சிந்தனை, திறனாய்வுச் சிந்தனை, அகிம்சைப்பாங்கான முறையில் பிணக்குகளைத் தீர்த்தல், தீர்மானம் மேற் கொள்ளல் மற்றவர்களுடைய உரிமைகளைப் பேணல் என்பவை தொடர்பான திறன்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். எனப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆசிரியர்கள் தமது நாளாந்தக் கற்பித்தல் பணியின் போது மாணவர்களிடம் சிறந்த குணப்பண்புகளை வெளிப்படுத்துவதும் முக்கியமானது பிள்ளைகளின் உரிமைகளையும் வெவ்வேறு கலாசாரங்களையும் மதித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை, நேர்மைப்பண்பு, மற்றவர்களுக்குச் சேவையாற்றல்,தன்முனைப்புடன் சமூக சேவை செய்தல் என்பன அவற்றில் சில.

இரண்டாவது தேசிய மொழியைக் கற்றல்

இலங்கையில் சமூக இணக்கத்தை ஏற்படுத்த சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியையும் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியையும் கற்றல் வேண்டும் என்பதும் ஒரு முக்கிய பரிந்துரையாகும்.

ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் முறையான வாய்ப்புகள் இணங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்த உதவ வேண்டும். இதனால் இனமையவாதச் சிந்தனைகளைக் குறைக்க முடியும், ஆசிரியர்கள் சமூக இணக்கத்தை நோக்கி மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க முடியும்.

- உலக வங்கி ,
"இலங்கையின் கல்வி முறையின் பொக்கிஷங்கள் "

இவ்வாறு இரண்டாவது தேசிய மொழியைச் சகல மாணவர்களும் கற்பதற்கான முறையான கொள்கையொன்று வகுக்கப்பட்டால், அம்மொழியைக் கற்கும் மாணவர் தொகையும் அதனைக் கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர் தொகையும் அதிகரிக்கும். சகல மாணவர்களும் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெறும் போது, அவர்களுக்கிடையிலான தொடர்பாடல் இலகுவானதாக அமையும். இதனால் இரு இனத்தவர்களுக்கிடையிலான புரிந்துணர்வு அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் கிட்டுகின்றன. மேலும் " வேற்றுமையில் ஒற்றுமை" காணும் உணர்வு சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விழுமியமாவதற்கான சந்தர்ப்பமும் கிட்டுகின்றது.

சமூக இணக்கத்தைக் கல்வியினூடாக ஏற்படுத்த, இணைப்பாட ஏற்பாட்டுச் செயற்பாடுகளும் பயன்படுத்தப்பட முடியும். இச் செயற்பாடுகளின் போது சகல இன மாணவர் களும் பங்கு கொள்ள முடியும் மாணவர் "பாராளுமன்றங்கள்" சனநாயகப் பண்பினை வளர்க்க உதவும். வளங்களை விருப்புடன் பகிர்வதற்கான செயற்பாடுகள் சகல இனமாணவர்களும் பங்கு கொள்ளும் சுற்றுலாக்கள், விளையாட்டுக்கள், விழாக்கள் என்பன சமூக இணப்பாங்கினை வளர்க்க உதவுவன.

பாடசாலைச் சூழலில் காணப்படும் சமாதானக் கலாசாரமானது சமூக காரணி இவ்வாறான கலாசாரத்தில் மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர் மத்தியிலும் பிரிவுகள் இருக்காது. பேச்சுரிமைக்கு விரிவான வாய்ப்புக்கள் இருக்கும். யாவருடைய கருத்துக்களும் மதிப்பளிக்கப்படும் வெவ்வேறு கலாசார , குழுவைச் சேர்ந்த மாணவர்களும் மதிக்கப்படுவர், அஹிம்சைக்கும் கலந்துரையாடலுக்கும் இடம் இருக்கும், மாணவர்கள் சட்டத்தையும் விதிமுறைகளையும் மதிப்பர். இவ்வாறான சமாதான கலாசாரத்தை நோக்கி ஒவ்வொரு பாடசாலையும் முன்னேறிச் செல்வது சமூக இணக்கத்துக்கான உளப்பாங்கு வளர்ச்சிக்கு இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் ஆரம்ப கல்வியும், இரண்டாம் நிலைக் கல்வியும்

பேராசிரியர்.மா.செல்வராஜா
பீடாதிபதி, கலை கலாசார பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்

ஜப்பானில் தரம் 01 முதல் 09 வரையான பாடசாலைக்கல்வி இலவசமானதும், கட்டாயமானதுமாகும். இங்கு பாடசாலை ஆண்டு ஏப்பிரல் 01 தொடக்கம் அடுத்துவரும் வருடம் மார்ச் 31 வரையானதாக உள்ளது. விடுமுறைகளுடன் கூடிய பாடசாலைகளை அங்குள்ள பாடசாலைகள் கொண்டுள்ளன. வாரநாட்களில் ஐந்து முழுநாட்களும் சனிக்கிழமைகளில் 1/2 நாள் பாடசாலையும் இடம்பெறும். ஆண்டொன்றில் சட்டப்படி 210 நாட்கள் ஆகக் குறைந்தது பாடசாலை இடம்பெற வேண்டுமெனினும் உள்ளூர்ப் பாடசாலைச் சபைகள், பாடசாலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், பாடசாலையின் உட்கருத்தையும், ஒத்துழைப்பையும் ஊக்குவிப்ப தற்கான கல்விசாரா நோக்குடைய வைபவங்கள் என்பவற்றுக்காக மேலும் 30 நாட்களைச் சேர்த்துக்கொள்கின்றன. கற்பித்தல் செயற்பாடுகளின் நிமித்தம் ஒரு வருடத்திற்கு ஒதுக்கப்படும் நாட்கள் 195 ஆகும்.

இங்கு காணப்படும் கட்டாயப் பாடசாலை முறைமையானது அனைத்து மாணவர்களையும் பாடசாலை நூல்களைக் கற்கும் ஆற்றலுடை யோராக உருவாக்குகின்றது, அத்தோடு பிரயத்தனம், விடாமுயற்சி, சுயவொழுக்கம், கல்விசார் ஆற்றல் என்பனவற்றை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்கின்றது. அது மாத்திரமன்றி கல்வி வெற்றியை உறுதி செய்தல் என்பவற்றுக்கான கற்கை, நடத்தைசார் பழக்க வழக்கங்கள் என்பனவும் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் ஆரம்ப நிலையிலும், இரண்டாம் நிலையின் கீழ் மட்டத்திலும் கற்றலின்போது குழுக்களாக்கப்பட்டாலும் அவர்களின் ஆற்றல்கள், தனியாள் வேறுபாடுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டே போதனை வழங்கப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் வடிவமைக்கப்பட்ட கலைத் திட்டமானது சமமான அடிப்படைக் கல்வி, கட்டாயப் பாடசாலை முறைமை என்பவற்றால் மாணவர்களைச் சமமாக நடத்த வாய்ப்பளிக் கின்றது: பாடசாலைகளிடையே நிதி வளப் பங்கீட்டில் சமத்துவம் பேண வழி வகுக்கின்றது. விசேட தேவைகள் கொண்ட மாணவர் தொடர்பில் கவனம் செலுத்தவும் சற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டாயப் பாடசாலை மட்டத்தில் மாணவர் களுக்குப் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படு கின்றன. பாடசாலைச் சபைகளும், அதிபர்களும் ஒவ்வொரு மூன்றாண்டிற்குமொரு முறை கல்வி அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட பாடநூல் களில் இருந்து தெரிவை மேற்கொள்ளுகின்றனர். அல்லது கல்வி அமைச்சு பிரசுரிக்கும் நூல்களின் பட்டியலில் உள்ள பாடநூல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. பாடநூல்களுக் கான செலவினங்களைக் கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டு அரச, மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு வழங்குகின்றன. பாடநூல்கள் மாணவர்களின் உடைமையாகின்றன.

அனேகமாக எல்லாப் பாடசாலைகளும் மாணவர் உடலாரோக்கியம் தொடர்பாகச் சிறந்த நிலையை அடைவதற்கான முறையைக் கொண் டுள்ளன. ஜப்பானிய பாடசாலைகளின் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த மற்றும் விளையாட்டு வசதிகள் சிறப்பாக வுள்ளன. ஏறக்குறைய எல்லா ஆரம்ப பாடசாலைகளும் வெளியக விளையாட்ட ரங்குகளையும், 90% ஆனவை தேகப் பயிற்சிக் கூடங்களையும் (Gymnasia) 75% ஆனவை வெளியக நீச்சல் தடாகங்களையும் கொண்டுள்ளன.

ஜப்பானில் முன் பிள்ளைப் பராயக் கல்வி வீடுகளில் ஆரம்பிக்கின்றது. முன் பிள்ளைப் பராய மாணவர்களுக்கு வினைத்திறனுடன் கல்வியூட்ட இவர்களது தாய்மார்களை இலக்காகக் கொண்டும், பெற்றோருக்கும் அதிகளவான புத்தகங்களும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன. அனேகமான வீட்டுப் பயிற்சிப் போதிப்புப் பழக்க வழக்கங்கள், சரியான சமூக நடத்தைகள், நாடகம், வாய் மொழி மற்றும் எண் சார் திறன்கள் போன்றன இங்கு பிரபல்யமானவை. முன் பிள்ளைப் பராயக் கல்விக்கு இங்கு பெற்றோர் கூடிய பொறுப்பேற் கின்றனர். முன் பிள்ளைப் பராயப் பிள்ளை களுக்கு வீட்டிலிருந்து முறைசார் பாடசாலை களுக்கான பெயற்சிக்குரிய சூழலை வழங்கி குழுசார்ந்த பாடசாலை வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்குமான பொருத்தப்பாட்டை ஏற்படுத்துகின்றனர்.

முன்பள்ளிகளில் (Yochien) பணியாற்றும் கனிஷ்ட கல்லூரிப்பட்டதாரிகளாக மிகுந்து காணப்படுவோர் இளம்பெண்களே. கல்வி அமைச்சின் மேற்பார்வை இடம் பெறினும் அது அதிகார ரீதியான கல்விமுறையின் அங்கமாக விளங்கவில்லை. 58% தனியார் முன்பள்ளி களாகவும் 77% மாணவரை சேர்த்துக் கொள்ப வையாகவும் விளங்குகின்றன. அடுத்து அரசின் தொழிலமைச்சினால் மேற்பார்வை செய்யப்படும் நன்கு விருத்தியடைந்த முறைமையிலான பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள்(Hoikuen) முன்பள்ளிக் கல்வியை வழங்குபவையாகக் காணப்படுகின்றன. மனிதத் தொடர்புகள், சூழல், மொழிசார்ந்த சொற்கள், உணர்வு வெளிப்பாடு போன்ற பரப்புகளில் கல்வியமைச்சின் முன் பள்ளிகளுக்கான கற்கை நெறி இந் நிறுவனங் களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆரம்பப் பாடசாலை வயதுப்பிள்ளைகளில் 99% இற்கும் அதிகமானோர் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். அனைத்துப் பிள்ளைகளும் ஆறு வயதில் அனுமதியைப் பெற்றுப் பிள்ளையின் வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வாக விளங்கும் பாடசாலைக் கல்வியைத் தொடங்குகின்றனர்.

தனியார்பாடசாலைகளில் 1% இற்குக் குறைவான மாணவர்களின் மதியவுணவு மற்றும் வினியோகங்கள் தொடர்பான பாடசாலைச் செலவினங்களைப் பெற்றோர்கள் பொறுப் பேற்கின்றனர். மேலதிக புத்தகங்கள், தனிப்பட்ட பாடங்கள் (Juku) போன்ற பாடசாலை சாராத கல்விச் செலவினங்களும் பல குடும்பங்களுக்கு உண்டு. 1980களில் சராசரியாக 1314 US டொலராக இச்செலவினம் காணப்பட்டது. தனியார் ஆரம்ப பாடசாலைகளில் இதை விட கணிசமான அளவு இது அதிகமாகும்.

ஒரு வகுப்பில் சராசரியாக 31 மாணவர் இருப்பினும் அதை விடக் கூடுதலாக அனுமதிப் பதற்கும் இடமுண்டு. கல்வி சார்ந்ததும், ஒழுக்கஞ் சார்ந்ததுமான செயன்முறைகளில் சிறு குழுக்களாக மாணவர்கள் ஒழுங்கமைக்கப் படுவர். மாணவர் தலைவர்கள் மூலம் வகுப்பறை, பாடசாலை என்பவற்றின் பௌதீக தோற்றப்பாட் டைப் பேணும் பொறுப்பு ஊக்குவிக்கப்படும் வகையில் மாணவர்களுக்குப் பொறுப்பளிக்கப் படுகின்றது.

ஒழுக்கக்கல்வி, விசேட செயற்பாடுகள் உள்ளடங்கலான கல்விசார், கல்விசாராப் பாடங் களின் பரந்த வகைப்பாடங்களின் தொகுப்பாக இக்கற்கை நெறிகள் தொகுக்கப்பட்டுள்ளன. விசேட செயற்பாடுகள் என்பது ஒரு வார காலத்திற்குப் பட்டியலிடப்பட்டு வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளுக்கு ஒப்படைக்கப்படும். ஒழுக்க விருத்தி, குழு முயற்சியின் முக்கியத்துவம், ஒத்துழைப்பு என்பவற்றை வலியுறுத்தும் பாடசாலைச் செயற்பாடுகளுக்கும் வைபவங் களுக்கும் தயார்ப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறந்த கல்விசார் பாடவிதானமானது ஜப்பானிய மொழி, சமூகக் கல்வி, எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களையும் கல்விசாராப் பாடவிதானமானது கலை, கைவினை, சங்கீதம், உடற்கல்வி, ஒழுக்கக் கல்வி என்பவற்றையும் போதிக்கும் நிலை காணப்படுகின்றது.

ஆரம்பக்கல்விக்கான ஆசிரியர்கள் ஒரு வகுப்பறையின் அனேகமான நடவடிக்கைகளை மேற்கொள்வர். ஆசிரியர்கள் சிறந்த தயார் நிலையில் காணப்படுவார்கள். 60% வரை பெண் ஆசிரியர்களும், அனேகமான அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர். ஆசிரியர்களுக்குப் போதுமான அளவு கற்பித்தல் உபகரணங் களாகக் கட்புல சாதனங்கள் கிடைக்கின்றன. ஜப்பானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாடசாலைக்கல்விப்பிரிவால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளைக் கிட்டத்தட்ட அனைத்துப் பாடசாலைகளும் பயன்படுத்தக் கூடிய மிகச் சிறந்த வானொலி தொலைக்காட்சி வசதி முறை அங்கு காணப்படுகின்றது. ஒலிபரப்புத் துறையுடன் கணினிப்பாவனையும் வகுப்பறை களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஜப்பானிய ஆரம்பக்கல்வியானது ஜப்பானிலும், வெளிநாடுகளிலும் மிகச் சிறந்த கல்விமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வாழ்க்கை நீடித்த கல்விக்கான நேர்மனப்பாங்கினை வடிவமைப்ப தாக ஜப்பானிய ஆரம்பப்பாடசாலைக்கல்வி அமையப்பெற்றுள்ளதைக் காணலாம்.

ஜப்பானின் இரண்டாம்நிலைப் பாடசாலைகள் 07-09 வரையான தரங்களையுடைய 12 வயது முதல் 15 வயது வரையான மாணவர்னளைக் கொண்ட கல்வி சார் கற்கைகளில் கூடுதலாகக் குவியப்படுத்தப்பட்ட வகையினவாகும். முறைசார் கல்வியமைப்பின் கீழ், கீழ்மட்ட இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் வேலைவாய்ப்பைத் தேடமுடியும். 1980 வரை 4%இற்கும் குறைவானோர் அவ்வாறு சென்றுள்ளனர்.

1980களில் ஆரம்பப் பாடசாலைகளைப் போன்றே கீழ்மட்ட இரண்டாம் நிலைப்பிரிவிலும் அனேகமானவை பொதுப் பாடசாலைகளாகவும் 5% தனியாருடையதாகவும் இருந்தன. தனியார்ப் பாடசலைச் செலவினம் பொதுப் பாடசாலைக ளிலும் 4மடங்கு அதிகமானது. (தனியார்=3989 டொலர்கள், பொது 934டொலர்கள்)

1988களில் பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியில் 2/3 பங்கினர் ஆண்களாகவும் தலைமைவகிக்கும் அதிபர்களில் 99% ஆண்களாகவும் இருந்தனர். 4ஆண்டுகள் கல்லூரிக் கற்கையை முடித்த பாடத்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களில் 80% பட்டதாரிகளாவர். வகுப்பறைக்கான சாராசரி மாணவர் தொகை 38 ஆகும். ஒவ்வொரு வகுப்பறைக்கும் வீட்டுச் சூழலை ஒத்த அறையொன்று ஒப்படைக்கப் படுவாதால் ஆலோசனை வழங்குபவராகவும், ஆசிரியரின் பணி இரட்டிப்பாகின்றது. ஆரம்பப் பிரிவு மாணவரைப்போல் அல்லாது இப்பிரிவினர் வெவ்வேறு பாடங்களுக்கு வெவ்வேறு ஆசிரியர்களைக் கொண்டிருப்பர். ஒவ்வொரு 50 நிமிடங்களுக்கும் ஒரு முறை ஆசிரியர் வேறொரு வகுப்பினுள் பிரவேசிப்பார்.

விரிவுரை முறைப் போதனையோடு ஆசிரியர்கள் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களைப் பயன்படுத்துவதுடன் சில ஆய்வுகூட வேலைகளையும் மேற்கொள்கின் றனர். வகுப்பறை ஒழுங்கமைப்பு இப்போதும் சிறு குழுக்கள் சார்ந்து காணப்படுகின்றன. இப்பாடசாலை மட்ட மாணவர்கள் நாளாந்தக் கடமைகளிலும் ஏற்கத்தக்க நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், என எதிர்பார்க்கப்படுகின்றது. யப்பானிய மொழி, கணிதப்பாடம் போன்ற ஆரம்பப்பிரிவுப் பாடவிதானத்துடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் ஆங்கிலம் போன்ற ஏனைய மொழிப்பாடக்கல்வியும் இப்பிரிவில் ஆரம்பிக்கின்றது. கீழ்மட்ட இரண்டாம் நிலைப் பாடவிதானம் ஜப்பானிய மொழி, சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், நுண்கலை, சுகாதாரம், உடற்கல்வி போன்ற பாடங்களைக் கொண்டது. ஒழுக்கக்கல்வியும், அது தொடர்பான விசேட செயற்பாடுகளும் கவன ஈர்ப்பைப் பெறுகின்றன. கைத்தொழில்சார் கலைகளிலும் மாணவர்கள் தமது ஆற்றல் வெளிப்படுத்தல்களைக் காட்ட வேண்டும். மாணவர் பாடசாலை நேரத்திலும், அதற்குப் பிற்பாடும் பல்வேறு கழகக் கூட்டங்களிலும் பங்கேற்கின்றனர். அங்கு நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இருப்பதால் மாணவர்கள் பாடசாலைகளை விரும்புவதாகக் கூறுகின்றனர்.

1989ல் இப்பாட விதானம் மறுசீரமைக்கப்பட்டு 1992-1993 பாடசாலை ஆண்டில் பின்பற்றப்பட்டது. சீரமைப்பிற்கான முக்கிய நோக்கம் குடியுரிமை பற்றிய அடிப்படை அறிவினை வழங்கலாகும். அதன்படி ஜப்பானிய வரலாறு, பண்பாடு என்பவற்றிற்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்துத் தாம் ஒரு தேசமக்கள் என்பதை விளங்கிக் கொண்டு உலகின் ஏனைய தேச மக்களுடனான உறவுகளையும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பது சீரமைப்பின் பிரதான நோக்கமாகும்.

மேல்மட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைக்கல்வி ஜப்பானில் கட்டாயமாக இல்லையாயினும் 1989ல் 94% ஆன மாணவர் கீழ்மட்ட இரண்டாம் நிலைப்பாடசாலைகளுக்கு அனுமதி பெற்றனர். இவற்றுள் 25% ஆனவை பிரத்தியேகப் பாடசாலைகளாகும். பொதுப்பாடசாலைகளாயினும் சரி, பிரத்தியேகப் பாடசாலைகளாயினும் சரி இரண்டிலும் இம்மட்டத்தில் கல்வி இலவசமாக வழங்கப்படுவதில்லை. ஒரு பிள்ளைக்கான கல்விக்கு குடும்பமொன்றிலிருந்து வருடாந்தம் 2142$ செலவிடப்படுகின்றதாகக் கல்வி அமைச்சால் கணக்கிடப்பட்டிருந்தது. பிரத்தியேகப் பாடசாலை மட்டத்தில் இது இரு மடங்காக உள்ளது. அனைத்துப் பொது மற்றும் தனியார் மேல்மட்ட, இரண்டாம் நிலைப்பாடசாலைகளும் அவற்றின் பெறுபேறுகளுக்கு அமைவாகவே பட்டதாரிகளை வெற்றிகரமாக நாட்டின் மதிப்பு மிக்க பல்கலைக்கழகங்களுக்கு வழங்குகின்றன. 1980 களில் தனியார் மேல்மட்ட இரண்டாம் நிலைப்பாடசாலைகள் படிநிலை வரிசையில் உயர்தர மட்டத்தைப் பிடித்திருந்தன. இதனால் மாணவர்கள் பரீட்சைகளைச் சிறப்பாகச் செய்வதற்கான கணிசமான அழுத்தம் இருந்தது.

பாடசாலை அனுமதி பெறல் என்ற அம்சம் கூடுதலாகப் பெறுபேறுகளால் தீர்மானிக்கப் பட்டது. பிரவேசம் பெறல் என்பது மாணவரது புலமைமட்டப் பதிவுகளில் தங்கியிருக்கின்றது.

அனேகமான மேல்மட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகள் பொதுவான நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் முழு நேரமாக உயர்கல்விக் கானதும், தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நெறிகளையும் பட்டத்தின் பின் தொழில் வாய்ப்பை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு வழங்கின. 1980 களின் இறுதியில் 70% வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் பொதுக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்தனர்.

முதல்வருட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களுக்குக் கல்விசார் மற்றும் வர்த்தகப் பாடநெறிகள் ஒத்த தன்மையுடையன. அவை ஜப்பானிய மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற அடிப்படைக்கல்விசார் பாடநெறிகளை உள்ளடக்குகின்றன. இப்பாடசாலைகளில் ஆற்றல் வெளிப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்சார், தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வகை விசேடமான பாடநெறிகளை உள்ளடக்கியுள்ளன. 1989ம் ஆண்டின் முழுநேரத் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் 72%ஆன மாணவர்களைக் கொண்டிருந்தது. இவற்றுள் தகவல் நிரற்படுத்தல், கப்பல் செலுத்துதல், மீன் பிடி, வியாபாரத்திற்கான ஆங்கிலம், பீங்கான் வகை உற்பத்தித் தொழில் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

1989ல் மேல்மட்ட இரண்டாம் நிலைக் கலைத்திட்டம் சீரமைப்புக்குள்ளானது. ஆண், பெண் இருபாலாரும் மனைப்பொருளியல் பாடநெறியைத் தெரிவு செய்தல் இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் குடும்பங்களுக்கிடையிலே ஒத்துழைப்பிற்கான எண்ணக்கரு, குடும்ப உறுப்பினர்களின் வெவ்வேறு வகி பங்குகளும், பொறுப்புக்களும், சமூகத்தில் குடும்பத்தின் வகிபங்கு என்பவற்றில் மாணவர்களுக்கு விழிப்புணர்வைக் கொணர்தலில் அரசு கவனம் செலுத்தியது. மாற்றமடையும் சமூகத்தில் குடும்ப உறுதிப்பாட்டைப் பேணல், குடும்பங்கள் தொடர்ச்சியாகச் சமூக உட்கட்டுமானத்தில் மிக முக்கிய பொறுப்பை ஏற்றல் என்பன குறிப்பிடத்தக்கன. மற்றுமொரு மாற்றம் பழைய சமூகக் கல்வி கற்கை நெறியானது வரலாறு, புவியியல், குடியியல் என ஆக்கப்பட்டமையாகும்.

இங்கு மேல் மட்ட இரண்டாம் நிலையில் மிக அதிகமான ஆசிரியர்கள் பட்டதாரிகள் ஆவர். இப்பாடசாலைகள் துறைகளாக ஒழுங்குபடுத்தப்பட்டன. ஆசிரியர்கள் தமது பிரதான துறைகளிலும் வேறுபட்ட பாடநெறிகளிலும் தனியான கவனம் செலுத்துகின்றனர். கற்பித்திலில் 20% பெண்களும் 2.5% பெண்கள் அதிபர்களாகவும் உள்ளனர்.

ஒதுக்கப்பட்ட காலத்தினுள் தேவையான பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பிரதான நோக்கிலான கற்பித்தல் பெரும்பாலும் விரிவுரை முறையினதாகும். பொதுப்பாடசாலைகள் போன்று அணுகு முறையும், பாட ஏற்பாடுகளும் ஒருமைப்பாங்குடையன. 30 நிமிடங்களுக்கு ஒரு முறை ஆசிரியர்கள் வேறு வகுப்பறை செல்வர்.

இம் மட்டத்தில் பயிலும் மாணவர்கள் பாடசாலையிலும் அதற்கு வெளியிலும் பாடசாலையின் அதிகார பிரமாணங்களுக்கு மிகவும் பொறுப்பு கூறக்கூடியவர்களாவர். பாடசாலைச் சட்டங்கள் அறியப்பட்டு அநேகமான மாணவக்கள் கீழ்ப்படிந்து நடக்கின்றனர். பாடசாலை ஒழுங்கமைப்பு நடைமுறைகள் சட்டத்தை அடிக்கடி அமுல்படுத்தி உடைகள் தொடர்பான விதிகள், தலையலங்காரம், மாணவர் ஈடுபடும் வேலைகள், ஓய்வு நேரச் செயற்பாடுகள் என்பவற்றைக் கண்காணிக்கின்றன. பாடசாலைகளே மாணவரது ஒழுக்கவீனத்திற்கு வகை கூற வேண்டும்.

மேல் மட்ட இரண்டாம் நிலையில் அதிகார மட்டத்திற்கு மாணவர்களது வன்முறை, புகைத்தல், வஸ்துகளின் பாவனை, துன்புறுத்துகை போன்ற பிரச்சனைகள் எழுகின்றன. இடைவிலகல் 2.-2.5% வரை உள்ள போதும் 1987ல் 87.5% ஆகப் பட்டம் பெற்றோர் தொகை காணப்பட்டது.

கல்வியில் பாகுபாடு தடை செய்யப்பட்டிருப்பினும் வரலாற்று ரீதியாக ஒரு குழு மக்கள் பாகுபாட்டிற்குட்படுத்தப்பட்டுள்ளனர். இது 1980 களில் ஓரளவு சீராக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமான மாணவர்களுக்கான தொழில் சார் பயிற்சிகள், அவர்கள் சமூகத்தில் சுயாதீனமாகச் செயற்படுவது தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி – இலக்கியம் – பண்பாடு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழப்பாணப் பல்கலைக் கழகம்

0. முன்னுரை

ஒரு சமூகத்தின் உன்னதத்துக்குச் சான்றாக அமைவது அதன் இலக்கியத் தொகுதியே. இலக்கியம் வாய்மொழியாகவும் செவி வழியாகவும் இருந்து பின்னர் எழுத்து மொழியாலாகியது. இது எல்லா மொழி இலக்கியத்துக்கும் பொருந்தும். அவ்வாறு அமைந்த இலக்கியம் மானிடப் பண்பாட்டைப் பதிவுசெய்வதோடு அதன் கூறுகளுக்கு விளக்கந் தருவதாகவும் அமைகின்றது. இங்கு, மொழி, இலக்கியம், பண்பாடு என்பவற்றைத் தனித்தனியாக விரிவாக நோக்குதல் வேண்டும்.

1. மொழி என்றால் என்ன?

மனிதனுடைய மிக முக்கியமான கருத்துத் தொடர்புச் சாதனம் மொழியேயாகும். அவன் சிந்திப்பதற்கும், கருத்துக்களைத் தொடர்புறுத்துவதற்கும் (அறியலுறவு எனத் தமிழ் இலக்கணக்காரர் கூறுவர்) ஒரு சமூகத்தின் அங்கத்தவனாகவும் தனி மனிதனாகவும் செயற்படுவதற்கும் மொழியே முக்கியமான கருவியாக அமைகின்றது. மொழியை நாம் ஒரு மனிதனாக உருவகப்படுத்தி நோக்கின் அம் மனிதனின் உடற்கூறு அம்மொழியின் இலக்கணம் எனவும், ஏனையவை சமூக உளவியலே என்றும் கூறலாம். மொழிக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி றேமன்ட் வில்லியம்ஸ் (Raymond Williams) என்னும் அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> "எங்கள் குழுவைச் சார்ந்த மற்றவர்கள் பேசுவது போலவே நாமும் பேச வேண்டும் என்னும் உணர்வு பெரிதாய் உள்ளது. உண்மையிலே, இத்தகைய போலச் செய்யும் அவாவும் ஆற்றலுமே, மனிதக் கருத்துத் தொடர்புக்கு மையமாக அமையும் மொழியாக்கத்திற்கு அவசியமாகின்றன...... எத்தகைய மனித வாழ்விலோ சமூகத்திலோ எமக்குப் பரிச்சயமான வற்றுடன் நெருக்கமான உறவு கொள்ளும் சிறப்பான பண்பும், நாம் ஒரு குடும்பத்தினை, குழுவினை அல்லது மக்களினத்தினைச் சார்ந்தவர்கள் என்னும் முக்கியமான உணர்வும், சில ஒலிகளை உண்டாக் கல், கேட்டல், என்பவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளன. அத்தகைய சில ஒலிகளை ஆக்குவதற்கும் கேட்பதற்கும் எம்முடைய சமூக உணர்வே பெருமளவு காரணமாகின்றது." [1]

மேற்காட்டிய கூற்று மொழிக்கு அடிப்படையாக அமையும் சமூக உணர்வு பற்றி நன்கு விளக்குகிறது. மனிதன் தான் தனி மனிதனாகவும் சமூக அங்கத்தவனாகவும் தொடர்பு கொண்ட விடயங்கள் பற்றிப் பின்வருவோர்க்கு எடுத்துக் கூறக்கூடிய முக்கியமான சாதனம் மொழியே யாகும். தனிமனிதனுடைய பண்பட்ட நடவடிக்கைகள், பிறருடைய போக்குகள் ஆகியன பற்றிக் கூற முனையுமிடத்து ஒரு பெரிய சமூக நிறுவனத்தையே பிணிக்கும் வகையிலே மொழி அமைந்துவருகின்றது.

மொழியினுடைய மூலங்கள் இரண்டு வகைப்படும். அவை: பேச்சும், எழுத்துமாகும். ஒலிகளை அடிப்படையாகக் கொண்டமைகிறது பேச்சு. அவ்வொலிகளுக்கு வரி வடிவமைத்து வழங்குவது எழுத்து. இவ்விரு மூலங்களுள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சே மிகப் பழமை வாய்ந்ததாகும். பல்லாயிரக் கணக்கான மொழிகள் மிக அண்மையிலேயே எழுத்து வடிவம் பெற்றமையும் இன்னும் எத்தனையோ மொழிகள் இன்னும் எழுத்து வடிவம் பெறாமல் இருப்பதும் பேச்சின் முதன்மைத் தன்மையை எடுத்துக் காட்டுவன வாயுள்ளன.

விலங்குகள், பறைவைகள் முதலியன ஏதோ வகையில் தம்மிடையே கருத்து தொடர்பு கொள்ளுகின்றன. ஆனால் அவற்றின் ஒலிகளோ, சைகைகளோ மனித மொழியைப் போன்ற ஆக்கப் பண்புடையனவாக அமைவதில்லை. மனித மொழி எதிர்பார்ப்புத் தன்மை அற்றதினாலேயே கருத்துத் தொடர்புகளுக்கு வலுவானதொரு மூலமாக அமைகிறது. “நான் இன்று .....” என்று ஒரு வாக்கியத்தைத் தொடங்கினால் அது எவ்வாறு முடியப் போகிறது என்று கூறுவது மிகவும் கடினமானது. அதனாலே தான் மனித மொழி ஏனைய மிருக, பறவை இனங்களின் மொழி போலன்றிக் கூடிய செய்திக் கனம் உடையதாயுள்ளது. இதற்கு மனித மொழியிலுள்ள சொல்லுக்கும் பொருளுக்கு முள்ள தொடர்பும் ஒரு காரணமாக அமைகிறது. மரம் என்னும் சொல் அது குறிக்கும் பொருளின் வடிவத்தைக் குறிப் பதில்லை. அச்சொல் ஓர் அறிகுறியாகவே அமைகிறது. தெய்வச்சிலையார் என்னும் தமிழ் உரையாசிரியர் “உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கண மின்மையான்” என்று இதனைக் குறிப்பிடுகின்றார். [2] நவீன மொழியியலின் தந்தை எனப்படும் சசூர் “Linguistic Sign is arbitary” [3] என்று கூறுவதும் இதனையேதான்.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்தினையும் பண்பாட்டினையும் அறிந்து கொண்டவனாக வாழவேண்டியது அவசியமாகும். அவ்வாறு அவற்றை அறிந்து வாழத் தொடங்கும் போதுதான் அவன் மனிதனாகின்றான். அவ்வாறு அவன் மனிதனாக, கற்றற்குரிய முக்கிய கருவியாக அமைவது மனிதக் கருத்துத் தொடர்பேயாகும். அம்மனிதக் கருத்துத் தொடர்பு மொழியாலேயே நடைபெறுகின்றது. கருத்துத் தொடர்பு (Communication) என்றால் என்ன? கருத்துத் தொடர்பு என்பது சமூக வயப்பட்ட தாகும். சமூக வாழ்வு தொடர்ந்து நடைபெறுவ தற்குக் கருத்துத் தொடர்பு அவசியமாகும். அதற்கேற்ப மனிதன், மிருகங்களோ பறவைகளோ அறியாத பல்வேறு வகையான மூலங்களினாற் பல கருத்துத் தொடர்பு முறைகளை அமைத்துக் கொண்டான். அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது மனிதப் பேச்சுமொழியாகும். “நாம் கருத்துத் தொடர்பு கொள்கின்றோம்” என்றுகூறின் நமக்குள் ஏதோ வகையிலே ஒற்றுமைப்பாடு உண்டென்பது பெறப்படும். நான் என்ன கூறுகிறேன் என்பது எனக்குத் தெரிவது போல, அதனைக் கேட்பவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு பரஸ்பரம் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் ஒரு சமூகப் பிணைப்புக்கு அவசியமாக அமைகின்றது. கருத்துத் தொடர்பிலே ஈடுபடுபவர்களென ஒரு மனிதக்குழுவையோ, சமூகத்தையோ, ஒரு பண்பாட்டைச் சார்ந்த வரையோ குறிப்பிடலாம். அவர்கள் யாவரும் தம்முடைய மொழி, பழக்கங்கள், வழக்கங்கள் ஆகியன பற்றிய விதிமுறைகளை அனுசரித்து நடப்பவர்கள். அவ்விதிமுறைகளை அவர்களே உண்டாக்கினார்கள். அவர்களே அவற்றை அனுசரித்து நடக்க வேண்டியவர்களாயுமுள் ளனர். எனவே மொழி மூலமாக நடத்தப்படும் கருத்துத் தொடர்பும் சமூக வயப்பட்டது என்பது பெறப்படும்.

கருத்துத் தொடர்புக்கு முக்கிய சாதனமாக அமையும் மொழியின் பேச்சு மூலத்து க்கும் எழுத்து மூலத்துக்குமிடையே கணிசமான வேறுபாடுகளை நாம் காணக்கூடியதாயுள்ளது. பேசும்பொழுது நாம் ஏற்படுத்தக்கூடிய ஓசை விகற்பங்கள், முகபாவம் முதலியவற்றை எழுத்திலே வடிக்க முடியாது. “நீ ஏன் அப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாய்?" என்னும் வாக்கியத்தினைக் கூறும்போது கோபம், அன்பு, கழிவிரக்கம், அற்புதம், போன்ற உணர்வுகளை முகபாவத் தினாலே தோற்ற வைத்து அவ்வினாவினை நாம் கேட்கலாம். ஓசை வேறுபாடும் இவ்விடங்களிலே தோன்றும். இவை யாவற்றையும் எழுத்திலே நாம் வடிக்க முடியாது. ஆனால் எழுத்து மூலமான கருத்துத் தொடர்பிலே சிற்சில சிறப்புக்களும் காணப்படுகின்றன. பேச்சு மொழியிலெ ஒரே மாதிரி ஒலிக்கும் இரு சொற்களை எழுத்துமொழி நன்கு வேறுபடுத்திக் காண்பித்துவிடும். உதாரணமாக ஆங்கில மொழியிலே meat : meet என்னும் சொற்கள் ஒரே மாதிரியாவே உச்சரிக்கப்படுகின்றன. ஆனால் எழுதும் போது அவை வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.

2. இலக்கியம் என்றால் என்ன?

இவ்விடத்தில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை இலக்கியம் பற்றிக் கூறியதை பயன் கருதி அப்படியே இங்கு தருகிறேன்: [5]

> இலக்கியம் என்பது ஒரு கலை (art). இக்கலை கலைஞன் உள்ளத்தில் தோன்றும் முறை தனிப்பட்டது இலக்கியமாகப் பரிணமிக்கும் முறையும் தனிப்பட்டது இதன் நோக்கமும் தனிப்பட்டதே. இதனோடு முற்றும் வேறுபட்டது சாஸ்திரம். இது தோன்றும் முறையும், வெளியாகும் முறையும், இதன் நோக்கமும் கலைக்குரியவற்றினின்றும் பெரிதும் வேறுபட்டவையாகும்.
>
> 'கலை' என்று கூறப்படுவதற்கு அழகு-உணர்ச்சியும் இன்புறுத்தும் நோக்கமும் இன்றியமையாதவை. 'சாஸ்திரம்' என்று கூறப்படுவதற்கு இவ்விரண்டும் இன்றியமையாதன வல்ல. அறிவிற்குரிய வி'யங்களைத் தருதலே முக்கிய நோக்கமாகும். ஒரு மாளிகைக்கு இரண்டு வகையான படங்களை வரைதல் கூடும். ஒன்று ஓவியப் புலவன் தீட்டும் மாளிகைச் சித்திரம் இன்னொன்று மாளிகை அமைக்கும் கொற்றன் (Architect) வரைந்து கொள்ளும் அமைப்புப் படம் (Plan). சித்திரத்திற்கும் படத்திற்கும் உள்ள வேறுபாடு கலைக்கும் சாஸ்திரத்திற்கும் உண்டு.

கம்ப ராமாயணத்தை எடுத்துக் கொள் வோம். இது ஒரு கலைக் காவியம். இதிலே, "அழகு-உணர்ச்சி ததும்பு கிறதா? காவிய இன்பம் சிறந்தோங்கு கிறதா?" என்ற கேள்விகளே எழும். இதனோடு தொல்காப்பியத்தை ஒப்பிடுவோம். இப்பெரு நூல் பற்றி, "தமிழ் மொழியின் உண்மையியல்பை இது சரியாகத் தவறின்றித் தெரிவிக்கின்றதா?" என்ற கேள்விதான் உண்டாகும். இது ஒரு சாஸ்திரம். உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்குவது கலை என்றும், மக்களுக்கு அறிவுப் பொருள்களைக் கற்பிப்பது சாஸ்திரம் என்றும் ஆசிரியர் டிக்வின்ஸி கூறியுள்ளார் இவர் கூறியுள்ளதன் திரண்ட கருத்து வருமாறு:

இலக்கியம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது (கலை) உள்ளத்தை இயக்கும் ஆற்றல் படைத்துள்ளது. பிற எல்லாம் (சாஸ்திரம்) அறிவுப் பொருள் களைப் பரப்புவது. எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் என்று பொதுவாகத் தொகுத்து வழங்குகிறோம். இவற்றிலே இரண்டு இயல்புகளைக் காணலாம். அவ்விரண்டு இயல்புகளும் கலந்து தோன்றுதல் காணப்படினும், தனத்தனியாகப் பிரித்து உணர்தற்கும் இவை இடந்தருகின்றன. ஏனென்றால், இவற்றில் ஒன்று மற்றொன்றோடு சிறிதும் இணங்காதபடி அதனைத் தூரத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றி நிறுத்த முயல்கிறது. இவற்றுள் ஒன்றை அறிவிலக்கியம் (Literature of Knowledge) என்றும், மற்றொன்றை ஆற்றல்-இலக்கியம் (Literature of Power) என்றும் வழங்கலாம். அறிவிலக்கியம் அறிவுப் பொருள்களைத் தர முயல்கிறது ஆற்றல் - இலக்கியம் உள்ளத்தை ஊக்குவிக்க முயல்கிறது. முன்னது புலனறிவை விருத்தி செய்வது பின்னது, உணர்ச்சியின் மூலமாக, போதத்தைத் துணையாகக் கொண்டு, ஆன்மாவையே இயக்குகிறது.

அறிவிலக்கியத்தை மதிப்பிடுவதற்கு, "அதிற் கூறப்பட்டன சரியா? உண்மையா? தருக்க நெறியோடு பொருந்துமா?" என்று நோக்குதல் வேண்டும். ஆற்றல் இலக்கியத்தை மதிப்பிடுவதற்கு, "கலை யுணர்ச்சியைத் திருப்தி செய்கிறதா? அழகுணர்ச்சி இருக்கிறதா? இன்பம் விளைவிக் கிறதா?" என நோக்குதல் வேண்டும்.

ஆனால் இருவகை இலக்கிய இயல்புகளும் ஒரு சேரக் கலந்துவரும் சிறந்த இலக்கியங்களும் உள்ளன. திருவள்ளுவரது திருக்குறள் இவ்வகைக் கலப்பு இலக்கியங் களுக்குச் சிறந்த உதாரணமாம்.

இருவகை இலக்கியம் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறியதை இதுவரை பார்த்தோம்.

தொடக்கத்தில் வாய்மொழி மரபாக இருந்துவந்த இலக்கியம் பின்னர் எழுத்துருவம் பெற்றது. மொழிகளில் எழுத்து வடிவம் ஏற்பட்ட காலத்தி லேயே இலக்கியம் எழுத்துருவம் பெற்றிருக்கும் என்று கூறுதற்கில்லை. மீண்டும் மீண்டும் கூறிப் பலர் வாய்மொழியூடாகத் தொடர்ந்து பரவும் வேளையில், நினைவாற்றலால் பாதுகாக்க முடியாத நிலையில் அவ்விலக்கியத்தை எழுத்தில் அமைக்கும் முயற்சி தோன்றியிருக்கக் கூடும் என எண்ணலாம். கிரேக்க இலக்கியம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு முதல் எழுத்துவடிவம் பெற்றதாக அமைந்தது. தெசலே பள்ளத் தாக்கில், ஒலிம்பிக் மலைகளின் காட்சியால் ஏற்பட்ட கற்பனைத் தூண்டுதல், கடவுளர், வீரர் பற்றிய பல பாடல்களைத் தோற்றுவித்தது. இவை கி.மு. 700 அளவில் ஆசியப் பெருங்கண்டத்தின் வியாபாரிகளின் பினீஷிய வரிவடிவில் எழுதப்பட்டன.

மெசபொதேமியா, எகிப்து போன்ற பழமையான நாகரிக நாடுகள், இதனினும் முன்பே பண்பட்ட இலக்கியங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. கி.மு. 2300 அளவிலான களிமண் ஏடுகள் முப்பதினாயிரம், மெசபொதேமிய இலக்கியம், வரலாறு பற்றி அறியத் துணைநிற்கின்றன. அவ்வாறே பைப்பைரஸ், தோல், மர ஏடுகள் போன்றவற்றில் எழுதப்பட்ட எகிப்திய இலக்கியம் கி.மு. 1358க்கும் மிக முந்தியதாக அமைகின்றது. அவ்வாறே எபிரேய மொழியில் எழுந்த யூதரின் இலக்கியம் கி.மு. 1000 முதல் 300 அளவிலான விவிலிய முதற் பகுதியாகிப் பழமையுடையதாக விளங்குகின்றது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் பிளாட்டசின் நாடகங்கள், ரோம இலக்கியத்தின் பழமைக்கு எடுத்தக்காட்டுகளாகின்றன.

கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் சமஸ்கிருத இலக்கியங்கள் வளம்பெற்று விளங்கத் தொடங்கின. சமஸ்கிருத மொழியையொத்த பழமையுடைய மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் சங்க இலக்கியங்கள் எழுத்துருவம் பெற்றனவாக அமைகின்றன. இதற்கு முன்னர் அவை வாய்மொழி மரபாக இருந்தன. அன்று தொடக்கம் இன்று வரை இடையறாது தமிழ் மொழி இலக்கியம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதன் வளர்ச்சிப் படிமுறை பின்வருமாறு அமைந்தது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு. 300 – கி. பி. 200
சங்க இலக்கியங்கள் (செய்யுள்), தொல் காப்பியம் (இலக்கணம்)

கி.பி. 200 – கி.பி. 600
பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (செய்யுள்) சிலப்பதிகாரம் (செய்யுளும் உரைநடையும்) மணிமேகலை, காரைக்காலம்மையார், மூவாழ் வார்கள் (பக்தி இலக்கியத் தோற்றம்) சமண – பௌத்த இலக்கியங்கள்

கி.பி. 600 – கி.பி. 900
சைவ, வைணவ பக்திப் பாடல்கள், பெருந்தே வனார் பாரத வெண்பா,நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம். இறையனார் களவியலுரை

கி.பி. 900 – கி.பி. 1400
பெருங்காவியங்கள், புராணங்கள, அரசவை இலக்கியங்கள், இலக்கண நூல்கள், சித்தாந்த நூல்கள், உரைகள், சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்)

கி.பி. 1400 – கி.பி. 1800
புராணங்கள், பிரபந்தங்கள், சித்தர் பாடல்கள் உரை நடை நூல்கள், தத்துவ சித்தாந்த நூல்கள் தனிப்பாடல்கள்

கி.பி.1800 - இன்றுவரை கவிதை (மறுமலர்ச்சி யடைதல்), சிறுகதை, நாவல் வடிவங்கள், புதிய உரைநடை, பத்திரிகை புதுக்கவிதை.

2.1. இலக்கியமும் மொழியும்

மொழியின் ஒரு வகைச் சிறப்புப் பயன்பாடே எல்லா வகையான இலக்கியங்களு மாகும். அவை வாய் மொழி இலக்கியங் களாகவோ எழுத்து வழக்கில் அமைந்தன வாகவோ ஆகலாம். அவை பண்டைய காலத்து அல்லது நவீன காலத்து இலக்கியங்களாகலாம். இலக்கியம் இல்லாமல் மொழியுண்டு. ஆனால் மொழியின்றி இலக்கியமே இருக்க முடியாது. கம்பனுடைய “தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்□ என்னும் பாடலடி கவிதைக்குச் சொல்லின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டும். மொழியின் ஒரு வகைச் சிறப்புப் பயன்பாடே இலக்கியம் என்று கூறப்படும் போது, ஒரு மொழியின் குறிப்பிட்ட சொற்றொகுதி அல்லது இலக்கணக் கூறுகள் இலக்கிய ஆக்கத்திற்கு உதவுகின்றன என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. மொழியின் எந்த வொரு பகுதியினையோ கூறினையோ இலக்கிய ஆக்கத்திற்கு ஏற்றதல்ல என்று தள்ளி வைக்க முடியாது. குறிப்பிட்ட மொழியின் சொற்றொகுதி, இலக்கண அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒரு வகையான சேர்க்கையே இலக்கியமெனக் கூறலாம். சாதாரண பேச்சுக்குரிய இச்சேர்க்கை வேறுபட்டதாகவே அமையும். இலக்கியப் படைப்பாளியாகிய கவிஞன் தன் கவிதைக்கு வேண்டிய மொழிப் பண்புகளைத் தெரிந்தெடுப்பது போலவே சாதாரண ஒரு மனிதனும் வாக்கியமொன்றினைப் பேசும் பொழுது மொழிப் பண்புகளைத் தெரிந்தெடுக்கிறான். ஆனால், கவிஞனுடைய தெரிவு ஒரு சிறப்பு நிலையில் நடைபெறுகிறது.

2.2. இலக்கியம் மொழியாக ஆராயப்பட்டது.

ஒருகால இலக்கியத்துக்கு அக்கால மொழி வழக்கும் வரலாறும் உதவி வருகின்றன. இதனால் இலக்கியமென்பது மொழி வழக்கே என்றுதான் விளக்கம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலை பண்டைய இலக்கிய இலக்கண ஆசிரியரிடையே பல காலமாக நிலவி வந்துள்ளது. இது அந்திய மொழிகளுக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் பொருந்தக் கூடியதாகும். பண்டைய அறிஞர்கள், கலைஞர்கள் இலக்கியம் என்பது கவிஞனாலோ நாடகாசிரியனாலோ மொழியைச் சிறப்புநிலையில் பயன்படுத்துவது என்றே கருதினர். கவிதையியல் என்பது அவர்களால் யாப்பியல் என்றே கருதப்பட்டது. சாதாரண மக்கள் பேசும் மொழியை விட இலக்கிய மொழியையும் அதன் இலக்கணத்தையும் அறிந்தவனே புலவன் எனக் கொள்ளப்பட்டான். இதனால், இலக்கண ஆசிரியர்கள், இலக்கியத்தைப் பகுத்து உரை கூறவல்லவர்கள் ஆகியோருடைய சொத்தாகவே செய்யுளும் யாப்பும் கருதப்பட்டு வந்தன. மரபு வழி வந்த தமிழ் இலக்கண ஆசிரியர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேய இலக்கண ஆசிரியர்களும் மொழியாய்வு என்பது இலக்கிய விளக்கம், மெய்யியல், அளவையியல் ஆகியவற்றின் அடிப்பட்டதென்றே கருதினர். இலக்கியம் கண்டதற்கு இலக்கணங் கூறும் மரபு தமிழ் மொழியிலிருப்பது இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

எமது பண்டைய இலக்கணங்களும் மேலைத்தேய மரபு வழிப்பட்ட இலக்கணங்களும் எழுத்து வழக்குக்கே முக்கியத்துவம் கொடுத்தன. இதனால், எழுதப்பட்ட இலக்கியங் களுக்கு அல்லது இலக்கிய மொழிக்கே இலக்கணம் யாக்கப்படும் என்னும் மரபு தமிழிலே தோன்றியது. தொல்காப்பிய ருடைய இலக்கணம் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதெனக் கொள்ளும் போது, அவ்விலக்கணம் தோன்றுவ தற்குக் காலாக அதன் முன்னரே பல இலக்கிய ங்கள் (அவை இப்போது கிடைக்காவிடினும்) தோன்றின என்று கூறுவதற்கு இம் மரபே காரணமாகின்றது. எழுத்தால் ஆகிய இலக்கியங்களுக்கு இலக்கணம் எழுதப்பட்ட தாலே, மொழியாய்வு என்பது இலக்கிய மொழி ஆராய்ச்சியாகவே அமைந்தது. இதனால், தமிழில் இலக்கிய மொழி, பேச்சு மொழி என்னும் வேறுபாடு கூர்மை பெறத் தொடங்கியது. ஆனால், தற்கால மொழியியலாளர் மொழி யென்றால் முதன்மைக்கண் பேச்சு மொழியையே கருதுகின்றனர். எழுத்து மொழி அல்லது இலக்கிய மொழி இரண்டாந்தரத்தது என்றே அவர் கொள்வர்.

3. பண்பாடு என்றால் என்ன?

பண்பாடு என்னும் சொல் Culture என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப் பாகும். பண்பாடு என்னும் இப்புதிய கலைச் சொல்லினைத் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் டி.கே.சிதம்பரநாத முதலியாரென அறிகின்றோம்.[6] பண்படு என்னும் வினையடியின் இறுதிக்கு முதலிலுள்ள உயிர் ஒலியின் நீட்டத்தால் பிறந்த பெயர்ச்சொல்லே பண்பாடு என்னுஞ் சொல்லாகும். இம்முறையில் பல வினையடிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் தமிழிலே ஆக்கம் பெற்றுள்ளன. உதாரணம் : மின் - மீன், தொழிற்படு – தொழிற்பாடு, செயற்படு – செயற்பாடு முதலியன. ஊரடவரசந என்னும் ஆங்கிலச் சொல் Kult (குல்ற்) என்னும் ஜேர்மன் மொழி வினையடியிலிருந்து பிறந்ததாகும். இவ்வினையடி முதலில் "நிலத்தைப் பதனிடுதல்" என்னும் பொருளில் அமைந்தது. தமிழ்ச் சொல்லாகிய பண்பாடு, "திருத்துதல்", "செப்பனிடுதல்", "பதனிடல்", "நலனாதல்", தகுதியாதல்" போன்ற பொருள்களைத் தருகின்றது. நிலத்தைப் பண்படுத்துதற்கு காட்சி முறையாக பயன்பட்ட பண்பாடு என்னும் சொல், நாளடைவில் மனதைப் பண்படுத்துதல், சமூகத்தைப் பண்படுத்துதல், நாட்டைப் பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள் விரிவு கொள்ளத் தொடங்கியது. இத்தகைய பொருள்விரிவு பெற்ற நிலையிலேயே 1937 இல் டி.கே. சிதம்பரநாத முதலியார் இச்சொல்லைத் தமிழ்உலகிற்கு அறிமுகம் செய்தார்.

பெரும்பாலானவர்கள் பண்பாடு என்ற சொற் கேட்ட மாத்திரத்தில் அது நலனைக் குறிப்பதாகவே கொள்ளுவர். "அவன் ஒரு பண்பாடுள்ள மனிதன்", "அது பண்பாடுள்ள ஓர் இனம்" என்றெல்லாம் கூறும்பொழுது, அப்பொருளை மனங்கொண்டே கூறப்படுகின்றன.

> "மக்களது அறிவு நலம், கருத்து நலம், குணநலம், கொள்கை நலம், ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மென்மேலும் திருந்தி வரும் திருத்த நிலையே இங்குக் குறிப்பிட்ட பொருள். இது விஞ்ஞானத்தில் வழங்கும் பொருளன்று. ஆனால் மாத்யூ ஆர்னல்டு முதலிய இலக்கியப் பேராசிரியர்கள் சிலர் இப்பொருளை உற்பத்தி செய்துவிட்டனர். இப்பொருளிலேயே தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அறிஞர்கள் இச்சொல்லையும் (Culture) இதன்மொழி பெயர்ப்பாகிய பண்பாடு என்ற சொல்லையும் வழங்கி வருகிறார்கள்."

என்னும் வையாபுரிப்பிள்ளையின் [7] கூற்று இதனை வலியுறுத்துகின்றது. இந்நோக்கு பண்பாடு பற்றிக் கூறும் ஒரு வரைவிலக்கண மெனக் கொள்வதாயமைகின்றது. இதன்படி, குறிப்பிட்ட மதிப்பீடுகளின்படி, மனிதாயம் அடையும் பூரணத்துவ நிலையே பண்பாட்டின் இலட்சியமாகக் கொள்ளப்படும். இத்தகைய பண்பாட்டாய்வானது, மனித இனத்துடன் தொடர்புற்றதாகவும், எக்காலத்துக்கும் ஏற்றதாக வுமுள்ள மதிப்பீடுகளை இனங்கண்டு, விளக்க முற்படுகின்றது. உதாரணமாக, வள்ளுவனுடைய திருக்குறளை உரைகல்லாகக் கொண்டு தமிழர் பண்பாட்டை விளக்குதலை எடுத்துக் காட்டலாம்.

> "பண்பாடு என்பதற்கு மிகச் சுருங்கிய பொருள் கொண்டால் அதன் தன்மை உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்த வற்றுள்ளே சிறந்த வற்றாலும் அறியப்படும் என்று ஆசிரியர் மாத்யூ ஆர்னல்டு (Mathew Arnold) கூறியதை ஒப்புக் கொள்ளுவதாயிருந்தால், வள்ளுவரது திருக்குறள் தமிழ் மக்களது பண்பாட்டின் நேர்மையை மிக நன்றாக எடுத்துக் காட்டு கிறது எனலாம்." [8]

என்ற கூற்றினை ஒப்பிட்டு நோக்குக.

பண்பாடு பற்றி ஆராயும் துறைகளுள் அதி முக்கியத்துவம் வாய்ந்தது மானிடவியல் துறையேயாகும். மானிடவியல் என்னும் விஞ்ஞானத்துறையின் ஆய்வுக்கு இனம்,பண்பாடு ஆகிய இரு விடயங்களும் உள்ளாகின்றன. இனம் பற்றி ஆய்வதை பௌதீக மானிடவியல் என்பர். குறிப்பிட்ட சில பௌதீகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உலகமக்களை இனப்படுத்தும் முயற்சி இவ்வாய்விலே மேற்கொள்ளப்படுகின்றது. பண்பாடு பற்றி ஆய்வதை பண்பாட்டு மானிடவியல் என்பர். மனித சமூகங்களை மக்கள் வாழ்க்கை நிலைகளுடன் தொடர்புறுத்தி ஆராய்கின்றது பண்பாட்டு மானிடவியல். அவ்வாறு ஆராயும்போது, ஒவ்வொரு சமூகத்தின் குறிப்பிட்ட வாழ்க்கைக் கோலம் களமாக அமைந்துவிடுகின் றது. மானிடவியல் துறையைச் சார்ந்த கலைச் சொல்லாக பண்பாடு கருதப்படும் பொழுது, அச்சொல் மனித வாழ்வின் சகல அம்சங்களுடன் பொருந்திய முழுவரலாற்றையுமே சுருக்கிக் கூறிவிடுகின்றது. அவ்வரலாற்றிலே குடும்பம் ஒரு சமூகத்தின் பகுதியாக அமையும் பொழுது அக்குடும்பத்தின் அங்கத்துவனாகிய மனிதனின் வாழ்வு, செயற்பாடுகள் ஆகியன பற்றிய கதையே கூறப்படுகின்றது.

உணவு, உடை முதலியன தயாரிப்ப திலும் உற்பத்தி செய்வதிலும் பின்பற்றப்படும் வழக்கங்கள், பழக்கங்கள், வீடுகட்டுவதில் கவனிக்கப்படும் வழக்கங்கள், திருமணத் தொடர்புகள், மரியாதை செலுத்துதல், பொது வான நடத்தைகள், குறியீடுகள், மரபுகள், புராணக்கதைகள், பரம்பரைக்கதைகள், கூத்துக்கள், கிராமியப் பாடல்கள், கதைகள், வைத்திய முறைகள், மாந்திரீகம், மாயாஜாலம், சமய நூல்கள், கிரியைகள், வழக்கங்கள், விழாக்கள், சடங்குகள், கல்விமுறை, இசை, நடனம், விவசாய வாழ்வு, கலைகள், கைப் பணிகள் போன்றனவும் மனித வாழ்வுடன் தொடர்புடையனவும், அவ்வாழ்வினை நெறிப்படுத்துவனவுமாகிய வேறுபல விடயங்களும் பண்பாடு என்னும் சொல்லாலே சுட்டப்படுகின்றன.

ஓர் இனத்தின் குறிப்பிட்ட ஒரு காலப் பண்பாட்டினை விளங்கிக் கொள்ள,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வினத்தின் நடை, உடை, பாவனை, மொழி, இசை, சிற்பம், முதலிய கலைகள் அவ்வினம் மேற்கொண்டுள்ள இலட்சியங்கள், சமயக் கொள்கைகள், பிறமதம் பொறுக்கும் இயல்பு, அரசியற் கொள்கைகள், வரலாறுகள், சமுதாய நிலைமை, பெண்களின்நிலை, அறிவியற் சிறப்பு, கல்வி, விஞ்ஞானம், நூல் நிலையங்ள், ஆகியன பற்றிய பண்டை நாள் தொடக்கமான வரலாற்றறிவு இன்றியமையாததாகும்.

இத்தகைய பண்பாட்டுச் சிக்கல்கள் மத்தியிலும் உலகில் வாழும் மனிதர்கள் எல்லோருக்குமிடையே சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. மனிதன் ஒவ்வொருத்த னுக்கும் இரண்டு கைகள் உண்டு. கால்களும் உண்டு. உடற்கூறுகளின் வடிவம் சிற்சில இனங்களுக்கு வேறுபட்டுக் காணப்படினும் முகம், வாய், மூக்கு, கண், இருதயம், சுவாசப்பை என்ற உடற்கூற்று இயல்புகளிலே எல்லோரும் ஒன்றுபடுகின்றனர்.

3.1. பண்பாடும் மொழியும்

மனித மொழிபற்றிய ஆய்விலே மொழியியலாளன் ஈடுபடுகிறான். மனிதப் பண்பாடு பற்றிய ஆய்விலே மானிடவியலாளன் ஈடுபடுகிறான். மனிதப் பண்பாட்டின் ஓர் அங்கமாக மொழியமைவதால், மொழியியலாளரும் மானிடவியலாளரும் ஒருங்கு சேர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்வது அவசியமாயிற்று. இதன் பலனாகவே மானிடவியல் மொழியியல் என்னும் புதுத்துறையே தோற்றம்பெறலாயிற்று. மொழி யினால் பண்பாட்டில் ஏற்படுந் தாக்கம், பண்பாட்டி னால் மொழியிலேற்படுந் தாக்கம் ஆகிய இரண்டுமே இத்துறையின் பாற்பட்டனவாயின.

மொழிக்கும் பண்பாட்டுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு என்பதை அரண் செய்யும் வகையிலே பல்வேறு மொழிகளிலும் பண்பாட்டுத் தன்மை வாய்ந்த சொற்கள் பல உள. குறிப்பிட்ட சமூகமொன்றிலே மொழியானது அச்சமூகத்தின் பண்பாட்டின் ஓர் உட்பகுதியாய மைகின்றது. ஒவ்வொரு மொழியிலுமுள்ள சொற்பொருள் வேறுபாடுகளும் அம்மொழி வழங்கும் சமூகத்தின் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள், நிறுவனங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றின் தன்மைகளையே பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு மொழியும் அம்மொழி பேசுவோரின் அனுபவத்தினை வெளிப்படுத்தவும், பகுப்பாய்வு செய்யவும், வகைப்படுத்தவும் குறிப்பிட்ட தனித்துவமான வழிகளைக் கையாளுகின்றன. அவ்வழிகளே மொழியின் சொற்களும் இலக்கணமுமாகும். இவை அம்மொழி பேசும் மக்களின் பழக்கங்கள் வழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. உதாரணமாக, **His Cow : His Cows** என்னும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழிலே மொழிபெயர்க்குமிடத்து பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. தற்காலத் தமிழ் வழக்கில் பெயர்ச் சொற்கள் பன்மை உருபு பெறாமை கவனிக்கற்பாலது. அதனால் மேற்குறிப்பிட்ட இரு ஆங்கிலத்தொடர்களும் இக்காலத்தமிழ்ப் பேச்சு வழக்கில் அவனுடைய மாடு என்ற ஒரு தொடராகவே அமையும். அத்துடன் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு, படர்க்கைச் சுட்டுப் பெயரிலே பேசுபவருக்கு அருகில், கேட்பவருக்கு அருகில், பேசுபவர்- கேட்பவர் ஆகிய இருவருக்குமே தூரத்தில் என்ற மூவகைப் பாகுபாட்டைப் பேணுகின்றது. ஆகவே **His** என்னும் ஆங்கிலச் சொல்லினை அவன், இவன், உவன் என்னும் மூன்று சொற்களுள் எதனாற் குறிப்பது என்னும் இடர்ப்பாடும் உண்டு. இத்தகைய வேறுபாடுகள் ஓரின மக்கள் தம் அனுபவத்தை வெளிப்படுத்த, பகுப்பாய்வு செய்ய, வகைப்படுத்த பயன்படுத்தும் வழக்க மான, விருப்பமான வழிகளையே பிரதிபலிக் கின்றன.

சமூக உண்மைக்கும் வழிகாட்டியாக அமைவதே மொழி. சமூகப்பிரச்சினைகள், சமூகப் போக்குக்கள் ஆகியன பற்றிய எம் சிந்தனையை மொழி பெரிதும் பாதிக்கின்றது. சமூக முயற்சிகள் மல்கியுள்ள இவ்வுலகில் மனிதர் வாழ்வது மாத்திரமன்றி அவர்கள் சமூகத்தின் கருத்துத் தொடர்பின் ஊடகமாயுள்ள குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலே தங்கியிருப்பவர்களாயுமுள்ளனர். சாதாரண கருத்துத் தொடர்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத்தான் மொழியின் தேவை மனிதருக்கு ஏற்படுவதுண்டு என எண்ணுவது தவறாகும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொழிப் பழக்கங்களும் வழக்கங்களுமே அதன் "உண்மையான உலகினைப்" படைக்கின்றன எனலாம். இருமொழிகள் ஒரு சமூக உண்மையினைப் பிரதி பலிக்கமாட்டா. ஏனெனில் ஒரு மொழி இன்னொரு மொழியிலிருந்து ஏதோ வகையில் வேறுபட்டே இருக்கும். சமூகத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதன் காரணமாக குறிப்பிட்ட ஒரு மொழியானது அதற்குத்தொடர்பான சமூகத்தினையே பிரதிபலிக்கும்.

ஒரு சிறிய கவிதையினை விளங்கிக் கொள்வதென்றால், அக்கவிதையிலுள்ள ஒவ்வொரு சொல்லும் குறிக்கும் சாதாரண பொருளினை விளங்கிக் கொள்வதென்பதல்ல. அச்சொற்களாலே பிரதிபலிக்கப்படும் சமூக வாழ்வின் முழுமையைக் கிரகிப்பதேயாகும். மொழி வெறுமனே அனுபவத்தைப் புலப்படுத் துவது மாத்திரமன்றி, அவ்வனுபத்தை வரை விலக்கணப்படுத்துவதாகவும் அமைகின்றது. ஒரு பண்பாட்டினையுடைய சமூகத்தின் உணர்வினைப் புலப்படுத்துவதற்கு மொழியிலுள்ள பல பண்புகள் உதவுகின்றன. அவற்றுள் முக்கியமானது மொழியின் ஆக்கப்பண்பேயாகும். பண்பாட்டினைப் பிரதிபலிக்குஞ் சொற்கள் பல குறிப்பிட்ட ஒரு மொழியில் பண்டைக் காலந்தொட்டே இருந்து வருவதை நாம் அவதானிக்கலாம். ஒரு சமூகப்பண்பாட்டுத் தன்மை அடிப்படையில் மாற்றம் பெறா விட்டாலும்,அதனுடைய மேலமைப்புப் பண்புகள் சில பல்வேறு காரணிகளால் (பிற பண்பாட்டுத் தொடர்பு, அரசியல் மாற்றங்கள் போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம்) மாற்றமடைந்து வருவதையும் நாம் காணலாம். இத்தகைய மாற்றங்களுக்கு முகம் கொடுத்து அம்மாற்றங் களின் உணர்வுகளைப் புலப்படுத்து வதற்கு சமூகத்தின்மொழி தன்னை ஆக்கிக் கொள்கிறது.

அடிக்குறிப்புகள்

1. Williams, Raymond., (1964), **The Long Revolution**, Pelican Edition.
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை (1929), கரந்தைத் தமிழச் சங்கப் பதிப்பு.
3. Saussaure, Ferdinand de., (1966), **Course in General Linguistics**, London: McGraw Hill.
4. Cherry, Collin., (1957), **On Human Communication**, Mass.: MIT Press.
5. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (1952), இலக்கிய தீபம், பாரி நிலையம், சென்னை,. பக். 1-3
6. வையாபுரிப்பிள்ளை, எஸ்., (1963), தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
7. மேலது.
8. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர், ஆசிரியர்களின் கவனத்திற்கு

பேராசிரியர் எஸ் - ஜே - யோகராசா
முதுநிலை விரிவுரையாளர், உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்

இன்று நாம் வாழும் சமுதாயம் முன்னைய காலங்களை விட வேறுபட்டுள்ளது. முன்னைய காலங்களில் மக்கள் இலகுவான வாழ்க்கை வாழ்ந்தார்கள் இன்று இருப்பதைப் போன்று அவசரமான போட்டியான வாழ்க்கை இருக்கவில்லை. இயற்கையோடு ஒட்டி மனிதன் வாழ்ந்தான். ஆனால் இன்று நுகர்வுக் கலாசாரத்திலே அகப்பட்டு வாழ்கிறோம்..

நுகர்வுக் கலாச்சரத்தில் சில பண்புகள் உள்ளன.

1. உற்பத்தி செய்வோர் தமது பொருட்களை விற்று அதிக இலாபம் சேர்ப்பதே அவர்களது நோக்கம். முன்பு நீண்ட நாட்களுக்குப் பாவிக்கக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தார்கள். ஆனால் இன்று பாவித்து விட்டு மிக விரைவாக வீசிவிட்டு வேறு பொருட்களை வாங்க வேண்டும். அப்பொழுதே இலாபம் அதிகமாகும் என்று உற்பத்தியாளர்கள் நினைக்கிறார்கள்.

இந்தச் சுபாவம் இன்று மனித உறவுகளிலும் பரவி விட்டது. பாவித்துவிட்டுப் பிரயோசனம் இல்லை என்றவுடன் எறிந்து விடுவது போல் கணவன் மனைவியைப் பார்த்து 'உன்னாலை எனக்கு என்ன பிரயோசனம்?' என்று கேட்கிறான். பெற்றோர் பிள்ளை உறவு, சகோதர உறவும் இவ்வாறே இருக்கின்றது. தனக்கு வாசி இருப்பவர்களோடு நல்ல உறவை ஏற்படுத்துகின்றனர். மற்றவர்களோடு ஆழமான உறவை ஏற்படுத்த விரும்புவதில்லை.

2. பணம் முதலிடம் வகிக்கின்றது. பணத்தைச் சேர்க்கும் வழி கெட்டவழியா? நல்லவழியா? என்பது முக்கியமல்ல. என்ன கெட்டவழியிலாவது பணம் சேர்க்க வேண்டும்.

3. போட்டி, எங்கும் போட்டி, எதிலும் போட்டி உயர்வுக்குப் போட்டி இருப்பது நல்லது. ஆனல் பொறாமை இருக்கக் கூடாது. இன்று ஐந்தாம் வகுப்பிலேயே மாணவர்களுக்கு மன அழுத்த நோய், மனப்பதட்ட நோய் ஏற்படுகிறது. ஆன்மீதத்திலும் போட்டியே நிலவுகிறது. மதங்களில் ஆன்மீகத்தைக் காண்பது அரிதாக உள்ளது.

மதம் வேறு, ஆன்மீகம் வேறு, ஒருவர் ஆன்மீகத்தில் வளர்ந்துள்ளார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

(அ) இனபேதம், குலபேதம், இடபேதம் , மத பேதம் பாராது எல்லோரையும் சமமாக மதிக்கும் மனப்பக்குவம் உள்ளதா?
(ஆ) நீதி நேர்மையோடு வாழ்கிறேனா?
(இ) மன்னித்து மறந்து வாழ்கிறேனா?
(ஈ) அவசியமானதை மட்டும் பாவித்து எளிமை வாழ்வு வாழ்கிறேனா?
(உ) இருப்பவர்கள் தம்மிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்கிறோமா? பொருளாதாரம், கல்வி, அறிவு, அனுபவம், நல்ல மனப்பான்மை போன்றவற்றைப் பகிர்கிறோமா?

இன்று அவசரமான உலகில் வாழ்வதால் போட்டியான வாழ்வையே எங்கும் காண்கிறோம். உதாரணமாக பற்பசையை எடுத்தால் சந்தையில் பலவிதமான ரகங்களில் பற்பசைகள் உள்ளன. விளம்பரங்கள் மூலம் எதை வாங்குவது என்று தெரியாது கவர்ச்சிக்கும், ஆணுக்கும் அடிமையாகித் தமது பணத்தை மக்கள் விரயம் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு வகைகளும் அவ்வாறே. அவசரமாகச் சமைத்து உண்ணும் உணவு வகைகளை இன்று சந்தையில் காணலாம். அதில் சத்துள்ளதா? என்பதைப் பார்ப்பதில்லை

கவர்ச்சியாக விற்பனை செய்யப்படும் பொருட்களை வாங்கி எமது பணத்தை வீண்விரயம் செய்கிறோம். தேவையாக இல்லாமல் இருந்தாலும் ஆசையாக இருப்பதால் வாங்குகிறோம்.

இப்படிப்பட்ட உலகில் எமது பிள்ளைகள் எப்படி இவற்றிற்கு முகங் கொடுத்து வாழ்வது? முதலில் இப்படிப்பட்ட சூழலில் எப்படி முகங்கொடுத்து வாழ்வது என்ற அறிவு பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ளதா? எது தேவை? எது அவசியம்? எது அத்தியாவசியம்? என்ற அறிவு எமக்கு உள்ளதா? எமது காலத்தில் இப்படியில்லை. இன்று இப்படி எமது பிள்ளைகள் வாழ்கிறார்களே! என்று கோபப்படுகிறோமே தவிர, அப்பிள்ளைகளின் மன, சரீர ஆன்மீகத் தேவைகளைப் புரிந்து கொள்கிறோமோ? அவர்களை எப்படிப்புரிந்து கொள்வது என்ற அறிவு எமக்குள்ளதா?

பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள்? நல்ல பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து எமக்கும் , எமது பாடசாலைக்கும் பெருமை, புகழ் தேடித்தரவேண்டும் என்பதே

பெற்றோர் எதை திர்பார்க்கிறார்கள்? எனது பிள்ளை எல்லாப் பாடங்களிலும் "ஏ" எடுக்க வேண்டும் என்பதே.

ஆனால் நல்ல குணமுள்ள பிள்ளைகளே உருவாக்க வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோமா? அறிவாளிகளை உருவாக்குகிறோம் ஆனால் நல்ல குணமுள்ளவர்களை உருவாக்குகிறோமா? படி படி ...." என்பதைத் தவிர எமக்கு வேறு எதைத் தெரிந்து வைத்திருக்கிறோம்? ஒவ்வொரு வயதிலும் எமது பிள்ளைகளுக்கு சரீர, மன, ஆன்மீகத் தேவைகள் எப்படி மாறுகின்றன? அதை எப்படி நாம் கொடுப்பது? தமக்கு ஏற்படும்

பெற்றோர், ஆசிரியர்கள் சந்திப்பது கூட மாறிவிட்டன. முன்பு நாம் பிழை என்று சிந்தித்தவைகள் இன்று சரி என்று சிந்திக்கின்றன. ஆடம்பரமான வாழ்வே சிறந்தது. அப்பொழுது தான் எம்மை மற்றவர்கள் மதிப்பார்கள் என்று எண்ணுகின்றார்கள் இன்று தொலைக்காட்சி, வானொலிகளில் பெறுமதிகள். சிறந்தவைகள் எவை என்று கூறுபவற்றையே எல்லொரும் செய்யப்பர்க்கிறார்கள். இது எமக்குப் பொருந்துமா? இது தேவைதானா என்பதைச் சிந்திப்பதில்லை.

ஆடம்பரமான வாழ்க்கைக்கு அடிமைப்படும்போது இதிலுள்ள நன்மை தீமைகள் விளங்காது. இரண்டு மூன்று வருடங்களின் பின்பே அதன் விளைவுகள் விளங்கத் தொடங்கும். அப்போது எல்லாம் பிந்திவிட்டது. வாழ்வு சீரழிந்துவிடும்.

இன்று சிக்கலான அவசர யுகத்தில் சந்தேகம் என்று எதற்குப் பின்னால் ஓடுகிறோம்? நான் யார்? என்னிடம் உள்ளவைகள் எவை? எமது புத்தி அறிவைக் கொண்டு ஏமாறாது வாழ்வது எப்படி? மனிதன் மனிதனாக வாழ்வது எப்படி? என்று எமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோமா? இந்த அறிவு பெற்றோர் ஆசிரியருக்கு உண்டா? அறிவு இருந்தாலும் இதைச் சொல்லிக் கொடுப்பது எப்படி என்ற அறிவு உண்டா?

பெற்றோரும், ஆசிரியர்களுமே நாட்டில் முக்கியமான சேவை செய்கிறார்கள். ஆனால் சேவை செய்பவர்கள் என்று யாரை எண்ணுகிறோம், வைத்தியர்கள், அரசியல்வாதிகள், பொறியியலாளர்கள் போன்றோரையே சேவை செய்பவர்கள் என்று நினைக்கிறோம்.

இதை உணர்ந்து முழு சமுதாயம் செயற்பட்டால் எமது தனிமனித வாழ்வும், எமது குடும்பமும், ஊரும், நாடும் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுருவாக்க அணுகுமுறையும் ஆசிரியர் கல்வியும்

பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி
கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் உண்மை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைந்த வகையில் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும் என்பது இன்றைய நோக்கமாக உள்ளது. இலக்கினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலுக்குப் பதிலாக, கற்றல் விளைவுகளை வலியுறுத்தும் வகையில் E5 முறையை பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தலின்படி இலங்கையிலுள்ள பாடசாலைகளில் வகுப்புச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மாணவர் செயற்பாடுகளும் கற்பித்தல் அணுகுமுறைகளும் தேர்ச்சியடிப்படைக் கற்றலுக்கு வழிகோலியுள்ள தால், மாணவரது சுயகற்றல் முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் துணைநிற்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளும் உள்ளன.

வகுப்பறையில் இருக்கின்ற ஒவ்வொரு மாணவரும் கவனத்திற்கு உட்படுதல் நியதி அடிப்படைக் கற்றலின் எதிர்பார்ப்பாக இருக்கும் பொழுது, ஒவ்வொரு தேர்ச்சியிலும் மாணவர்கள் உடல்நிலையை இடைந்து கொள்ளுதல் அவசியமாகும். இந்த அணுகுமுறையில் மாணவர்களை ஒருவரோடு இன்னொருவரை ஓப்பிட்டுப் பார்க்கும் நியமங்கள் முக்கிய மிழந்துள்ளன. ஒவ்வொரு மாணவரும் உயர் தேர்ச்சிகளை அடையும் வகையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஆசிரியர்களுக்கான கல்வியும் பயிற்சியும் இடம்பெறுதல் அவசியம் என்பதைக் கட்டுவாக்கம் வலியுறுத்துகின்றது.

கட்டுருவாக்கம் என்பது கற்றல் அல்லது கற்றலில் அர்த்தம் உருவாக்கும் கொள்கை யாகும். (Richardson, V.1997) பொதுவான நோக்கில் கட்டுவாக்கக் கற்பித்தல் கடினமானதொரு விடயமாகக் கருதப்பட்டாலும் இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அணுகுமுறையாகவும் அமைந்துள்ளது. மேலைநாடுகளில் கலைத்திட்டம் மற்றும் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்தும் செயல்முறையாக கட்டுருவாக்கம் இடம் பிடித்துள்ளது. மாணவர்கள் வகுப்பறைகளிலும், ஏனைய ஆட்களுடனும் இடைத்தக்கம் புரிவதால் தாம் கற்கும் விடயங்கள் தொடர்பாக புதிய அர்த்தம் அல்லது விளக்கத்தை உருவாக்கும் செயல் முறையாக இது அமைகிறது. மரபு வழிக் கற்றல் முறைகளிலிருந்தும் விலகி, மாணவரின் சுய விருத்திக்கு உதவும் முறையாகவும் கட்டுவாக்கத்தைக் குறிப்பிடலாம்.

கட்டுருவாக்க அணுகுமுறையானது மரபுவழிக் அணுகுமுறைகளை முற்றாக மறுக்கவும் இல்லை. முன்னைய அழிவையும் புதிய அழிவையும் இணைப்பதன் மூலம் மாணவர் கற்கும் விடயங்களை உள்வாங்கிக் கொண்டு அவ்வழிவு தொடர்பான ஆழமான விளக்கத்தை ஏ்படுத்தவும் கட்டுருவாக்கம் உதவுகிறது. மரபுவழிக் கற்றல், கற்பித்தலில் நிலவிவந்த பின்னடைவாக, தாம் பெற்றுக் கொண்ட தகவல்களை மாணவர்கள் தொடர்புபடுத்திப் பார்ப்பதில்லை எனக் கூறப்படுவதுடன், மாணவரது வெளிப்பாடுகள் பரீட்சைகள் மூலமே கூடுதலாக வெளிக்கொணரப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுருவாக்கக் கற்பித்தல், தொடர்பாகப் பல உடன்பாடான வாதங்கள் முன்வைக்கப்படுகின்ற போதிலும் சில உடன்படிக்கைகளும் உள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். கற்பித்தல் ஓர் உளவியல் சார்ந்த செயல்முறை யாக மட்டுமன்றி, அது சமூகச் சுழலில் இடம்பெறும் விடயமாகவும் இருப்பதால், வகுப்பறைகளில் இடம்பெறும் செயற்பாடுகளில் தனியாள் மற்றும் சூழமையின் பன்முகத்தன்மை கவனத்தில் கொள்ளப்படுதல் இன்றியமையாதது. மறுபுறத்திலே கற்றலானது எப்பொழுதும் முறைசார் செயற்பாடாகவும் இருப்பதில்லை.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட கருத்திலிருந்து எமது அவதானத்திற்கு உட்படும் முக்கியமான விடயம் கட்டுருவாக்கக் கற்றலுக்குரிய சூழலாகும். குற்கும் விடயங்களுக்கான அர்த்தத்தை கட்டுருவர்கம் செய்வதற்கு சூழலே அடிப்படையாகக இருக்கின்றது. இவ்வாறான சூழல் தனியாள் அல்லது சமூகச் சூழலாக இருக்கலாம். இரண்டாவதாக, ஆசிரியரும் மாணவரும் எதிர்பார்க்கின்ற விடயங்களைத் துரிதமாக அறிந்துகொள்வதற்கு முறைசார் கல்விமட்டும் உதவுகின்றதா என் வினாவுக்குரிய விடையை உளவியலாளர் பியாஜேயின் கட்டுரு வாக்கம் தொடர்பான உளவியல் அணுகுமுறை மற்றும் சமூகக் கட்டுருவாக்க அனுகுமுறை ஆகியவற்றிய வழியே தேடலாகுமென ஆய்வாளர் Richardson எடுத்துக்கூறியுள்ளார்.

ஆசிரியர் கல்வி மற்றும் கட்டுருவாக்கக் கற்பித்தல் ஆகிய விடயங்களில் முறைசார் கல்விக்குரிய இடம் என்ன, முறைனர் அழிவின் மூலம் ஆசிரியர் கல்வியை எவ்விதம் முன்னெடுத்ச் செல்லலாம். ஏன்ற வினாக்கள் எழுகின்றன. முறைசார் அழிவினை வழங்குவ தற்கும் பாடநூல்கள், ஆசிரியர் அழிவுரைட்டி, வழிகாட்டிகள், சோதனை நிகழ்ச்சித் திட்டங்கள் உதவுகின்ற. பாட நூல்களிலும் கற்றலுக்கு உதவும் ஏனைய சாதனங்களுஞ் சரியான விடயங் களைத் தருகின்றன என்ற எதிர்பார்பு எம்மிடையே உள்ளது. ஆயினும் கட்டுருவாக்க அணுகுமுறையிலே இச் சாதனங்கள் மூலம் வழங்கப்படும் அழிவு கேள்விக்குரியதாக உள்ளது.

மேலும் கட்டுருவாக்க அணுகுமுறையின் அடிப் படையில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதிலும் பல வரையறைகள் உண்டு.

முறைசார் பாடநூல்கள் மூலம் மாணவர்கள் எல்லோரும் ஓரே விடயத்தையே கற்பதற்கு வாய்ப்புண்டு. நிலைமாற்றச் செயல்முறை சார்ந்த நோக்கில், பாடநூலை வாசிக்கும் பொழுது, ஓவ்வொரு மாணவரும் பெற்றுக்கொள்ளும் விளக்கம் ஒரே தன்மையினதாக இருக்க முடியாது, மாணவர்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெவ்வேறு விளக்கங்களை பெற்றுக் கொள்ளுமிடத்து முறைசார் அறிவில் உடன்பாடுகள் இருப்பதில்லை. இதன்காரண மாக, கற்கும் சூழல் ஒன்றை உருவாக்கி, மாணவர்கள் பெற்ற விளக்கங்களை அச்சூழலில் பகிர்ந்துகொள்ள இடமளிப்பது முக்கியமானது. ஆசிரியரும் மாணவரின் அர்த்தங்களை விளங்கிக்கொண்டு வசதிப்படுத்தும் பணிக்குத் தம்மை ஆயத்தஞ் செய்துகொள்ள வேண்டும். கட்டுருவாக்க கற்கும் சூழலை உருவாக்குவதில் ஆசிரியர் பொறுப்புவாய்ந்தவர் என்பதனை இது வலியுறுத்துகின்றது.

உளவியல் சார் கட்டுருவாக்கவாதம்

பியாஜே கூறிய விளக்கத்தின்படி, கட்டுருவாக்கம் என்பது அர்த்தம் அல்லது பொருளை உருவாக் கும் செயல்முறை தனியார் சார்ந்தது. கட்டுரு வாக்க கற்பித்தலானது உயர் மட்டத்திலான விளக்கத்தை ஏற்படுத்துவதும் பகுப்பாய்வுத் திறனை விருத்தி செய்யும் எனவும் தெரிவித்துள்ளார். சிமோன் (Simon,1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் எடுத்துக்காட்டிய ஒரு விளக்கத்தின்படி, கணித பாடத்தைக் கற்பிக்கும் பொழுது, கணிதம் தொடர்பான விசாரணைகளும் அறிவைப் பிறப்பித்தலும் அதன் இயல்பாக இருக்க வேண்டும் என்கிறார். மாணவர்கள் கணிதத்தில் உயர்மட்டங்களை அடைதலானது அவர்கள் தமது முன்னைய அனுபவங்களை மீளமைப்ப தன் மூலம் அறிவுசார் பாடங்களை மீளமைக்கும் விதத்தில் தங்கியிருக்கும். இவ்வாறு மீளமைப்புச் செய்யும் தொழிற்பாட்டினை ஆசிரியர் இரண்டு வழிமுறைகளில் ஊக்குவிக்கலாம். 1) அறிவுசார் விடயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த சூழலை உருவாக்குதல் 2) மாணவர்களிடம் தற்போதுள்ள அறிவகப் படத்தினை இனங்கண்டுகொள்ள வழிகோலும் இச்சந்தர்ப்பத்தில் மாணவர்கள் எண்ணக்கரு தொடர்பாகக் கொண்டுள்ள விளக்கம், மற்றும் சிந்தனைச் செயல்முறை களுக்குச் சவாலாக இருக்கும் வேலைகளைச் நிகழ்வதற்கான சூழலை உருவாக்குவதில் ஆசிரியர் ஈடுகாட்ட வேண்டும். மாணவர் சுதந்திரமாகச் சிந்திக்க இடமளித்தல் வினாக் கேட்டல், கருதுகோளாக்கம், கருத்துகளைப் பரிமாறுவதில் அச்சமற்ற நிலை என்பன இங்கு சாதகமான சூழலாகக் கொள்ளப்படுகின்றது. உளவியலாளர்களும் கட்டுருவாக்கச் செயல்முறைச் சட்டத்தினுள் சமூகச் சூழலையும் உள்ளடக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுள்ளனர். பாடசாலை ஒரு சமூக அமைப்பு என்ற அடிப்படையில் இக்கருத்து வலுப்பெறுகிறது.

உளவியலாளரின் கவனத்துக்குட்படாத இன்னொரு பிரச்சனையும் இங்கு கவனத்துக்குட் படுகிறது. உளவியல் சார்ந்த கட்டுருவாக்க வாதிகள் முறைசார் அதிகாரம், அறிவு போன்ற விடயங்களில் நேரடியாகக் கவனஞ் செலுத்துவ தில்லை. பாடநூல்கள் அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் விடயங்கள் அதிகாரபூர்வ மான மூலங்களிலிருந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக இலங்கையின் கல்விமுறை யிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் பாடநூல்களைக் குறிப்பிடலாம். இலங்கையில் குறிப்பிட்டதொரு வகுப்பில், குறிப்பிட்ட பாடமொன்றுக்கு ஒரு பாடநூலே பயன்படுவதால் மாணவர் அறிய வேண்டிய விடயங்கள், செயல்பாடுகள் எல்லாம் ஒரே விதமானவையாகவே அமைகின்றன. பாடநூல்களைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களுக் குள்ள அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களும் எவ்வித விசாரணைகளுமின்றி பாடநூல்களின் மூலம் வழங்கப்படும் அறிவினை ஏற்றுக்கொள்ள வேண்டும். மறுபுறத்திலே மாணவர்கள் தாமாக விருத்தி செய்ய வேண்டிய சிந்தனைச் செயற்பாடுகள் மற்றும் அறிவுநிலை களை வகுப்பில் ஆசிரியர் வழங்கும் வேலைகளின் வழியாகவே அடைந்து கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய சூழலில் மாணவரின் கட்டுருவாக்கச் செயற்பாடுகள் மற்றும் தேடியறியும் பணிகள் முதலியன ஆசிரியரின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் குறைவு. ஏற்கனவே ஆசிரியர்கள் தீர்மானித்த கற்றல் விளைவுகளோடு வரையறுக்கப்படுகின்றன. மாணவர்கள் தேடுதல் மூலம் கண்டறிய வேண்டிய விடயங்களையும் எமது வகுப்பறைக ளில் ஆசிரியர்களே தீர்மானித்து விடுகின்றனர். E5 கற்பித்தல் அணுகுமுறையில் அநேகமான கற்றல் விளைவுகள் இத்தன்மைகளைக் கொண்டுள்ள என்பதை எமது ஆசிரியர்கள் அனுபவபூர்வமாக அறிந்திருப்பர். இவ்வாறான வரையறைகள், அதிகாரங்களில் மாற்றங்கள் உண்டாகுப்போதே E5 மறையிலான செயற்பாடுகள் வெற்றிதரும் எனக் கூறலாம்.

சமூக அறிக்கைக் கட்ருவாக்கம்

உளவியல் சார்ந்த கட்டுருவாக்க நோக்கு ஒருவரைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தி விடும் என்பதனால் ஒரு மாற்றுக் கற்றல் நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையியிலேயே சமூகக் கட்டுருவாக்கம் முன்வைக்கப்படுகின்றது. சமூகக் கட்டுருவாக்கம் பியாஜே எடுத்துக்கூறிய செயல்முறை களினின்றும் வேறுபடுகிறது. சமூகக் கட்டுரு வாக்க வாதிகளின் கருத்திலே தனியாட்களிலும் பார்க்க சமூகமே கருவியாக உள்ளது.

சமூகக் கட்டுருவாக்கம் முன்வைக்கும் இரண்டு அடிப்படைகள் பின்வருமாறு.

01) அறிவு சூழலுடனான இடைத்தாக்கத்தினால் உருவாகிறது.

02) இடைத்தக்கத்துடன் கூடிய சூழலின் தனியாளும் சமூகமும் மார்புத்துக்குள்ளா கின்றனர்.

கற்றல் என்பது செயலின்விளைவு. அறிவு சமூகரீதியாக அமைக்கப்படுகிறது. சமூகச் சூழலில் மொழியைப் பயன்படுத்தும்பொழுது அதற்கான அர்த்தம் உருவாக்கப்படுகிறது என்கிறார் ஜோன்டூயி (Dewey, 1961) சமூகக் கட்டுருவாக்கவாதிகளின்படி கற்றுக்கும் செயலுக்கும் பிணைப்பு உண்டு. செயலும் புலக் காட்சியும் கூட்டாகவே நிகழ்கின்றன. ஏதாவது ஒரு பொருள்பற்றி ஒருவர் கொண்டிருக்கும். விளக்கமானது நோக்கத்திற்கும் சூழமைவுக்கும் ஏற்ப வேறுபடலாம். அறிவு ஆளுக்காள் வேறுபடும். இவ்வாறான கருத்தையே விகொட்ஸ்சியும் (Vygotaky Quoted in Davydov, 1995) எண்ணக்கருவாக்கஞ் செய்துள்ளார். ஒருவரிடத்து ஏற்படும் அபிவிருத்தி யானது சமூகத்துடன் அவர்கொண்டிருக்கும் இடைத்தாக்கத்தில் தங்கியுள்ளது." பிள்ளையை முழுமையாகக் கவனத்தில் கொண்டே விருத்திசார்ந்த வளர்ப்பும் கற்பித்தலும் நிகழ்தல் வேண்டும். இதன் மூலமே அறிவு, ஆற்றல்கள் சமூகரீதியான தேவைகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் உருவாக்கப்படுகின்றன. (Davydov, 1995).

பாடசாலைகளில் நிகழும் கற்றலும், பிள்ளை களின் அபிவிருத்தியும் கலாசாரத்திற்குரிய கருவிகளான எண், எழுத்து வாசிப்பும் உரையாடலும் ஆகிய வழிமுறைகள் வழியே வருகின்றன. பாடசாலையின் கலாசாரச் சூழல் சமூகக் கலாசாரச் சூழலில் கட்டியெழுப்பபட்டும் பொழுது, அச்சூழலை நன்குணர்ந்து ஆசிரியர்கள் செயல்களில் இடுபடுத்தப்படவேண்டும்.

விசிகொட்ஸ்சியால் மன்வைக்கப்பட்ட சமூகக் கொள்கையான அறிகைசூழல் (Scaffolding) மற்றும் அண்மிய விருத்தி வலயம் (Zone of Proximal development) அகியவற்றைக் கற்பித்தலுக்கும் பயன்படுத்தலாம் எனக்கூறும் பொழுது உண்மையில் ஆசிரியருடைய வகிபாகம் யாது?

முறைசார் கலைத்திட்டத்துடன் இவை பொருந்திச் செல்லுமா என்ற வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடைதரும் பல ஆராய்ச்சி முடிவுகளும் உள்ளன. இதனை அடியொற்றி ஆசிரியர் கல்வியானது பன்முக நோக்குடன் விருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் கல்வியிலுள்ள சவால்கள்.

ஆசிரியர் கல்வியில் பொதுவாக இரண்டு அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

01) கட்டுருவாக்க அணுகுமுறைக்கு அமைய கற்பித்தல்.

02) மாணவர்க் தமக்கேயுரிய விதத்தில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.

இவற்றுள் முதலாவது அணுகுமுறை நேரடிப் போதனையாகவும் இரண்டாவது அணுகுமுறைத் தேடுதல்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்துவதாக அமையும். மேற்கூறிய இரண்டு அணுகுமுறைகளிலும் பிரச்சனைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியாயே எடுத்துக்கூறிய உளவியல்சார்ந்த கட்டுருவாக்க அணுகுமுறையின் அடிப்படையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சில முரண்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இரண்டாவது முறையில் கற்பிக்கும் பொழுது மாற்று எண்ணக்கருக்களை முன்வைத்தல், தேடுதலுக்கு ஊக்கமளித்தல் என்பன சில பாடங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். இத்தருணத்தில் கற்கைநெறியின் உள்ளடக்கத்துடன் முரண்படாத வகையில் கற்பித்தல் அணுகுமுறையை விருத்தி செய்யலாம். இது கல்வியலாளருக்குச் சவாலாகவுள்ள விடயமாகும். குற்பித்தல் கற்பித்தல் அணுகுமுறைகள் கற்பிக்கப்படும். புாடம் மற்றும் விடயங்களுக்கேற்ப வேறுபடும். புயிற்சி பெறும் காலங்களில் இவற்றினைக் கருத்திற்கொண்டு படிப்படியான மாற்றங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

சமகால வகுப்பறைகளில் கற்பித்தலானது நுணுக்கமான ஆயத்தங்களை எதிர்பார்க்கிறது. ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இவற்றினைக் கருத்தில் கொள்ள வேண்டும். பாடசாலைக்கு வரும் மாணவர்களும் பெற்றோரும் சமூக மற்றும் கலாசார ரீதியாகப் பன்முகத்தன்மையுடையவர்களாதலால் அவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுதல் ஆசிரியர் முன்னுள்ள சவாலாகும். கட்டுருவாக்க அணுகுமுறைகள் வெற்றியளிப்பதற்கு அவற்றைச் சரியாக விளைதிறனுள்ள ஆயத்தங்களிலும் ஈடுபடுதல் வேண்டும்.

தனியாள் அபிவிருத்திறன் நோக்கில் அல்லது சமூக நிலைமாற்றத்துக்கான நோக்கில் கல்வி வழங்கப்படுதல் வேண்டும் என்பதற்குப் பொருத்தமான கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைகளில் அபிவிருத்தி உளவியலும் கற்பித்தல் முறைகளும் கூடுதலான கவனம் எடுத்தல் முக்கியமானது. ஆயினும் இவ்வாறான அணுகுமுறைகள் சார்ந்தும் வாதப்பிரதி வாதங்கள் உள்ளன. குறிப்பாக மாணவர்மையைக் கற்றல் கற்பித்தல் வெற்றியளிக்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா. மாணவர்மையைக் கற்றலில் மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடமுண்டா என்ற கேள்விகள் உருவாகின்றன. இலங்கையில் நடைமுறையிலுள்ள மாணவர்மையைக் கற்பித்தலில் மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடமுண்டா என்ற கேள்விகள் உருவாகின்றன. இலங்கையில் நடைமுறையிலுள்ள மாணவர்மையைக் கல்விபற்றிய பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப் படுவதன் அவசியத்தை இவ்வினாக்கள் வலியுறுத்துகின்றன.

இலங்கையில் புதிய சீர்திருத்தங்களில் பின்னர் வகுப்பறைச் செயற்பாடுகளில் கட்டுருவாக்க அணுகுமுறைகள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய விரிவான விளக்கங்கள் ஆசிரிய அறிவுரைப்படி வழிகாட்டிகளில் தள்ளப்பட்டுள்ள ஆயினும் இவை ஆசிரியர்களின் சுதந்திரமான தொழிற்பாடு களில் சில மட்டுப்பாடுகளையும் விதிக்கின்றமையைக் கண்டு கொள்ளலாம். கட்டுருவாக்கம் எதிர்பார்ப்பதுபோல மாணவர்களே அர்த்தங் களை உருவாக்கவல்ல, புதிய சிந்தனைகளைத் தூண்டவல்ல நடைமுறை களைத் தொடக்கூடிய வாறான நிகழ்ச்சித் திட்டங்களை ஆசிரியர் பயிற்சியின் போது முன்னெடுக்கப்படுதலின் அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டார் பாடல்கள் மரபும் மாற்றமும்

லெனின் மதிவானம்
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
கல்வி அமைச்சு

ஒவ்வொரு மொழியிலும் எழுத்து தோன்றுவதற்கு முன்னர் வாய்மொழி பாடல்களும் கதைகளும் தோன்ற தொடங்கி விட்டன. அவ்விலக்கிய தொகுதியானது வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக எடுத்துக் கூறுகின்றவையாகவும் சில வேளைக ளில் வாழ்க்கை அனுபவங்களை பின்னணியா கக் கொண்ட புராண இதிகாச கதைகளாகவும் கூத்துக்களாகவும் பல வடிவங்களில் காணப்படுகின்றன. எழுத் திலக்கியமானது நாட்டார் இலக்கித்திலின்று தோன்றியதொன்று என்ற போதினும் அது தோன்றி வளர்ச்சி அடைந்த பின்னர் இதனின்றும் பிரிந்து விட்டது. எழுத்திலக்கியம் தேக்கம் பெற்ற காலங்களியெல்லாம் நாட்டார் இலக்கியத்தின் துணையுடனேயே ஜீவ சக்தி பெற்று வளர்ச்சி அடைந்தது.

மேலும், மனித குலத்தின் தலை சிறந்த படைப்புகள் யாவும் சாதாரண மக்கள் சாரிகளால் உருவாக்கப்பட்டவையாகும். நாட்டார் இலக்கியம் பற்றி பலர் பல கோணங்களில் வரையரை செய்துள்ளனர். அவற்றினை தொகுத்து நோக்குகின்ற போது பின்வரும் விடயங்களை நாட்டார் இலக்கியத்தின் பொது பண்புகளாக எடுத்துக் கூறலாம்.

கூட்டுப்படைப்பாக அமைந்தது,
பரம்பரைபரம்பரையாக கையளிக்கப்படுவது,
ஆசிரியர் பெயரில்லாதது,
இலக்கண வரையறைக்குட்படாதது,
பேச்சு வழக்கிலானது,
வாய்மொழியாக பரவப்படுவது,
எழுதப்படாதது,
அச்சிடப்படாதது,
பல்வேறு வடிவங்களாக திரிபடைவது,
குறித்த மக்கள் குழுவினரால் பகிர்ந்துக் கொள்ளப்படுவது,

மிக அன்மைக் காலம் வரை நாட்டார் இலக்கியம் "எழுதப் படாதது", "அச்சிடப் படாதது" என தமிழக, இலங்கை நாட்டாரியல் ஆய்வாளர்கள் கருதினர். இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்த நா. வானமாமலை இது விடயத்தில் தெளிவான தோர் நிலைபபாட்டினையே கொண்டிருந்தார். அவரது பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்:

"ஒரு நாட்டுப்பாடல் எப்படி உருவாகிறது? தொழில் களங்களில் ஒரு பாட்டை பலர் உருவாக்கலாம். ஏற்றம், நடுகை முதலிய தொழில் பாடல்கள் தொழிலாளரது பொதுவான உணர்ச்சியால் இசையாகி வெளிப்படுவன. அதுவல்லாமல் ஒரு சமூக நிகழ்ச்சியை வருணிக்கவும், சிக்கலான கதையமைப்பை யுடைய கதையை பாடலாக பாடவும் இந்த முறை உதவாது. சிவகாசிக் கலகத்தை எடுத்துக் கொள்வோம். இத்தொகுப்பிலே நாலைந்து பாடல்கள் உள்ளன. அவற்றில் இரண்டில் எழுதியவர் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. எழுதப்பட்டால், எழுதியவர் பெயர் தெரிவதால் மட்டும் அது நாட்டுப்பாடல் தன்மையை இழந்து விடாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தின சுருக்கமான இவ் வரிகளை நோக்கு கின்ற போது ஓர் உண்மை வெளிப்படுகின்றது. அதாவது நாட்டார் இலக்கியம் என்பதே ஒரு நிகழ்வின் மீது பொது மக்கள் கொண்டிருக் கின்ற உணர்வினைப் பிரதிப்பலிப்பதாகவே அமைந்துள்ளன. எழுதப்பட்ட இலக்கியம் மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்டு நாட்டார் பண்பாட்டு மதிப்புகளுக்கேற்ப அது பரவுமாயின் அது நாட்டார் இலக்கியமாகும். மலையக கூத்துகளில் பாடப்படுகின்ற பெரும்பாலான பாடல்கள் அச்சிடப்பட்டு நூல்களாக (உதாரணமாக காமன் கூத்தில் பாடப்படுகின்ற பாடல்களில் பெரும்பாலானவை நவரத்தின ஒப்பாரி என்ற தொகுப்பில் அடங்கியவை யாகும்) வெளிவந்தவையாகும். எனவே நாட்டார் இலக்கியத்தின் பொது தன்மை என்பது அதன் படைப்பில் இல்லை. அதன் பரவுத் தன்னையிலே தங்கியிருக்கின்றது என்பதை மேனாட்டு விமசகர்கள் கூறுவர். இன்னொரு உதாரணத்தை இவ்விடத்தில் நோக்குவோம் :

தண்டுக்கலா தோட்டத்திலே
திண்டு முண்டு கணக்கப்பிள்ளை
துண்டு துண்டா வெட்டிடாங்க
யாரோ தாங்க
கண்ட துண்டமாக போச்சிங்க
கழுத்து முண்டம்
கைலாசம் சேர்ந்திருச்சிங்க"

இப்பாடல் ஹட்டன் பகுதியில் உள்ள தண்டுகலா என்ற தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தை ஆதாரமாக கொண்டு ஜில் சுல்த்தான் என்பரால் எழுதப்பட்ட பாடலாகும். இப்பகுதி மக்களிடையே இப்பாடல் செல்வாக்கு பெற்று பரவியிருக்கின்றது. சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் யாரைக் கேட்டாலும் பாடிக் காட்டுவார்கள். ஆனால் பாடியவர் பெயர் தெரியாது. பாடலின் வடிவம் மெட்டு என்பன நாட்டார் பாடல் வடிவத்திலே அமைந்திருப் பதைக் அறியலாம். எனவே இப்பாடல் மலையக நாட்டார் பாடல் என்ற தகுதியைப் பெறுகின்றது.

இன்னொருபுறத்தில், நாட்டார் இலக்கியம் என்பது சமுதாயத்தின் ஓர் அம்சம். கலையாக்க மரபுகள், விழுமியங்கள் என்பனவற்றின் களஞ்சியமாகவும் உள்ளன. ஆகவே மனிதன் படைக்கும் ஏனையப் பொருட்களைப் போலவே நாட்டார் இலக்கியமும் கால தேச வர்த்தமானங்களுக்கு கட்டுப்பட்டது. சமுதாய மாறுதல்களுக்கு ஏற்ப நாட்டார் இலக்கியமும் மாற்றமடைகின்றது. இம் மாறுதலை பிரதிப்பலிக்கும் வகையில் புதிய சிந்தனைகளும் உணர்ச்சிப் போக்குகளும் தோன்றுகின்றன. எழுத்தறிவற்ற பாமர மக்களிடையே வாய்மொழியாக பரவிய இலக்கிய தொகுதியே நாட்டார் இலக்கியம் எனத் தவறாக கருதினர். அத்தகைய பார்வை கொண்ட நாட்டாரியல் ஆய்வாளர்கள் சிலர் எழுத்தறிவு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பெற்ற புதிய சூழலில் தோன்றிய புதியபாடல்களையும் கதைகளையும் நாட்டார் இலக்கியமாக ஏற்கத் தவறினர். மலையகத்தை பொறுத்த மட்டில் நாட்டார் இலக்கியம் குறித்த ஆய்வுகளில் இத்தகைய தவறான பார்வை நிலவி வருகின்றது.

மலையகத்தில் காலத்திற்கு நாட்டார் இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டே வந்துள்ளன. சில சமயங்களில் சில நாட்டார் இலக்கியம் என்பது வழக்கொழிந்து செல்கின்றது. உதாரணமாக இன்று மலையகத்தில் ஒப்பாரி பாடல்களும் நலுங்கு பாடல்களும் மறைந்து வருகின்றன. பல இடங்களில் ஒப்பாரி வைப்பதற்காக "கூலிக்கு மாரடித்தல்" என்ற நிலையில் காணப்படு கின்றது. இந்நிலையில் சில நாட்டார் பாடல்களும் கதைப்பாடல்களும், கூத்துகளும் மறைகின்றன என்ற வகையில் அவை முழுமையாக மறைகின்றன என குந்தி நாம் ஒப்பாரி வைக்க வேண்டியதில்லை. இன்று இப்பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை மு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்தின் "மலையகத் தமிழர் நாட்டுப்புற பாடல்கள்" என்ற தொகுப்பு எடுத்துக் காட்டுகின்றது. இத் தொகுப்பில் எழுதப்பட்டு பின் மலையக நாட்டார் பாடல் தகுதியை பெற்ற சில பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் தொண்ணூறுக்கு பின் லெனின் மதிவானம் தனது எழுத்துக்களில் இதனை வலியுறுத்தியுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்விடத்தில் பிறிதொர் விடயம் குறித்த தெளிவும் அவசியமானதொன்றாகின்றது. நாட்டார் பாடல்கள் வாய்மொழி தொடர்பு பட்டவையெனவும் அவற்றை எழுத்து வடிவிற்கு கொண்டு வருகின்றபோது அதன் பண்பை இழந்து விடுகின்றது என்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. மலையக மக்களின் கல்வி தகுதியை எடுத்து நோக்குகின்றபோது எழுத்தறிவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த எழுத்தறிவு மட்டத்தில் இந்த நிலையை நினைத்துப்பார்த்திருக்க கூட முடியாது. இந்நிலையில் மலையக மக்களின் நாட்டார் பாடல்களை சேகரித்து வைத்திருக்க கூடிய வசதியோ வாய்ப்போ கிடைத்திருக்காது. மேலும் மலையக நாட்டார் பாடல்களை ஏட்டிற்கு கொண்டு வருகின்ற முயற்சிகள் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. சி. வி. வேலுப்பிள்ளை மலையகமக்களிடையே வாய் மொழியாக காணப்பட்ட நாட்டார் பாடல்கள் சிலவற்றினை தொகுத்து வெளியிட்டமை இத்துறையில் மிக முக்கியமான சாதனையாக அமைந்துள்ளது. சி.விக்கு பின்னர் இத்துறையில் குறிப்பிடத்கக சாதனைகள் இடம்பெறவில்லை என்ற போதினும் மு.சிவலிங்கத்தின் மலையக நாட்டார் பாடல் தொகுப்பு பயனள்ள முயற்சியாக காணப் படுகின்றது. இவைத் தவிர மலையக நாட்டுப்புறவியல் குறித்த பாடல்கள் கதைகள், மற்றும் அது தொடர்பான ஆய்வுகளையும் மேற் கொண்டு வருவதில் பேராசிரியர்கள் ந.வேல்முருகு, க. அருணாசலம், கலாநிதிகள் துரை.மனோகரன், காரை எஸ். சுந்தரம்பிள்ளை திருவாளர்கள் ஏ.பி.எம். கோமஸ், சாரல் நாடன், அந்தனி ஜீவா, வ.செல்வராஜா, சு.முரளிதரன் லெனின் மதிவானம்,ஸ்டாலின் சிவஞான ஜோதி திருமதிகள். அம்பிகை வேல்முருகு ஆர். ஜோதிமலர், சோபனாதேவி முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மலையக மக்கள் தென்னிந்திய தமிழ் கிராம பின்னணியை தமக்கு தாயமாக கொண்டவர் கள் என்ற போதினும் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்ட பயிர் செய்கை முறையின் புதிய சூழல், உற்பத்தி முறை, உற்பத்தி உறவு என்பனவற்றுக்கேற்றவகையில் ஒரு பரந்துப்பட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். தென்னிந்தியாவில் பாடப்பட்ட நாட்டார் பாடல்கள் எவ்வாறு இலங்கையின் பெருந்தோட்ட சூழலுக்கு ஏற்றவகையில் எவ்வாறு மாறறமடைந்தது என்பதை பின்வரும் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தென்னிந்தியாவில்....!

ஏத்தமடி தேவிகுளம்
ஏறக்கமடி மூணாறு
தூரமடி நைனாக்காடு
தொயந்துவாடி நடந்துபோவோம்

என பாடப்பட்ட பாடல் இலங்கையில்....!
ஏத்தமடி பெத்துராசு
இறக்கமடி ராசாத்தோட்டம்
தூரமடி தொப்பித் தோட்டம்
தோடந்துவாடி நடந்துப் போவோம்.

என மாற்றமடைந்துள்ளது.

தென்னிந்தியாவில்....!
ஓட்டவரத பாருங்கடி
ஓட்ட ஒசந்து வரத பாருங்கடி
ஓட்ட மேலே நம்மையா முதலாளி
ஓசந்த சம்பளம் கேளுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பாடப்பட்ட பாடல் இலங்கையில்....!
குதிரவரத பாருங்கடி
குதிர குணிஞ்சி வரத பாருங்கடி
குதிர மேலே நம்மையா கங்காணி
கும்பிட்டு சம்பளம் கேளுங்கடி

என மாற்றமடைந்துள்ளது.

மேற்குறித்த பாடல்கள் தென்னிந்திய வாழ்கையை பிரதிப்பலிப்பதாக மாத்திரமன்று புதிய சூழ்நிலைக்கேற்ப அவர்களது வாழ் முறைகளும் மாற்றமடைந்து உள்ளதை காட்டுகின்றது. இவ்வாழ்நிலை மாற்றம் என்பது மேல்வாரியானதொன்றாக அல்லாமல் அடிப்படையான மாற்றமாகவும் அமைந்துக் காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் நிலவுடமை சமூகவமைப்பில் விசாயிகளாக கட்டுண்டு கிடந்த மக்கள் நிலம் பற்றிய சிந்தனையுடன் இருந்தனர். எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலை நோக்கலாம்.

ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாய நாமறந்தென்.

பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிருக்க
ஏன்டி வந்தே கண்டிச் சீமை

என்ற வரிகள் தாயக நினைவுகளை மீட்பதாக மட்டுமன்றி தமது உடமைக் குறித்த சிந்தனையையும் நிலம் குறித்த சிந்தனையை யும் வெளிப்படுத்துவதாக அமைந்துக் காணப்படுகின்றது. இவ்விடத்தில் பிறிதொரு விடம் பற்றியும் நோக்க வேண்டியுள்ளது. மலையகத்தில் ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கோப்பிப் பயிர்செய்கை யை பருவக்கால பயிர்ச்செய்கையாக அமைந்தமை யினால் மலையகதோட்டத் தொழிலாளர்கள் தமக்கு வேலையில்லாத காலங்களில் இந்தியாவிற்கு சென்ற வந்தனர். தேயிலை உற்பத்தி தொடங்கிய பின்னர் இந்நிலைமை மாற்றமடைந்தாலும் 1957 இல் திருச்சிரா பள்ளியில் இருந்த இலங்கையின் குடியகல்வு அலுவலகம் முடப்படுமட் வரையில் மலையக தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு போய் வந்துக் கொண்டிருந்தனர் என்பதை பி.ஏ. காதர் தமது ஆய்வுகளில் வெளிக் கொணர்ந்துள்ளார். இந்நிலையில் மலையக மக்களிடையே தமது இருப்பு மற்றும் தேசியம் குறித்த சிந்தனை ஆரம்ப நிலையிலிருப்பதைக் காணலாம்.

பிறந்த மண்ணைத் துறந்து புகுந்த மண்ணில் தம் வாழ்வை அமைத்த போது அவர்களின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொண்டன.

"கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்தமலை
அந்தா தெரியுதடி

எண்ணிக் குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கயிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலை யத்த கங்காணி
அந்தமுனா தோட்டமினு
ஆசையாத் தானிருந்தேன்
ஓர மூட்டத் தூக்கச் சொல்லி
ஓதைக்கிறாரே கண்டாக்கையா

காலையிலே நெர புடிச்சு
காட்டுத் தொங்க போய் முடிச்சு
கூட நெறயலேயே- இந்தக்
கூனபய தோட்டத்திலே

கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்
மொட்ட புடுங்குதின்னு
மூணாள விரட்டி புட்டான்

கோனக்கோன மலையேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சினு
ஒதைச்சானய்யா சின்ன தொரை

போன்ற பாடல்கள் ஒரு முதலாளித்துவ சமூகமைப்பில் மலையக மக்கள் தம் உழைப்பை விற்க கூடிய தொழிளாளர் வர்க்க மாக எவ்வாறு மாற்றப்பட்டார்கள் என்பதனை யும் அம் மக்களின் மீதான உழைப்புச் சுரண்டல், இழப்புகள் என்பனவற்றை வேதனையோடு எடுத்துக் காட்டுகின்றன. இப்பாடல்களில் அவர்களோடு நேரடி தொடர்புக் கொண்டிருந்த பெரியாங் கங்காணி, கங்காணி, கணக்கப்பிள்ளை, கண்டக்டர், துரை(தோட்ட நிர்வாகி) ஆகியோர் பற்றியும் அவர்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் பற்றிய அம்சங்களே முனைப்புற்றுக் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது மலையக நாட்டார் பாடல்கள் மலையக மண்ணின் தனித்துவங்களை உள்வாங்கி தனித் துறையாகவே விளங்குகின்றது. இவ்வாறு தமது துன்பத் துயரங்களைப் பாடிய அம்மக்கள் தமது ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தமது போர்க் குணத்தையும் வெளிக்காட்டத் தவறவில்லை. பின்வரும் பாடல்கள் அவர்களின் போர்க்குணத்தை எடுத்துக்காட்டத்தவறவில்லை.

கங்காணி கங்காணி
கருத்தச்சட்டை கங்காணி
நாலு ஆளு வரலேன்னா
நக்கிப் போவான் கங்காணி

கங்காணின்னா கங்காணி
கறுப்புச் சட்டை கங்காணி
சஞ்சியிலே கூட்டி வந்து
சீரழிக்கும் கங்கானி

ஆனை வாரத பாருங்கடி
ஆனை அசைந்து வரதபாருங்கடி
ஆனை மேலே வர சின்னத்தொரய
அதட்டி சம்பளம் கேளுங்கடி

போன்ற பாடல்கள் தம்மை ஈவிரக்கமற்ற வகையில் கொடுமைப்படுத்திய நிர்வாக அதிகாரிகள் பற்றி பாடல்களாக அமைந் துள்ளன. இப்பாடல் வரிகளை நுணிந்து நோக்குகின்ற போது இம்மக்கள் எங்கிருந்தோ வந்து தயாராக இருந்த பொருளாதாரத்தை கபளீகரம் செய்துக் கொண்டவகல்லர். முறாக தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இம்மண்ணுக்கு தாரைவார்த்தே இப் பூமிமை பசுமைநிறைச் சோலைகளாக்கினர். ஒரு புறமான சுரண்டலும் மறுப்புறமான ஒடுக்கு முறைகளும் இம்மக்கள் இம்மண்ணுக்குரிய வர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தியது. இந்த பின்னணியில் எழுந்த தேசிய உணர்வுகளையும் நாம் மேற்குறித்த நாட்டார் பாடல்களில் காணக் கூடியதாக உள்ளது.

நாட்டார் இலக்கியம் என்பது உழைக்கும் மக்கள் திரளினரின் படைப்பு என்பதற்காக அவற்றில் இழையோடியுள்ள அனைத்து அம்சங்களும் போர்க்குணம் மிக்கவையாகவோ அல்லது முற்போக்கானவையாகவோ கொள்ளவது அபத்தமாகும். கிராமபுறத்தை அல்லது தோட்டப்புறத்தை இன்பலோகமாக காணுவதும், அங்கு முரண்பாடுகள் இல்லையென பார்ப்பதும் ஒருவித உள்ளாச பிரயாணிகள் மனோப்பாவமாகும். அவ்வாழ்க் கையை உள்நின்று பார்ப்பவர்களுக்கு அங்கும் சூது. களவு, பொறாமை, சமரசம் முதலிய மனோபாவங்கள் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம். இவ்வாழ்க்கையின் அடியாக தோன்றுகின்ற நாட்டார் இலக்கியத்திலும் இவ்வம்சம் விரவிக் கிடக்கும். கதைப்பாடல் களில் இதன் தாக்கத்தை முழுமையாக காணலாம்.

“கட்டபொம்மு, கான்சாகிபு, முத்துப்பட்டான், காத்தவராயன், குலசேகர பாண்டியன் போன்றோர் மேலாதிக்கத்தை எதிர்த்து முரண்பட்டு மடிந்து நாட்டார் மனத்தில் இடம் பெற்றுவிட்ட வீரத்தியாகிகள் ஆவர். கட்டமொம்முவும் கான்சாகியும் வெள்ளை மேலாதிக்கத்தையும், பட்டனும் காத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயனும் நிலப்பிரபுத்துவத்தையும், குலசேகரன் கன்னடிய ஆமலாதிக்கத்தையும் எதிர்த்து மடிந்தார்கள். இவர்களது வீரத்தையும் தியாகத்தையும் வெகுவாக புகழ்கின்ற கதைப்பாடல்கள், இவர்கள் எதிர்த்து நின்ற மேலாதிக்கங்களைக் கடுமையாக சாடாதது குறிப்பிடத்தக்கது. சொல்லப் போனால் சில சமயங்களில் இவ்வீரர்களுக்கு சமமாக இம் மேலாதிக்கங்களும் புகழப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை. குண்டவர் நெஞ்சு திடுக் கிடும் தோக்கலவார் குலப் பாத்திபனாகிய கட்டபொம்முவின் வீரத்தை போற்றும் கதைப்பாடல்தான் சென்னையிலுள்ள மேலான துரைமார்களையும் பணிவுடன் புகழ்கின்றது. கட்டபொம்முவின் கதையை சொல்லுகிற கதைப்பாடல்கள் எதுவுமே வெள்ளையர்களின் கொடுமையான சுரண்டலை எங்குமே சுட்டிக்காட்டவில்லை."(மார்க்ஸ்.அ, 1991, மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும், பொன்னி புத்தக மையம், சென்னை.பக். 116,117.)

மலையகத்தில் கதைப்பாடலாக உள்ள மதுரைவீரன் கதை இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும். தாழ்த்தப்பட்ட சக்கிலியர் சாதியின ரான மதுரைவீரன் நாயக்க மன்னனின் மகள் பொம்மியை காதலித்து சிறைப்பிடிக்கின்றான். பொம்மியின் தந்தையும் அவர்களது உறவினர்களும் மதுரை வீரனை எதிர்த்துப் போரிட்டு மடிகின்றனர். மதுரைவீரன் திருமலைநாயக்கனிடம் பணியாற்றும் போது நாயக்க மன்னனின் வேளத்திலிருந்த வெள்ளையம்மாளை அவன் சிறையெடுக்க முனைந்த போது மன்னால் பிடிக்கப்பட்டு மாறுகை மாறுகால் வாங்கப்பெற்று தண்டனைப் பெறறான் எனக் கதை அமைந்துள்ளது. அதே கதை உயர்வக்கச் சார்பில் மறுவாசிப்பும் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது.

மதுரைவீரன் காசி அரசனின் மகன் என்றும் விதிவசமாக சக்கிலியர்களால் வளக்கப்பட்டான் எனவும் பிற்காலத்தில் கதை மாற்றியமைக்கப் பட்டுள்ளது. ஓர் உயர்சாதிப் பெண்ணை- உயர் வர்க்கத்தை சார்ந்த பெண்ணை உயர்சாதி- உயர்வர்க்க ஆடவன் ஒருவன் தான் காதலிக்கவோ மணக்கவோ முடியும் எனும் சாதி வர்க்க தர்மத்தை பாதுக்காப்பதற்காக இக்கதை இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது. இறுதியாக அவனை தெய்வமாக உயர்த்த வதும் இத்தகைய நோக்கத்தை நிறைவேற்று வதற்குகாகத்தான் என்பதனையும் அறிய முடிகின்றது. மறுப்புறத்தில் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் மக்கள் மத்தியில் உயர் செல்வாக்கு பெறுகின்ற போது அதனை பொறுத்துக் களெள முடியாது தமது வர்க்கத்தினருக் குரியவராக மாற்றியமைக்கின்ற நிலையினை யும் நாம் இங்கு காணக் கூடிதாக உள்ளது. இவ்வாறே மலையகத்தில் நிகழ்த்தப்படுகின்ற கூத்துகலையான காமன் கூத்தில் சிவனுக்கு எதிரான(மாயவரை தம்மோடு இணைந்த கடவுளாக கொண்டிருப்பினும்) பாடல்களும் உணர்வுகளும்(சில சமயங்களில் சிவன் கஞ்சா குடித்து மயக்க நிலையில் இருப்பதாகவும் சித்திரிக்கப்படுகின்றது) முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் இறுதியாக சிவனை யாராலும் வெல்ல முடியாது என்ற சைவ மேலாதிக்கம் வெற்றிப் பெறுவதனை அவதானிக்கலாம். நாட்டுப்புறப்பாடல்களுடன் கதைப்பாடல்களை ஒப்பு நோக்குகின்ற போது ஓர் உண்மை வெளிப்படுவதனை அவதானிக்கலாம். கதைப் பாடல்களிலே அதிகமாக இந்த சமரசப் போக்குகள் முனைப்புற்றிருக்கின்றன. கதைப்பாடல்களின் உருவாக்கத்தில் அதனை படைப்பவர் யார், அதன் நுகர்வோர் யார், பாடலாசிரியருக்கும் நுகர்வோருக்கும் இடையிலான தொடர்பு என்பன இங்கு தாக்கம் செலுத்தக் கூடியதாக அமைந்திருப்பதை காணலாம். நாட்டார் பாடல்கள் உழைக்கும் சூழலில் பாடப்படுவதால் அவற்றில் சூழலின் நேரடியான தாக்கம் இருப்பதனால் சமரசப் போக்குகள் குறைவாக காணப்படுகின்றன. இருப்பினும் அவற்றிலும் சமரசப் போக்குகள் இல்லை என்றுக் கூறுவதற்கில்லை. எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டாக கங்காணி, கணக்கபிள்ளை சின்னத் துரை முதலானோர் பற்றி பாடல்களில் இப்பண்பினை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

சில பாடல்களை நோக்குவோம்...!

திண்ணயத் திண்ணையை கூட்டுங்கடி- அந்த
தெருவு திண்ணைய கூட்டுங்கடி
நம்மையா கங்காணி சாஞ்சிருக்கிற
சருகை திண்ணைய கூட்டுங்கடி
பாகை படந்ததை பாருங்கடி- அது
பத்திப் படந்ததைப் பாருங்கடி
பாகை விதைபோல நம்மையா கங்காணி
பல்லு வரிசையைப் பாருங்கடி

ஆறடிதான் வங்களாவாம்
அறுவதடி பூந்தோட்டம்
பூஞ்செடிக்கு தண்ணிபோடும்
புண்ணியரே என் பொறப்பு

சாமித் தொரை பங்களாவில்
தாராவும் கோழியும் மேயுதாம்
தோட்டத்தை சுத்தி பூஞ்செடியாம்
சுத்தி வளைஞ்சு பாருங்கடி

பொட்டுப் பொட்டா கையெழுத்தாம்
பொண் பதிச்ச பேணாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
நம்மையா கணக்கபிள்ளை

இப்பாடல்களை அவதானிக்கின்ற போது தம்மை இழிவாக நோக்கி அவர்களின் உழைப்பை சுரண்டுகின்ற இதர வர்க்கங் களுடன் சமரசம் செய்துக் கொள்கின்ற பண்பினை நாட்டார் பாடல்களில் காண்க் கூடியதாக உள்ளது.

எழுத்திலக்கியமோ கல்வெட்டு ஆதாரமோ கிடைக்கப் பெறாத நிலையில் அவற்றினை தேடி ஆராய்வதற்கும்- தமது இருப்பினை நிலைநிறுத்துவதற்கும் நாட்டார் இலக்கியம் குறித்த தேடல் ஆய்வு என்பன அவசியமாக காணப்பட்டன. நவீனக் காலத்தில் நாட்டார் இலக்கியத்தின் ஊடாக சமூக வரலாற்றை தேடுவதற்கு பதிலாக உழைக்கும் மக்களின் சமூகமாற்றப் போராட்டத்தின் ஓர் அங்கமாக நாட்டர் இலக்கிய சேகரிப்பு ஆய்வு முயற்சிகள் நடைப்பெறுகின்றன. அம் முயற்சி இரு தளங்களில் இடம்பெற்று வருவதனைக் காணலாம்.

நாஜி ஜேர்மனியில் இட்லர் மக்களிடையே இனத்துய்மையை வளக்கவும் அதனூடாக மக்களை ஆரிய இனவெறியர்களாக மாற்று வதற்கும் ஏற்ற சாதனமாக நாட்டாரியலை துணையாக்கிக் கொண்டான். இவ்வாறே ஆதிக் அரசியல், நாட்டார் வழக்காறுகளில் செவ்வியல் கூறுகளை இணைத்து அதன் ஆன்மாவை சிதைக்கின்றது. தமிழ் நாட்டை பொறுத்தளவில் நாட்டார் வழிபாட்டு முறைகளில் மத அடிப்படைவாத அரசியலின் ஊடுருவல் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. நாட்டார் தெய்வங்கள் பிறப்பு மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் வடமொழியாக்கம் பெறுகின்றன. பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டார் வழிபாட்டு முறைகள் ஒழிக்கப்பட்டு ஒரேவகையான நிறுவன சமய வழிப்பாட்டு முறை திட்டமிட்டு அறிமுகப்படத்தப்படுகின்றது. (சிவசுப்பிர மணியம். ஆ.-2005, நாட்டார் வழக்காற்றியல் அரசியல், கங்கு வெளியீடு, சென்னை, ப. 58.)

சோவியத் ரசியாவில் நாட்டார் இலக்கியத்தின் சமூக பயன்பாடு என்பது வேறுவிதமாக அமைந் திருந்தது. வர்க்கமற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கான போராட்டத்தில் நாட்டார் இலக்கியத்தை துணையாகக் கொண்டனர். நாட்டார் இலக்கியத்தில் காணப்பட்ட தொழிலாளர் விவசாயிகளின் எழுச்சிகளையும் போராட்டங்களையும் கவனத்திலெடுத்தனர். உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டங்களை முன்னெடுக்கின்ற போது அம் மக்களின் விருப்பு வெறுப்பு அவர் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்பாடு போராட்டங்கள், எழுச்சிகள் முதலியன பற்றிய தேடல்கள் அவசியமாகும் இதனை நாட்டாரியலில் இருந்தே தேடினர். மக்களின் எதிர்க்குரலை வெளிப்படுத்தும் நாட்டார் இலக்கியங்களை சமூகமாற்றப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது.

நவீன காலத்திலும் நாட்டார் இலக்கியம் என்பது தமது சமூக வர்க்க தேவைகளுக்கு ஏற்றவகையில் மறுவாசிப்பு செய்யப்பட்டுள்ளன. பின்நவீனத்துவவாதிகள் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிரான வகையில் நாட்டார் இல்கியத்தை மறுவாசிப்பு செய்துள்ளனர். இவர்களின் ஆய்வுகளில் தலித்தியம், பெண்ணியம், தேசியம்(குறுந் தேசிய வாதம்) முதலியன முனைப்புற்றிருக்கும். மறுப்புறத்தில் பொது மக்கள் சார்பான கண்ணோட்டத்தில் நாட்டார் இலக்கிய தொகுதி மறுவாசிப்பு செய்யப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம், பிரளயனின் உபகதை நாடகம் முதலியவற்றை இங்கு உதாரணங்களாக குறிப்பிடலாம்.

எனவே நாட்டார் இலக்கிய தொகுதியை அரசியல் தளத்தில் பயன்படுத்துகின்ற போக்கு 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே இடம்பெற்று வந்துள்ளதை அவதானிக்கலாம். அப் போக்கு முனைப்படைந்துள்ளது இன்று உலகளவில் முக்கியத்துவம் பெற்று வருவதைக் காணலாம். நாட்டர் விளையாட்டுகள் எவ்வாறு அரசிய லுக்கு (பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வதிகாரியாக திகழ்ந்த மார்கோ என்பருக்கு எதிராக அவனால் கொல்லப்பட்ட தளபதி அக்வினோ வின் மனைவி கோரி அக்வினோ அதிபர் தேர்தலில் போட்டியிட்ட போது) பயன்படு கின்றது என்பதற்கு 1980 களில் பிலிப்பைன்ஸ் நாட்டில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அம்மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த சேவல் சண்டையை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை உதாரணமாக காட்டலாம்.

"இரண்டு நிஜமான கோழிகளை மோத விடுவதற்கு பதிலாக அக்வினோ மாதிரி முகமூடி அணிந்த சேவல், மார்க்கோ முகமூடி அணிந்த இன்னொரு சேவல் என்ற இரண்டு மனித உருவங்களை மோத விட்டார்கள். இந்தச் சண்டைக்கு நடுவராக இருந்து தீர்ப்பு வழங்குபவராக அப்போது அமெரிக்க ஜனாதிபதியாவிருந்த ரெனால்ட் ரீகனின் முகமூடி அணிந்த இன்னொருவர்.

நாடகமாக மாற்றப்பட்ட இவ்விளையாட்டை மக்கள் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். ஒவ்வொரு சுற்றிலும் அக்வினோ வென்றாலும் தீர்ப்பு மார்க்கோவிற்கு சாதகமாக வழங்கப்படுகிறது. மக்கள் வெளியில் இருந்து கூச்சலிடுகிறார்கள். ஆனால் ரீகன் திருந்துவதா யில்லை. திரும்பவும் அடுத்த சுற்றில் அக்வினோ தான் வெல்கிறார். ஆனால் தீர்ப்பு மார்க்கோவிற்கு சாதமாக வழங்கப்படுகின்றது. திரும்பவும் மக்கள் கூச்சலிடுகிறார்கள். ரீகன் திருந்துவதாய் இல்லை. அடுத்தும் இது போல் பாதகமான தீர்ப்பு வழங்கப்படுகிற சமயத்தில் ஆடுகளத்தில் புகுந்து ரீகனை தூக்கிப் பொட்டு விட்டு மக்கள் தீர்ப்பு வழங்குகின்ற பொறுப்பினை கையில் எடுக்கிறார்கள். நாடகமும் நாட்டார் விளையாட்டும் இங்கு மக்கள் பங்கேற்பினை உருவாக்கியது. நாட்டில் அந்தந்த ஊரில் ஒரே நாளில் பலவிதமான குழுக்கள் இதனைச் செய்ததால் மக்களை வாக்களிக்கும் முன் சிந்திக்கிற நிலைக்கு கொண்டு போய் விட்டது. இதற்கு பின்புலத்தில் இருந்த இயக்கத்திக் பெயர் 'PETA' (Phillipines Educational Theatre association). (மு.கு நூ.பக்.41,42.)

மலையக நாட்டர் பாடல்களை ஊன்றிக் கவனிக்கின்றபோது ஓர் உண்மை தெளிவாக தெரிய வரும். நாட்டாரியல் ஆராய்ச்சிக்கே உரிய சில சிறப்பு நெறிமுறைகள் இருப்பினும் ஏனைய துறைகளில் பயின்றுவரும் ஆய்வு நெறிகளும் அணுகுமுறைகளும் தவிர்க்கவிய லாதவாறு அதற்குப் பொருத்தமானவையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துக் காணப்படுகின்றன.உதாரணமாக மலையக மக்களின் வரலாறு தொடர்பான நம்பகமான சான்றுகள் இல்லாத போது அல்லது தெரியாத காலக்கட்டத்தில்- சென்ற ஆண்டின் நடுப்பகுதியில் பொதுவாக மலையக நாட்டார் பாடல்கள் தொகுப்பு முயற்சிகளும் அவற்றிக்கு விளக்கமளிப்பதுமே தேவையாக இருந்தது. அவ்வாறாக நாட்டார் பாடல்களுக்கு விவரன விளக்கம் அளிப்பது கூட மொத்தப் பெரும் சாதனையாக அமைந்தக் காணப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. அதற்கு பிற்பட்டக் காலங்களில் மலையக மக்களின் வரலாற்றை அறிவதில் -அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதிலும் மலையக நாட்டார் இயல் ஆய்வாளர்கள் முக்கிய கவனமெடுத்து வந்துள்ளனர். அவ்வகையில் மலையக மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் தேடி பெறுவதில் இவ்விலக்கிய தொகுதி முக்கியமான ஆவனமாக திகழ்ந்துள்ளது.

தற்காலத்தில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வானது பண்பாட்டு கலசமாக பாதுக்காக்கின்ற அல்லது இரசனை வழி மதிப்பீடுகளாகவோ, வரலாற்றை தேடும் ஆய்வு முயற்சிகளாகவோ அல்லாமல், சமூமாற்றத்தித்திற்கான போராட்டத்தில் அதன் பயன்பாடு குறித்த ஆய்வகளாகவே அவை வளர்ந்துள்ளன. “நாட்டர் இயல் ஆய்வு சேகரிப்பு என்பது வெறும் ஏட்டுச் சுரக்காயாக அல்லாமல் ஏகாதிப்பத்தியத்திற்கு எதிரான போராட்டமா அது திகழ வேண்டும்” என்பார் க.கைலாசபதி. அத்தகைய இயங்காற்றலை சாத்தியப்படுத்துவதற்கு உழைக்கும் மக்களின் விருப்பு வெறுப்பு, நம்பிக்கைகள், உளவியல் பிரச்சனைகள் பற்றிய தேடல் அவசியமானதொன்றாகின்றது. உழைக்கும் மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக இருக்கும் நாட்டார் வழக்காற்றியலே குறிப்பிட்ட சமுதாயத்தின் உற்பத்தி முறை, உற்பத்தி உறவு அதனடியாக எழுகின்ற வர்க்க முரண்பாடுகளையும் கருத்தோட்டங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. வர்க்க உணர்வுடன் தான் வரலாறு எழுதப்படுகின்றது மார்க்சியத்தின் அடிபபடை. அவ்வகையில் ஒவ்வொரு காலக்கட்டத்தின் வரலாறும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே முகிழ்ந்து வந்துள்ளதை வரலாறு எமக்கு எடத்துக் காட்டியுள்ளது. இத்தகைய சூழலில் வெளிப்படுகின்ற நாட்டார் பாடல்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிட்ட வர்க்கத்தின் போர்க்குணத்தையோ சமரசத்தையோ வெளிப்படுத்தி நிற்கும். சமூகமாற்றத்திற்கான இயக்கங்கள், புத்திஜீவிகள் நாட்டார் இலக்கியத்தில் காணப்படும் பலத்தை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுவது பின்னடைவிற்கும் பலவீனத்தை மாத்திரம் கவனத்திலெடுத்து செயற்படுவது விரக்த்திக்கும் விழிவகுக்கும் என்பதை கடந்தகால அனுபவங்கள் எமக்கு எடுத்து காட்டியுள்ளன. இவற்றினை நாட்டார் இலக்கியத் தொகுதி யதார்த்தமாகவே பிரதிப்பலித்து நிற்கும். அந்தவகையில் நாட்டார் இலக்கியம் கடந்தகாலத்தை பிரதிப்பலிக்கின்ற கண்ணாடியாக மாத்திரமன்று நிகழ் காலத்தின் உரத்த குரலாகவும் அமைந்தக் காணப்படுகின்றது. இன்னொரு புறத்தில் வர்க்க மோதலின் பிரதிப்பலிப்பாகவும் ஆயுதமாகவும் திகழ்கின்றது. இந்த பின்புலத்தில் மலையக நாட்டார் பாடல்கள் சேகரிப்பும் ஆய்வுகளும் இடம்பெறவேண்டும்.

இன்னொரு புறத்தில், மலையக நாட்டார் இலக்கியம் குறித்து நோக்குகின்றபோது அவ்விலக்கிய தொகுதி மலையக மக்களின் வாழ்க்கையையும் கலாசார பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டதொரு துறையாக காணப்படுகின்றது.

மலைய'கத்தை பொறுத்த மட்டில் நாட்டார் இலக்கியத்தில் இத்தகைய முயற்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இருப்பினும் நாட்டார் பாடல்களை மாற்றம் செய்தும் , மாற்றம் செய்யாமலும் புதிய பாடல்களை நாட்டார் இசைவகையில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக நாட்டார் இலக்கிய வடிவ மெட்டினை பயன்படுத்தி பின்வரும் கவிதையை எழுதியுள்ளார்.

கும்மியடி தோழி கும்மியடி- மலை
நாடு விழித்தெழக் கும்மியடி
நம்மை உறுஞ்சி கொழுத்திட்ட அட்டைகள்
காலில் நசிபடக் கும்மியடி

தேயிலை கிள்ளிய கைகளிற் செங்கொடி
கொள்ளை ஒளிவிடக் கும்மியடி
ஞாயங்கள் யாவர்க்கும் ஒன்று பொதுவொரு
நீதி எழுந்திடக் கும்மியடி

பள்ளிப்படிப்புக்கும் பட்டம் பதவிக்கும்
பிள்ளைகட்குத் தரம் இல்லையென்றார்
கள்ளங் கபடங்கள் கண்டு கொண்டாயெங்கள்
கல்வியுரிமைக்குக் கும்மியடி
....
கூடுகள் போல் லயன் காம்பராச் சீவியம்
கூலியடிமைக்குப் போதுமென்றார்
வீடு வளவுகள் வீதிகள் தோட்டங்களிற்
வேண்டும் எமக்கென்று கும்மியடி

இப்பாடல் வரிகளில் மலையக நாட்டார் இலக்கியத்தின் தாக்கம் காணப்படுவதனைக் காணலாம். இத்தகுதியை மாத்திரம் கொண்டு இவற்றை நாட்டார் பாடல்களாக கொள்ள முடியாது. இப்பாடல் மலையக மக்களிடையே பரவி நாட்டார் இலக்கியத் தன்மையை பெறுமாயின் அவற்றை நாட்டார் பாடலாக ொகள்ள முடியும்.

மலையக நாட்டார் வழக்காற்றியல் நீரோட்டமானது அரசியல் சமூக பொருளாதார நோக்கில் ஆய்வு செய்யப்படல வேண்டும். ஆய்வு தேடல் மூலமாக கிடைக்கின்ற முடிவுகள் பொதுமைப்படுத்தப்படல் வேண்டும். நாட்டார் இலக்கியத்தில் உழைக்கும் மக்களின் எதிர்ப்புக் குரல் சற்று தூக்கலாக வெளிப்படும். இதனை ஆதாரமாகக் கொண்டு அவ்விலக்கிய தொகுதியில் சமரசப் போக்குகள் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை. நாட்டார இலக்கியத்திலும் சமரசங்கள், மௌனங்கள், குறிப்பிட்ட காலக் கட்ட கருத்துநிலைகளில் உருவாகும் ஆதிக்க கருத்துக்கள் என்பன இடம்பெறும். இவற்றினையும் கவனத்திலெடுத்துக் கொள்ளல் அவசியம்.

அவ்வாறே, மனித சமூகத்தின் வளர்ச்சியை தூண்டும் சக்தியாக அதிகாரத்திற்கு எதிராக போராடும் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே சமூகத்தை மாற்றியமைக்க முடியும். தமது அடிமை முறையிலிருந்து விடுப்பட்டு பொருளாதார ரீதியாகவும் ஆத்மார்த்த ரீதியாகவும் சுதந்திர பிரஜையாக வாழ முடியும். இந்த விடுதலையை அடைவதற்கு தொழிலாளர்கள்- விவசாயிகள் தங்கள் நலன்சார்ந்த கட்சியை அமைத்துக் கொள்ள வேண்டும். புரட்சிகர சிந்தாந்தம் இன்றி புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. அவ்வகையில் மிகவும் முன்னேறிய சித்தாந்தத்தையும் அது பெற்றிருக்க வேண்டும்.

இத்தகையதோர் மானுட அணியில் கால் பதித்து புதியதோர் சமுதாயத்தை நோக்கி நகர்வதே மலையக நாட்டார் இலக்கியத்தின் இன்றைய தேவையாகும். இவவாறானதோர் சூழலில், இன்னொரு விடியலுக்காய் மனித சமூகத்தின் சிகரத்தை எட்டிப் பிடிக்க கடின உழைப்பை மேற்கொள்ளும் இலக்கிய முயற்சிகளுக்கான தேவை இன்று மலையகத்தில் உருவாகியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன், LL.B (COL.); LL.M (COL.)
P.G Diploma in Criminology & Criminal Justice (J' PURA)
Diploma in Conflict Resolution (BCIS) (U PEACE – COSTARICA)
பணிப்பாளர், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,
திருக்கோணமலை பிராந்திய நிலையம்.

உலகிலுள்ள அனைத்துச் செல்வங்களிலும் பிள்ளைச் செல்வமானது மிகவும் உயர்ந்த செல்வமாக எல்லோராலும் மதிக்கப்படுகின்றது. எனவே பிள்ளைச் செல்வங்களை மிகவும் சிறப்பான முறையில் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் பொழுதே அவர்களின் உன்னத மானதும் உள்ளார்ந்ததுமான தன்மையை அனைவராலும் உணர்ந்து கொள்ளமுடியும். எதிர்காலத்தில் சிறந்த சந்ததியொன்றை நாம் உருவாக்க வேண்டுமானால் தற்காலத்தில் பிள்ளைகளின் வாழ்வாதார நலன்கள் சிறப்பாகப் பேணப்பட்டு அவர்கள் சிறந்த முறையில் வழிகாட்டப்பட்டு அவர்களை சகல துஷ்பிரயோகங்களிலிருந்தும் புறக்கணிப்புக் களிலிருந்தும் பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "1989ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேசச் சமவாயத்தின்" (INTERNATIONAL CONVENTION ON CHILD RIGHTS OF 1989) முதலாவது உறுப்புரை யானது "18 வயதிற்கு குறைந்த மனித குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சிறுவர்கள்" என எடுத்துரைக்கின்றது. எமது நாட்டு பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட 1939 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் (YOUNG PERSONS AND CHILDREN ORDINANCE NO: 11 OF 1939) பிரவு 88 ஆனது 14 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் "பிள்ளை" எனவும், "14 வயதுக்கும் 16 வயதுக்கும்" இடைப்பட்ட எந்தவொரு நபரும் "இளம் பராயத்தினர்" எனவும் எடுத்துரைக் கின்றது. 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) 18 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் "பிள்ளை" எனக் கருதப்படுதல் வேண்டும் என எடுத்துரைக் கின்றது. குழந்தைகள், பிள்ளைகள், சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினர்கள் என எந்தப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் அவர்கள் அனைவரும் மனித குலத்தின் இன்றியமையாத செல்வங்களே.

பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பில் சமூக நிறுவனங்கள் (SOCIAL INSTITUTIONS) எத்தகைய கடமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டுள்ளன? என்பது பற்றி 'பிள்ளைக ளினது கட்டுக்காவல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு" (CUSTODY, PROTECTION AND MAINTENANCE) தொடர்பாக எமது உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் மூலம் காலத்துக்கு காலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள சட்டக் கோட்பாடுகள், இலங்கையின் அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகள், பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரைகள் என்பவற்றை தொடர்புபடுத்தி ஆய்வு செய்வது பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்ப்புச் சட்டங்கள் ( DECIDED CASE LAWS):**

"பிள்ளையின் கட்டுக்காவல்" **(CUSTODY OF THE CHILD)** தொடர்பாக எமது நாட்டின் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புக்களே அடிப்படையான சட்டமாக விளங்குகின்றன. உச்ச நீதிமன்றங் களினால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் எதிர்காலத்தில் கீழ் நீதிமன்றங்களில் எழுகின்ற வழக்குகளை கட்டுப்படுத்தும் தீர்ப்புச் சட்டங் களாக அமைந்துவிடுகின்றன. எனவே கீழ் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புக்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டக்கோட்பாடுகளை கட்டாயம் பின்பற்ற வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன. எமது நாட்டின் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் . "பிள்ளையின் கட்டுக்காவல்" தொடர்பில் காலத்துக் காலம் மாறுபட்ட சட்டக்கோட்பாடுகளை உருவாக்கியுள்ளன.

"பிள்ளையின் கட்டுக்காவல்" என்பது பிள்ளையின் நாளாந்த வாழ்வுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதையும் மற்றும் பிள்ளையின் மீது பௌதீகரீதியான கட்டுப்பாட்டைக் கொண்டிருப்ப தனையும் குறிக்கின்றது. பிள்ளையின் நாளாந்த வாழ்வுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் என்பது பிள்ளையின் நாளாந்த வளர்ப்பு விடயம், பிள்ளையின் கல்வி சார் விடயம், பிள்ளையின் ஒழுக்கம் சார் விடயம் பிள்ளைக்கான சுகாதார வசதி மற்றும் மருத்துவ வசதி தொடர்பான விடயம், பிள்ளை மூன்றாம் திறத்தவருடன் உறவை பேணுவது தொடர்பான விடயம் மற்றும் இவற்றையொத்த ஏனைய நாளாந்த செயற்பாடுகள் என்பவற் றைக் குறிக்கின்றன.

கணவனுக்கும் மனைவிக்கிடையில் நீதிமன்றத்தின் மூலமான "நீதிமுறைப் பிரிவு" (JUDICIAL SEPARATION) அல்லது "விவாகரத்து" (DIVORCE) இடம்பெறும் போது பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பில் அவர்களுக்கிடையில் போட்டி மற்றும் முரண் பாடான நிலைமை காணப்படும். அவ்வாறான நிலைமை காணப்படுமாயின் நீதிமன்றம் பிள்ளையின் கட்டுக்காவல் யாருக்குரியது? என்பது தொடர்பாகவும் விசாரணையை மேற்கொண்டு தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றத்தால் வழங்கப்படும் கட்டளை ஒன்றின் பிரகாரம், கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருக்கிடையில் சட்டரீதியாக நடைபெற்ற திருமணம் நிலைத்திருக்கையில், அவர்கள் இருவரும் பிரிந்து தனித்தனியாக வாழ்வதை அனுமதிப்பதே "நீதிமுறைப் பிரிவு" எனப்படும். ஆனால், இத்தகைய கட்டளை யானது கணவன் மற்றும் மனைவிக்கிடையில் சட்டரீதியாக நடைபெற்றுள்ள திருமணத்தைக் குலைக்கமாட்டாது. "விவாகரத்து" என்பது கணவன் மற்றும் மனைவிக்கிடையில் சட்டரீதியாக நடைபெற்றுள்ள திருமணத்தைக் குலைப்பதாக நீதிமன்றத்தால் வழங்கப்படும் கட்டளையாகும்.

குடியியல் வழக்குகளை விசாரணை செய்யும் முதனிலை நியாயாதிக்கத்தை "மாவட்ட நீதிமன்றம்" (DISTRICT COURT) செயற்படுத்து கின்றது. மேலும் சகல பிள்ளைகளினதும் "உயர் பாதுகாவலனாகவும்" (UPPER GUARDIAN OF THE CHILDREN) மாவட்ட நீதிமன்றமே செயற்படுகின்றது. நீதிமுறைப் பிரிவு மற்றும் விவாகரத்து போன்ற குடியியல் சார்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பிள்ளையின் கட்டுக்காவல் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படும் போது பிள்ளையின் உயர் பாதுகாவலன் என்ற அடிப்படையில் மாவட்ட நீதிமன்றம் தனக்கே உரியதான நியாயாதிக்கத்தை செயற்படுத்தி பிள்ளையின் கட்டுக்காவலுக்கு யார் உரித்துடையவர்? என்பதை தீர்மானித்து அதன் பிரகாரம் கட்டுக்காவல் தொடர்பான கட்டளையை மேற்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விசேட சந்தர்ப்பங்களில் மாகாண மேல் நீதிமன்றம் (PROVINCIAL HIGHT COURT) மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் (COURT OF APPEAL) என்பவை ஆட்கொணர்வு எழுத்தாணை நியாயாதிக்கத்தை (HABEAS CORPUS JURISDICTION) செயற்படுத்துவதன் மூலம் பிள்ளைகளின் கட்டுக்காவல் தொடர்பான விண்ணப்பங்களை பரிசீலனை செய்து குறித்த பிள்ளைகள் மற்றும் சிறுவர்களுக்கான கட்டுக்காவல் தொடர்பான கட்டளைகளை மேற்கொள்ளும்.

"ஆண் பிள்ளைகளின் கட்டுக்காவல் தொடர்பாக தந்தைக்கும் மற்றும் பெண் பிள்ளைகளின் கட்டுக்காவல் தொடர்பாக தாய்க்கும் முன்னுரிமை (PREFERENTIAL RIGHT) கிடைக்கப்பெறும்" என்பதே பிள்ளையின் கட்டுக்காவல் விடயம் தொடர்பாக பொதுமக்களிடத்தில் நிலவுகின்ற பொதுவான கருத்தாகும். ஆனால் எமது நாட்டின் நீதிமன்றங்களினால் ஏற்கனவே ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்கும்போதும் மற்றும் எமது நீதிமன்றங்களினால் தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டக்கோட்பாடு களின் அடிப்படையில் நோக்கும்போதும் இது ஒரு தவறான கருத்தாகக் காணப்படுகின்றது.

உரோம – டச்சுச்சட்ட (ROMAN DUTCH LAW) கோட்பாடுகளின் பிரகாரம் பிள்ளையின் கட்டுக்காவல் உரிமை தொடர்பாக தந்தைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் பொதுச் சட்டமாக உரோம – டச்சுச் சட்டம் செயற்பட்டு வந்துள்ளமையினால், பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பில் தந்தைக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்ற நடைமுறையையே எமது நீதிமன்றங்கள் ஆரம்பகாலத்தில் கடைப்பிடித்து வந்துள்ளன.

பிரித்தானியாவில் நடைமுறையில் இருந்து வந்த ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளின் பிரகாரம் பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பாக "பிள்ளையின் நலன்" (BETTERMENT OF THE CHILD) எனும் விடயமே அதிக முக்கியத்துவம் உடையதாகக் காணப்பட்டது. அதாவது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரில், யாரிடம் பிள்ளையின் கட்டுக்காவல் இருக்கும் போது பிள்ளையின் நலன் சிறப்பானதாகவும் மேம்பட்டதாகவும் இருக்கும் என்பதையே நீதிமன்றம் கவனத்திற் கொண்டுள்ளது.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்து வந்த காலத்தில் ஏராளமான பிரித்தானிய ஆங்கில நீதிபதிகள் எமது நாட்டு நீதிமன்றங் களின் நீதிபதிகளாகச் செயற்பட்டு வந்துள்ள னர். அவர்கள் பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பான வழக்குகளில் பிரித்தானிய நாட்டு ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளை அறிமுகப் படுத்தி அவற்றின் அடிப்படையில் அத்தகைய வழக்குகளில் தீர்ப்புக்களை வழங்கினார்கள். இத்தகைய ஆங்கிலச் சட்டக் கோட்பாடுகளின் செல்வாக்கு காரணமாக, தற்காலத்தில், பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பான உரிமை தாயிடமா அல்லது தந்தையிடமா ஒப்படைக்கப்படல் வேண்டும்? எனும் வினா நீதிமன்றங்களின் முன் எழுகின்ற போது, நீதிமன்றங்களானது ஆங்கில சட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் "பிள்ளையின் நலன்" எனும் விடயத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து தமது தீர்மானத்தை மேற்கொள்கின்றன.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் 'பிள்ளையின் கட்டுக்காவல்' தாய் அல்லது தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டாலும், பிள்ளையின் கட்டுக்காவல் உரிமை கிடைக்கப் பெறாத தாய் அல்லது தந்தை குறித்த பிள்ளையினைச் சந்திப்பதற்கும் மற்றும் பிள்ளையுடன் நட்பைப் பேணி வருவதற்கும் அவருக்குள்ள உரிமை யின் அடிப்படையில், குறித்த பிள்ளையுடன் அத்தகைய சந்திப்பினை மேற்கொள்வதற்கும் மற்றும் பிள்ளையுடன் நட்பான உறவை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகளையும் உள்ளடக்குவதான கட்டளைகளையும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மேற்கொள்ளும்.

நியதிச் சட்டங்கள் **( STATUTORY LAWS ):**

"பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு" விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்களே அடிப்படையான சட்டங்களாக விளங்குகின்றன. பாராளுமன்றம் (PARLIAMENT) மற்றும் மாகாணச் சட்டவாக்கப் பேரவையினால் (PROVINCIAL LEGISLATIVE ASSEMBLY) ஆக்கப்படும் சட்டங்கள் நியதிச்சட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வாறான நியதிச் சட்டங்களின் ஏற்பாடுகள் காவல் துறையினாலும் நீதிமன்றங்களினாலும் செயற்படுத்தப்படுகின்றன. குற்றவியல் வழக்கு களை விசாரணை செய்யும் முதன்நிலை நியாயாதிக்கத்தை "நீதிவான் நீதிமன்றம்" (MAGISTRATE'S COURT) செயற்படுத்து கின்றது. "நீதிவான் நீதிமன்றமே" சில சந்தர்ப்பங்களில் "சிறுவர் நீதிமன்றமாகவும்" (JUVENILE COURT) செயற்படுகின்றது.

**(அ).** "1939 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் கட்டளைச் சட்டம்" **( CHILDREN AND YOUNG PERSONS ORDINANCE NO: 11 OF 1939 ):**

குற்றவியல் நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட சூழ்நிலையில் பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான வினா நீதிமன்றின் முன்னிலையில் எழுகின்றபோது "நீதிவான் நீதிமன்றம்" சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக "சிறுவர் நீதிமன்றமாக" செயற் பட்டு பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் பராம ரிப்பு தொடர்பில் தன் முன்னால் உள்ள நிகழ்வுகளை நன்கு பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் தீர்மானத்தை மேற்கொண்டு பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான கட்டளைகளை மேற்கொள்ளும்.

பெற்றோர் அல்லது பாதுகாவலர் எவரேனும் இல்லாத பிள்ளை அல்லது இளம்பராயத்தவர், அல்லது பராமரிப்பையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கு தகுதியில்லாத அல்லது பராமரிப்பையும் பாதுகாப்பையும வழங்காத பெற்றோரை அல்லது பாதுகாவலரை கொண்டி ருப்பவராகவும், மற்றும் தீயவர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளவராக அல்லது அவரின் நல்லொழுக்கத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு முகம் கொடுப்பவராக அல்லது கட்டுப்படுத்த முடியாதவராக இருக்கும் பிள்ளை அல்லது இளம்பராயத்தவர், மற்றும் உடல் ரீதியான காயத்தை ஏற்படுத்தும் யாதேனுமொரு குற்றச்செயலைப் புரிந்த பிள்ளையொன்றை யும் அல்லது இளம் பராயத்தவர் ஒருவரையும், அல்லது குற்றமிழைத்தவர் வாழும் அதே குடியிருப்பில் வாழும் பிள்ளையொன்றையும் அல்லது இளம் பராயத்தவர் ஒருவரையும், அல்லது இத்தகைய குற்றத்தினால் பாதிப்புக்குள்ளாகிய பிள்ளை அல்லது இளம்பராயத்தவர் ஆகியோர் நீதிமன்றின் முன்னிலையில் கொண்டுவரப்படுகின்ற போது ஒவ்வொரு பிள்ளைக்கும் அல்லது இளம் பராயத்தவருக்கும் சிறுவர் நீதிமன்றம் ஊடாக பராமரிப்பும் பாதுகாப்பும் கட்டாயமாக வழங்கப்படவேண்டிய தேவைப்பாட்டை இச் சட்டம் எடுத்துரைக்கின்றது.

பிள்ளையின் பாதுகாவலானது நன்னடத்தை உத்தியோகத்தர் அல்லது தகுதி வாய்ந்த நபர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்படல் வேண்டும் என நீதிமன்றம் கட்டளையிட்டால், அவர்கள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 38 (1) குறிப்பிடுகின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளையை காலத்துக்காலம் கிரமமான முறையில் சந்திக்க வேண்டும் அல்லது அறிக்கையைப் பெற்றுக் கொள் ளல் வேண்டும்.

- நீதிமன்றக் கட்டளையின் படியான நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்தல் வேண்டும்.

- பிள்ளையினது நடத்தை பற்றி நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

- பிள்ளைக்கு அறிவுரை கூறி, உதவி செய்வதுடன் தேவையான போது பொருத்தமான தொழிலையும் தேடிக் கொடுத்தல் வேண்டும்.

“சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் கட்டளைச் சட்டம்' 1939ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இது 1950ம் ஆண்டிலேயே செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச் சட்டமானது “போதிய கவனிப்புக் கிடைக்கப் பெறாத” மற்றும் “குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட” சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினர்கள் தொடர்பாக எத்தகைய நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும் என்பது பற்றியும் மற்றும் எத்தகைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பது பற்றியும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. இச்சட்டத்தின் அடித்தளமாக விளங்குவது “பிள்ளையின் வாழ்வாதார நலன் கோட்பாடு” (CONCEPT OF WELFARE OF THE CHILD) ஆகும். குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் “காவல்துறை உத்தியோகத்தர்கள்” (POLICE OFFICERS) “நன்னடத்தை உத்தியோகத்தர்கள்” (PROBATION OFFICERS) மற்றும் “சிறுவர் நீதிமன்றங்களாக” (JUVENILE COURT) செயற்படும் நீதவான் நீதிமன்றங்களாலும் செயற்படுத்தப்படுகின்றன.

**(ஆ). 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்கப் பராமரிப்புச் சட்டம் ( MAINTENANCE ACT NO: 37 OF 1999 ):**

“பராமரிப்பு” என்பது வாழ்க்கை துணைவருள் ஒருவர் அல்லது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுள் ஒருவர் அவரது நாளாந்த வாழ்க்கையை சாதாரணமான முறையில் கொண்டு நடாத்துவதற்கு தேவையான அவசியத் தேவைகளை வழங்குதல் அல்லது ஏற்பாடுகளை செய்தல் அல்லது அத்தகைய அவசிய தேவைகளை அவர் தானாகவே பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக நிதி வசதியை வழங்குதல் என்பவற்றைக் குறிக்கின்றது. நாளாந்த வாழ்க்கைக்கு தேவையான அவசிய தேவைகள் என்பது உணவு, உடை, உறைவிடம், சுகாதாரவசதி மற்றும் கல்வி என்பவற்றை உள்ளடக்குகின்றது. இது அவரவரது வயது, பொருளாதாரவசதி மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவரினதும் தராதரத்திற்கு ஏற்றவாறு அவரவரது பராமரிப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் அளவு என்பன வேறுபடும்.

தாயும் தந்தையும் பிள்ளைகளைப் பராமரிக்காது அவர்களது கடமைகளைப் புறக்கணித்து நடந்து கொள்வார்களாயின், அவர்கள் தமது நியதிச்சட்டக் கடமையை அல்லது கடப்பாட்டை (STATUTORY DUTY OR OBLIGATION) மீறுபவர்களாகக் கருதப்படுவார்கள். இலங்கையில் இவ்விடயம் தொடர்பில் ஆரம்ப காலத்தில் 1889ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பராமரிப்புக் கட்டளைச் சட்டம் (MAINTENANCE ORDINANCE NO: 19 OF 1889) நடைமுறையில் இருந்து வந்துள்ளது. ஆனால் இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையினது 1989ஆம் ஆண்டின் “சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தினை” (INTERNATIONAL CONVENTION ON CHILD RIGHTS OF 1989) ஏற்று உறுதிப்படுத்தி அங்கீகரித்ததைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து முன்பு நடைமுறையில் இருந்து வந்த பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தை நீக்கியதுடன் அதற்குப் பதிலாக 1999ம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தை (MAINTENANCE ACT NO: 37 OF 1999) அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

"சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேசச் சமவாயத்தில்" உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில், அச்சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுவதை நோக்கமாகக் கொண்டு 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அது பல முன்னேற்றகரமான சட்ட ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்புதிய சட்டமானது தங்களைத் தாமே பராமரித்துக் கொள்ள இயலாதவர்களாகிய பிள்ளைகளினதும், தங்களைத் தாமே பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் உள்ள வயது வந்த பிள்ளைகளினதும், ஊனமுற்ற பிள்ளைகளினதும் பராமரிப்புக் கோரிக்கைக்கான உரிமைகள் பற்றியும் மற்றும் வாழ்க்கைத் துணைவர்களில் எவரும் அதாவது கணவன் மற்றும் மனைவி இருவரும் நிலைமையைப் பொறுத்து ஒருவர் மற்றவரிடத்தில் இருந்து பராமரிப்புக்கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய அவரவர்களது உரிமைகள் பற்றியும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

முன்பு நடைமுறையில் இருந்த 1889ஆம் ஆண்டின் பராமரிப்புக் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், தங்களைத் தாமே பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் உள்ள வயது வந்த பிள்ளைகள் மற்றும் வயது வந்த ஊனமுற்ற பிள்ளைகள் தமது பராமரிப்புக் கோரிக்கைகளை முன் வைப்பதற் கான உரிமைகளைக் கொண்டிருக்கவில்லை. அதே போன்று தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள முடியாத கணவன், வசதி படைத்த மனைவியிடம் இருந்து பராமரிப்புக்கோரி வழக்குத் தாக்கல் செய்வதற் குரிய உரிமையைக் கொண்டிருக்கவில்லை. இக்குறைபாடுகள் யாவும் புதிய சட்டமான 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் முதியவர்களின் பராமரிப்புக் கோரிக்கைகள் தொடர்பான உரிமைகள் இச்சட்டத்தில் உள்ளடக்கப்படாதது முக்கிய குறைபாடாகக் காணப்படுகின்றது. எதிர் காலத்தில் இச்சட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(இ). "2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனைச் சட்டம்" **(INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS ACT ACT NO: 56 OF 2007):**

"பிள்ளையினது உரிமைகள்" பாதுகாக்கப்படுவது தொடர்பாக இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பல முன்னேற்ற கரமான சட்டங்களுள் "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனைச் சட்டமானது" (INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS ACT ) மிகவும் முக்கியமான சட்டமாக விளங்குகின்றது. இச் சட்டமானது 2007ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டது. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "பிள்ளையினது சிறப்பான நலன்" (BEST INTEREST OF THE CHILD) பாதுகாக்கப்படுவது தொடர்பாக மாகாண மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பங்கள் வரும் போது, நீதிமன்றம் அத்தகைய விண்ணப்பங்களை விசாரணை செய்து உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகளை மேற்கொள்ளும். இச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ள "பிள்ளையின் சிறப்பான நலன்" எனும் விடயமானது ஏற்கனவே "சிறுவர் மற்றும் இளம்பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின்" மூலம் எடுத்தாளப்பட்டுள்ள "பிள்ளையின் வாழ்வாதார நலன் கோட்பாட்டின்" விரிவாக்கமாக காணப்படுகின்றது.

குறித்த சட்டமானது பிள்ளைகளுக்கே உரித்தான சில மனித உரிமைகள் மற்றும் ஏனைய நபர்களுக்கு உரித்தான மனித உரிமைகள் பற்றியும் அவை நிர்வாகத் துறையினரால் மற்றும் நிறைவேற்றுத் துறையினரால் மீறப்படும் போது எவ்வாறாக நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது. குறித்த சட்டத்தின் பிரிவு 5 ஆனது பிள்ளைகளின் பிறப்பினை பதிவு செய்வதற்கான உரிமை, பிள்ளை பெயர் ஒன்றை வைத்துக் கொள்வதற்கான உரிமை, தேசியம் பெறுவதற்கான உரிமை, கொடுமை, புறக்கணிப்பு, துஷ்பிரயோகம் மற்றும் தாழ்வு படுத்தல் என்பவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் அரச செலவிலான சட்ட உதவி வழங்கப்படுவதற்கான உரிமைகள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள "பிள்ளையினது உரிமைகள்" பகிரங்க உத்தியோகத்தர்களால் (PUBLIC OFFICERS) மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறித்த பகிரங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் பிரிவு 7(2)இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் "மனித உரிமைகள் மீறலுக்கு எதிரான வழக்கு" (AN ACTION AGAINST VIOLATION OF HUMAN RIGHTS) மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படமுடியும்.

நியாயமான காரணம் எதுவுமின்றி பிள்ளையின் பிறப்பினை பதிவு செய்வதற்கு மறுக்கும் அல்லது வேண்டுமென்றே தாமதத்தை ஏற்படுத்தும் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவருக்கெதிராக இச்சட்டத்தின் பிரிவு 7(2)இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படமுடியும். குறித்த சட்டத்தின் பிரிவு 7(2)இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் "மனித உரிமை மீறலுக்கு எதிரான வழக்கு" குறித்த மனித உரிமை மீறலினால் பாதிக்கப்பட்டவர் வாழ்கின்ற பிரதேசத்தின் மீது நியாயாதிக்கத்தை கொண்டமைந்துள்ள மேல் நீதிமன்றத்தில் மூன்று மாதங்களுக்குள் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

பிள்ளைகளுக்கும் ஏனைய நபர்களுக்கும் உரித்தான சில மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட இச்சட்டம் நீதிமன்றங்களின் முன் எந்தளவுக்கு செயற்படுத்தப்படுகின்றது? என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது. ஏனெனில் குறித்த சட்டம் 2007ஆம் ஆண்டில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் திருக்கோணமலை மேல் நீதிமன்றத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் இதுவரையில் வழக்கெதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

### "பகிரங்க நலன் வழக்குக் கோட்பாடு" (CONCEPT OF PUBLIC INTEREST LITIGATION):

பாதிக்கப்பட்டவர் சார்பாக அவர் மீது அக்கறையுள்ள மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு வழக்கைத் தாக்கல் செய்வதற்கான சட்ட அந்தஸ்த்தை **(LOCUS STANDI)** வழங்குவதே "பகிரங்க நலன் வழக்குக் கோட்பாட்டின்" சிறப்பம்சமாகும். குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனைச் சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்பட்டு அதன் காரணமாக எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் அவ்வாறாகப் பாதிக்கப்பட்டவர் தான் நேரடியாகவோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சார்பாக எவரேனும் ஒருவர் இத்தகைய வழக்கைத் தாக்கல் செய்யமுடியும்.

பாதிக்கப்பட்டவர் சார்பாக எவரேனும் ஒருவர் அத்தகைய வழக்கைத் தாக்கல் செய்யலா மென குறித்த சட்டத்தின் பிரிவு 7(2)இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதன் மூலம் 'பகிரங்க நலன் வழக்குக் கோட்பாடு' (CONCEPT OF PUBLIC INTEREST LITIGATION) உட்கிடையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. எனவே மனித உரிமைகள் சட்டத்தர ணிகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், இலவச சட்ட உதவி வழங்கும் நிறுவனங்களும் மற்றும் இதையொத்த ஏனைய நிறுவனங்களும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப் பட்டவர்கள் சார்பாக குறித்த சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறல்களுக்கெதிரான வழக்குகளை தாக்கல் செய்வதற்கு குறித்த சட்டத்தின் பிரிவு 7(2) வழியமைத்துக் கொடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

'பகிரங்க நலன் வழக்குக் கோட்பாடு' என்பது இந்திய உச்ச நீதிமன்றங்களினால் சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு விசேடமான கோட்பாடாகும். இந்திய உச்ச நீதிமன்றங்கள் எந்தவொரு மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளிலும் இக்கோட்பாட்டை துணிகரமாகவும் சிறப்பாகவும் செயற்படுத்தி வருகின்றன. ஆனால் எமது நாட்டு உச்ச நீதிமன்றங்கள் "சூழல் மாசடைதல் மற்றும் அதையொத்த காரணிகளால் ஏற்படக்கூடிய அடிப்படை உரிமை மீறல்கள்" தொடர்பான வழக்குகளில் இக் கோட்பாட்டை செயற்படுத்து கின்ற போதிலும், ஏனைய "அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள்" தொடர்பான வழக்குகளில் இக்கோட்பாட்டை செயற்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுவ தில்லை. எனவே எமது நாட்டின் உச்ச நீதிமன்றங்கள், இந்திய உச்ச நீதிமன்றங் களைப் போன்று சகல விதமான அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளிலும் "பகிரங்க நலன் வழக்குக் கோட்பாட்டை" எதிர்காலத்தில் செயற்படுத்த துணிகரமான முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலமே அனைத்துப் பிள்ளைகளினதும் மற்றும் சிறுவர்களினதும் எல்லாவிதமான உரிமைகளும் பாதுகாக்கப்படுவதுடன், சகல சமுதாயத்தினதும் "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்" உட்பட ஏனைய சகலவிதமான "அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமை கள்" சிறப்பாகப் பாதுகாக்கப்பட முடியும்.

1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புச் சட்டம்

**(THE CONSTITUTION OF SRI LANKA OF 1978):**

இலங்கையில் உள்ள அனைத்து சட்டங் களிற்கும் அடிப்படையாகவும், அதி உச்ச ஸ்தா னத்தில் உள்ள சட்டமாகவும் விளங்குவது 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புச் சட்டம் ஆகும். இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் அத்தியாயம் 3 இல் "அடிப்படை உரிமைகள்" எனும் தலைப்பின் கீழ் 10 தொடக்கம் 14 வரையிலான உறுப்புரைகளில் ஒவ்வொரு பிரஜைக்கும் உரித்தான உரிமைகள் பற்றி எடுத்துரைக்கின்றன. அவ் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளுக்கும் எல்லாப் பிள்ளைகளும் உரித்துடையவர்கள். பிள்ளைகளின் உரிமை களைப் பாதுகாப்பதற்கு அடிப்படையாக அமைகின்ற பல்வேறு வகையான உரிமைகள் "அடிப்படை உரிமைகள்" அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 12(1) "சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் எனவும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு அனைவருக்கும் உண்டு" எனவும் ஏற்பாடு செய்கின்றது. இங்கு அனைவரும் என்பது எல்லாப் பிள்ளைகளையும் உள்ளடக்குவதால் "அடிப்படை உரிமைகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளுக்கும் எல்லாப் பிள்ளைகளும் உரித்துடையவர்கள். எனவே பிள்ளைகளின் அத்தகைய உரிமைகள் மறுக்கப்படவோ அல்லது புறக்கணிக்கப்படவோ முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் அத்தியாயம் 6 இல் "அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்" எனும் தலைப்பின் கீழ் உறுப்புரை 27(13)இல் "பிள்ளைகள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் உடல், உளம், பண்பாடு, சமயம், சமூக ரீதியில் முறையான விருத்தியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், சிறுவர்களை ஏனையோர் தமது சுயநலன்களுக்கு பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும், பாகுபாட்டிற்கு உள்ளாவதிலிருந்து பாதுகாப்பதற்கும் ஏற்றவகையில் சிறுவர்களின் நலன்களை அரசு விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டுமெனவும்" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தியாயம் 6 இல் விபரிக்கப்பட்டுள்ள உரிமைகளானது அத்தியாயம் 3 இல் விபரிக்கப்பட்டுள்ள "அடிப்படை உரிமைகளைப்" போன்று சட்ட ரீதியான உரிமையுடன் செயற்படுத்தப்படக் கூடிய உரிமைகள் அல்ல. இவை அரசுக்கான வழிகாட்டிக் கொள்கைகளாகவே செயற்படுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் "அடிப்படை உரிமைகள்" அத்தியாயத்தில் உறுப்புரை 16(1) பின்வருமாறு விபரிக்கின்றது:

"இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்தில் இல்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாய் இருத்தல் வேண்டும்."

அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 80(3) பின்வருமாறு விபரிக்கின்றது:

".....சட்டமானது எத்தன்மைத்தான எவ் ஏதுவின் மீதும் நீதிமன்றம், அல்லது நியாயசபை எதுவும் அதன் செல்லுபடி பற்றி விசாரித்தலோ, தீர்ப்பளித்தலோ அல்லது எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது."

மேற்குறித்த உறுப்புரைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளினதும் மற்றும் மனித உரிமைகளினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக பொதுவாகக் கருதப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போது இத்தகைய உறுப்புரைகள் தவிர்க்கப்படுவது அல்லது திருத்தம் செய்யப்படுவது அவசியமானதாகும்.

2000ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்ட வரைபில் "பிள்ளைகளின் உரிமைகளை" விசேடமாக உத்தரவாதப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த அரசியல் அமைப்புச் சட்ட வரைபில் "பிள்ளைகளுக்கான விசேட உரிமைகள்" என்ற பிரத்தியேகமான தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. "பிள்ளைகள் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை, 5 வயது தொடக்கம் 14 வயது வரையிலான பிள்ளைகள் இலவசக் கல்வியை பெறுவதற்கான உரிமை, எந்தவிதமான ஆபத்தான வேலைகளிலும் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை" என்பவை மிகவும் வெளிப்படையான ஏற்பாடுகள் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் "18 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் "பிள்ளை" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் துரதிஷ்டவசமாக குறித்த அரசியல் அமைப்புச் சட்ட வரைபு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"1989ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்"**
**( INTERNATIONAL CONVENTION ON CHILD RIGHTS OF 1989 ):**

சர்வதேச மனித உரிமைகள் ஆவணத் தொகுப்பின் ஓர் அம்சமான 1989ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட "சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின்" முதலாவது உறுப்புரை யானது "18 வயதிற்கு குறைந்த மனித குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சிறுவர் கள்' என எடுத்துரைக்கின்றது. இச் சமவாய மானது, சர்வதேசம் தனது பிள்ளைச் செல்வங் களுக்கு எவற்றை யாசிக்கின்றன என்பதற்கு சிறந்ததொரு ஆதாரமாக விளங்குகின்றது. இச் சமவாயத்தின் முதல் 42 உறுப்புரைகளும் பிள்ளைகளிற்கே உரித்தானதும் தனித்துவமான துமான உரிமைகளின் கோவையாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் (CIVIL AND POLITICAL RIGHTS) மற்றும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் (ECONOMICAL AND SOCIAL RIGHTS) என்பவற்றை விரிவாக எடுத்துரைக்கின்றன.

குழந்தைகள் பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் உடலாலும், உள்ளத்தாலும் மற்றும் சமூக வாழ்க்கையாலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு வளர்ச்சி பெறவும், தமது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிக்கவும் உரிமையுடைய மனித குலத்தின் தனித்துவமான பிறவிகள் என்பதையும் இச்சமவாயம் ஏற்றுக்கொள் கின்றது. இச்சமவாயத்தின் முதல் 42 உறுப்புரைகளின் மூலம் சிறுவர் பற்றிய வரைவிலக்கணம், சிறுவர்களுடைய உரிமை கள், சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர்கள் உட்பட பெரியவர்களுக்குள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. மிகுதியான 12 உறுப்புரைகளின் மூலம் இச்சமவாயத்தை அங்கீகரித்துக் கையொப்பமிட்டுள்ள அரசுகளி னால், இச்சமவாயத்தை முறைப்படி செயற் படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

இச்சமவாயத்தின் உறுப்புரைகளில் எடுத்து ரைக்கப்பட்டுள்ள வாசகங்களை அடிப்படை யாகக் கொண்டு இலங்கை அரசானது 1992ஆம் ஆண்டில் "சிறுவர் பட்டயத்தை" அறிமுகப்படுத்தியது. இப்பட்டயமானது "சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தில்" உள்ள ஏராளமான உரிமைகளை எடுத்துரைக் கின்ற போதிலும் இது எமது நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் சட்ட ஆவணம் அல்ல. இது இலங்கை அரசின் கொள்கைப் பிரகடனமாகவே கருதப்படுகின்றது.

இலங்கை சட்டரீதியாக இரட்டைத் தன்மையு டைய நாடாக (DUALIST COUNTRY) கருதப் படுவதால் எமது நாட்டின் நீதிமன்றங்களுக்கு சர்வதேசச் சட்ட ஏற்பாடுகளை நேரடியாக உள்நாட்டுச் சட்ட ஏற்பாடுகளாகக் கருதி அவற்றை நடைமுறைப்படுத்தவோ, அத்தகைய சர்வதேசச் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் தீர்ப்புக்களை வழங்கவோ அதிகாரம் இல்லை. எத்தகைய சர்வதேசச் சட்ட ஏற்பாடுகளும் எமது நாட்டுப் பாராளுமன்றத்தினால் சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்பே, எமது நாட்டு நீதிமன்றங்களினால் அவை நடைமுறைப் படுத்தப்படவும் அவற்றின் அடிப்படையில் தீர்ப்புக்கள் வழங்கப்படவும் முடியும்.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட "2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனைச் சட்டமானது" (INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS ACT NO: 56 OF 2007), சர்வதேச சட்ட ஆவணமாகக் கருதப்படும் "அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனையில்" (INTERNA-TIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS) உள்ள வாசகங்களை அடிப்படையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கொண்டு நிறைவேற்றப்பட்ட சட்டமாகும். "1989ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின்" (INTERNATIONAL CONVENTION ON CHILD RIGHTS OF 1989) செல்வாக்கு இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் ( MAINTENANCE ACT NO: 37 OF 1999 ) பல ஏற்பாடுகளில் காணப்படுகின்றன. இத்தகைய சட்ட ஏற்பாடுகள் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன.

குடும்பமும் பாடசாலையும் **(FAMILY AND SCHOOL):**

குடும்பமும் பாடசாலையும் பிள்ளைகளினது ஆளுமை வளர்ச்சியில் பிரதான காரணிகளாக செயற்படுகின்றன. குடும்பத்துக்கு அடுத்ததாக பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் தமது அதிகமான நேரத்தை செலவிடுவது பாடசாலையில் ஆகும். சிறுவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு பாடசாலை களம் அமைத்துக் கொடுப்பதுடன் மற்றும் பிள்ளைகள் தங்கள் ஆளுமைகளை வளர்த்துக் கொள்வதற்கு பாடசாலைச் சூழல் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே காணப்படும் புனிதமான உறவு ஒவ்வொரு மாணவரதும் வாழ்க்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வல்லனவாகும். இதன் காரணமாகவே ஆசிரிய சேவை ஓர் உன்னதமான சேவையாகவும் புனிதமான சேவையாகவும் எல்லோராலும் போற்றப் படுகின்றது. எனவே பெற்றோர்களுக்கு அடுத்ததாக ஆசிரியர்கள் தமது கடமைகளை பிள்ளைகளது மற்றும் சிறுவர்களது எதிர்கால உயர்நலன்கள் மீது அக்கறை கொண்டவர் களாகச் செயற்படுத்துதல் வேண்டும்.

இன்றைய நவீன உலகில் பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு உட்பட்டு வருகின்றனர். குறிப்பாக இல்லத்து வன்முறை (DOMESTIC VIOLENCE), துஷ்பிரயோகம் (ABUSE), புறக்கணிப்பு (NEGLECT) வறுமை (POVERTY) மற்றும் உடல் சார்ந்த தண்டனை (CORPORAL PUNISHMENT) என்பவற்றின் காரணமாக பிள்ளைகளும் சிறுவர்களும் பாரிய தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இவை ஒவ்வொரு பிள்ளையினதும் ஆளுமை வளர்ச்சியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்து கின்றன.

"உலகின் பல்வேறு நாடுகளிலும் 15 வயதுக்குக் குறைந்த நாற்பது மில்லியன் சிறுவர்கள் (40 MILLION CHILDREN BELOW THE AGE OF 15) துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள் ளார்கள்" என UNICEFஇன் அண்மைக்கால அறிக்கை குறிப்பிடுகின்றது. தற்காலத்தில் அநேக வளர்முக நாடுகளில் சிறுவர்களுக் கெதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிர யோகங்கள் அதிகரித்து வருகின்றன என்பதை பல்வேறு ஆய்வுகளும் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோ கங்களில், உடல் ரீதியான தண்டனைகள் சிறுவர்களினது உடல் உள தாக்கங்களை ஏற்படுத்தும் பிரதான காரணிகளாக அமைகி ன்றன என அவை வெளிப்படுத்துகின்றன.

2005ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க உடல் சார்ந்த தண்டனை (நீக்கும்) சட்டத்தின் "CORPORAL PUNISHMENT (REPEAL) ACT NO: 23 OF 2005" பிரகாரம், "கசையடி" மூலம் சிறுவர்களுக்கு தண்டனை வழங்கும் நீதிமன்றங்களின் அதிகாரம் இலங்கையின் சட்டத் தொகுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் உடல் ரீதியாக தண்டிக்கப்படுவது தமது பெற்றோர்களால், ஆசிரியர்களால் மற்றும் பாதுகாவலர்களால் ஆகும். சிறுவர்கள் மீதான உடல்ரீதியான தண்டனையை சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதப்படல் வேண்டும். இத்தகைய துஷ்பிரயோகமானது அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகவே கருதப்படல் வேண்டும். ஏனெனில் மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தினையும் அவர்கள் யாவரினதும் சமமான பாரதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தல் என்ற சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முகப்புரை வாசகம் வெளிப்படையாகவே இம்மீறலை சுட்டிக்காட்டி நிற்பதாக அமைகின்றது.

இப்பிரகடனத்தின் உறுப்புரை 6 இல் "ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஒரு நபராக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவர்கள்" எனவும், உறுப்புரை 7 இல் "எல்லோரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு அனைவரும் உரித்துடையவர்கள்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுப்புரைகளில் உள்ள வாசகங்களின்படி பிள்ளைகளும் சிறுவர்களும் சட்டத்தின் முன் ஒரு நபராகவும் வளர்ந்தவர்களைப் போன்று கருதப்படவும் உரிமையுடையவர்கள்.

சில சமயங்களில் ஆசிரியர்களாலும் சிறுவர்களது உள்ளார்ந்த உரிமைகள் மீறப்படுகின்றன என்பது மறுக்கப்பட முடியாதவை. பிள்ளைகளை மற்றும் சிறுவர் களை அடிப்பது தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பிள்ளைகளை அடிப்பது அவர்கள் திருந்துவதற்காக, அவர் களின் எதிர்கால நலன்களை பாதுகாப் பதற்காக, கோபத்தை தீர்ப்பதற்காக மற்றும் பழிவாங்குவதற்காக எனப் பல்வேறு காரணங் கள் முன் வைக்கப்படுகின்றன. எது எவ்வாறாக இருந்த போதிலும் இவை பிள்ளைகளின் மீதும் மற்றும் சிறுவர்களின் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை உளவியல் தொடர்பான ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

பிள்ளைகளை மற்றும் சிறுவர்களை அடிக்கும் போது, வேதனை, அவமானம், பதட்டம், ஆத்திரம் மற்றும் பழிவாங்கும் எண்ணம் என்பன அவர்களுக்கு ஏற்படுகின்றன. இவை பிள்ளைகளை மற்றும் சிறுவர்களை எதிர்காலத்தில் வன்முறையாளர்களாக மாற்றுவதுடன் அவர்களை சமூக சீர்கேடுகளுக்கு வழிகாட்டிகளாகவும் முன்னோடிகளாகவும் விளங்குவதற்கு வழிவகுப்பதாக அமைந்துவிடும். எனவே பிள்ளைகளிதும் சிறுவர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது இவ்வுலகில் வாழ்கின்ற பெரியவர்களாகிய எம் அனைவரினதும் முதன்மையான கடமையாகக் கருதப்படல் வேண்டும்.

எதிர்காலச் சந்ததியான எமது பிள்ளைச் செல்வங்கள், அவர்களது உரிமைகள் மீறப்படுகின்ற சூழ்நிலைகளைத் தாண்டி உறுதியான அமைதியான சாந்தி, சமாதானம் மற்றும் சுபீட்சம் நிறைந்த ஒரு புதிய உலகத்தை கட்டியெழுப்பப் போகின்றனர் என்று நாம் அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து சிந்தித்தல் வேண்டும். அரசாங்கமும் சமூக நிறுவனங்களும் சிறுவர்களது நலன்களையும், உரிமைகளையும் என்றென்றைக்கும் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள்.

> "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையே
> மண்ணில் பிறக்கையிலே
> அவன் நல்லவனாவதும் தீயவனாவதும்
> அன்னை வளர்ப்பினிலே"

தற்காலத்தில் காணப்படும் உலகளாவிய நவீன தொழில்நுட்ப தொடர்பாடல் வசதிகளை சிறுவர்கள் இலகுவாக அணுகுவதற்குள்ள வாய்ப்புக்கள் மற்றும் தற்போதைய கல்வி முறையின் காரணமாக சிறுவர்கள் தமது அதிகமான நேரத்தை பாடசாலையிலும் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களிலும் செலவிடுதல் போன்ற விடயங்கள் காரணமாக மேற்குறித்த வாசகம் தற்காலத்துக்கு ஏற்றவகையில் மாற்றி அமைக்கப்படல் வேண்டுமா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வரலாறும் வளர்ச்சியும்

நல்லதம்பி குமணன்
உபதலைவர்
பழையமாணவர்சங்கம்,திருகோணமலை

கிழக்கிலங்கையின் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்துள்ள திருகோணமலையின் புகழ் பூத்த கல்லூரியாம் தி/இ.கி.ச..ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூர்ரி அருகில் எல்லாம் வல்ல .ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலடிவிநாயகர் கல்லூரியினுள் சித்தி விநாயகர் ஆகியோரது அனுக்கிரகங்களுடன் பல கல்விமான்களை எமக்குத் தந்துள்ளது.

இதன்வளர்ச்சிக்கு அதிபர்கள் ,ஆசிரியர்கள், பழைய மாணவர்சங்கம், பாடசாலை அபிவி ருத்திச் சங்கம் பக்கபலமாய் திகழ்கிறது.

சைவப்பெரியார்களால் உருவாக்கப்பட்ட இக்கல்லூரியானது 1897 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டு இராமகிருஸ்ண சங்கத்தினர் சுவாமி விபுலானந்தர் அவர்களுடன் இப்பாடசாலை பொறுப்பேற்கப்பட்டதாகவும் 1928 இல் சுவாமி விபுலானந்தர் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். எமது கல்லூரி வரலாற்றில் பொன்நாளாகும்.

இக்காலப்பகுதியில் தமிழ் பாடசாலை ஸ்ரீகோணேஸ்வரா வித்தியாலயமும் ஆங்கிலப் பாடசாலையாக இ.கி.ச.. இந்துக்கல்லூரியாக இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் 1962 இல் அரசாங்கம் இவ் இருபாடசாலை களை பொறுப்பேற்றது.

இப்பெருமைக்குரிய கல்லூரியில் அபிவிருத்திப்பணிக்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணையாக 1963 ஆம் ஆண்டில் பழைய மாணவர்சங்கம் உருவாக்கப்பட்டதாகவும் அதன் தலைவராக திரு.மு.பத்மநாதன் (உதவிபொது முகாமையாளர் மக்கள்வங்கி) திரு.பா.விஜயநாதன், திரு.ஏ. ஜாயா ஆகியோரது கூட்டு முயற்சியில் 1971 ஆம் ஆண்டுவரை சிறப்பாக ஆற்றியதாகவும் 1971 .இல் இச்சங்கத்தின் தலைவராக ஜனாப் எஸ்.எம்.ஜமால்தீன் செயலாளராக திரு.பா.விஜயநாதன் பொறுப்பேற்று சங்கத்தை வழிநடத்தி வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதன் பிற்பகுதியில் சங்கத்தின் வளர்ச்சி மந்த நிலையில் காணப்பட்டதாகவும் 1980 இல் அதிபராக இருந்த திரு.அ.சிவலோகநாதன் அவர்களின் முயற்சியின் பயனாக 1982 ஆம் ஆண்டு பழையமாணவர் சங்கம் புத்துயிர் பெற்றது. அதன் தலைவராக திரு.அ. தயாநிதியும் செயலாளராக திரு.எஸ்.ஜெகநாத னும் பொருளாளராக திரு.இ.சாந்திகுமார் அவர்களும் சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம்ஆண்டு சங்கத்தின் தலைவராக Dr சத்தியமூர்த்தி ,செயலாளராக திரு.ஆர்.சண்முக நாதன் பொருளாளராக திரு.இ.சாந்திகுமார் பொறுப்பேற்று சங்கத்தை வழிநடத்தி வருகையில் 1983 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட ஆடிக்கலவரத்தின் விளைவாக பழையமாணவர் சங்கம் செயலற்றுப் போனது.

1990 இல் அதிபராக விளங்கிய திரு.சி. தண்டாயுதபாணி அவர்களின் முயற்சியால் 1991 இல் பழையமாணவர் சங்கத்தின் தலைவராக Dr.கு.கேமச்சந்திரா செயலாளராக எந்திரி.சி. சந்திரசொருபன் பொருளாளராக திரு.கு. தயாநிதி அவர்கள் இச்சங்கத்திற்கு புத்துயிர் அளித்தனர்.

1992 இல் Dr.கு. கேமச்சந்திரா அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலை கல்லூரி வளாகத்தினுள் பழையமாணவர் சங்கத்தால் நிறுவப்பட்டு கொழும்பு இராமகிருஸ்ணமிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்ம கணானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1992 ல் கணிதப்பிரிவில 4ஏ சித்திபெற்ற செல்வன் கு. ரவிச்சந்தரன் கௌரவிக்கப்பட்டார்.

1995 இல் கொண்டு வரப்பட்ட புதிய அரச கொள்கை காரணமாக பழையமாணவர் சங்கத் தலைவராக கல்லூரி அதிபர் இருக்கவேண்டும் என்பதற்கமைவாக தலைவராக அதிபர் சி.தண்டாயுதபாணி அவர்களும் செயலாளராக திரு.இ.உமாகாந்தன் பொருளாளராக திரு.கு.





தயாநிதி அவர்களுடன் சங்கம் தனது நோக்கங்களை முன்னெடுத்துச் சென்றது.1994 ஆம் ஆண்டில் கணிததுறையில் 4A பெற்றமாணவனான செல்வன் .சி.சந்திரகாந்தன் அவர்களுக்கும் 1995 ஆம் ஆண்டில் வர்த்தகதுறையில் 4 A பெற்ற செல்வன் எம்.எஸ்.முகமட் சுரேஸ் அவர்களுக்கும் 1996 ஆம் ஆண்டில் தங்கப்பதக்கங்களை வழங்கி சங்கம் கௌரவித்தது.

1997 ஆம் ஆண்டு கல்லூரி நூற்றாண்டை முன்னிட்டு பழைமாணவர் சங்கம் நிதிசேகரிப்பில் ஈடுபட்டு 1998 இல் ரூ7 இலட்சம் பெறுமதியான கணனித்தொகுதியினை, கல்லூரியில் இருக்கும் பிரத்தியேக அறையினை திருத்தி அமைத்து குளிரூட்டி வசதிகளுடன் கூடிய வகையில் இத்தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிக்கப்பட்டது. இது பழையமாணவர் வரலாற்றில் ஓர் மைல் கல்லாகும்.

1997 ஆம் ஆண்டு பழையமாணவர் ஒன்றுகூடல் வைபத்தில் எமது கல்லூரியில நீண்டகாலமாக அதிபராக இருந்து சிறந்த பணியினை மேற்கொண்ட முன்னால் அதிபர் திரு.கே.சிவபாலன் அவர்களுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர் உட்பட பல பழைய மாணவர்களும் கலந்து கௌரவித்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

1999 ஆம் ஆண்டு முதல் செயலாளராக எந்திரி.இ.ஜெயமோகன் பொருளாளராக திரு.ச.பாரதிநாதன் பொறுப்பேற்று சங்கத்தை வழிநடத்திச் செல்கையில் 2004 ஆம் ஆண்டில் அதிபர்.சி.தண்டாயுதபாணி பதிவியுயர்வு பெற்று வலயக்கல்வி பணிப்பாளராக வவுனியாவிற்குச் சென்றதையடுத்து புதிய தலைவராக கல்லூரியின் அதிபர் திரு.மா.இராசரத்தினம் அவர்களும் செயலாளராக திரு.இ. உமாகாந்தன் பொறுப்பேற்று சங்கத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்றனர்.

இதே ஆண்டில் பழையமாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது பழையமாணவர்தினம் ஆனி 30 என பிரகடனம் செய்யப்பட்டு அன்றுமுதல் வருடாவருடம் பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் ஆனி 30 அல்லது அடுத்து வரும் விடுமுறை தினத்தில் நடைபெறுகின்றது.

2005 ஆம் ஆண்டு எமது கல்லூரியின் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக ஒன்றுகூடல் வைபவம் நடைபெறவில்லை.2006 ஆம் ஆண்டு முதல் பழைய மாணவர்தினத்தையொட்டி விளையாட்டு நிகழ்ச்சிகள் மாணவர்கள் ஆசிரியர்கள் பழையமாணவர்கள் ஆகியோருக்கிடையில் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களும் கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.


பழையமாணவர் சங்கத்தினரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஐப்பசி 5ம்திகதி ஆசிரயர் தினத்தையொட்டி மாணவர் களையும் இணைத்து ஆசரியர்களுக்கு மலர் மாலை அணிவித்ததுடன் சிறிய பரிசுகளையும் வழங்கி மதிய போசன விருந்தோம்பலுடன் ஆசிரியர்களை கௌரவிப்பது ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. அன்றைய தினத்தில் அந்த ஆண்டில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் கௌரவித்து வருகின்றது

.2007 ஆம் ஆண்டில் செயலாளராக திரு.ச. பாரதிநாதன் பொருளாளராக எந்திரி.கு. சிவகுமார் சங்கத்தை பொறுப்பேற்று வழி நடத்திச் சென்றனர்.2003 ஆம் ஆண்டு திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் இங்கிலாந்துக்கு மேற் கொண்ட கல்விச் சுற்றுலாவின் போது அங்கு பழையமாணவர் சங்கம் உருவாக வழியமைத்தார். இங்கிலாந்து பழையமாணவர் வழங்கிய நிதியைப் பயன்படுத்தி கட்புல,செவிப்புல சாதன அறையொன்று திறந்து வைக்கப்பட்டது.

இக்காலத்தில் முன்னால் அதிபர் சி.தண்டாயுத பாணி கல்லூரிக்கு ஆற்றிய சேவைக்காகவும் பழையமாணவர்வ சங்கத்தலைவராக இருந்து ஆற்றிய சேவைக்காகவும் அவரை கௌரவிக்குமுகமாக சேவைநலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராட்டுவிழா பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து நடாத்தியது.


கனடா வாழ் பழையமாணவர்கள் திரு.கு. தயாநிதி அவர்களை தலைவராகக் கொண்டு பழையமாணவர் சங்கக் கிளை 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் எமது கல்லூரியின் பழைய மாணவனும் மறைந்த டாக்டர் ஞானியின் ஞாபகார்த்தமாக டாக்டர் ஞானி புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் வழங்கிய நிதி கல்லூரியில் கல்வி கற்கும் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதாந்தம் நிதிஉதவி வழங்கப்பட்டது.

இந்த உதவி தற்போது தடைப்பட்டிருந்தாலும் இதனைத் தொடர்ந்து வழங்குவதற்கு கனடாக்கிளை எமது பழையமாணவர் சங்கத்துடன் இணைந்து குழு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு திரு.க.கிருஸ்ணகுமார் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச 24 மணிநேர நடைப்போட்டியில் கலந்து கொண்டமைக்காகவும் 2007 இல் திரு.கரிகரன் ரவிராஜ் இளம்வயதில் ஜடீளுடு சான்றிதழைப் பெற்றமைக்காகவும் 2008 இல் திரு.ரா. பிரணவேந்திரா தேசியமட்ட குண்டெறிதல் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றமைக்காகவும் 2009 இல் திரு.சி.காண்டீபன்(மிருதங்கம்) ஜப்பான் -இலங்கை நட்புறவுச்சங்கத்தால் புங்கா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமைக் காகவும் பழையமாணவர் தின நிகழ்வுகளில் கௌரவிக்கப்பட்டனர்.

2010 ஆம் ஆண்டில் செயலாளராக எந்திரி தி.கரிகரன் பொருளாளர் திரு.எஸ்.பரமேஸ் வரன் சங்கத்தை பொறுப்பேற்று வழிநடத்தினர். பழைய மாணவர்தின நிகழ்வில் தங்களது தொழில் துறையில் உன்னத நிலையை அடைந்தமைக்காக கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு.சி.தண்டாயுதபாணி வைத்திய கலாநிதி அ.யோகானந்தமூர்த்தி (இருதயநிபுணர்) எந்திரி ந.சுதேசன் (திட்டப்பணிப்பாளர்) திரு.மு. பத்மநாதன் (ஓய்வு பெற்ற உதவி பொதுமுகாமையாளர் மக்கள்வங்கி) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் அரையாண்டு செய்திமடலாக திரு.ச.பாரதிநாதனை பதிப்பாசிரியராகக் கொண்டு சாரல் பழையமாணவர் தின சிறப்புமலர் வெளியிடப்பட்டது

பழையமாணவர் சங்க புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 5மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ2000.'. வீதம் வழங்கப்படுகின்றது. இதற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையமாணவர்களும் நலன்விரும்பிகளும் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளன்ர். மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேலும் நிதிஉதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு வருடாந்த பரிசளிப்பின்போது கடந்த இருவருடங்களில் தேசியமட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட 11 மாணவர்களுக்கு 1பவுண் தங்கம் முன்னால் விஞ்ஞான ஆசிரியை மறைந்த செல்வி சதாசிவம் அவர்களின ஞாபகார்த்தமாக பெறாமகன் திரு.பொ.மனோகரன் 11 தங்கப் பதக்கங்களை வழங்கினார். அத்துடன் தேசியமட்டத்தில் கல்விபொதுதராதர சாதாரண பரீட்சையில் 6வது இடத்தைப் பெற்ற மாணவனுக்கு பழைய மாணவன் திரு.முகுந்நன் அவர்களால் மடிக்கணனி வழங்கப்பட்டது.

இங்கிலாந்திலுள்ள சில பழையமாணவர்கள், எமது பழையமாணவர்கள் வழங்கிய நிதியுதவியுடன் உள்;ர் நலன் விரும்பிகளின் பொருளுதவிகளுடனும் ரூ18 இலட்சம் செலவில் விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு அமைக்கப்பட்டு முன்னால் அதிபர் திரு.மா.இராசரத்தினம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் சேவைநலன் பாராட்டுவிழா அதிபர் மா.இராசரத்தினம் அவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கத்துடன் இணைந்து மணிமகுடமும் சூட்டப்பட்டது.

கல்லூரியின் மாணவ தலைவர்களுக்கு இரண்டு நாள் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது.திருகோணமலை வலய உயர்தரபாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான விடைப்போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மறைந்த விஞ்ஞான ஆசிரியர் செல்வி.சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக பரிசில்கள் வழங்கப்பட்டன.

யூன் 30 பழையமாணவர்கள் ஒன்றுகூடல் தினமாக 2011.07.02 ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற வேளையில் திரு.பா.சசிமகேந்திரன்,மேல்நீதிமன்ற நீதிபதி(கல்முனை,மட்டக்களப்பு) வைத்தியகலாநிதி புகனேகபாகு,விசேட மருத்துவ நிபுணர்(பொது வைத்தியசாலை, திருகோணமலை) எந்திரி. து.தவனேஸ்வரன், பிரதி பொது முகாமையாளர் (இலங்கை மின்சாரசபை கிழக்குமாகாணம்) திரு.இ. உமாகாந்தன்,பிரதி பிரதம செயலாளர்(வடக்கு மாகாணம்), திரு.இ.சுப்பிரமணியம், (இளைப்பாறிய மாவட்ட முகாமையாளர் இலங்கை வங்கி) ஜனாப்.அ.பஸில்அமீர் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்) இந்துக்கல்லூரி ஆகிய பழைய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பழையமாணவர் சங்க எதிர்கால இலக்காக கல்லூரியிலிருந்து விளையாட்டு மைதானம் செல்வதற்கு மேம்பாலம் அமைத்தல் ,வெளியூர் மாணவர்கள் தங்கி கல்விகற்பதற்கு விடுதி அமைத்தல், இதுவரை பழைய மாணவர் சங்கத்தில் இணையாதவர்களை இணைத்தல், வாழ்நாளில் ஒரு தடவையேனும் தன்னை வளர்த்து ஆளாக்கிய கல்லூரிக்கு செய்யப் போவது என்ன என கேள்விகேட்டல்,புலம் பெயர் மாணவர்கள் தங்கள் நாட்டில் பழையமாணவர்சங்கக்கிளைகளை அமைத்தல் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் பெற்றாரின் பங்கு

வல்வை ந. அனந்தராஜ்
**B.A.(Hons.), M.A.Dip-In-Ed.,Dip-In-Journalism**
**SLPS-1,SLEAS-111**

ஒருபிள்ளையின் ஆளுமை விருத்தி அப்பிள்ளை தாயின் கருவறையில் இருந்தே ஆரம்பமாகின்றுது என்பது பல்வேறு ஆய்வுகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒரு தாயின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சமூகம் அறிந்து கொள்வதற்காக சில குறிப்புக்கள் தரப்படுகின்றன.

ஒரு தாய் கருத்தரித்த காலத்தில் அவளுடைய போசாக்கு உணவு, பழக்க வழக்கங்கள்,சிந்தனை, உரையாடல்கள்,கலை பண்பாட்டு உணர்வுகள் என்பன குழந்தையின் பிற்கால வாழ்வில் பிரதிபலிக்கப்படுகின்றன. இதற்கு மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ள பின்வரும் வரலாற்றுக் கதை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

"அருச்சுனனின் மனைவி சுபத்திரை கர்ப்பமுற்றிருந்த வேளையில் ஒரு நாள் மஞ்சத்தில் களைப்பாறிக் கொண்டிருந்தாள்.அப்பொழுது அருச்சுணன் அருகே வந்து அமர்ந்தான். 'வில்லுக்கு விஜயன்' என்ற சிறப்பைப் பெற்ற அருச்சுணனுக்கு நிகராக எவருமே இல்லை என்ற அளவுக்கு மிகச் சிறந்த வீரனாக விளங்கியவன்.

அருச்சுணனிடம் இருந்து போர் முறைகளைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பிய சுபத்திரை, 'சுவாமி!... வில்வித்தையிலும் போர் வியூகங்களை வகுப்பதிலும் வல்லவராக விளங்குகின்றீர்களே... போர் வியூகங்களைப் பற்றிச் சிறிது விளக்குவீர்களா?" அவளது கர்ப்பகால ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற வருப்புடன்,வயூகங்களைப்பற்றி விளக்கத் தொடங்கினான். போர் வீரர்கள் எதிரிப் படை வீரர்களைச் சுற்றி வளைத்து அவர்களை அழிப்பதற்காகவே வியூகங்கள் அமைக்கப்படுபின்றன.ஒரு தரப்பு வீரர்கள் பாம்பு வடிவிலான சர்ப்ப வியூகத்தை அமைத்தால்,மற்றைய தரப்பு வீரர்கள் அவ்வியூகத்தைச் சிதறடிக்கக்கூடிய வகையில் 'கருட வியூகத்தை' அமைத்துப் போரிடுவார்கள்.மிகச் சிறந்த பயிற்சி பெற்ற ஒரு வீரன் வியூகத்தை உடைத்து உள்ளே போனவும்.அதனை வெற்றி கொண்டு வெளியேறியும் வந்து விடுவான.' இதனைக்கூறிக் கொண்டிருக்கும் பொழுதே சுபத்திரை உறங்கி விட்டாள்.ஆனால் அவனுடைய செய்தியைக் கேட்கும் பாவனையிலான முனகல் ஒலி மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது.அருச்சுணன் மேலும் உற்சாகத்துடன்,வியூகம் ஒன்றை எவ்வாறு உடைத்துக் கொண்டு உள்ளே செல்வது என்பதை விரிவாகக் கூறி எதிரிப்படைகளை அழிப்பது பற்றி வளக்கி அதில் இருந்து வெற்றியுடன் மீண்டு வெளியே வரும் வழிமுறைகளையும் கூறத் தொடங்கவும், 'அருச்சுணா!.... " என்ற கிருட்ணனின் குரல் கேட்டு சுபத்திரை திடுக்கிட்டு எழுந்ததும், அருச்சுணனும் வியூகத்தை உடைத்து வெளியே வரும் மீதியைக் கூற முடியாது போய்விட்டது. .இந்தக் கருவறைப் போதனை பின்னர் அவனது மகன் அபிமன்யுவின் மரணத்திற்கே காரணமாக விளங்கியது.போர் வியூகத்தின் போத அதனை வெற்றிகரமாக உடைத்து பல கௌரவ வீரர்களைக் கொன்று உள்ளே சென்ற 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது நிரம்பிய அபிமன்யுவினால் வியுகத்தை உடைத்து மீண்டும் வெளியே வரமுடியாத நிலையில் தந்தரைமாகக் கொல்லப்பட்டான." இது ஒரு வரலாற்றுக் கதையாக இருந்தாலும், அறிவியல் ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

எனவே தாய் தனது கருவறையில் பெறுமதி வாய்ந்த உயிரை சுமந்து கொண்டிருக்கும் பொழுது, பின்வரும் ஒழுங்கு முறைகளைக் கவனிக்கவேண்டும்.

- கர்ப்பமுற்ற காலத்தில் தாயின் தொப்புள் கொடிமூலமே குழந்தைக்குத் தேவையான குருதி கொண்டு செல்லப்படுவதால்,தாய் மிகச் சிறந்த போசாக்கான உணவை வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய உட்கொள்ள வேண்டும்.வசதி உள்ளவர்கள், வசதி அற்றவர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி அரசினால் வழங்கப்படுகின்ற உதவிகளையும்,ஆலோசனைகளையும் தவறாது பெற்றுக் கொள்ளவேண்டும். ஓவ்வொரு தாய் மாரும் குடும்ப நல வைத்தியருடன் தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணிவரவேண்டும்.
- கர்ப்பமுற்ற காலத்தில் நல்ல சிந்தனையைத் தூண்டும் வகையிலான நூல்களை வாசிப்பதுடன்,நல்ல படக்காட்சிகளையும் பார்க்க வேண்டும்.
- நல்லவர்களுடன் பழகுவதையும், நல்ல பண்பான வார்த்தைகளையும் தினமும் கைக் கொள்ளவேண்டும்.
- ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் வகையில்,நேரம் கிடைக்கும் போதெல் லாம் இறை சிந்தனையிலும்,ஆலய வழிபாட்டிலும் ஈடுபட்டு வரவேண்டும். இந்துக்கள் கந்த சட்டி கவசம் வாசித்துப் பாடுவதிலும். கிறிஸ்தவர்கள் பைபிள் கதைகளை வாசித்தல், இஸ்லாமியர்கள் திருக்குரான் மற்றும் நபிகள் நாயகத்தின் வரலாற்றுச் சமபவங்களையும் வாசித்து வர வேண்டும். இவற்றை ஒலி வடிவில் கேட்பதிலும் ஈடுபடலாம்.
- இவற்றுக்கும் மேலாக கர்ப்பமுற்ற தாயின் மனதைச் சந்தோசப்படுத்தும் வகையில்,அவளது கணவன், தாய், தந்தை மற்றும் சுற்றத்தினர் பரிவையும், அன்பையும் காட்ட வேண்டும்..
- மன அழுத்தமற்ற ஒரு சூழலில் மகிழ்ச்சிகரமான வேளையில் தனது குழந்தையை ஈன்றெடுக்கவேண்டும்.

குழந்தையொன்றைப் பெற்றெடுத்த தாயின் வேதனைகள், வலிகள் எல்லாம் அந்தக்குழந்தையின் முகத்தைப் பார்த்து அழுகுரலைக் கேட்டதுமே பஞ்சாய்ப் பறந்து போய்விடும். அவை எல்லாவற்றை யும் விட, "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவனின் குறளுக்கு அமைய அவள் தனது பிள்ளையைச் சான்றோன் ஆக்குவதற்கான முயற்சிகளை யெல்லாம் எடுத்து வரவேண்டும். குழந்தைகள் வளர்ந்து வரும் பொழுது, அவர்களுடைய ஒவ்வொரு நடத்தைக் கோலங்களையும், மாற்றங்களையும் அக்குழந்தையின் பெற்றார் மிக உன்னிப்பாக அவதானித்து வரவேண்டும்.

தன் மீது பரிவும்,அரவணைப்பும் தன் தாய் தந்தையரிடம் இருந்து கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற ஆதங்கம் இருப்பது இயற்கையானதுதானே. பிள்ளையின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பிள்ளையைக் கணிப்புக்குட்படுத்தி வருவதற்கு பின்வரும் நடைமுறைகளைத் தாயும் தந்தையும் மற்றும் சுற்றத்தினரும் பின்பற்றி வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை அழுவதற்கான காரணத்தை அறிந்து குறித்த தேவையை நிவர்த்தி செய்தல்:

சில வேளைகளில் பிள்ளைகள் எதற்கு அழுகின்றார்கள் என்று தெரியாமலேயே அடம் பிடித்து அழுது கொண்டிருப்பார்கள். இந்த விடயத்தில் பெரியவர்கள் கோபமோ எரிச்சலோ கொள்ளாது பிள்ளை அழுவதற் கான காரணத்தைச் சரியாக அறிந்து அவை தொடர்பாக பிள்ளையின் தேவைகளை அறிந்து நிவர்த்தி செய்தல் வேண்டும். மஸ்லோ என்பவரின் தேவைக் கொள்கை யின் படி ஒவ்வொரு பிள்ளையும் தனது அடிப்படைத் தேவைகள் சமூகத்தினால்



நிறைவு செய்யப்படவேண்டும் என்பதையே விரும்பும்

பிள்ளையுடன் அதிகளவு நேரம் உடனிருத்தல்:

பிள்ளைக்கும் பெற்றாருக்கும் இடையிலான தொடர்பு மிக நெருக்கமாக இருக்கும் வகையில் பெற்றார் பார்த்துக் கொள்ள வேண்டும்.பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், உணவு உட்கொள்ளல், கதை கூறுதல்,பாட்டுப்பாடுதல்,அவர்களது கொப்பி புத்தகங்களைப் பார்வையிடுதல் அவர்களது பள்ளி ஆசிரியர்களுடன் சிநேகபூர்வமான முறையில் உரையாடுதல் போன்ற பிள்ளைகளை மகிழ்ச்சியூட்டும் செயற்பாடுகளில் பெற்றார் அதிகளவு நேரம் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

பிள்ளை சொல்லும் விடயங்களைக் கூர்ந்து அவதானித்தலும்,உற்றுக் கேட்டலும்.:

பிள்ளைகள் தம்மையும் ஒரு வளர்ச்சி பெற்ற மனிதர்களாகவே கருதுவதால், அவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் கணிப்பை எதிர்பார்க்கின்றனர்.அதனால் பிள்ளைகள் கூறும் விடயங்களைக் கூர்ந்து அவதானிப்பதுடன்,அவர்களுடைய உணர்வுகளுடன் ஒத்த உணர்வைக் காட்டுப வர்களாகவும் இருத்தல் வேண்டும்.ஏனெனில் குழந்தைகள் கூடப் பல சந்தர்ப்பங்களில் மிகச் சிறந்த கருத்துக்களையும் வெளிப்படுத்துவதையும் பார்த்திருக்கின்றோ மல்லவா? அதே வேளை தமது பிள்ளை களை ஏனைய சம வயதுப் பிள்ளைகளுடன் தொடர்பு படுத்திக் குறைகளைச் சுட்டிக்காட்டாது இருத்தல் வேண்டும். குழந்தைகளும் ஒரு உன்னதமான மனித உயிர் என்ற வகையில் அவர்களுக்கான உரிய மதிப்பையும் கௌரவத்தையும் கொடுத்தல் வேண்டும்.

பிள்ளையைச் சுதந்திரமாகச் செயற்பட விட்டு வெற்றிபெறும போது பாராட்டுதல்:

பிள்ளைகள் பொதுவாக எதையும் செய்து பார்க்க வேண்டும் அதனூடாக உண்மையை அறிந்து கொள்ளவேண்டும் என்றே விரும்புவர்.. அவர்களுக்கு ஆபத்து நேராத வகையில் அவர்களைச் சுதந்திரமாகச் செயற்படவைத்து அந்த முயற்சிகளில் வெற்றி பெறும் போது மனம் திறந்து எல்லோர் முன்னிலையிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். ஆனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மற்றவர்கள் முன்னிலையில் குறைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்காது இருத்தல் வேண்டும்.இது அவர்களை ஊக்குவிப்பதுடன்,புதிய கண்டுபிடிப்பாளரகவும் உருவாகுவதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.இந்த விடயங்களில் தேவை ஏற்படும் போது மட்டும் உதவிகளைச் செய்ய வேண்டுமே யொழிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஓடிச் சென்று





உதவிகளைச் செய்யக்கூடாது.இது பிள்ளை களின் ஆக்கத்திறன் சிந்தனையை மழுங்கடித்து விடும்.

பிள்ளையின் உரிமைகளைப் பேணிக் காப்பாற்றுதல்:

பிள்ளைகள் மற்றவர்களைப் போன்றே அனைத்து உரிமைகளையும் கொண்டிருக்கின்றார்கள். அனைத்துலக சிறுவர் உரிமைகள் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தான தால்,அவர்களது உரிமைக ளையும்,கடமைகளையும் ஒவ்வொரு வரும் பேணிப் பாதுகாக்க வேணடும். சிறுவர்கள் மீதான பாலியல் வன் முறைகள்,சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்,வீட்டு வேலைகளுக் காகவும், ஏனைய சிறு குழந்தை களைப் பராமரிப்பதற்காகவும் பிள் ளைகளை ஈடுபடுத்தும் சட்டவிரோத வடவடிக்கைகளுக்கு எதிராக ஒவ்வொரு தனி மனிதனும் குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

பல விடயங்களிலும் பிள்ளையை இணைத்துக் கூட்டாகச் செயற்படுதல்:

பெற்றார் செய்கின்ற சிறு வேலைகளில் பிள்ளைகளையும் ஈடுபடுத்தி வரவேண்டும். அப்பொழுது தான் சிறு வயதில் இருந்தே பொறுப்புணர்வையும்,கூட்டுப் பொறுப்பையும் வளர்க்கலாம.அதேவேளை பிள்ளைகள் தொடர்சியாகக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். குழந்தைகள் எப்பொழுதும் “ ஏன்? ஏதற்கு? எப்படி? ” என்று மாறிமாறிக் கேள்விகளைக் கேட்டுப் பெரியவர்க ளைத் துளைத்தெடுத்துக் கொண்டே இருப்பார்கள்.இவ்வாறு பிள்ளை தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருக்கும் வினாக்களுக்குச் சலிப்போ, கோபமோ காட்டாது முடிந்தவரை விடைகளை அளித்தல் வேண்டும். அவர்களுடைய வினாக்க ளுக்கு விடை அளிக்க முடியாத சந்தர்ப்பங்க ளில் “ இது எனக்குத் தெரிய வில்லை நாளைக்குச் சரியான பதிலைக் கூறுகிறேன் ” என்று பெருந்தன்மையுடன் கூறி வைக்க வேண்டும்.அதை விட்டுத் தவறான விடையைக் கூறிப் பிள்ளைகளப் பிழையாக வழி நடத்தக்கூடாது.

பிள்ளை பார்த்துப் பின்பற்றக்கூடிய வகையில் முன்மாதிரியான வாழ்வு வாழுதல்.

பெரியவர்களாகிய ஒவ்வொருவரும் நெறிப் படுத்தப்பட்ட வாழ்க்கை முறையை வாழ்ந்து குழந்தைகளுக்கு முன்மாதிரியானவர் களாகத் திகழவேண்டும். பொய்கூறுதல். ஏமாற்றுதல், நேரத்திற்கு நேரம் கொள்கைகளையும் எண்ணங்களையும் மாற்றி சுயநலமிக்கவர்களாக வாழுதல்,களவெடுத்தல், தீய வார்த்தைகளப் பேசுதல் போன்ற,சமூகம் ஏற்றுக் கொள்ளாத செயல்களைச் செய்யாதவர்களாகவும், எல்லோராலும் மதிக்கப்படும் வாழ்க்கையை வாழ்ந்து குழந்தைகளுக்கு முன்மாதிரியானவர்க ளாகத் திகழ்ந்து அவர்களை நற்பிரஜைகளாக் குவது ஒவ்வொருவரினதும் கடமையாகும் இதனூடாக வினைத்திறன் மிக்க சிறந்த பிள்ளைகளை உருவாக்கி, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையாலும் வன்செயல்களினாலும் அழிக்கப்பட்டு வழிபாடின்றிக் கிடக்கும் மாபெரும் ஆலயங்களான திருக்கரைசையம்பதி அகத்தியர் ஸ்தாபனமும் திருமங்கலாயும் – இன்றைய நிலை

நாகராசா கணபதிப்பிள்ளை
மூத்த பழைய மாணவர், தி /ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



திருக்கரைசை மாநகரில் அகத்தியரால் ஸ்தாபிக்கபட்ட சிவலிங்கத்தினையுடைய அகஸ்திய ஸ்தாபன ஆலயம் சமீபத்தில் இனந்தெரியாத விஷமிகளால் நடாத்தப்பட்ட வன்செயலோடு முற்றாக அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

உலகெங்கிலுமுள்ள இந்துக்களின் உள்ளங்களிலும், கோயிலைச்சுற்றி வாழ்கின்ற மக்கள் உள்ளங்களிலும், மீண்டும் எப்போது லிங்கத்தினையும், அம்பாளையும் தீர்த்த விநாயகரையும், முருகனையும், திருக்கரைசை புராணம் விளிக்கின்ற மாபெரும் ஆயலத்தினையும், பெருமானது பாதங்களைப் பணிந்து கழுவிச் சென்று, திருக்கோணேஸ்வரப் பெருமான் உறைகின்ற திருக்கோணமலைக்கடலில் சங்கமிக்கின்ற ஆண்டுதோறும் அமாவாசை திதியில் மக்கள் சென்று தீர்த்தமாடும் மகாவலி கங்கை தீர்த்த நிகழ்வினையையும், இவ்வாலயம் பூரணப்பொலிவுடன் புனருத்தாபனம் செய்யப் பட்டு எப்போது மீண்டும் வழிபடப் போகின்றோம் என ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.


இவ்வாலய திருப்பணிகளையும் கங்குவேலி ஆதிசிவன் ஆலய நிர்வாக சபையினரே மூதூர் பகுதி இந்துக்களின் உதவியுடன் இணைந்து செயலாற்றி வருகின்றார்கள். சமீபத்தில் இவ்வாலய திருப்பணியை முன்னெடுக்கு முகமாக திருக்கரைசை லிங்கத்தினையும் மற்றும் பரிவார மூர்த்திகளையும் தற்காலிக கட்டிடம் ஒன்று அமைத்து வாலஸ்தாபனம் முறைப்படியே செய்தனர். நாம் ஒவ்வொருவரும் செய்யும் நற்கருமங்களும் தீய கருமங்களும் நம்மையே வந்தடைகின்றன. இறைவன் நம்மை ஒவ்வொருகணமும் கண்காணித்து பலசோதனைகளுக்கு உட்படுத்துகின்றான்.

## இந்துக்களின் மனதை புண்படவைக்கும் வன்செயல்

சமீபத்தில் 2009ம் ஆண்டு மார்கழி மாதத்தில் வாலஸ்தாபனம் செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்த கட்டிடத்தினுள் வைக்கப்பட்டிருந்த அகத்தியப் பெருமான் ஸ்தாபித்த சிவலிங்கத்தினை முற்றாக உடைத்தும் மற்றும் முருகன் சிலை உட்பட மற்றைய விக்கிரகங்களும் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட வாசற்படிக் கற்களும், ஆலயத்திற்குரிய பல பொருட்களும் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. அத்துடன் ஆலய கட்டடமும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்செயல், இந்துக்கள் விழிப்புணர்ச்சி பெறவேண்டுமென்றே இறைவனின் திருவிளையாடலாக சில இனந்தெரியாத விஷமிகளால் நடாத்தப்பட்டுள்ளது. அகத்தியர் ஸ்தாபனமும் திருமங்கலாயும் அழிந்து நூறாண்டுகள் கழிந்து விட்டன. அகஸ்தியஸ்தாபன லிங்கமும் முருகன் சிலையும் மற்றைய சிற்பங்கள் விக்கிரகங்கள் யாவும் பங்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. குறிப்பாக லிங்கம் வெடித்தும் சேதமாக்கப்பட்டும் முருகன் சிலை இரண்டு துண்டுகளாகவே உடைக்கப்பட்டு பொருத்தி வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது.

இந்நிலையில் தான் வருடா வருடம் சுவாமி தீர்த்தமாடுவதற்காக கங்குவேலி சிவாலயத்திலிருந்து பக்தர்கள் புடை சூழ புறப்பட்டு அகத்தியர் ஸ்தாபனத் திற்கு அருகாமையில் இருக்கும் கங்கைக்கரைக்கு எழுந்தருளிஆடி அமாவாசை இரவன்று திருக்கரைசை புராணம் படித்து விடிந்ததும் தீமிதிப்பு நடைபெற்று பின் ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு பிதிர் தர்ப்பணம் செய்து முடிவில் சுவாமியுடன் பக்தர்கள் எல்லோரும் கங்கையில் தீர்த்தமாடுவார்கள். மெய்சிலிர்க்கவைக்கும் தீர்த்த நிகழ்விற்குப் பிற்பாடு பாறணை நடைபெற்று அதன்பிற்பாடு சுவாமி பக்தர் புடைசூழ அகத்திய ஸ்தாபன பங்கப்பட்ட நிலையிலுள்ள லிங்கத்திற்கும் பங்கப்பட்ட முருகனுக்கும் அபிஷேகம் நடைபெற்று சுவாமி மீண்டும் கங்குவேலி ஆலயம் திரும்புவார்.

பங்கப்பட்ட லிங்கத்திற்கோ பரிவாரமூர்த்திகளுக்கோ அபிஷேகம் பூசைகள் முதலிய செய்வது இந்து தர்மம் சைவாகமம் ஏற்றுக் கொள்ளாத ஒரு செயல். எந்த ஒரு லிங்கமோ விக்கிரகமோ ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யும் வரை உயிரற்ற உடம்பு தான். வெறும் கற்சிலையே கும்பாபிஷேகம் செய்யப்பட்டு உயிர் ஊட்டப் பட்டபின் தெய்வம் நம்மோடு பேசுகின்றது. திருக்கரைசைப்புராணம் சிறப்பித்துக்கூறும் அகத்தியர் ஸ்தாபித்த லிங்கத்தின் உள்ளிருந் தல்லவா கைலையம்பதியான் உமையவளோடு தோன்றி அகஸ்தியருக்குக் கொடுத்த வாக்குப்பிரகாரம் தமது திருமணக் கோலத்தைக் காட்டியருளினார்.

இறைவனின் நியதியின்படி தோன்றிய எல்லாப் பொருட்களும் அழியப்பட வேண்டியவையே. ஆலயங்களில் கூட ஒருகுறிப்பிட்ட கால எல்லைக்குப்பின் ஆலயம் பழுது பார்க்கப்பட்டு பங்கப்பட்ட லிங்கங்களோ, விக்கிரகங்களோ அகற்றப்பட்டு புதியவைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அஷ்டபந்தனம் புதுக்குப்பட்டு, ஜீர்ணோத்தாரன் சம்புரோட்சண மகாகும்பாபிஷேகங்கள் சிவாகம முறைப்படி நடைபெறுவதுண்டு.

இந் நிலையிலிருந்து பார்க்கும் போது காலத்தினால் சேதமாக்கப்பட்டு பங்கப்பட்டிருந்த அந்த லிங்கம் என்றோ அகற்றப்படிருக்கவேண்டிய தொன்றாகும். அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதும் பூசை நடைபெறுவதும் இறைவனுக்கே பிடிக்கவில்லை போலும். இறைவனே விஷமிகள் ரூபத்தில் வந்து அந்த லிங்கத்தினை அழித்ததும் அவன் செயல் என்றே கூறவேண்டும்.

யஜுர்வேதத்தில் தலைசிறந்த பகுதி ஸ்ரீருத்ரம். ஸ்ரீருத்திரத்தில் நமகம் என்ற பகுதியில் சிவனின் நாமங்களில் 3,2ல் ஸ்தேனானாம் தபயே நமோ நமோ நம: கள்வர் தலைவருமாகிய பரமேஸ்வரருக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம் என்று சிவனுக்கே நாமமுளது. திருடர்களின் உடலிலும் சிவன் ஜீவரூபியாகவும் ஈஸ்வர ரூபியாகவும் இருக்கிறார். அளவுக்கு மீறி தீயவழியில் பொருளைச் சம்பாதித்து சேர்த்து வைத்திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்களிடம் இறைவனே கொள்ளைக்காரனாக வந்து கொள்ளையடிக்கின்றார்.

இங்கும் திருக்கரைசையிலும் அறியாமையின் காரணத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற லிங்கத்தினை அடிப்பதற்காகவே விஷமிகளின் ரூபத்தில் வந்து இறைவன் செயல்பட்டிருக்கலாமல்லவா? பங்கப்பட்ட லிங்கத்திற்கோ மற்றும் விக்கிரகங்களுக்கோ கிரியைகள் செய்வது, பூசை செய்வது, அபிஷேகம் செய்வது தவறு என்று முற்றுமுழுதாக மக்கள் மீது பழியைப் போடாமல் பல்லாண்டுகளாக ஒருவர் மாறி ஒருவராக அபிஷேகம் செய்கின்ற குருமார்களும் தவறுகளை எடுத்துக்கூறி தவிர்த்திருக்கலாம்.

பேரன்புமிக்க இந்துக்களாகிய நாம் லிங்கத்தினை அழித்த விஷமிகள்மீது பழியைப் போடாமல், நம் அறியாமையின் மீதும் அசட்டையினத்தின் மீதும் பழியைப் போட்டு, மீண்டும் எம்பெருமானின் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து. புதிய தொரு சிவலிங்கத்தினையும் விக்கிரகங்களையும் தருவித்து சிற்பச்சிறப்புகளுடன் கோயில் அமைத்து வழிபடுவதே சாலச்சிறந்தது. உடனடியாகவே இம்முயற்றியில் இலங்கை உட்பட இந்தியா மற்றும் உலக நாடுகளில் வாழும் அனைத்து இந்துமக்களுக்கும் மற்றும் சமய வேறுபாடற்ற நலன் விரும்பிகளுக்கும் தெரிவித்து மாதுமை சமேத கோணநாதப் பெருமானின் திருவருளுடன் ஈடுபட்டு அகத்தியப் பெருமானின் ஆலயத்தை நிர்மாணிப்போமாக இத்துடன் சிங்கபூதன் அமைத்த திருமங்கலாய் சந்திரசேகரர் சிவாயத்தையும் கங்கைக் கருகாமையிலுள்ள நீலாப்பளை அம்பாள் ஆலயத்தையும் புனருத்தாபனம் செய்வதையும் உணர்ந்து செய்யப்பட வேண்டியுள்ளோம்.

இம்முயற்சியில் பலரும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆறுதல் அளிக்கக் கூடிய ஒரு செய்தியும் நம்காதில் எட்டுகின்றது. உலகின் பல பகுதிகளில் இந்து சமய வேத பாடசாலைகளைக் கொண்டதும் ரிஷிகேசத்திலும் கோயம்புத்தூரிலும் தலைமைப் பீடங்களை அமைத்து வேதநெறிபரப்புவதிலும் பகவான் கிருஷ்ணன் அருளிய கீதா உபதேசங் களை பரப்பிக் கொண்டிருப்பவருமாகிய ஸ்ரீ சுவாமி தயாநந்த சரஸ்வதி அவர்களின் கவனத்திலும் திருக்கரைசையம்பதி அகத்தியர் ஸ்தாபனம் தோன்றியுள்ளது.

இம்முயற்சியில் திருக்கோணமலையில் வாழ்ந்து சிவத்தொண்டிலும், சிறார்களுக்கும் பெரியவர்களுக்கும் கல்வியறிவு பரம்பும் தொண்டிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் திரு.கலியுகவரதன் சமீபத்தில் ரிஷிகேசத்திற்கு சென்று சுவாமி தயாநந்த சரஸ்வதி அவர்களை சந்தித்து அகத்திய ஸ்தாபனத்தைப் பற்றிய பூரண விளக்கத்தையும் எடுத்தியம்பி ஆலயத்தினை அமைக்கும் பணியினை சுவாமிஜி அவர்களே முழுமுயற்சியுடன் வேண்டிய உதவிகளை நல்குவதாக திரு. கலியுகவரதனுக்கு வாக்களித்திருக்கின்றார். நாம் எல்லோரும் குறிப்பாக ஆலய நிர்வாக சபையினரும் நலன் விரும்பிகளும் ஒன்று கூடி திரு.கலியுகவரதன் அவர்களை சந்தித்தும் மற்றும் வேறு எந்த வழிகளில் இம்மாபெரும் இறைச்சேவையை செய்து முடிக்கலாம் என சிந்தித்து செயல்படுவோமாகில் நாம் ஓரடி எடுக்க இறைவன் நூறு அடி எடுத்து வந்து தனது கைங்கரியத்தை நிறைவேற்றி வைப்பான் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோமாக.

ஒன்றை மனதில் கொள்வோம். ஒரு நாராயணபக்தனின் உள்ளத்தில் எழுந்த வேண்டுதலும் நம்பிக்கையும் இலங்கையிலிலேயே ஒரு மிகப்பெரிய கோயில் ஒன்று திருக்கோணமலையில் உருவாக்கப்பட்டு இறைவன் லக்ஷ்மிநாராயணனாக வந்து குடியேறியுள்ளான் சாதுக்களைகாப்பதற்காகவும் தர்மத்தை நிலைநாட்டவும் வந்துள்ள பெருமாள் மும்மூர்த்திகளில் ஒருவரான சிவபெருமானின் ஆலயத்தை கட்டித்தராமலா இருப்பான் எமது வேலை இறைவனை சரணடைவதே அவன் வேலை சரணடைந்தோரை காப்பதே ஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையும் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டிய இன்றைய தேவையும்

க. அருள்சுப்பிரமணியம்
செயலாளர், கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை

தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரம் ஏறத்தாள மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களையுடைய சிவத்தலம். நெடுங்காலமாகவே உலகின் பல பாகங்களில் வாழ்ந்துவரும் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனிதத்தலமாகத் திருக்கோணேஸ்வரம் இருப்பதை அனைவரும் அறிவார்கள். மற்றைய மதங்களைச் சேர்ந்த மக்களும் பெருமளவில் வந்து வழிபட்டுச் செல்லும் சிறப்பு வாய்ந்த தலமாகவும் திருக்கோணேஸ்வரம் திகழ்கிறது. இங்கே குடிகொண்டிருக்கும் பெருமானின் பெயர் - கோணேஸ்வரர், பெருமாட்டியின் பெயர் - மாதுமையம்பாள், தீர்த்தம் - பாபநாச தீர்த்தம், தல விருட்சம் - கல்லால். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய விசேடங்களைக் கொண்டது திருக்கோணேஸ்வரம்.

திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் கீர்த்தியும் மக்கள் அறியாததல்ல. ஆயினும் அவற்றை எல்லா மக்களின் மனங்களில் பதிய வைக்க வேண்டிய தேவையை உணர்ந்த பல வரலாற்றாசிரியர்கள் கடந்த காலங்களில் தமது ஆராய்ச்சி மூலம் பங்களிப்பினைத் தந்து பெரும்பணியாற்றியிருக்கிறார்கள். இப்போது அத்தகைய தேவை முன்னரைவிட மிகுதியாயுள்ளது.

முப்புறமும் நீலக்கடல் சூழ்ந்த மலையுச்சியில் இயற்கை எழில் பூத்துக் குலுங்கும் சூழலில் அமைந்திருக்கும் திருக்கோணேஸ்வரம் - பூமித்தாயின் மடியில் மிகப் புனிதமானதும் அரிதானதுமான திருத்தலமாகும். பொதுவாகவே, உலகெங்கிலும் குறிப்பாக இந்தியாவிலும் விசேடமாக தமிழ்நாட்டிலும் ஆலயங்களை மையமாக வைத்தே நகரங்களும் கிராமங்களும் உருவாகியிருக்கின்றன. அவ்வாலயங்களின் கீர்த்தியினாலேயே நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பெருமைகள் வந்து சேர்கின்றன. கோணேஸ்வரப் பெருமான் குடிகொண்டு அருள்பாலிக்கும் இத்தலத்தின் இருப்பினால் திருகோணமலை மண் சிறப்புப் பெறுகிறது.

கோணேசப் பெருமான் வீற்றிருக்கும் மலையுச்சியிலிருந்து நேரடிக் கண்பார்வையில் அமைந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றது ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி. எனவே இக்கல்லூரிக்கு கோணேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைப்பதென்பது வெகு இயல்பானது. இக்கல்லூரி வெளியிடும் மலரில் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மை பற்றியும் அதனை எமது மக்கள் இன்றைய காலகட்டத்தில் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை பற்றியும் இங்கே எழுதுவது மிகப் பொருத்தமானது. கோணேஸ்வரப் பெருமானின் 2011ம் வருடத்திற்கான மகோற்சவம் நடைபெற்ற வேளையில் இக்கட்டுரை பத்திரிகையில் வெளியானது. எனினும் இதனை இந்துக்கல்லூரி மலரிலும் வெளியிடுவதன் மூலம் எமது இளம் சமுதாயம் அதனை வாசித்து மனதில் இருத்திக் கொள்ளும் வாய்ப்பு அதிகம்.

இப்புனிதத்தலம் இன்றளவும் பல சோதனைக ளுக்குள்ளாகியும் கூட உலகெங்கிலுமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெருமக்களினால் மிகுந்த பக்தி சிரத்தையோடு தரிசிக்கப்பட்டு வருகின்றது. சமூக அரசியல் மாற்றங்களின் காரணமாக உண்மைகள் மறைக்கப்பட்டு வரலாறுகள் திரித்தெழுதப்படுவது இடம் பெற்று வந்திருக்கிறது. இதற்கு திருக்கோணேஸ்வரமும் விதிவிலக்கல்ல. ஆயினும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவர்கள் கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதை எப்படி யாராலும் அழித்தெழுத முடியாதோ அது போலவே அவரால் பாடப்பட்ட திருக்கோணேஸ்வரப் பதிகங்களும் அழித்தெழுதப்பட முடியாதனவாகும். 7ம் நூற்றாண்டிற்கு முன்னர் இவ்வாலயத்தின் வரலாற்றினை எவர் எப்படிக் கூறிய போதும் 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடிய இப் பாடல்கள் இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பாடல் பெற்ற புனிதத்தலம் மிகச் சிறப்போடு இருந்ததற்கான அசைக்க முடியாத சான்றாக இருக்கின்றது.

இக்கட்டுரையில் பல வரலாற்றாசிரியர்களின் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு நாம் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம். திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலத்தையொட்டி வரலாற்றுத்துறை ஆசிரியர்கள் பலர் தங்கள் கருத்துகளை முன்வைத்திருக்கிறார்கள். அவர்களில், கலாநிதி செ. குணசிங்கம் அவர்கள் திருக்கோணேஸ்வரம் ஆகக் குறைந்தது கிறிஸ்துவிற்கு முற்பட்ட 6ம் நூற்றாண்டிற்கும் முதலாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனவும் இலங்கை தொல் பொருளியல்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் திரு. சேனக பரணவிதான, திருக்கோணேஸ்வரம் அநேகமாக மகாசேனன் (கி.பி.302) காலத்திற்கு முந்திய காலகட்டத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்றும் திரு. கொட் விங்ரன் தனது ஆய்வில் கோணேசர் ஆலயம் கி.மு.2590ல் உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்கள்.

இராமாயண காலம் எனக் கருதப்படும் கிறிஸ்துவிற்கு முன்னுள்ள காலப் பகுதியில் ஆழ்ந்த சிவபக்தனாகிய இராவணன் இலங்கையை ஆண்டதாகவும், இராவணன் வழிபட்ட தலம் திருக்கோணேஸ்வரம் என்றும் புராண இதிகாசங்களிலும் தேவாரப் பதிகங்களிலும் கூறப்பட்டுள்ளன. இராவணன் தென்கைலையை வெட்டிப் பிளந்தானென்ற வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாக கோணேசர் கோவிலுக்கருகாமையில் "இராவணன் வெட்டு" என்னும் பிரசித்தமான பாறைப்பிளவு உள்ளது. இதனை ஞானசம்பந்தர் அருளிச் செய்த "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்" என்ற ஸ்தலத் தேவாரம் உறுதிப்படுத்துகின்றது. இராவணன் தனது தாயாருக்கு அந்தியைக் கிரியைகள் செய்வதற்காக திருக்கோணேஸ்வரத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உருவாக்கியதாகக் கருதப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியாய் வெந்நீரூற்றுக்களை இந்துக்கள் புனித தீர்த்தமாகக் கருதி அந்தியைக் கிரியைகள் செய்வதற்கு பாரம்பரியமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இப் புராதன சிவத்தலத்தினை தன்னகத்தே கொண்டிருக்கும் நகரம் மூன்று கோணமாயமைந்த மலைகளையுடைய காரணத்தால் திரிகோணமலையெனவும், 'கோண' எனப் பெயர் கொண்ட மலையானதால் கோணமலையாகி, சிவத்தலம் அம்மலையில் அமைந்த காரணத்தினால் கோணமலைக்கு முன்பாக புனிதம் கருதி 'திரு' சேர்ந்து கொண்டதனால் 'திருகோணமலை' எனவும் அழைக்கப்படலாயிற்று.

திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைக்கும் வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக இருப்பவைகளில் முதன்மையானவை சைவசமயகுரவர்கள் பாடியருளிய தேவாரப் பதிகங்களாகும். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த *திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேஸ்வரத்தை நோக்கி நிரை கழலரவம் சிலம்பொலி யலம்பும் நிமலர் நீறணி திருமேனி என்ற தேவாரத்தை முதலாகவுடைய பத்துத் தேவாரப்பதிகங்களைப் பாடியருளி திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையை ஐயம் திரிபற நிறுவியுள்ளார். அதே காலப்பகுதியில் வாழ்ந்த *திருநாவுக்கரசு நாயனார்* திருநெய்த்தானம் என்ற திருத்தலத்தை பாடும்போது "தக்காரடியாருக்கு" என்ற திருத்தாண்டகத்தில் "தெக்காரும் மாகோணத்தானே" என்று திருக்கோணேஸ் வரத்தை நினைந்து பாடியுள்ளார். 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த *அருணகிரிநாத சுவாமிகள்* "விலைக்குமேனியில் அணிக்கோவை மேகலை என்று தொடங்கும் திருப்புகழிலே திருக்கோணா மலைத் தலத்தாரு கோபுர என்று திருக்கோ ணேஸ்வரத்தில் அப்போது காணப்பட்ட சிறப்புமிக்க கோபுரங்களைக் குறித்துப் பாடியுள்ளார். *சுந்தரமூர்த்தி நாயனார்* பாடியரு ளிய "நிறைக்காட்டானே நெஞ்சத்தானே" என்ற ஊர்த்தொகைத் திருப்பதிகத்தில் "மறைக் காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே" என்றும் *பட்டணத்தடிகளார்* பாடியருளிய திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் "முக்கோணம் தொடர்கடுக்கை மலையன்வாழ் திருவாலங்காடு ஏகம்பம் வாழ்த்துமினே" என திருக்கோணேஸ்வரத்தை முக்கோணம் என்று குறித்தும், பெரியபுராணம் பாடியருளிய *சேக்கிழார் சுவாமிகள்* ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் என்ற பாடலில் மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடி" என்றும் திருக்கோணேஸ்வரத்தை நினைவு கூர்ந்துள்ளார்கள்.

அடிக்கொரு லிங்கம் காணப்படும் திருக்கோணேஸ்வரத்தின் சிறப்புகள் பற்றி நிறைய நூல்கள் வெளிவந்துள்ளன. இத் தலத்திற்குரிய பழைய நூல்களான திரிகோணமலை அந்தாதி என்ற நூலை திரு. சி.ஆறுமுகப்புலவர் அவர்களும், தெட்சண கைலாய புராணம், திருக்கோணாசல வைபவம் ஆகிய நூல்களை திரு. வே. அகிலேசபிள்ளை அவர்களும் யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலை திரு.குலசபாநாதன் அவர்கள் பதிப்பித்தும் அருளியுள்ளார்கள்.

கோணேசர் கல்வெட்டு, கோணேசர் அந்தாதி, திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும், திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் ஆகிய நூல்களை, கோணேஸ்வர ஆலய முன்னைநாள் செயலாளரும், திருக்கோணேஸ்வரத்தின் மேம்பாட்டிற்கு தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்தவருமாகிய பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் எழுதியுள்ளார். பிற்காலத்தில் இத்தலத்தைப்பற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள் எழுதிய "கோணேஸ்வரம்", புலவர் வை. சோமஸ்கந்தர் எழுதிய திருக்கோணேஸ்வரம், திரு. கனகசபாபதி சரவணபவன் அவர்கள் எழுதிய வரலாற்றுத் திருகோணமலை ஆகியவைகள் முக்கியமானவையாகும்.

ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்கள் சிலவுள்ளன. அவற்றில் Trincomalie Bronzes by Dr. W. Balendra, Pilgrimage to Thirukoneswaram by Mr. V. Varathasuntharam, The History of Trincomalee by Lieut. Colonel G.P. Thomas, R.A., Rock Cave Temple of Thirukoneswaram and Sequelae by Dr. R.Vikneswaran ஆகியவை முக்கியமானவை. திருக்கோணேஸ்வரத்தின் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு மேற்கூறிய நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆக்கிய பெருந்தகைகளுக்கு நாமும் நம் எதிர்காலச் சந்ததியினரும் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

கி.பி 436ம் ஆண்டு மனுநீதிகண்ட சோழ மன்னனின் பரம்பரையில் வந்த வரராமதேவரின் மகனாகிய குளக்கோட்டு மன்னன் சோழ நாட்டிலிருந்து திருகோணமலைக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து கும்பாபிசேகத்தை நடத்திவைத்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டு மன்னன் செய்த மாபெருந் திருப்பணிகளாகிய குளமும் கோட்டமும் (கோவில்) உண்டாக்கிய சிறப்பினால் அவனுடைய இயற்பெயர் மறைந்து "குளக்கோட்டன்" என்ற சிறப்புப்பெயர் நிலைத்துவிட்டது.

குளக்கோட்டு மன்னனின் பெயர் கோணேசர் கோவிலின் வரலாற்றோடு பின்னிப் பினைந்துள்ளதை அறியக்கூடியதாயிருக்கிறது. அதற்குக் காரணமாக இருப்பது அம்மன்னன் திருக்கோணேஸ்வரத்தின் மேம்பாட்டிற்காக ஆற்றிய பணிகளாகும். கோவிலைப் பரிபாலனம் செய்வதற்காக இந்தியாவிலிருந்து குடிமக்களைக் கொண்டுவந்து குடியமர்த்தியும், நிரந்தர வருவாயை ஏற்படுத்துவதற்காக 2700 அவணம் நெல்விதைப்புத் தறையை உண்டாக்கியும் விளைநிலத்திற்கு நீர்பாய்ச் சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க்குளம் ஆகிய குளங்களைக் கட்டுவித்தும் இவைகளை நெறி தவறாமல் பரிபாலிப்பதற்கும் கோவிற் பூசைகளைச் சிறப்பாக நடத்துவதற்கும் முகாமையாளர் களையும் குருமாரையும் நியமித்தும் கோவிற் தொழும்பாளர்களுக்கென கடமைகளையும் அதற்கான மானியங்களையும் வழங்கியும் திருக்கோணேஸ்வரத்தின் நிர்வாகக் கட்டுமானத்திற்காக அளப்பெரும் பணியாற்றி யிருப்பதை கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது.

கோணேசர் கோவிலை கி.பி.1624ம் ஆண்டு போத்துகீசர் இடித்து அழித்து அதிலிருந்து பெயர்த்தெடுத்த கற்களால் பிறெட்றிக் கோட்டையைக் கட்டியிருக்கின்றார்கள். கோட்டை வாசலில் உள்ள வளைவில் இரட்டை மீன் இலச்சனையுடன் "முன்னே குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியை" என்று தொடங்கும் பாடல் பொறிக்கப்பட்ட கற்தூண்கள் இன்றும் காணப்படுகின்றன. அத்தூண்களில் இருந்த பாடலின் உட்கருத்தினை அந்நியரான போத்துக்கீசர் அறிந்திருக்க மாட்டார்கள். ஆயினும், ஆலயத்தின் தொன்மைக்குச் சான்றாக கோட்டை வாசலிலேயே இடம் பெற்றுள்ள இக்கற்தூண்கள், தெய்வ நிமித்தத்தாலன்றி வேறெந்த காரணத்தினாலும் அங்கே அமைந்திருக்க வாய்ப்பில்லை.

கோவிலை இடித்தழித்த போத்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்ரன் டைன்டிசா என்பவன் போத்துக்கல் அரசனுக்கனுப்பிய அறிக்கை யொன்று லிஸ்பன் நகரத்திலுள்ள "அஜுடா" நூல் நிலையத்திலிருக்கின்றது. அந்த அறிக்கையில் (51ம் பக்கம் VIII- 40) மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டானென்றும் அவன் கி.மு. 1300ம் ஆண்டு கோணேசர் கோவிலை கட்டினான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கையை அரசாண்ட போத்துக்கீசத் தளபதிகளின் பதிவேடுகளில் திருக்கோணேஸ் வரத்தை அழித்த கொன்ஸ்ரைன் டைன்டிசா வரைந்த படங்களும், கோவிலின் எல்லைகளும், குறிப்புக்களும் காணப்படுகின்றன. கோவில் நிலத்தின் நீளம் 600 பாகம், அகலம் 80 பாகம், அது ஒடுங்கிச் சென்று 30 பாகமாக அமைந்திருந்ததென்றும் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் பிறெட்றிக் கோட்டைப்பகுதி முழுவதும் ஆலயப் புனிதப்பிரதேசமாக இருந்தது என்பதையும் அறியலாம்.

கலாநிதி போல் ஈ பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை எனும் நூலின் இரண்டாம் தொகுதியின் 168ம் பக்கத்தில் கோணேசர்மலை பட்டணத்தோடு தொடர்புபட்டுக் கடலுக்குள் நீண்டு கிடந்ததென்றும் அப்பகுதியில் மூன்று கோவில்கள் இருந்தனவென்றும், ஒன்று மலையடிவாரத்திலும், அடுத்தது மலையின் நடுப்பகுதியிலும், கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரமான மலை உச்சியில் மிகப் பிரபல்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான மூன்றாவது கோவில் இருந்ததென்றும் கூறப்பட்டுள்ளது. மலைப்பகுதியின் மிக உயரத்திலிருந்த ஆலயமே இந்தியாவின் இந்துக்களால் மிக முக்கியத்துவங் கொடுக்கப்பட்டு போற்றி வணங்கப்பட்டு வந்த ஆலயமாகும் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

போத்துகீசச் சரித்திர நூலாசிரியராகிய டீ.குவைறோஸ் பாதிரியார் எழுதிய நூலின் இரண்டாம் பாகம் 236ம் பக்கத்தில் "கோணேஸ்வரம் கீழைத் தேசத்திலுள்ள கிறிஸ்தவரல்லாத மக்களின் உரோமாபுரி என்றும் அதிகமான பக்தர்களின் கவனத்தை ஈர்த்த இந்தியக் கோவில்களான இராமேஸ்வரம், காஞ்சிபுரம், திருப்பதி, ஆகியவற்றிற்குச் சென்ற யாத்திரீகர்களைக் காட்டிலும் கூடுதலானோர் கோணேசர் கோவிலுக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர் என்று கூறியுள்ளார். இத்தகவல் கோணேஸ்வரம் இதற்கு முற்பட்ட காலத்தில் எத்தகைய நிலையில் இருந்தது என்பதனை விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

பிறெட்ரிக் கோட்டைப் பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த போது 1944ம் ஆண்டில் நீருக்காக அகழியொன்று வெட்டப்பட்ட போது நிலத்திலிருந்து புனித விஷ்ணு லக்ஷ்மி ஆகிய கல் விக்கிரகங்கள் கிடைக்கப் பெற்றன. அவை ஊனப்பட்டிருந்ததால் ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பல்லவ சிற்ப முறைப்படி கட்டப்பட்ட கோயிலைத்தான் போத்துக்கீசர் இடித்தனர். அவர்கள் கோவிலை இடித்தழித்த காலத்தில் ஆலயத்திலிருந்த குருமாரும் பக்தர்களும் ஆலயவிக்கிரகங்கள் அன்னியருடைய கையிலகப்படாமல் காக்கும் பொருட்டு நிலத்தினுள் புதைத்து வைத்தார்கள். அவற்றில் பிள்ளையார், கோணேசர், மாதுமையம்பாள், போகசக்தி, சந்திரசேகரர், அன்னம் என்பன இறைவனுடைய திருவருட் செயலால் 1950.07.27ம் திகதியன்று திருகோணமலை நகரசபையினர் பத்தாம் குறிச்சியில் ஒரு பொதுக்கிணறு வெட்டியபோது நிலத்திலிருந்து கிடைத்தன. இவ்விக்கிரகங்கள் 1952.02.23ம் திகதியன்று ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அதன் பின்னர் தற்போதிருக்கும் புதிய ஆலயம் கட்டப்பட்டு 1963ம் ஆண்டு புனராவர்த்தன மகா கும்பாபிசேகம் நடைபெற்றது.

கோணேசர்மலை கடலினடியில் ஆராய்ச்சி செய்த பிரபல விஞ்ஞான எழுத்தாளரும் பிரிட்டிஷ் பிரசையுமான சேர். ஆதர் சி. கிளாக், அவரது நண்பரான சினிமா இயக்குனர் மைக் வில்சன் ஆகியோர், மிகப் பழமைவாய்ந்த ஆலயம் கடலினடியில் அமிழ்ந்திருப்பதாகக் கண்டறிந்து பிரமாண்டமான மணியும், விளக்குகள், தூண்கள் கோவிற் தளங்கள் என்பன கடலினடியிலிருப்பதாக பத்திரிகையில் பிரசுரித்தார்கள்.

1962ம் ஆண்டில் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள பகுதியில் "றன்முத்துட்டுவ" திரைப்படத்தின் (திரு. காமினி பொன்சேகா நடித்த முதலாவது சிங்கள வர்ணப்படம்) படப்பிடிப்பு நடந்த போது, மேற்படி திரைப்படத்தின் இயக்குனர் திரு. மைக் வில்சன், சுயம்பு லிங்கம் ஒன்றினை கடலினடியிலிருந்து கண்டெடுத்தார். இந்த லிங்கம் இப்போது ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இச்சுயம்பு லிங்கத்தைக் கண்டெடுத்த திரு. மைக் வில்சன் அவர்களது வாழ்க்கையில் பின்னர் மிகப்பெரிய மாற்றமேற்பட்டு அவர் சுவாமி சிவகல்கியாக விளங்கினார். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ளவை எனக் கருதப்படும் 69 சுயம்பு லிங்கங்களில் ஒரு சில மட்டுமே இப்போது இருப்பதாகவும் அவற்றில் ஒன்று நேபால் சுயம்புநாத்தில் உள்ளதெனவும் கூறப்படுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1890ம் ஆண்டு மத்திய மாகாண அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகயிருந்த ஹென்றி டபிள்யூ. கேவ் என்பவர் எழுதிய இலங்கை எனும் சரித்திர நூலில் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "திருக்கோணமலையில் கடலுக்குள் நீண்டிருக்கும் குன்று மிகப் பழமைவாய்ந்ததும், மனதைக் கவரக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும். குறிப்பிட்ட குன்று கடலினுள்ளிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்பதோடல்லாமல் இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டதாகவும் விளங்கு கின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதைப் புனித இடமாகப் போற்றிவந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்ற சொல்லிக் கொள்ளும் ஒரு சாரார் தென்னிந்தியக் கலைச்சிற்பங்களைக் கொண்டதாக விளங்குகின்ற தூபி, கோபுரம் என்பனவற்றையுடையதாக ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். இவ்வாலயம் ஆயிரங்கால் மண்டபத்தையும் கொண்டிருந்தது. போத்துக்கீசர் இக்கோவிலை இடித்தழித்தபின் இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாக காட்சியளிக்கின்றது."

திருகோணமலை - மிகவும் பிரசித்தமான இயற்கைத் துறைமுகத்தையும், திருக்கோ ணேஸ்வர ஆலயத்தினையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகராக வெளிநாட்டினரால் ஆதிகாலம் தொட்டே கருதப்பட்டு வந்தது வரலாற்றின் மூலமாக அறியக்கூடியதாயிருந்தது. இதன் காரணமாக இந்நகரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக பல வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் திருகோணமலையில் இடம் பெற்றிருந்தன. 1505ல் – போர்த்துக்கீசரும், 1639ல் – ஒல்லாந்தரும், 1782ல் – பிரித்தானியரும் பிரான்சியரும், 1873ல் – ஒல்லாந்தரும், 1895ல் – பிரித்தானியரும் திருகோணமலையை தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள்.

ஏறத்தாள 1803ம் ஆண்டளவில் யோர்க் பிரபு பிரெட்ரிக் ஒகஸ்தஸ் என்பவர் பிரத்தானிய இராணுவத்தின் பிரதம தளபதியாக திருகோண மலையில் கடமையாற்றினார். அவருடைய பெயரை வைத்து முதன் முதலில் பிறெட்ரிக் கோட்டை என்ற பெயர் பாவனைக்கு வந்தது. இக்கோட்டை வாசல் வழியாகத்தான் கோணேசர் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்.

போத்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் இந்து மக்களின் மத சுதந்திரமும், வழிபாட்டுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டு வந்தன. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், தெய்வீக சிறப்பையும் உணர்ந்து இந்துக்களுக்கு மதசுந்திரத்தையும் வழிபாட்டு சுதந்திரத்தையும் வழங்கியிருந்தார்கள்.

ஆதிஅந்தமில்லாத இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் இந்துக்களின் புனிதத் தலம் திருக்கோணேஸ்வரத்தின் கருவறையில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றது.

நிலத்திலிருந்து கிடைத்த மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு குளக்கோட்டு மன்னனுடைய காலத்தில் நடைபெற்றுவந்த மகோற்சவங்களும், பாபநாச தீர்த்தோற்சவமும், தெப்பத் திருவிழாக்களும், சிவராத்திரியையடுத்து தொடர்ந்து ஐந்து நாட்கள் நகர்வலமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. திருகோணமலை மாவட்டம் கோணேசப் பெருமானுடைய திருவருளாட்சிக்குட்பட்டது. அதனால் திருகோணமலை மக்களின் வாழ்க்கையில் இந்து சமயப் பண்பாடு, பழக்க வழக்கம், கலை, கலாச்சாரம் என்பன பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காணலாம்.

எமது மக்களின், குறிப்பாக திருகோணமலை மக்களின் வாழ்வும் வளமும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் சிறப்பிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்வு பூர்வமாக எமது மக்கள் நம்புகிறார்கள். ஆலயத்தின் மேம்பாட்டிற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கும் கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர் தம்மாலான அத்தனை முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

ஆலயத்தில் இப்போது சில திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவில்மலையில் 35அடி உயரத்தில் சிவன்சிலை அமைக்கப்பட்டு இன்னும் சில நாட்களில் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. ஆலயத்தின் பிரதான வாசலுக்கெதிரேயுள்ள மலைக்கருகாமையாக கடலைப் பார்த்த விதத்தில் மலைக்கோயில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு மக்களின் வணக்கத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஆழ்ந்த சிவபக்தனான இலங்கை வேந்தன் இராவணின் உருவச்சிலையும், சிவன் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு, மார்க்கண்டேயரின் உயிரை யமனிடமிருந்து காத்த வரலாறு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. கடலினடியிலும் நிலத்தினடியிலும் கண்டெடுக்கப்பட்ட சுயம்பு லிங்கம், லக்குமி நாராயணமூர்த்தி விக்கிரகங்களும், குளக்கோட்ட மன்னனின் சிலையும் அமைக்கப்பட்ட தியான மண்டபம் ஒன்று வெகு விரைவில் பூர்த்தியடைய வுள்ளது.

இத்திருப்பணிகளைத் தொடர்ந்து ஆலயத்தின் அத்தியாவசியத் திருப்பணிகளாகிய கும்பாபிஷேகம், இராஜகோபுரம் ஆகியவற்றை கூடிய விரைவில் ஆரம்பிக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆன்மீகப்பணிக்கு இணையாக சமூகப்பணியும் முன்னெடுக்கப்பட்டு, தாய்தந்தையரை இழந்த 47 குழந்தைகளின் தொடர் கல்விக்காக 2011 தை மாதம் தொடக்கம் மாதாந்தம் 1500 ரூபா வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆலயத்திற்குக் கிடைக்கும் நன்கொடைகளின் ஒரு பகுதியையும் தாமாகவே முன்வந்து உதவி செய்த கருணையுள்ளம் கொண்ட சிலரின் உதவியையும் கொண்டு இவ்வுதவிநிதி அளிக்கப்பட்டு வருகிறது. இன்றைய திகதியில் (27.09.2011) கல்வி உதவி கோரி மேலும் 35 விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன. விண்ணப்பதாரிகள் அனைவருமே தாயை அல்லது தந்தையை இழந்தவராகவும் தமது கல்வியை சீரான முறையில் தொடர முடியாத இக்கட்டான நிலையில் உள்ள பிள்ளைகள். தர்ம சிந்தையுள்ள மக்கள் நிராதரவாக நிற்கும் இக்குழந்தைகளுக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் வேண்டிக் கொள்கிறேன்.

2011ன் ஆரம்பத்தில் ஏற்பட்ட வெள்ள அநர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள 600 குடும்பங்களுக்கு எமது கல்வி சமூகப்பணிச்சபை மூலம் இன மொழி மத பேதம் பாராது நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

ஆலய வழிபாடு அரசியல் வேறுபாடுகளுக்கும், குறுகிய நோக்கங்களுக்கும் அப்பாற்பட்டது. இப்புனிதத் தலத்தை மேம்பாடடையச் செய்து தூய்மையான நிர்வாகக் கட்டமைப்போடு கூடிய ஆலயத்தினை நம் இளம் சமுதாயத்தினரிடம் பாதுகாப்பாகக் கையளிக்க வேண்டிய காலத்தின் கட்டாயமான கடப்பாடு நமக்குள்ளது.

எங்களுடைய முயற்சிகளில் அனைத்து மக்களும் தம்மாலான ஒத்துழைப்பினைத் தந்து உதவ வேண்டுமென்று எமது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் சார்பில் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையின் கல்வி நிலை பார்வையும், பதிவுகளும்.

செ.பத்மசீலன்
பிரதி அதிபர்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

கிழக்கு மாகாணத்தில் தனித்துவம் மிக்கதாக ஐவகை நிலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் திருக்கோணமலை மாவட்டம், கர்ண பரம்பரைக் கதைகளிலும், வரலாற்று தொல்லியல் ஆய்வுகளிலும் மற்றும் உலக வரலாற்றுப் போக்கிலும் உலக நாடுகளின்பால் ஈர்க்கப்பட்டு வரும் நில அமைப்பாகும்.

இம்மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் வடபகுதியில் அமைந்துள்ளது. இதன் நில அமைப்பானது வடக்கே புல்மோட்டை ஜான் ஓயா ஆற்றையும், தெற்கே வெருகல் மகாவலிகங்கை ஆற்றையும், கிழக்கே வங்காள விரிகுடா கடற்பரப்பையும், மேற்கே அனுராதபுரம் பொலநறுவை மாவட்டங்களையும் எல்லையாக கொண்டு 2630 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பையும் கொண்டமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் திருக்கோணமலை, தம்பலகமம், சேருவில, கந்தளாய், கிண்ணியா, மூதூர், ஈச்சிலம்பற்று, குச்சவெளி, கோமரங்கடவெல, மொறவெவ, பதவிஸ்ரீபுர ஆகிய 11 பிரதேசசெயலாளர் பிரிவுகள் உண்டு. மேலும் இம் மாவட்டம் ஏறத்தாழ 427 கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மாவட்டத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஏனையோர் என பல்லின சமூக அமைப்பு காணப்படுவது நாட்டின் தேசிய ஒற்று மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. மேலும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயானார் தனது திருமுறையில் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் சிறப்பை மட்டுமன்றி 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை' என நகரின் சிறப்பினையும் பேசும் அளவிற்கு பலவிதமான பெருமைகளை தன்னகத்தே ஈர்த்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கை வரலாற்றுப் பார்வையில் திருக்கோணமலை அந்நியர் ஆதிக்கத்திற்குட்பட்ட போது முதன் முதலில் 1542 இல் போத்துகேயரின் அழிவுக்குட்பட்டு அவர்களது ஆட்சி அதிகாரம் மேலோங்கியது இது, முதல் அச்சநிலை எனலாம். அடுத்து 1693 இல் போத்துகேயரிடமிருந்து ஓல்லாந்தர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார். 1796 இல் ஓல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் இம் மாவட்டத்தையும் தமது ஆட்சி அதிகாரத்திற்கு உட்படுத்தினர். இந்த வரலாற்று நிலையில் சுதந்திர இலங்கைக்கான போராட்டம் வடிவெடுத்தமையினால் 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னர், திருக்கோணமலை மாவட்டமும் படிமுறையான சமூக, பொருளாதார, பண்பாட்டியல் வளர்ச்சி பெற்றதை காண முடிகின்றது.

இந்த அடிப்படையில் திருக்கோணமலை பற்றிய வரலாற்று, நிர்வாகமுறைகள், நிலப்பயன்பாடு, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், உற்பத்தி முறைகள், வீடமைப்பு, சுகாதாரம், கல்வி என்பனவற்றின் அடிப்படையில் கல்விநிலையின் பார்வை நோக்கப்படுகின்றது.

திருக்கோணமலை மாவட்ட கல்வி நிலை பற்றி நோக்கும் போது இது கிழக்கு மாகாணசபையின் கல்வி நிர்வாகத்தின் கீழ் உள்ளடக்கப் படுகின்றது. எமது மாவட்ட கல்விநிலை தற்போதைய கல்வி நிர்வாக ஒழுங்கில் வலயக் கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்கள நிர்வாக முறையின் கீழ் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் கல்வி வலையங்களாக திருக்கோணமலை, மூதூர், கிண்ணியா, கந்தளாய், திருக்கோணமலை மேற்கு என ஐந்து வளையங்களாக உள்ளன.

திருக்கோணமலையின் கல்வி நிலை பற்றிய பார்வையில், புராதான காலம்,அந்நியர் ஆட்சியும் சுதந்திரம் வரையும் சுதந்திரத்தின் பின்னரான தொடர் நிலையும் இன்று வரையும் என பிரதான பாகுபாடுகளின் அடிப்படையில் நோக்கலாம்.

புராதான கல்வி நிலை பற்றி நோக்கும் போது மனிதனது ஒழுக்கம், சமயம், ஆன்மிக அடிப்படையில் மனிதனை வழிப்படுத்தக் கூடிய வகையில் கல்விக்கான நடவடிக்கைகள் அமைக்கப்பட்டன என்பதனை வாய்மொழி ஆதாரங்களின் படி திண்ணைப் பள்ளி கல்வி முறை மூலமாக கல்வி வழங்கப்பட்டதை அறிந்து கொள்ளமுடிகின்றது. அதாவது கல்வியானது சமயம், பாரம்பரியம், ஒழுக்கவிருத்தி தொழில் சார்நிலைமை என்பவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

அரசர்கள் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அமைத்த அரண்மனைகள், ஏரிகள், பின்பற்றிய கட்டிட முறைகள் பொறியியல் முறைகள் என்பன செயல்நிலைக் கல்வியின் தன்மையையும் வானசாஸ்திரம், புவியியல், மருத்துவம் என்பன விஞ்ஞானக் கல்வியையும், மற்றும் வரைந்த ஓவியங்கள், சிற்பங்கள் கவின் கலைக் கல்வியையும் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் அரசர்கள், மந்திரிமார், புலவர்கள், மக்கள் தொடர்பான கல்விமுறை குருகுலக் கல்வி முறையில் அமைந்திருந்தது என, அறியக்கூடியதாகவுள்ளது.

அந்நியர் ஆட்சிக்காலம் தொடக்கம் சுதந்திர காலம் வரையி மாவட்ட கல்விநிலையானது இந்து, கிறிஸ்தவ சமயசார்புடைய சமய நிறுவனங்களின் நிர்வாகமுறையின் கீழ் அமைந்தது. மெதடிஸ்த பாடசாலைகள், கத்தோலிக்க பாடசாலைகள், இலங்கை திருச்சபை பாடசாலைகள், இராமகிருஸ்ணமிஷன் பாடசாலைகள், சமயப்பெரியார்கள், தனவந்தர்கள் முயற்சியால் பாடசாலைகள் நிறுவப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டது. குறிப்பாக மெதடிஸ்த சபையினால் மெதடிஸ்த கல்லூரி, பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், உப்புவெளி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை, சாம்பல்தீவு மகாவித்தியாலயம், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, குச்சவெளி பிரதேசங்களில் பாடசாலைகள் நிருவகிக்கப்பட்டன. அதேபோன்று கத்தோலிக்க கிறிஸ்தவ சபைகளால் மூதூர், பச்சனூர், மாங்கேணி, கிண்ணியா, நிலாவெளி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட பாடசாலைகளையும் புனித சூசையப்பர் கல்லூர், புனித மரியாள் கல்லூரி, புனித வளனார் பாடசாலை சமயப் பெரியார்களால் உருவாக்கப்பட்டு இராமகிருஸ்ண சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட இந்து ஆண்கள் தமிழ், ஆங்கில பாடசாலை மற்றும் தம்பலகாமம் சாரதாவித்தியாலயம் போன்றவைகளையும், சமயப் பெரியார்கள், தனவந்தர்கள் மூலம் உருவாக்கப்பட்ட ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளையும் குறிப்பிட முடியும். இருப்பினும் சில பாடசாலைகள் சமய நிறுவனங்களால் உருவாக்கப்பட்டாலும் அவற்றின் பெயர்கள் மாற்றம் அடைந்தமையை அறிய முடிகின்றது. இக்காலத்தில் சில முஸ்லிம் பாடசாலைகளின் தோற்றங்களையும் அறியமுடிகின்றது.

சுதந்திரத்தின் பின்னர் இம்மாவட்டத்தின் கல்வி நிலை பற்றி நோக்கும் போது பல அரச பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன. அதற்கு அடிப்டையான விடயம் புதிய குடியேற்றதிட்டங்கள் உருவாக்கப்பட்டமை, சனத்தொகை அதிகரித்தமை, பொதுபோதனா திணைக்களம் உருவாக்கப்பட்டமை, அரசு பாடசாலைகளை பொறுப்பேற்றமை மற்றும் அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட இலவசக் கல்விமுறை, இலவச உணவு, கல்விக்கான சமத்துவ வாய்ப்புக்கள் மத்திய கல்லூரிகள் ஆரம்ப பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை மேலும் தொழில் வாய்ப்புக்கான கல்வியின் தேவையும் உயர் கல்விக்கான தேவைப்பாடும் இருந்தமை கல்வி பற்றிய பார்வையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியதை அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறாக கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரித்தமையால் தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளின் தொகையும் கற்கும் மாணவர்களது தொகையும் அதிகரித்தது.

இக்காலப்பகுதியில் கிராமங்கள் தோறும் ஒரு பாடசாலை காணப்பட்டது. இவ் வேளையில் எமது மாவட்டத்தின் கல்விக்காக தம்மை அர்ப்பணித்து பல அதிபர்கள், ஆசிரியர்கள் சேவை வழங்கியதை குறிப்பிடலாம். இதற்காக மட்டக்களப்பு, யாழ்ப்பாண பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களினதும், அயல் நாடான இந்தியைவைச் சேர்ந்த ஆசிரியர்களினதும் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக 1970 காலப்பகுதியில் 1ம் வகுப்பு தொடக்கம் 12ம் வகுப்பு வரையில் கல்வி கற்ற மாணவர்களின் தொகையை நோக்கும் போது 1970 இல் 203311 ஆக காணப்பட்டது. 1980 இன் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதியும், பட்டதாரிகளின் எண்ணிக்கையும் அதரிகரித்து சென்றதைக் காணலாம்

திருக்கோணமலையில் உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் 1960 ம் ஆண்டு காலப் பகுதியில் தமிழ் அபிமானம் மிக்கவர்களது முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் பல்கலைக்கழகமானது நிறைவேறாமல் போனமை. துர்அதிஸ்டவசமாகும். எவ்வாறாயினும் பின்னர் உயர்கல்வியில் பலவாய்ப்புக்களை திருக்கோணமலையில் உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் திருக்கோணமலையிலுள்ள சிலர் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக கிழக்கு பல்கழைக்கத்தின் இணைந்த கல்லூரி வளாகமானது, திருக்கோணமலை கடற்படைதள வீதியில் 1993ல் உருவாக்கப்பட்டது. தற்போது இவ் வளாகம் கோணசபுரிக்கு மாற்றப்பட்டு முகாமைத்துவ தொடர்பாடல் பீடம், சித்த மருத்துவ பிரிவு, வெளிவாரிப் படிப்புக்கள் என பல்வேறு துறைகளும் இயங்கிவருகின்றது. மேலும் வரோதயநகர் பகுதியில் கணக்கியல் உயர்கல்வி நிறுவனம் 1994 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி முறையில் தனியாரால் உருவாக்கப்பட்ட புனித வளனார் தொழில்நுட்பகல்லூரி, மிகிந்தபுரத்தில் அரச தொழில்நுட்ப கல்லூரி என்பன பாடசாலை மாணவர்களுக்கு உயர்கல்வி, தொழிற்கல்வி வழங்கும் நிறுவனங்களாக அமைந்துள்ளன.

இலங்கை திறந்த பல்கழைக்கழக பிராந்திய நிலையம் அமைக்கப்பட்டமையும், தேசிய கல்வி நிறுவன பிராந்திய நிலையம் கல்விக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு உருவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி என்பவற்றுக்கான தேவையை நாம் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

முன்பள்ளி கல்வி நிலை தொடர்பாக ஆரம்பத்தில் தனியாரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது எனினும் 1990 இன் பின்னர் பொது நிறுவனங்கள், அரசு முன்பள்ளிக்கு ஊக்கமளித்தமையால் 359 முன்பள்ளிகளில் 550 ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றனர். இங்கு 8064 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

தற்போதைய பொதுக்கல்வி பாடசாலையின் நிலையில் மாணவர், ஆசிரியர் பாடசாலைகளின் பரம்பலை அவதானிக்கும் போது பின்வரும் நிலை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, ஆசிரியர், மாணவர் பரம்பல் - 2011

அட்டவணை 1

| கல்வி வலயங்கள் | பாடசாலை எண்ணிக்கை | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை | ஆசிரியர் மாணவர் விகிதம் |
|---|---|---|---|---|
| திருக்கோணமலை | 71 | 29859 | 1966 | 19 |
| கந்தளாய் | 39 | 13113 | 644 | 21 |
| மூதூர் | 81 | 19771 | 1023 | 21 |
| கிண்ணியா | 58 | 23274 | 1086 | 22 |
| திருக்கோணமலை மேற்கு | 30 | 5166 | 212 | 25 |

தற்போதைய புள்ளி விபரங்களின் படி எமது மாவட்டத்தில் 279 பாடசாலைகளில், 91133 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 4931 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். ஆசிரியர் மாணவர் விகிதம் சாதகமான நிலையை காட்டி நிற்கின்றது எனினும், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

பாடசாலை அமைவிடங்களை பார்க்கும் போது நகர, கிராம மட்டத்தில் ஒவ்வொரு பிள்ளையும் ஆரம்பக் கல்வியையும் கனிஸ்ட, இடைநிலைக் கல்வியையும் பெறுவதற்கான III, II, IC வகைப் பாடசாலைகள் போதுமானதாக உள்ளன எனினும் I AB வகைப் பாடசாலைகள் நகரின் மத்தியிலே நிலை கொண்டுள்ளன. அரசு கல்வியில் சமத்துவம், கட்டாயக்கல்வி என விசேட வேலைத்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றது எனினும் கல்வி அபிவிருத்தி நோக்கில் பாடசாலைகளில் விசேட செயற்றிட்டங்களாக, ஜெய்க்கா செயற் திட்டங்கள், பிள்ளை நேயப் பாடசாலை, வெளிச்ச வீட்டு பாடசாலை, DSD பாடசாலை, நவோதயா பாடசாலை என்ற வகையில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதேவேளையில் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் கல்வி அபிவிருத்திக்காக 'ஆயிரம் பாடசாலைகள் வேலைத்திட்டம்' முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் எமது மாவட்டத்திலும் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமெனலாம்.

பாடசாலையில் இடைவிலகல் மிககுறைந்த நிலையில் காணப்படுகின்றது. மாவட்ட எழுத்தறிவு நிலையானது 88.7 வீதமாகக் காணப்படுகின்றது. பொதுப்பரீட்சைகள் அடைவுகள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திவீதம் கடந்தசில ஆண்டுகளில் அதிகரிப்பு நிலையும், க.பொ.த சாதாரணதரம் சித்தி விபரம் 54 வீதத்திலும் க.பொ.த உயர்தர சித்தி விபர விகிதம் 36% - 45% வரையும் காணப்படுகின்றது. பல்கலைக்கழகம் செல்வோருக்கான வீதம் 1980 தொடக்கம் ஓர் அதிகரிப்பு நிலையை காட்டுகின்றது. மற்றும் தேசியரீதியான ஒதுக்கு வீதத்தில் பல்கலைக்கழக அனுமதியில் வருடாந்தம் ஓர் அதிகரிப்பு நிலையும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை வகை கல்வி வலயங்கள்

அடிப்படை – 2011

அட்டவணை 2

| கல்வி வலயம் | பாடசாலை வகை | | | | |
|---|---|---|---|---|---|
| | I AB | I C | II | III | மொத்தம் |
| திருக்கோணமலை | 9 | 22 | 24 | 16 | 71 |
| மூதூர் | 3 | 14 | 23 | 41 | 81 |
| கந்தளாய் | 1 | 9 | 17 | 12 | 39 |
| கிண்ணியா | 3 | 9 | 22 | 24 | 58 |
| திருக்கோணமலை மேற்கு | - | 5 | 17 | 8 | 30 |
| மொத்தம் | 16 | 59 | 103 | 101 | 279 |

இதன் அடிப்படையில் 279 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றை விட 10 பாடசாலைகள் நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற நிலை இடப்பெயர்வுகள் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இப்பாடசாலை களை மீளத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை அறியமுடிகின்றது.

இப்பாடசாலை அமைப்பினுள் 208 தமிழ், 71 சிங்கள மொழிப் பாடசாலைகள் இதில் 9 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக குறிப்பிடப் பட்டுள்ளது. வகை II, III பாடசாலைகள் 204 காணப்படுகின்றது. I C பாடசாலைகள் 59 காணப்படுகின்றது. இப்பாடசாலைகள் புறநகரிலுள்ள IC பாடசாலைகள் குறிப்பாக நகரங்களை மையப்படுத்தியே அமைந்துள்ளன. I AB பாடசாலைகளை கிராமங்களிலும் உருவாக்கி மாணவர்கள் கற்பதற்கான சகல வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தொகை கல்வி வலய அடிப்படையில் - 2011

அட்டவணை 3

| தரம் | கல்வி வலயங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திருக்கோணமலை | மூதூர் | கந்தளாய் | கிண்ணியா | திருக்கோணமலை மேற்கு | மொத்த மாணவர் தொகை |
| 1 | 2482 | 1909 | 1348 | 2051 | 496 | 8286 |
| 2 | 2391 | 1731 | 1241 | 2265 | 547 | 8175 |
| 3 | 2566 | 1871 | 1230 | 2308 | 521 | 8496 |
| 4 | 2546 | 1938 | 1188 | 2392 | 471 | 8535 |
| 5 | 2797 | 1882 | 1289 | 2279 | 465 | 8712 |
| 6 | 2763 | 1783 | 1084 | 2018 | 435 | 8083 |
| 7 | 2579 | 1810 | 1005 | 1965 | 401 | 7760 |
| 8 | 2550 | 1618 | 991 | 1850 | 464 | 7473 |
| 9 | 2476 | 1593 | 1024 | 1810 | 448 | 7351 |
| 10 | 2423 | 1447 | 1009 | 1674 | 401 | 6954 |
| 11 | 2262 | 1213 | 965 | 1529 | 367 | 6336 |
| 12 கலை | 564 | 406 | 299 | 516 | 37 | 1822 |
| வர்த்தகம் | 333 | 59 | 80 | 37 | 3 | 512 |
| 12 கணிதம் | 127 | 9 | 22 | 25 | - | 183 |
| விஞ்ஞானம் | 92 | 6 | 12 | 7 | - | 117 |
| 13 கலை | 408 | 440 | 207 | 508 | 52 | 1615 |
| வர்த்தகம் | 303 | 43 | 78 | 17 | 8 | 449 |
| 13 கணிதம் | 106 | 8 | 36 | 16 | - | 166 |
| விஞ்ஞானம் | 91 | 5 | 5 | 7 | - | 108 |
| மொத்தம் | 29859 | 19771 | 13113 | 23274 | 5116 | 91133 |

மாணவர்களது தொகையின் அடிப்படையில் திருக்கோணமலை கல்வி வலயத்தில் 29859 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் அதேவேளை திருக்கோணமலை மேற்கு கல்வி வலயத்தில் மாணவர்கள் தொகை (5116) குறைவாக இருப்பதற்கு காரணம் மக்கள் செறிவு குறைவாக காணப்படுவதாலும், மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட கல்வி வலயம் என்பதும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அதிகமான மாணவர்கள் ஆரம்ப கல்வியிலும் கனிஸ்ட, இடைநிலைப் பிரிவிலும் கற்கும் நிலை காணப்படுகின்றது. உயர்தரப்பிரிவில் கலைத்துறையில் கூடுதலான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். எவ்வாறாயினும் எதிர் காலத்தில் கணித, விஞ்ஞான வர்த்தக துறை நோக்கியதாகவும் மாணவர்கள் கற்பதற்கான கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கான வழிகாட்டலை பாடசாலை, பெற்றோர், கல்வித்திணைக்களம் முன்னெடுக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வி சமய வளர்ச்சியில் பங்கெடுத்த சமயத் துறவிகள், சமூகப் பெரியார்கள், தனவந்தர்கள், கல்வியலாளர், தமிழ் அறிஞர்கள் வரிசையில் சுவாமி விபுலானந்தர், தி.த.கனகசுந்தரம்பிள்ளை, க.சரவணமுத்துப்பிள்ளை, வே.அகிலேசபிள்ளை, வித்துவான் க.தம்மையாபிள்ளை, கதிரித்தம்பிப் புலவர், கோழி வேலன், பண்டிதர் வடிவேல், கழகப் புவலர் சிவசேகரம், சத்தியமூர்த்தி, வ. இ. இராசரத்தினம் போன்றவர்களது அர்ப்பணிப்பான சேவை நன்றியுடன் நினைவு கொள்ளத்தக்கதாகும். மேலும் இந்து சமய நிறுவனங்கள், கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் ஆற்றிய கல்வி பணி நன்றியுடன் நினைவு கூறத்தக்கது.

திருக்கோணமலை கல்வி வளர்ச்சியில் பல்வேறு காலகட்டங்களிலும் நிறைவான சேவைக்காக தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய ஆசிரியர், அதிபர்களை பட்டியல்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதேபோன்று கல்வித் திணைக்களரீதியான பணிப்பாளர்கள் உத்தியோகத்தர்களது. சேவையும் போற்றுதலுக்குரியது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் கல்விக்காக தம்மை அர்ப்பணித்த கல்விசார் பணியாளர்கள் பலர் உள்ளனர். திருக்கோணமலையில் காணப்பட்ட பல்வேறு அனர்த்தங்களால் கல்வி நிலை பாதிக்கப்பட்ட போதும் கல்வியின் மீள் உருவாக்கத்திற்காக அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றிய பணி பாராட்டதக்கது. அரச சார்பற்ற நெக்கோட், நெக்டெப், யுனிசெப் போன்ற சர்வேதேச தொண்டு நிறுவனங்களையும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களையும் குறிப்பிடலாம்.

திருக்கோணமலை கல்வி தொடர்பாக நீண்டவரலாறு உள்ளது எனினும் இவ்விடயம் தொடர்பாககிடைக்கப்பட்ட தரவுகள், நூல்கள், பெறுபேறுகள், செவ்விகள் அடிப்படையில் ஓர் பார்வையாகவும் பதிவாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கல்வி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்கள் திருக்கோணமலை கல்வி தொடர்பாக ஆராய வேண்டிய தேவையுள்ளது.

எமது பிரதேசத்தில் கல்வித் துறைசார்ந்த செயற்பாடுகள் மட்டுமன்றி பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும் அதிபர்கள், துறைசார்ந்த வல்லுனர்கள், கல்விச் சான்றோர்கள் இலக்கியவாதிகள், அறிஞர்கள் ஆகியோரின் வரலாறுகள் கல்வி அடைவுகள், சாதனை மட்டங்கள் எமது திருக்கோணமலையின் கல்விக்கு சான்றுகளாக உள்ளன.

திருகோணமலையின் இன்றைய நிலையில், கல்விக்கான அபிவிருத்தி நோக்கில் ஏனைய பகுதிகள் போன்று சமனிலை ஏற்பட வேண்டும் இதற்காக கல்வியுடன் தொடர்புடைய ஒவ்வொருவரும் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலவின் ஒளியில்
நிலவும் குளிர்மை
நின் விழிகளில் தெரிகிறது

உலவும் தென்றலில்
உணரும் மென்மை
உம் பேச்சில் தெரிகிறது

விரிந்த வானின்
விசாலம் என்றும்
உம் இதயத்தில் தெரிகிறது

புலர்ந்த பொழுதின்
புத்துணர்ச்சி என்றும்
உம் புலன்களில் தெரிகிறது

பால்நினைந்தூட்டும்
தாயின் பண்பு
உம் பணிகளில் தெரிகிறது

வானில் தோன்றும்
வளர்பிறை என்றும்
உம் வாழ்வில் தெரிகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed and Printed by : ASTRA PRINTES (PVT) LTD. Trincomalee. 0777 426175